

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

## 2013

## கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயம்

பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

### கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம்

### அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய

# மஹா கும்பாபிஷேகம் -2013

# சிறப்பு மலர்



மலராசிரியர்

பூ.ஸ்ரீஸ்கந்தராசா

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

வெளியீடு:

ஆலய பரிபாலன சபை

07.06.2013

7097(D)
Arcl

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விநாயகர் வாழ்த்து

*வித்தனே விக்ன விநாயகனே முக்கண்ணனே !*
*புத்தியில் உறைபவனே பொன் மலரால்! சித்தமதில்*
*கண்முன்னே காட்சி தரும் கணபதியை தூவிநிதம்*
*வண்ணமுற பாவினால் வாழ்த்து !*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம்

## அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலனசபை

| | |
|---|---|
| தலைவர் : | திரு.க.கிருபாகரன் |
| செயலாளர் : | திரு.ச.பிரதீபன் |
| பொருளாளர் : | திரு.கோ.யோகநிருபன் |
| உபதலைவர் : | திரு.தே.இராகவன் |
| உபசெயலாளர் : | திருமதி.ந.சந்திரசேகரம் |
| கணக்காய்வாளர் : | திரு.த.லலிதசங்கர் |
| பஜனை குழு தலைவி : | திருமதி.அ.பாஸ்கரன் |
| போசகர்கள் : | பிரம்மஸ்ரீ சு.மகாதேவாகுருக்கள் |
| : | பிரம்மஸ்ரீ இ.சுவாமிநாதகுருக்கள் |
| : | கலாநிதி. ஆறு.திருமுருகன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிச்செய்திகள் - v - ix

வாழ்த்துச்செய்திகள் - x - xxvii

ஆலய வரலாறு - 1 - 18

கட்டுரைகள் - 19 - 123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச்செய்தி

ஆலமர நிழலில் அழகுற பொலிந்து விளங்கும் அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் சிறப்புடன் நடக்க அம்பாளின் அருள் ஆசியை வேண்டிக் கொண்டு இவ் ஆலயம் சிறிதாக இருந்தாலும் உள்ளே வீற்றிருக்கும் அன்னையின் அருளே. ஆலமரத்தைப் போல் பரந்து விரிந்துள்ளது அத்தித்தோட்ட கிராமத்தில் உள்ள அனைவரும் அன்னையின் அருளால் எல்லாம் பெற்று பெருவாழ்வு வாழவும் கல்வி, செல்வம், வீரம் ஆகிய அனைத்தும் பெற்று ஒற்றுமையுடனும் சுபிட்சமாக வாழவும் அன்னை பரமேஸ்வரியை பிரார்த்திகிறேன்.

சுபம்.

ஆலய பிரதம குரு
பிரம்மஸ்ரீ சு.மகாதேவா குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருளாசிச் செய்தி

அம்பிகை அடியார்களுக்கு!

கோப்பாய் அத்தித்தோட்டம் பிரதேசத்தில் எழுந்தருளியிருந்து அருளாசி புரியும் பரமேஸ்வரி அம்பாளுக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சிடைகின்றேன். பன்னிரண்டு ஆண்டுகளுக்க ஒரு முறை நடைபெறும் கும்பாபிஷேகம் இங்கு நடைபெறுவது வரவேற்கத்தக்க விடயம். இது ஊரிற்கு பெருமையை தருவதாகும். உலகத்திற்கு தாயாக விளங்கும் அன்னை பரமேஸ்வரி அம்பாள் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு பல சிறப்புக்களுடன் நீண்டகாலமாக எழுந்தருளியுள்ளார். கோவிலில்லா ஊரியல் குடியிருக்க வேண்டாம் என்ற சொல்லிற்கமைய பல ஆலயங்களை கொண்டிருப்பது பெருமையாகும். ஆலயம் தொழுவது சாலமும் நன்று என்றும் நித்தமும் எம்பிரான் கோயில் புகுக என்று நம் சமயம் கடைப்பிடிக்கிறது. இதனையே நம் சமயம் ஆலய வழிபாட்டை முதன்மைபடுத்துகிறது. ஆலயத்தில் நடைபெறும் விழாக்களும் பூஜைகளும் மனிதனை மனித நேயத்தோடுவாழ வழிசமைக்கின்றன. இதனை உணரத்தும் வகையில் நம் ஆலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேகம் மனிதனை முழுமைபடுத்த வழிசமைக்கின்றன. இதனை தரிசனம் செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக இதனை நெறிப்படுத்தும் ஊர்மக்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் இறை அன்பு கிடைப்பதாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு."

ஆதீன குரு முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்யசுவாமிகள்
2வது குரு மஹா சந்நிதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துர்க்காதேவி துணை

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

கோவில்கள் நிறைந்த திருவூர் கோப்பாய், பண்டிதர்கள், பாவலர்கள், சைவக் காலவர்கள் பிறந்த புண்ணியபூமி சபாபதி நாவலர் முதல் சேர்.கந்தையா வைத்தியநாதன் சுவாமிநாதன் போன்ற பெருந்தொண்டர்கள் பிறந்த தொல்வீகத்திருவூர், இத்திருவூரில் அத்தித்தோட்டம் பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவில் இன்று சிறப்புற்று விளங்குகிறது. யாவரும் அறிவர் பரமேஸ்வரி அம்பாளின் மீளா அடியவர்களின் அயராத முயற்சியால் காலத்துக்குக்காலம் ஆலயப் புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுப்பொலிவு பெற்று விளங்குகிறது. இத்திருக்கோவிலில் மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். திருக்கோவில் திருப்பணியில் அக்கறையோடு அனைவரையும் வாழ்த்துகிறேன். திருக்கோவில்களை புனிதமாகப்பேணிப்பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். சமூகத்தை ஆற்றுப்படுத்துவதற்கு ஆன்மிக நெறிமுறை அவசியமாகும் எனவே திருக்கோவில்களின் சிறப்பால் எமது அடுத்த தலைமுறைகளை ஆற்றுப்படுத்தப்பட வேண்டிய கடப்பாடு அனைவருக்குமுண்டு அம்பாளின் மாஹகும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து வாழ்த்துக்கூறி அமைகிறேன்.

யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே

கலாநிதி ஆறு.திருமுருகன்.
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச் செய்தி

கோப்பாய் தெற்கு - அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயம் கும்பாபிஷேகம் காணுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை உயிர்கள் உணர்ந்து லயித்து வழிபட வழிகாட்டுவன திருக்கோவில்களாகும். ஆகம விதிகளிற்குட்பட்டு கோவிலமைத்து இறைவனைப் பிரதிஷ்டை செய்து நித்ய, நைமித்திய கிரியைகளை வழுவாது நடாத்தி இறைவனை வழிபட்டு திருவருள் பெற வேண்டியது மானிடப்பிறவியின் மகத்தான புண்ணியப்பேறாகும்.

"பிரதிஷ்டை" எனும் சொல்லில் "பிர" எனும் பகுதிக்குச் சிறப்பாக நன்கு புலனாகும்படி என்றும் "திஷ்ட" எனும் பகுதிக்கு நிற்றல் என்னும் எனும் பொருள் உள்ளது.

பிரதிஷ்டை என்னும் சொல் நன்கு புலனாகும் படி நிற்றல் எனும் பொருள் பெறும்.

இறைவனின் மாறுபடாத சக்தியாகிய பரமேஸ்வரி அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்டு அத்தித்தோட்டத்தில் நன்கு நிலைநின்று கிராம மக்களின் வாழ்வில் என்றும் வளங்கொழிக்க அருள்பாலிக்க வேண்டும் என பரமேஸ்வரியை வணங்கி ஆசி கூறி அமைகிறேன்.

நன்றி.

பிரம்மஸ்ரீ மகாதேவா சோமசுந்தரக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச் செய்தி

கோப்பாயின் அடியவர்களுக்கு அத்தித்தோட்டத்தில் இருந்து அருள்வாரி வழங்கும் பரமேஸ்வரி அம்பாளுக்கு நடைபெறுகின்ற கும்பாபிஷேகம் என்றால் மிகையாகாது. 12வருடங்களுக்கு ஒருமுறை தான் கும்பாபிஷேகம் நடைபெறும். ஏன்12 வருடங்களுக்கு ஒரு முறை செய்கின்றார்கள் என்றால் நீாப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, மந்தாரகை, பாரியாதம், மருக்கொழுந்து, யவ்வாது இப்படியானவற்றை எடுப்பது கடினம் சில பூக்கள் 12 வருடங்களுக்கு ஒரு முறை தான் பூக்கின்றன ஒரு மனிதனுடைய வாழ்நாள் 100 வருடம் போல் 12 வருடங்களுக்கு சமனானது என்று வேதஆகமம் சொல்கின்றது. பரமேஸ்வரி என்றால் தனக்கு மேல் ஒருவர் இல்ல என்றும் மூத்த சக்தியாக செயற்படுகின்றவள் என்ற பொருளும் உண்டு. இந்த கும்பாபிஷேகத்தின் ஊடாக உலகத்தில் வாழுகின்ற சகல அடியவர்களுக்கும் அன்னை பரமேஸ்வரி அம்பாள் எல்லாவகை சக்திகளும் பெற்று பெரு வாழ்வு வாழ்கவென சர்வே ஜனாகாசுசினோ பவந்து என்று வாழ்த்துகின்றேன்.

ஈசானசிவாச்சாரியார்
சிவ பிரம்மஸ்ரீ சி.மங்களேஸ்வரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
**District Secretariat, Jaffna.**

මගේ අංකය / எனது எண் / My No.: Message from GA

ඔබේ අංකය / உமது எண் / Your No.:

දිනය / திகதி / Date: 18.04.2013

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

தோட்டங்கள் சூழ செழுமை நிறைந்த கோப்பாய் தெற்குப் பிரதேசத்திலே, அத்தித்தோட்டம் எனும் பதியிலே ஆலமர நிழலில் உறைந்து அருள்பாலித்துவரும் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் அவ்வூர் மக்களின் உள்ளக் கோயில்களில் எழுந்தருளியுள்ளாள் எனும் உண்மைக்குச் சான்றாக இன்று மஹா கும்பாபிஷேக நிகழ்வு உன்னதமாக நிகழ்கின்றது.

அன்று இயற்கையோடு இணைந்து வாழ்ந்த அக் கிராமத்து மக்கள் தமது ஆன்மீக ஈடேற்றத்திற்காகக் கிராமிய வழிபாட்டு முறையில் வழிபாடாற்றி வந்துள்ளனர். இவ்வாறு வழிபட்டுத் தாயவளின் பெருங்கருணையினால் திளைத்த அத்தித் தோட்டவாழ் மக்கள் வழிவழியே தாய்த் தெய்வமாய் விளங்கிய அம்பாளுக்கு நிலையான ஆலயம் ஒன்றை அமைக்க வேண்டும் எனும் உயரிய எண்ணக்கருவை செயல்வடிவமாக்கி மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடாத்த எடுத்த முயற்சி இன்று அவளருளால் கைகூடியுள்ளது.

பக்திப் பரவசத்தோடு பக்தர்கள் கூடிநின்று அம்பாளுக்கு எடுக்கும் இம் மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புற நிகழ்வுறவும், அன்னையின் துணையோடும். அருளோடும் தங்கள் தெய்வீகப் பணிகள் மென்மேலும் தழைத்தோங்கவும் எல்லாம் வல்ல பரமேஸ்வரி அம்பாளை வேண்டி எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்
யாழ் மாவட்டம்

சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர் /
மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
**Department of Hindu Religious and Cultural Affairs**


අධ්‍යක්ෂක / பணிப்பாளர் / Director } 2552643
පොදු / பொது / General } 2552641
ෆැක්ස් / தொலைநகல் / Fax } 2552825
ඊමේල් / மின் அஞ்சல் / E-Mail } info@hindudept.gov.lk
වෙබ් අඩවිය / இணையதளம் / Website } www.hindudept.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No. }
ඔබේ අංකය / உமது இல. / Your No. }
දිනය / திகதி / Date } 23.04.2013

### வாழ்த்துச் செய்தி

கோப்பாய் தெற்கு, அத்தித் தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ள மகாகும்பாபிஷேகத்திற்கும் அதனையிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆன்மாக்கள் லயிக்கும் இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன. இங்கு, இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கின்றான். மக்களின் பண்பாட்டு அடிப்படையில் அமைந்த ஆன்மீக வாழ்விற்குத் தளமாக அமைவன ஆலயங்களாகும். இத்தகைய ஆலயங்களின் வரலாற்றிலும் விருத்தியிலும், அவ்வூர் மக்களின் வரலாறும் விருத்தியும் தங்கியிருந்ததுடன், அவற்றை வெளிக்காட்டும் இடமாகவும் இருந்தன, இருக்கின்றன எனலாம். ஆகவே, இவ் அரிய பணி புரியும் ஆலயங்களைப் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்து பேணுதல் அவசியமாகும்.

அந்தவகையில், கோப்பாய் தெற்கு, அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். மேலும், கும்பாபிஷேக நிகழ்வை சிறப்பாக நடாத்தி வைக்கவுள்ள ஆச்சாரிய பெருமக்களுக்கும், இந்நிகழ்வை முறையாக ஒழுங்கமைத்த ஆலய பரிபாலன சபையினருக்கும் எனது பாராட்டுக்களும், நல்வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

இவ்வையத்தில் சாந்தியும், சமாதனமும் நிலவி, எல்லோரும் இன்பமாக வாழ எல்லாம் வல்ல பரமேஸ்வரி அம்பாள் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்,
பணிப்பாளர்

சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
இல. 248, 1/1, காலி வீதி.
கொழும்பு - 04.


248, 1/1, ගාලු පාර, කොළඹ - 4 | 248, 1/1, காலி வீதி, கொழும்பு - 4 | 248, 1/1, Galle Road, Colombo - 4





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகா அபிஷேக வாழ்த்துச் செய்தி


பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு - கோப்பாய்.

ප්‍රාදේශීයලේකම්කාර්යාලය,වැලිකාමම්නැගෙනහිර - කෝපාය්.

**Divisional Secretariat, Valikamam East – Kopay.**

Divisional Secretary : 021 223 0013 Fax : 021 223 0011 E-mail: Valieast@gmail.com


எனது இல / මගේ අංකය / My No

உமது இல / ඔබේ අංකය

திகதி / දිනය 06.05.2013

## மகா அபிஷேக வாழ்த்துச் செய்தி

எல்லா உயிரினங்களையும் படைத்து காத்து வரும் பராசக்தியானவள் மானிடப்பிறவி தன்னை வழிபட்டு மேன்மை அடைவதற்காக பல்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு வடிவங்களாக கோயில் கொண்டு விளங்குகின்றாள்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் கோப்பாய் எனுமிடத்தில் கோயில் கொண்டு மக்களுக்கு அருளாட்சி புரியும் அத்தித்தோட்டம் பரமேஸ்வரி அம்பாளுக்கு கும்பாபிஷேகம் நிகழ்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"உய்வாருதவு நிதி வாங்கித் திருப்பணி செய்வார் பெறுவார் சிவம்" என்பது சைவ சமய நெறியின் வாக்கு. இம் மரபிற்கேற்ப பரமேஸ்வரின் அம்மனின் அடியார்கள் திருப்பணி செய்து மகா கும்பாபிஷேக வைபவத்தை காணும் பேறு பெற்றுள்ளனர்.இச் சிறப்பு வாய்ந்த கும்பாபிஷேகத்தை காலந்தோறும் நினைவு கூறும் முகமாக மலரொன்று சமர்ப்பணமாக்கப்படுகின்றமை பொருத்தமானதாகும்

எனவே அவ் ஆலயத்தின் மகா அபிஷேக விழா சிறப்புற நடந்தேற உழைத்த பரிபாலன சபையினர் அடியார்கள் அவ்வூர் மக்கள் அனைவரும் சுபீட்சமுடன் வாழ இறையருளை வேண்டி நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

பிரதேசசெயலர்,
வலிகாமம் கிழக்கு
கோப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயம் நடப்பாண்டு வைகாசித்திங்களில் புனராவர்த்ன கும்பாபிஷேகம் காண்பதையிட்டுப் பெரிதும் உவகையடைகின்றோம் கிராமிய வழிபாட்டு மரபில் மரவழிபாட்டுப் பின்புலத்தில் உருக்கொண்ட இந்த அம்பாள் வழிபாடு இன்று பெருங்கோவிலாக உருவெடுத்துப் பொலிவு கண்டுள்ளது. “கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என எம்முன்னோர்கள் வெறுமனே சொல்லிவைத்துப் போகவில்லை கோவில் என்பது எமது பண்பாட்டில் மிக ஆழமாக உள்வாங்கப்பட்ட ஒரு சமூக நிறுவனமாகும் கோவிலை மையப்படுத்திய வாழ்க்கை முறைமை இன்றும் எம்மிடையே உயிர்ப்புடன் வழக்கிலிருந்து வருகிறது “கோவில் சிறந்தால் வாழ்வு சிறக்கும்” இதன் அடிப்படையிலேயே எம்மவர்கள் கோவில் திருப்பணிகளுக்கு தம்மாலான கொடைகளையும் சரீரஉதவிகளையும் வாரி வழங்கிவருகின்றனர்.

2013 வைகாசித்திங்களில் நடைபெறுகின்ற புனராவர்த்தன கும்பாபிஷேக நிகழ்வுகளை ஆவணப்படுத்தும் முகமாக அரியதொரு “மலர்” ஒன்றிணையும் இவ்வாலய பரிபாலனசபையினர் வெளியீடு செய்ய உத்தேசித்துள்ளனர் இச்செயல் மிகவும் வேண்டப்படுகின்ற ஒன்றாகும் ஆலயத்தோடு தொடர்புடைய செய்திகளும் பிற ஆராச்சிக்கட்டுரைகள் மலரில் வெளிவர உள்ளன. இன்றைய இளந்தலை முறையினர் இவ்வாலயம் தொடர்பாகவும் எமது சமய வழிபாட்டு மரபுகள் தொடர்பாகவும் அறிந்து கொள்ள இம்மலர் பெரிதும் துணை செய்யும்.

இப்பணிகளுக்கெல்லாம் பெரிதும் முயன்றுழைத்துவரும் திருவாளர் பூ.ஸ்ரீகந்தராஜா அவர்களை இவ்விடத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது. அவருக்கும் பிற அம்பாள் அடியவர்களுக்கும் எல்லாம் வல்ல அத்தித்தோட்ட அருள் மிகு பரமேஸ்வரி அம்பாளினுடைய அருள் நிறைவாகக் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

பேராசிரியர் கி. விசாகரூபன்
பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ்த்துறை, கலைப்பீடம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

உலகத்தின் இயக்க சக்தியாக விளங்கும் அன்னை பல்வேறு வடிவங்கள் தாங்கி கோயில் கொண்டு அருள் புரிந்து வருகின்றாள். கோப்பாய் கிராமத்தில் அத்தித்தோட்டம் என்ற பகுதியில் கிராமிய வழிபாட்டினூடாக தோற்றம் பெற்ற திருத்தலமே பரமேஸ்வரி அம்பாள் ஆலயமாகும்.

இவ்வாலயத்தைச் சூழ வாழுகின்ற மக்கள் எமது கல்லூரியுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்கள். யாழ்/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி கற்று வளர்ந்தவர்கள் இக்கிராமத்து மக்களது இறை அன்பும் சமய ஒழுக்கமும் பாராட்டிற்குரியது.

"இறைகளோடிசைந்த இன்பம்
இன்பத்தோடியைந்த வாழ்வு

இப் பெரு வாழ்வுக்கு வழிகாட்டுவது சமய நெறிகள். இச் சமய நெறிகளை மையமாகக் கொண்டு விளங்குவது கோவில்கள். ஆலயங்களைக் கட்டி அதனை சிறந்த முறையில் பரிபாலிப்பது சிறந்த சிவப்பணியாகும். இவ்வாலயம் அமைந்துள்ள பிரதேசத்தில் வாழும் மக்கள் ஆலயத் திருப்பணியை சிறப்பாகச் செய்கின்றார்கள். அன்னை பரமேஸ்வரி ஆலயத்தை நன்கு பரிபாலிக்கின்றார்கள். இவ்வாலயத்தில் மூன்றாவது முறையாக கும்பாபிஷேகம் நிகழவிருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். இக் கும்பாபிஷேகத்தை அன்போடு தரிசனம் செய்து பரமேஸ்வரி அம்பாளின் அருள் கடாட்சத்தினைப் பெற்று வாழ்வோமாக.

திரு.க.இ.இராசசேகரம்
அதிபர்
யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி

தமிழர் வாழ்வியலில் ஆலயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "நீறில்லா நெற்றி பாழ்" என்னும் வார்த்தைகள் இந்துக்களின் வாழ்வில் ஆலயங்கள் பெற்ற முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றன. அந்த வகையில் கோப்பாய் உறைந்து திருவருள் புரியும் அன்னையாம் அம்பிகையின் கும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். கும்பாபிஷேகம் என்பது ஒரு பெரும் மங்களகரமான கிரியையாகும் கும்பாபிஷேக கிரியைகளைக் காண்பது எண்ணெய் காப்பு சாத்துதல் என்பன ஒருவரது வாழ்வில் கிடைத்தற்கரிய பேறாகும். அதற்கும் மேலாக கும்பாபிஷேகம் செய்வதன் மூலம் அந்தச் சுற்றாடலே தெய்வீகச் சிறப்புப் பெறுகின்றது. அதாவது மக்கள் செல்வம், கல்விச் சிறப்பு, மனதில் சாந்தி, சுபீட்ச வாழ்வு, அரச நீதிச்சிறப்பு, என்பன கிடைப்பதற்கு வழி பிறக்கின்றது இவ் அருட்சக்தி மேலும் பெருக இக்குடமுழக்கு கும்பாபிஷேக விழா வழிசமைப்பதாக அமையும். இவ்விழாவைச் சிறப்பாக நடத்தும் அனைவருக்கும் எம்பெருமானின் நல்லாசிகள் கிடைத்து நிறைவான வாழ்வு பெற வாழ்த்துகின்றேன்.

அதிபர்
யா/கோப்பாய் தெற்கு றோ.க.த பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தெய்வசாந்நித்தியம் புனித தீர்த்தங்களிலும் விருட்சங்களிலும் உறைந்து காணப்படுவதை தமது அகக்கண்களில் கண்டு கொள்ளும் அருளாளர்கள் அங்கே இறைவனைத் தரிசித்து வழிபட்டுபாடியும் ஆடியும் மகிழ்ந்து அற்புதங்களை நிகழ்த்தி பின்னர் அவை பெருங்கோயில்களாக அமைத்தும் வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது அவ்வகையில் இக்கிராமத்தில் வாழ்ந்த அருளாளர்களால் அமைக்கப்பட்ட அருள்மிகு பரமேஸ்வரி ஆலயம் பெருங்கோயிலாக வளர்ந்து வருவது இவ்வாலயத்தின் அருள்வளத்திற்கு சான்றாகிறது.

இவ்வாயலத்தில் மூன்றாவது கும்பாபிஷேகம் சகல மங்கல பொலிவுகளுடனும் சிறப்புற நடைபெற ஞானப்பெருங்கூடத்தின் மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

சி.சத்திகிரீவன்
கௌரவ செயலாளர்
இந்துசமய பேரவை யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

கோப்பாய் பகுதியிலே வீற்றிருந்து அருளாட்சி செய்யும் பரமேஸ்வரி அம்பாளுக்கு புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

திருக்கோயிலில் நிகழும் கும்பாபிஷேகத்தை காண்பதே சிறந்த சிவ புண்ணிய பேறாகும். உலகில் உள்ள உயிரினங்களின் உயிர்துணையாக விளங்கும் அன்னைக்கு கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து சங்காபிஷேகம் நிகழ்வது எமது பக்திப் பெருக்கை ஏற்படுத்தும் தெய்வீக நிகழ்ச்சியாக அமைகின்றது. இவ் வைபவத்தை காண்பதே நாம் பெற்ற பிறவியின் நற்பயனாகும். திருக்கோயில் பழுதுற்றால் அதனை முன்போல செய்தவர் பெறும் பயன் அவற்றை முன்செய்தவர் பெறும் பயனை விட ஆயிரம் மடங்கு அதிகமாகும். என சிவ புண்ணிய தெளிவு எனும் நூல் சிறப்பித்து கூறும்.

அந்த வகையில் அம்பாளுடைய சாந்தித்தியம் நிறைவாக நின்று அனைத்து பக்தகோடிகளையும் காப்பாற்ற வேண்டும் இவ்ஆலயம் மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டும்.

இக் கும்பாபிஷேக நிகழ்விற்கு உழைத்த பரிபாலன சபையினர் ஊர்மக்கள், அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.

திருமதி றோ.மிலாசினி
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்த யாழ் நகரின் கோப்பாய் மண்ணில் அத்தித் தோட்டத்தில் வேரூன்றி பெரு விருட்சமாக் குடை பிடிக்கும் ஆலமரநிழலிலே வீற்றிருக்கும் அருள்மிகு பரமேஸ்வரித்தாயே நின் அருளால் வாழும் நாம் உனக்கு வாழ்த்து மடல் எழுத வாய்ப்பளித்தனையே நன்றி அம்மா.

ஆலயம் தோன்றிய காலம் தெரியாது ஆனால் கோவிலின் வளர்ச்சி அதை நிர்வகித்தவர்களது முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது . நாங்கள் அறிவு தெரிந்த காலம் தொட்டு இற்றைவரை அன்னையின் கோவில் மணி தான் எங்களை காலையில் துயில் எழுப்பும். ஒவ்வொரு உற்சவங்களும் மிகச் சிறப்பாக நடைபெறும். இத்தனை சிறப்புக்களுக்கும் அம்மாளின் அருளே காரணம். காலத்துக்குக் காலம் நிர்வாகங்கள் மாறினாலும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என்பது போல் யாவற்றையும் திறம்பட நடாத்துவார்கள் காரணம் அவர்கள் அம்பாள் மீது கொண்ட பக்தியும் அம்பாள் அவர்கள் மீது கொண்ட கருணையும் ஆகும்.

இதுவரை காலமும் இவ்வாலயம் எவ்வாறு வளர்ச்சி கண்டு பெருமை சேர்த்ததோ இனி வருங்காலங்களிலும் எதுவித தடைகளுமின்றி மேன்மேலும் வளர்ச்சி பெற எல்லாம் வல்ல அம்பிகையை வேண்டி நிற்கும்.

திரு ச.சிவானந்தம்
தலைவர்
அருள் மிகு மாந்தோப்பு மாரி அம்பாள் ஆலயம்
கோப்பாய் தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

கோப்பாய் பிரதேசத்தில் எழுந்தருளி இருக்கும் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் புனருஸ்தானம் செய்யப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம். ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு ஊர்மக்களால் அமைக்கப்பட்ட ஆலயத்தில் ஆண்டவன் எழுந்தருளி இருக்கிறான். அவ் ஆலயம் மனிதனுடைய பல செயற்பாடுகளை உணர்த்தி நிற்கின்றன. இவ்வகையிலே ஆலயம் சாஸ்திர விதிக்கமைய கட்டுமானப்படிவங்களைக் கொண்டுள்ளது. ஆலயம் மனிதனுடைய உடம்பிலிலுள்ள ஆதாரங்களை எடுத்துக் காட்டும் இச் சிறப்பு இவ்வாலயத்தில் அமைந்திருப்பது ஊருக்கும் மக்களுக்கும் பெருமையைத் தருவதாகும்.

இக் கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசித்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக இத்தரும காரியத்தை நிறைவேற்றியிருக்கும் அனைத்து அன்பர்களையும் ஆலய பரிபாலன சபையினரையும் ஆசிர்வதித்து வாழ்த்துகிறேன்.

Lion k.காண்டீபன், J.P
தலைவர்
கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம்
திருப்பணி சபை
மத்தியஸ்தர், மத்தியஸ்தர் சபை
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

இலங்கைத் தீவின் ஈழமணித்திரு நாட்டின் தென் கோவை பதியிலே அத்தித்தோட்டம் எனும் அழகான கிராமத்தில் அருள் குடி கொண்டிருக்கும் அன்னை அருள்மிகு பரமேஸ்வரி அம்பாளின் கும்பாபிஷேகம் கண்டு பெருமகிழ்வு அடைகின்றோம்.

அன்னையின் பெரும் புகழை வாயால் கூறி விட முடியாது என்பதற்காக கும்பாபிஷேக தினத்திலே அம்பிகையின் சிறப்பினை மலர் வடிவில் வெளியீடு செய்யும் ஆலயபரிபாலன சபையினர்க்கு என் சார்பிலும் எமது கிராம மக்கள் சார்பிலும் அருள்மிகு வைரவப் பெருமான் ஆலய பரிபாலன சபை சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

நன்றி.

"அன்னையின் அருள் அகிலம் எங்கும் பரவட்டும்"

நடேசு உதயகுமார்
"தலைவர்"
கோப்பாய் தெற்கு பழைய வீதி
"வைரவர் தேவஸ்தானம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பரமேஸ்வரி அம்பாள் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவியின் வாழ்த்துச் செய்தி

எல்லாம் வல்ல அம்பிகையானவள் ஆலமர நிழலின் கீழ் இருந்து அடியவர்களுக்கு என்றென்றும் நல்லருளை வழங்கி வருகின்ற அத்தித்தோட்டம் அருள் மிகு பரமேஸ்வரி அம்பாளுக்கு பெருஞ்சாந்தி எனப் போற்றப்படும் கும்பாபி ஷேகவிழாவின் சிறப்பம்ஷமாக அம்பிகையின் பேரால் அம்பிகையின் சந்நி தானத்தின் வரலாற்றுப் பொக்கிஷமாக மலர இருக்கின்ற கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு கூட எனக்கு அம்பிகை ஒரு சக்தியாகச் செயற்படுகின்றது என்பதில் எது வித ஐயமும் இல்லை எனலாம்.

உண்மையிலே எமது சமூக அபிவிருத்தி மன்றமானது சுமார் ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக அன்னையின் திருவருளால் அன்னையின் பெயரால் மலர்ந்த "பரமேஸ்வரி அம்பாள் சமூக அபிவிருத்தி மன்றம்"- என்ற நாமம் சூட்டப்பட்டு மிளிர்ந்து வரும் ஒரு சேவை நிறுவனமாகும்.

"ஜீவ சேவையே சிவ பூஜை"- என்று இராமகிருஷ்ணர் சொன்னது போன்று எமது சமூக மக்களுக்கும் தாய்குலத்திற்கும் சேவை செய்யும் ஓர் தலைசிறந்த நிறுவனமாகத் திகழ்கின்றது. என்று சொன்னால் மிகையாகாது.

நடைபெறுகின்ற கும்பாபிஷேகம் பிரதேசத்திற்கும் மக்களுக்கும் புனிதத்தை தருவதாகும். 12 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற அபிஷேகம் கும்பாபிஷேகம். இதனை செய்விப்பதும் தரிசிப்பதும் அப்பிறவியின் புண்ணியப் பேறாகும் இதனை நெறிப்படுத்தி நிற்கும் ஆலய பரிபாலன சபையினரைப் பாராட்டி நிற்கின்றோம்.

இன்று வெளிவரும் மலர் அனைவரது ஆன்மீக சிந்தனைக்கு வழிகாட்டும் இம்மலர் ஆசிரியரையும் கிராம மக்கள் அனைவரும் கும்பாபிஷேகத்தை தரிசித்து மண்ணில் நல்ல வண்ணமாக வாழ்வோமாக.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி ஏகாம்பிகை-சிவகுமார்
தலைவி
பரமேஸ்வரி அம்மாள் சமூக அபிவிருத்தி மன்றம்-கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோப்பாய் தெற்கு சூரியோதய சனசமூக நிலையத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

கோப்பாய் தெற்கு- அத்தித்தோட்டம் என்னும் திருப்பதியிலே கோயில் கொண்டு அருளாட்சி புரிந்து கொண்டிருக்கின்ற அருள் மிகு பரமேஸ்வரி அம்பாளின் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகத்தையிட்டு ஆலய பரிபாலன சபையால் வெளியிடப்படுகின்ற கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்

கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக ஆலய பரிபாலன சபையினரால் ஆலயம் மிகவும் நல்ல முறையில் இந்து சமய அநுட்டானங்களையும் விழாக்களையும், வருடாந்த உற்சவங்களையும் மிகவும் சிறப்பாகவும், திறமையாகவும் செய்து எமது பிரதேசத்தில் மிகவும் சிறப்பான ஆலயமாக மிளிர்கின்றது என்றால் மிகையாகாது.

சூரியோதய சன சமூக நிலயமானது அம்பிகையினுடைய ஆலயத்திற்கு மிக அருகில் அம்பிகையினுடைய தலவிருட்சமான ஆலமரச் சோலையின் கீழ் எமது நிலயம் அமையப் பெற்று அம்பிகையின் அருட்பொலிவோடும் அம்பிகையின் திருவருளினாலும் கடந்த 1944ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 69வருடங்கள் கடந்தும் பல சமய சமூக அறப்பணிகளை செய்து வரும் நிலையில் கும்பாபிஷேக மலருக்கு சூரியோதய சனசமூக நிலயத்தின் தலைவர் என்ற வகையில் வாழ்த்துச் செய்திவழங்குவதோடு அம்பிகையினுடைய கும்பாபிஷேக மலரினை படித்து அனைவரும் பயன் பெறுவோமாக.

நாகேந்திரம் பாஸ்கரன்
சூரியோதய சனசமூக நிலையத் தலைவர்
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆலய பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

கோவையம்பதியில் வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அருளும் அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாளுக்கு குடமுழுக்கு என்று சொல்லப்படும் பெருஞ்சாந்தி விழா காணும் பெரும் பேறு கிடைத்தமையிட்டு உள்ளம் மகிழ்வதோடு கும்பாபிஷேக மலர் சிறக்கவும் இப் புண்ணிய தெய்வ கைங்கரியத்திற்கு பணஉதவி, பொருளுதவி, சரீர உதவி வழங்கிய அம்பிகை அடியார்கள் அனைவருக்கும் முதற்கண் எனது மனமார்ந்த ஆசியையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதோடு

ஆலய பிரதம குருக்கள் மற்றும் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றிவைக்கும் பிரதம குருக்கள். மற்றும் குருக்கள்மார்கள், ஓதுவார், நாதஸ்வர தவில் வித்துவான்கள் அலங்காரவேலைகள் செய்த பெருமக்கள், ஒலி, ஒளி அமைப்பாளர்கள் மற்றும் கட்டடப்பணி செய்த அனைத்து தரப்பு தொழில் வல்லுனர்கள் உபயகாரர்கள் அனைவருக்கும் மலருக்கான கும்பாபிஷேக மலராசிரியர் மற்றும் மலர் குழுவினர், கும்பாபிஷேக மலருக்கான விளம்பர அனுசரனை வழங்கிய அனுசரனையாளர்கள் அனைவருக்கும் அம்பிகையின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திப்பதோடு

இக் கும்பாபிஷேக மலர் பல நல்ல ஆன்மீகக் கருத்துக்களைத் தாங்கி வருகின்றது. இப்பணி ஆலயத்தின் தொன்மைக்கும் வரலாற்றுக்கும் எதிர் கால செயற்பாட்டிற்கும் ஒரு சான்றாக விளங்கும் என்பதில் ஐயமில்லை

இம்மலர் சிறக்கவும் ஆலய புனருத்தாரண கைங்கரியத்திற்கும் கும்பாபிஷேகக் கைங்கரியத்திற்கும் உதவி ஒத்தாசையினை வழங்கிய அனைத்து அம்பிகை அடியார்களும் மற்றும் இளைஞர்கள் மற்றம் பரிபாலனசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் அம்பிகையின் திருவருள் கிடைப்பதாக.

"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

கந்தசாமி-கிருபாகரன்
தலைவர்
ஆலய பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆலய பரிபாலன சபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி!

சிவபூமி எனப் போற்றப்படும் இலங்கையின் வட புலத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கோப்பாய் தெற்கு கோப்பாயில் அத்தித்தோட்டம் என்னும் திருப்பதியில் ஆலமரச்சோலையின் கீழ் வீற்றிருந்து அடியவர்களுக்கு எந்நாளும் அருளும் அருள் மிகு பரமேஸ்வரி அம்பாளுக்கு இவ் ஆண்டு 2013 வைகாசி 27 இல் பெருஞ்சாந்தி என்று சொல்லப்படும் கும்பாபிஷேகத்தை காணும் பெரும் பேறு கிடைத்தமையிட்டு உள்ளம் மகிழ்வதோடு இப்புண்ணிய தெய்வ கைங்கரியத்திற்கு பொருளுதவி, பணவுதவி, சரீர உதவிகள் ஒத்தாசைகள் வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆலய நித்திய நைமித்திய கிரியைகளை செவ்வனே நாடாத்தி வருகின்ற ஆலய பிரதம குருக்கள் ஐயா மற்றும் கும்பாபிஷேகக் கிரியைகளை நிறைவேற்றி வைக்கும் பிரதம குருக்கள் மற்றும் குருக்கள்மார்கள் ஓதுவார் நாதஸ்வர தவில் வித்துவான்கள் ஒலி, ஒளி அமைப்பாளர்கள் கட்டடக்கலைஞர்கள் அலங்கார வேலைகள் செய்தவர்கள் மின் இணைப்பு வேலை புரிந்தவர்கள், வர்ணப்பூச்சு வேலைகள் செய்தவர்கள். ஆலயப் புனரமைப்பு வேலைகளின் போது தங்களால் மனமுவந்து வந்து இலவசமாக இரவு பகல் பாராது வேலைகள் செய்தவர்கள் அனைவருக்கும் உபயகாரர்கள் அனைவருக்கும் கும்பாபிஷேக மலராசிரியர் மற்றும் மலர்குழுவினர் கும்பாபிஷேக மலருக்கான விளம்பர அனுசரணை வழங்கிய அனுசரனையாளர்கள் அனைவருக்கும் அம்பிகையின் அருட்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு இக் கும்பாபிஷேகத்தையிட்டு எமது ஆலய பரிபாலன சபையினரால் வெளியிடப்படும் கும்பாபிஷேக மலரானது நல்ல பல கருத்துக்களைத் தாங்கி வருவதோடு ஆலயத்தின் வரலாற்றுப் பொக்கிஷமாக மலர இருக்கின்ற இம்மலரைப் பேணிப் பாதுகாப்பதோடு அதனை வாசித்து அம்பிகையின் அருளைப் பெற்றுய்வோமாக.

"பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான்-அவன்
கருணையுள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கிறான்"

சந்திரகுமார்- பிரதீபன்
செயலாளர்.
ஆலய பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆலய பரிபாலன சபையின் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

கோப்பாய் தெற்கு கோப்பாயில் ஆலமர நிழலின் கீழ் அமர்ந்து தன்னை நாடி வரும் பக்தர்களின் துன்பங்களை அகற்றி இன்பங்களை எந்நாளும் அருளும் அத்தித்தோட்டம் அருள் மிகு பரமேஸ்வரி அம்பாளின் கும்பாபிஷேகம் சிறப்புற அமைவதற்கு மிகமுக்கியமானது அம்பிகை அடியார்களின் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் தான் காரணமாகும்.

அம்பிகையினுடைய இவ்வாலயம் இன்று ஓர் கலைக்கோயிலாகக் காட்சி தருவதைப் பார்க்கின்ற போது ஒவ்வொரு அடியார்களும் தங்களால் இயன்ற நிதியுதவி பொருளுதவி போன்றவற்றோடு தங்களையே முழுமையாக இரவு பகல் என்று பாராது அம்பிகையினுடைய ஆலயத் திருப்பணி வேலைகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி அர்பணித்ததன் பயனாக இவ்வாலயம் இன்று கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது என்பதை யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

பன்னிரண்டு வருடத்திற்கு ஒருமுறை இடம்பெறும் கும்பாபிஷேகத்திற்கு இம்முறை எமது ஆலய பரிபாலன சபையினரால் வெளியிடப்படுகின்ற கும்பாபிஷேக மலர் சிறக்கவும் இம் மலரில் வெளிவருகின்ற நல்ல சிந்தனையுள்ள கருத்துக்களை வழங்கிய அனைவருக்கும், கும்பாபிஷேக மலருக்கான விளம்பர அனுசரணை வழங்கிய அனுசரனையாளர்கள் அனைவருக்கும் மலர் குழுவினருக்கும் எல்லாம் வல்ல அத்தித் தோட்டம் அருள் மிகு பரமேஸ்வரி அம்பாளின் திருவருள் கிடைப்பதாக.

கோபாலசிங்கம்- யோகநிருபன்
பொருளாளர்.
ஆலய பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலராசிரியரின் உள்ளத்திலிருந்து

ஈழவளத்திருநாட்டின் வளம்மிகு வலிகாமம் கிழக்கு பகுதியில் கழனிகள் சூழ் கோவையம் பதியில் அத்தித்தோட்டம் என்னும் புனித மண்ணில் விருட்சமாகி வினைதீர்க்கும் வித்தகியாம் பரமேஸ்வரி அம்பாள் துணை நிற்க.

"வேண்டத்தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ......"

என்பதற்கிணங்க அனைத்தையும் அறிந்தவளும் அவளே அனைத்தையும் அளிப்பவளும் அவளே. நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் அவள் தான் காரணகர்த்தா. அந்த வகையில் அத்தித்தோட்டம் என்னும் பதியிலே தனக்கென ஆலயம் ஒன்றை அமைப்பதற்கான சிந்தனையை ஊட்டி ஆட்கொண்டதற்கமைவாக அன்றைய சமூக முன்னோடிகளால் உருவாக்கப்பட்ட தாயவளின் ஆலயம் எமது சமூகத்தவர்களது குறியீடாக இன்று அடையாளமிடப்படுகின்றது. அம்பாளின் ஆலயத்தின் பெயரினால் நாம் அடையாளமிடப்படுவது எமக்கு பெருமைக்குரிய விடயமாகும். அம்பாளின் ஆலயம் ஆன்மீகத்தேடலுக்கான திருத்தலமாகக் காணப்படுவதுடன் சமூக நிறுவனமாகவும்நிலைபெறுவதை நாம் காணக்கூடியதாக வுள்ளது. அதிசக்திவாய்ந்த ஆதிபரமேஸ்வரி தாயவளின் அருளாட்சி லீலைகளினால் எம்மவர்கள் அவளின் கைங்கரியங்களை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாலயத்தின் உருவாக்கம், வளர்ச்சி என்பவற்றில் பல்வேறு பரிமாணங்களில் ஆலயத்தின் ஆதிப்பரிபாலகர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். இப்புனிதப் பணியில் ஈடுபட்டவர்கள் சைவத்தமிழ்ப் பண்பாட்டில் உயர்ந்து விளங்கியதுடன் சமூகத்திற்கு வழிகாட்டிகளாகவும் உள்ளனர். தாயவளின் ஆலயத்தை அமைத்து எம்மிடம் விட்டுச்சென்ற வழிகாட்டிகள் என்றென்றும் நம்மால் மதிக்கப்பட வேண்டியவர்களே அன்றி மறைக்கப்படவேண்டியவர்களல்ல. அம்பாளின் ஆலயம் அமைப்பதற்கான காரணகர்த்தாக்களின் சிந்தனை, செயல்திறன், தன்னம்பிக்கை என்பன எமது சமூகத்திற்கே உரித்தான. பண்பாட்டிலிருந்து உதயமானது என்றால் மிகையாகாது. எமது முன்னோடிகளின் உழைப்பின் மூலம் பெற்ற தெய்வீகப்பேறை எவ்வாறு நாம் இன்று அனுபவிக்கின்றோமோ அவ்வாறே எதிர்காலத்திலும் எமது சமூகம் தமக்கென உரித்தான தனித்துவத்துடன் அனுபவிக்க வேண்டும். தாயவளின் இவ்வாலயம் பூர்வீகத்தின் சுவடாக என்றென்றும் பேணப்படுதல் வேண்டும் அதுவே எம்முன்னோர்களுக்கு நாம் செய்யும் வரலாற்றுக் கடமையாகும்.

மேலும் எம்மவர்கள் கிராமிய வழிபாட்டு முறையில் மூன்று ஆலயங்களை பரிபாலித்து வந்துள்ளனர். அவற்றில் பேத்தியம்மன் என்ற பெயர் கொண்ட ஆலயத்தினை பரிபாலித்தவர்களின் தீவிர பக்திவைராக்கியம் மற்றும் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிப் போக்கின் பயனாக இன்று பரமேஸ்வரி அம்மன் என்ற சிறப்புப் பெயருடன் பல பரிமாணங்களில் வளர்ச்சி கண்ட ஆலயமாக விளங்குகின்றது. அவ் வளர்ச்சியின் பயனாக நாம் சமூக கலை, கலாசார விழுமியங்களில் உயர்ந்து விளங்குகின்றோம். இச் சமூக அடைவு மட்டத்தை நாம் எட்டுவதற்கு எம் தாயவளின் ஆலயமே பெரிதும் வழிகோலியது என்றால் மிகையாகாது. எம் தாயவளின் மைந்தர்களால் உருவாக்கப்பட்ட ஆலயத்தின் மூன்றாவது கும்பாபிஷேகம் 27.05.2013ல் நடைபெற்றது. இதனையொட்டி இக்கும்பாபிஷேக மலர் வெளியிடப்படுகின்றது. இப் புனிதப் பணியில் எம்மை ஈடுபட வைத்து ஆலய வரலாற்றை தாயவளின் சேயாகிய என்னால் எழுதி பரிபாலன சபை ஊடாக வெளியிடுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தையும் இறையருளையும் வழங்கிய எம் குலதெய்வமாகிய பரமேஸ்வரி அம்பாளுக்கு சிரம் தாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

நன்றி

பூ.ஸ்ரீஸ்கந்தராசா
(ஆசிரியர்)
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









2013







2001










1999









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம்

## அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள்

# திருவூஞ்சல்

காப்பு

திருவளருஞ் சீர் கோப்பாய் நகரில் அருளும்
செவ்வேளின் புராணத்திணை விதந்து கூறும்
அத்தித்தோட்டம் தன்னில் கோவில் கொண்டு
பேரருளைப் பொழிகின்ற தேவியான
பரமேஸ்வரி தேவியின் மீது
முத்தமிழால் ஊஞ்சலிசை யடியேன் பாட
மருள் பொளிர கந்தர் மடம் பதியமர்ந்த
மதந்தி சித்தி விநாயகர் தாழ் காப்பதமே.

நூல்

ஓங்கிய நூல் நால் வேதங்கள் கால்களாக
உணர்வரிய ஆறங்கம் விட்டமாகப்
பாங்கமைந்த கலையாகவும் மாடங்களாகப்
பரிநகர உகரமிரு தூண்களாகத்
தேன்கெழிலி விசை நான்கும் கயிறதாகத்
தேடரிய மகரமே பலகையாக
ஈங்கமையும் ஊஞ்சலிலே யாட
ஏழில் பரமேஸ்வரி தாயே ஆடீர் ஊஞ்சல் 01

ஸ்ரீதேவி பூதேவி குடைகள் தாங்கத்
திகழ் அரசு வதிதேவி கவரி வாங்க
மா தேவன் தேவியாரே மகிழ்ந்தே நீரும்
மலர்க் கரங்கள் கொப்பளிக்க கயிலுமற்றி
தீ தோல உலகுய்ய ஆடும் ஊஞ்சற்
திகட்தாத காட்சியினைக் கண்டோமம்மா
ஓதோமும் நாமல்லால் ஒருவர் நாமம்
உயர் செல்வ பரமேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 02

மரகதத்தை மணித்தூணாய் இருபால நாட்டி
மாணிக்க வளையதன் மீதவற்றை மாட்டி
தரமமையும் வயிரமரக் கைகள் நீட்டித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க வொளி தகடுகளை மிளிர மூட்டிப்
பரவரிய வெண்பட்டுத் துசிலைக் கூட்டிப்
பாங்காத வமைந்த நல்லூஞ்சன் மீதே
கரங் கூப்பும் கோப்பாய் பதியில் வாழும்
கவின் முத்து பரமேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 03

உண்ணாத முலையுடையாய் உதரம் நோவரது
உன்மக்கள் நால்வரினை உலகுக்கீந்தாய்
எண்ணாதே எண்ணுவாய் துன்பம் ஏதும்
இல்லாதாய் உலகிற்காய் இரக்கங் கொள்லிம்
பிண்ணாத தவமெல்லாம் பண்ணி யன்று
பரமனையுன் மணவானா னாக்கிக் கொண்டாய்
கண்ணாக எம்முயரிற் கலந்தாய் அம்மா
கலையின் தாயே பரமேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 04

ஆதிசிவன் பத்தினியே அமர்ந்தே ஏத்தும்
பரந்தாமனின் அருமை தங்கையாம் பரமேஸ்வரியாம்
மாகணைகள் ஏவுகின்ற மதகான் மாமி
மதகளிற்று முகத்தோற்கும் கந்த வேற்கும்
வேகமுற வைரவற்கும் வீர பத்திர
வீரற்கும் நல்லன்னை சிவனார் தேவி
தாகமுறும் அடியேங்கள் களிர்க்க நல்ல
தயாபரியே பரமேஸ்வரித்தாயே ஆடீர் ஊஞ்சல் 05

முத்துவடம் பொற்காசு மாலை சூட்டி
முள் கைவனை சிந்தரக்கு சுட்டி பூட்டி
நத்துடனே மூக்குத்தி பாலக்கு பூட்டி
நவரத்தின பாதசரம் தண்டை பூட்டி
எத்திசையும் திகழ்வைரத் தோடு பூட்டி
எழிலிடையில் தங்க ஒட்டியாணம் பூட்டி
பக்தியுடனடியவர்கள் வடந் தொட்டாட்ட
பதும மலர் அடியுந்தி ஆடீர் ஊஞ்சல் 06

மல்லிகை வெண்பிச்சி யிருலாட்சி சூடி
மந்தாரம் மருக் கொழுந்து ஆயந்து சூடி
முல்லையுடன் பாதிரி செல்வந்தி சூடி
முகைய விம்நி ஈம்பலொடு செங்கழுநீர் சூடி
அல்லியுடன் செண்பகப்பூ புன்னாகம் சூடி
அழகான றோசாப்பூ மாலை சூடி
நல்லியதப் பங்கயஞ்சூம் அத்தித்தோட்டத்தில் வாழும்
ஆதிபரமேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து தலை நாகமது ஆடஆட
அங்குச பாசங்கள் அசைந்தேயாட
கந்து குழல் வண்டினங்கள் ஆடஆட
பரும் படனே செண்டுஞ் சேர்ந்தே யாட
ஐந்து முகன் அருகமர்ந்து ஆடஆட
ஆபய வரதங்கலும் அழகாய் ஆட
அத்தித்தோட்டம் பதியில் களி கொண்டாடும்
அகில பரமேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 08

முத்தமிடும் முத்துக்கள் முடிமீதாட
முத்து மூக்குத்தியும் முகத்திலாட
அக்கனின் மாங்கல்யம் மார்பிலா லாட
அழகான சிற்றிடையில் செம்பட்டாட
பத்து விரல் மோதிரமும் பாங்காய் யாட
பங்க பதோ் தளத்தினிலே பதக்கமாட
உத்தமியுன் னிருபாதச் சிலம்பு மாட
உயர் பரமேஸ்வரித்தாயே ஆடீர் ஊஞ்சல் 09

ஐங்கரனும் தேவியு மோர் வடந்தொட்டாட
ஆறுமுகம் வள்ளியு மோர் வடந்தொட்டாட
பங்கயலும் தேவியு மோர் வடந்தொட்டாட
பரந்தாமனுடன் இலக்குமியோர் வடந்தொட்டாட
சிந்தை செய்யும் அடியவராம் வடந்தொட்டாட
செகநலத்தோர் கண்களிப்ப லயங்கும் ஊஞ்சல்
புந்திதனைக் கருணையிருந் கொள்ளை கொண்ட
புவனேஸ்வரித் தாயாரே ஆடீர் ஊஞ்சல் 10

பத்தினியே கண்ணகியே யாடீருஞ்சல்
மந்திர காளியம்மா யாடீருஞ்சல்
முத்து மகா பரமேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்
மூவுலகுந் தொழுந்துர்க்கா ஆடீர் ஊஞ்சல்
பூரணியே புராதனியே லாடீர் ஊஞ்சல்
புங்கைநகர் பேச்சியரே யாடீர் ஊஞ்சல்
நாரணியே நான்முகியே யாடீர் ஊஞ்சல்
நாகபரமேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 11

சீர்வாழி சிவசமயம் சிவசின்னம் வாழி
சிவனடியார் சிவபக்தி சிறந்து வாழி
பார் வாழி மாதமும் மாரி வாழி
பார் போற்று மந்தணரும் ஆழினரும் வாழி
நீர் வாழி நின் நல்லை வேள் புகழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதம் போற்றும் நெடுங்கந்தர் மடமும் வாழி
ஏர் வாழி ஈழத்தினம் வாழி ஏற்று தமிழ்
வேதம் வாழி இவ்வுஞ்சற் பாமாலை வாழி வாழி 12

அத்தித்தோட்டம் அருள் புரியும் காரி எச்சரிக்கை
வேப்பிலை நாயகி முடியாம் எச்சரிக்கை
வந்திப்பவர் வரமீ நிரு வாணி எச்சரிக்கை
சிந்திப்பவர்க் கெளியாய் சிலை சுதனே எச்சரிக்கை
அள்ளன சிவகாமியருள் அமுதே எச்சரிக்கை
முன்னைப் பழ வினை முற்றிடும் முதல்வா எச்சரிக்கை
கன்னித் தமிழ்க் கண்டாருலை கபாலி எச்சரிக்கை.

சிங்கத்தில் வீற்றிருக்கும் பரமேஸ்வரியே பராக்கு
ஜோதியின் வடிவான அம்மா பராக்கு
கரும்பு மாலையணி அம்மா பராக்கு
செண்பக மாலையணிந்த அம்மா பராக்கு
அத்தித்தோட்டம் அமைந்தவளே பராக்கு
செம்மையுறு வாழ்வளிக்கும் பராக்கு
எப்படியும் எமைக் காப்பாய் பராக்கு
தாயே பராக்கு

முக்கண்ணன் சோதரியே வாலி வாலி
முதல்வனின் துணைவியே வாலி வாலி
திரி சூலி ஆனவளே வாலி வாலி
அருள்புரியும் மாதுமையே வாலி வாலி
ஆலமர நிழலமைந்தாய் வாலி வாலி
சுற்றத்தை காத்திட்டாய் வாலி வாலி
வரம் தந்து காத்திடுவாய் வாலி வாலி

மங்களம்
அருளைப் பொழிந்திடுவாய் சுபமங்களம்
அருமையான வாழ்வளிப்பாய் ஜெயமங்களம்
கணபதியின் தாயவளே சுபமங்களம்
காளிதேவி முருகனோடு சுபமங்களம்
அத்தித்தோட்டம் வந்தமர்ந்தாய் ஜெயமங்களம்
வேப்பிலையின் நாயகியாம் சுபமங்களம்
வாழை பலா மாறமந்தாய் சுபமங்களம்
கோப்பாய் அத்தித்தோட்டம் அருள்புரியும்.
மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆலய வரலாறும் அதன் வளர்ச்சிப் போக்கும்

பரமேஸ்வரிஅம்பாள்ஆலயம் கோப்பாய்தெற்கு கிராமத்தில் அத்தித் தோட்டம் என்னும் பதியில் அமைந்துள்ளது. அதன் வரலாறு தொன்மையானது இவ் வரலாற்றுக்காலப் பகுதியை மூன்று பகுதிகளாகக் நோக்கலாம்.

01. ஆலய நிர்மாணத்திற்கு முற்பட்ட காலம்.

02. ஆலய நிர்மாணக்காலப்பகுதி.

03. மஹா கும்பாபிஷேகமும் அதன் பின்னுள்ள காலமும் என்பனவாகும்.

முதலில் ஆலய நிர்மாணத்திற்கு முற்பட்ட காலப்பகுதியை நோக்குமிடத்து எமது முன்னோர்கள் இக்கிராமத்தின் பூர்வீகக்குடிகளாகும். இவர்கள் தமது ஆன்மீக ஈடேற்றத்திற்காக அத்தித்தோட்டம் என்னும் பகுதியில் அமைந்து காணப்பட்ட தலவிருட்சமான ஆலமரத்தையும் அதனுடன் இணைந்து காணப்பட்ட கல்லினையும் பாரம்பரிய வழிபாட்டுத் தெய்வமாகக் கருதி வழிபாடாற்றி வந்துள்ளனர். அந்த வகையில் பிரதான விருட்சமாக ஆலமரமும் அதனுடன் இணைந்ததாக அரசு, வேம்பு, பூவரசு, பனை, மா, பலா ஆகியவை சேர்ந்து வளர்ந்து காணப்பட்டது இந்துக்களின் வழிபாட்டு முறைகளில் ஒன்றான விருட்சத்தை வழிபடும் முறைக்கமைவாக எமது முன்னோர்களும் பூசித்து வழிபட்டு வந்துள்ளனர். இத்தல விருட்சமான ஆலமரத்தின் தோற்றத்தை காலவரையறைக்கு உட்படுத்த முடியாத நீண்ட வரலாற்றைக் கொண்டதாகவுள்ளதுடன் இத்தலவிருட்சமே அம்பாள் அருளாட்சி புரியும் உறைவிடமாகவும் காணப்பட்டது. இவ்வாறு எழுந்தருளி அருளாட்சிபுரியும் தெய்வத்தை முன்னோர்கள் பேத்தியம்மன் என்றே அழைத்தனர். இத்தெய்வத்தை கிராமிய வழிபாட்டு முறையிலேயே வழிபாடாற்றி வந்துள்ளனர். அந்தவகையில் ஆலயத்தை பரிபாலித்துவந்தவர்களால் பொங்கலிட்டு விருடசத்தொகுதிகளுக்கு படையல்கள் வைத்து பூசைகள் ஆற்றி தங்கள் வழிபாட்டினை மேற்கொண்டு வந்துள்ளனர். அவர்களில் அமரர். திரு.வேலன் கந்தர் அவர்களே ஆலயத்தின் தர்மகர்த்தா என்ற உயர்ந்த கௌரவ நிலையில் இருந்ததுடன் ஆலய கருமங்களையும் நெறிப்படுத்தி வந்துள்ளார். இவரது காலப்பகுதியில் ஆலயத்தின் பராமரிப்பு மற்றும் பூசைக்கருமங்களை அமரர். திரு. நா.பொன்னர் (பிரபலஆன்மீகசோதிடர்) அவர்கள் ஆற்றி வந்துள்ளார். இவரது காலப்பகுதியில் பூசை வழிபாட்டு முறைகள் ஒழுங்காகப் பேணப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக விசேட பூசைகள் நடாத்தும் சந்தர்ப்பங்களில் பொங்கல் மற்றும் நெய்வேத்தியப் பண்டங்களின் படையல்கள் வைத்து மணி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமக்கலம், சங்கு, பறை போன்றவற்றை ஒலித்து பூசை மேற்கொண்டு வழிபாடாற்றியுள்ளனர். இவ்வாலயத்தில் தைப்பொங்கல், பங்குனித்திங்கள் சித்திரைப்பௌர்ணமி, வைகாசிவிசாகப்பொங்கல், திருவெம்பாவை, என்பன கிரயமாக மேற்கொள்ளப்பட்டதுடன் சித்திரைப்பௌர்ணமி தினத்தில் பாற்கஞ்சிபடைத்து அம்பாளுக்கு விசேட பூசைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதில் குறிப்பாக மார்கழிமாத, திருவெம்பாவைப்பொங்கல், மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுவந்துள்ளது. அதாவது தற்காலிகமாக விசேட பந்தலிட்டு வெள்ளைகட்டி பொங்கல் பூசைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. இத்திருவெம்பாவை பத்து நாட்களும் பத்து குடும்பங்கள் உபயமாக மேற்கொண்டு வந்துள்ளன முறையே திரு.வே.கந்தர் திரு.நா.பூலோகம், திரு.நா.பொன்னர், திரு.க.சி.இராசரத்தினம், திரு.இ.தருமலிங்கம், திரு.வே.தம்பிராசா, திரு.நா.வேலாயுதம், திரு.க.இளையப்பு, திரு.ந.கந்தையா திரு.கு.செல்லையா ஆகிய குடும்பத்தினர் திருவெம்பாவை உபயத்தை சிறப்பாக மேற்கொண்டு வந்துள்ளனர். அதிலும் குறிப்பாக பத்தாவதும் இறுதியுமான திரு.கு.செல்லையா குடும்பத்தினரது உபயத்திலன்று வருடாவருடம் அன்னதானம் வழங்குவது வழக்கமாகும். இவ் உபயம் திருவெம்பாவையின் இறுதி நாள் என்பதனால் அம்பிகை அடியார்கள் தங்களாலியன்ற பொருளுதவியை வழங்குவர். அவற்றை ஒன்றுதிரட்டி மேலும் தங்களின் கூடுதலான பங்களிப்புடன் பொங்கல் மற்றும் நெய் வேத்தியம் பண்டங்கள் என்பவற்றை படைத்து அம்பாளுக்கு விசேட பூசைகள் மேற்கொள்வதுடன் மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) வழங்குவது வழக்கமாகும். இவ்வாறு ஆலயத்தில் அன்னதானம் வழங்கும் மரபு உருவாக்கப்பட்டதுடன் சமூகத்தின் ஒன்றுபட்டவாழ்விற்கும் இவ்வாலயம் வித்திட்டதென்பது சிறப்பம்சமாகும்.

இவ்வாறு கிராமிய வழிபாட்டு முறையில் பூசிக்கப்பட்டு வந்த நிலையில் அம்பாளுக்கு ஆலயமொன்றை அமைக்க வேண்டுமென்ற உயரிய சிந்தனையை செயல்வடிவமாக்குவதற்கான நடவடிக்கையாக 1975ம் ஆண்டு ஆலயத்திருப்பணிச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அத்திருப்பணிச்சபையின் தலைவராக ஆலய தர்மகர்த்தா அமரர் திரு.வே.கந்தர் அவர்களின் மகன் திரு.க.செல்வவிநாயகம் அவர்களும் செயலாளராக சமூகரத்தினம் எம்.கே.இளையப்பு (அகில இலங்கை சமாதான நீதிவான் யாழ் மாவட்ட செயலக உத்தியோகத்தர்) அவர்களும் பொருளாளராக திரு.பூ.நாகராசா அவர்களும் உபதலைவராக திரு.கு.செல்லையா அவர்களும் உபசெயலாளராக திரு.வே.தேவராசா அவர்களும் திருப்பணிச்சபையின் வரலாற்றுப் பெருமைக்குரிய ஆரம்பநிர்வாகிகளாகத் தெரிவாகினர். இவ்வாறு திருப்பணிச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள நிலையில் விருட்சம் அமைந்திருக்கும் நிலத்தை பொதுவான தர்மசாசனமாக மாற்ற வேண்டுமென்பதற்கமைவாக ஆலய தர்மகர்த்தாவான திரு.வே.கந்தர் அவர்களுக்கும் ஆலய ஆதனத்திற்கு வடக்குப் புறமான ஆதனத்தின் உரிமையாளரான திரு.நா.பூலோகம் அவர்களுக்குமிடையில் ஏற்பட்ட இணைக்கப்பாட்டிற்கமைவாக திரு.வே. கந்தர் அவர்களால் ஆலயம் அமைந்துள்ள நிலப்பகுதியையும் (கோப்பாய் சூரியோதய ஐக்கிய நெசவாளர் கூட்டுறவுச் சங்க நிலப்பகுதி நீங்கலாக) திரு.நா.பூலோகம் அவர்களால் ஆலயத்தின் வடக்குப்பகுதியில் அமைந்துள்ள நிலப்பகுதியில் பகுதியளவு நிலப்பரப்பையும் ஆலயத்திற்கு செல்லும் பாதையினை விஸ்தரிப்பதற்கு ஏற்ற வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பகுதியினையும் தர்மசாசனமாக எழுதுவதென்ற இணக்கப்பாட்டிற்கமைவாக திரு.வே.கந்தர் அவர்களால் 1975ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ம் திகதி குறித்த ஆதனம் திருப்பணிச்சபையின் செயலாளர், பொருளாளர் உபசெயலாளர் ஆகிய திரு.எம்.கே.இளையப்பு திரு.பூ.நாகராசா திரு.வே.தேவராசா ஆகியோரிடம் ஒப்படைத்து உறுதிமுடிக்கப்பட்டது.

## ஆலய நிர்மாணக்காலப்பகுதி

ஆலயத்துக்கான காணிகள் தர்மசாசனமாக்கப்பட்டதுடன் திருப்பணிச்சபை ஆலய கட்டடத்துக்கான நிலையம் குறித்தல், அடிக்கல் நாட்டுதல் ஆகிய ஆரம்பப்பணிகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள், மற்றும் ஆலோசனை பெறும் பொருட்டு நீர்வேலி கந்தசாமி கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ சு.இராசேந்திரக் குருக்கள் அவர்களை திருப்பணிச்சபை ஏற்பாடு செய்தது. அவ்வேற்பாட்டின் பயனாக குருக்கள் அவர்கள் பெருமனதுடன் திருப்பணிசபைக்கு வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் அவ்வப்போது வழங்கி வந்தார். குருக்களின் வழிகாட்டல்களுக்கமைவாக கட்டடப்பணி ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்பப் பணியாக 1977ம் ஆண்டு சித்திரை மாத பௌர்ணமி நந்நாளில் கட்டடத்துக்கான அடிக்கல்லை பழைய வீதி கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சமூக சேவையாளன் திரு. கந்தையா கனகலிங்கம் (மதுவரி அத்தியட்சகர்) அவர்கள் நாட்டி வைத்தார். அப்புனித கைங்கரியத்தினைத் தொடர்ந்து வந்த எட்டாம் நாள் ஆலய தர்மகர்தாவான திரு.வே.கந்தர் அவர்கள் தன்னால் நிறைவேற்ற வேண்டிய இறைபணியை நிறைவு செய்து இறைவனடி சேர்ந்தார். இந்நிகழ்விற்குப்பின் கட்டடப்பணி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தும் கூட ஏற்பட்ட சில தடங்கல்கள் காரணமாக கட்டுமாணப்பணி சில காலம் தடைப்பட்டுக் காணப்பட்டது துரதிஷ்டவசமானது. ஏற்பட்ட தடங்கல்களில் பொருளாதார தடங்கல் மிக முக்கியமானதாகக் காணப்பட்டது. இப்பொருளாதார நெருக்கடியை சீர் செய்து மீண்டும் கட்டடப்பணியை முன்னெடுக்க வேண்டுமென்ற எண்ணப்பாங்கில் திருப்பணிச்சபை புத்தெழுச்சியுடன் மும்முரமாக ஈடுபட்டது. இக்காலப்பகுதியில் நிதி சேகரிப்புப் பணியில் திரு.செ.சந்திரகுமார், திரு.க.சிவகுமார் ஆகிய இருவரும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி கணிசமான நிதியை சேகரித்தனர் அத்துடன் கட்டட அமைப்பிலும் சில மாற்றங்களை மேற்கொண்டு தடைப்பட்டிருந்த கட்டடப்பணியை மீளவும் ஆரம்பித்து நிர்மாணப்பணி முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறு நிர்மாணப்பணி முன்னெடுக்கப்பட்டு நிறைசெய்ததைத் தொடர்ந்து திருப்பணிச் சபியினர் தமக்கான ஓய்வினைப் பெறும் பொருட்டு புதிய நிர்வாகசபையை தெரிவு செய்தனர் அச்சபையின் தலைவராக மீண்டும் திரு.க.செல்வவிநாயகம் அவர்களும் செயலாளராக திரு.இ.கோபாலசிங்கம் அவர்களும் பொருளாளராக திரு.பொன். பேரின்பநாதன் (ஆசிரியர்) அவர்களும் தெரிவுசெய்யப்பட்டு பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டனர். இந்நிர்வாகிகளே அம்பாளின் மஹாகும்பாபிஷேகத்தை நிறை வேற்றி வைத்தனர்.

இவ்வாறு புதிய நிர்வாகிகள் பொறுப்புக்களை ஏற்றிருந்தும் அடுத்த கட்டப்பணிகளை மேற்கொள்வதற்கான நிதியின்மையால் மீண்டும் நிதி சேகரிக்கவேண்டிய இக் கட்டான நிலை சபைக்கு ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் சபையினர் கடும்பிரயத்தனத்துடன் நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர். இக்காலப்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணிச்சபையின் தலைவர் திரு.க.செல்வவிநாயகம் அவர்களின் மனைவி இறந்தமையால் பல்வேறு கஷ்டதுன்பங்கள் வசதியீனங்கள் மத்தியிலும் அவர் அம்பாளின் கைங்கரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற பேரவாவால் கர்ப்பக்கிரக மூல விக்கிரமாக விளங்கும் அம்பாளின் உருவச்சிலையை செய்வதற்கு இறுதியாக தன்னிடமிருந்த தாலிப்பவுணை விற்று தேறிய பணத்தினை சபையிடம் ஒப்படைத்தார். இப்பணத்துடன் சபை மேலும் பணத்தினைச் சேர்த்து விக்கிரகத்தை செய்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## கும்பாபிஷேகமும் அதன்பின்னுள்ள காலப்பகுதியும்

இவ்வாறு புதிதாக செதுக்கப்பட்ட அம்பாளின் உருவச்சிலையை உச்சாடனப்படுத்தும் பொருட்டு நீர்வேலி கந்தசாமி கோவிலில் வைக்கப்பட்டு பேணிப்பாதுகாக்கப்பட்டுவந்தது. இந்நிலையில் திருப்பணிச்சபை கும்பாபிஷேகத்தை நிறைவேற்றுவது தொடர்பில் ஆராய்ந்து நீர்வேலி கந்தசுவாமி கோவில் பிரதமகுருவின் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொண்டு கும்பாபிஷேகத்துக்கான நாள் குறிக்கப்பட்டு அதற்கான கருமங்களை சபை துரிதகதியாக மேற்கொண்டதுடன் அம்பாள் நீர்வேலி கந்தசுவாமி கோவிலிலிருந்து பக்தி பூர்வமாக சபையினரால் எடுத்து வரப்பட்டு ஆலயத்தில் வைத்துப் பரிபாலிக்கப்பட்டதுடன் கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் அம்பாளை கிராம தரிசனத்திற்காக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அம்பாளின் மஹாகும்பாபிஷேகம் 1989ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் திகதி வெள்ளிக்கிழமை அதாவது சுக்கில வருடம் கார்த்திகைத் திங்கள் ஒன்பதாம் நாள் அத்த நட்சத்திரத்தில் நீர்வேலி கந்தசாமிகோவில் பிரதமகுருபிரம்மஸ்ரீ சு.இராசேந்திரக் குருக்கள் அவர்களால் நிறைவேற்றும் வகையில் அம்பாளைக் கர்ப்பக்கிரக பீடத்தில் திரு.திருமதி. பேரின்பநாதன் தம்பதிகள் பிரதிஷ்டை செய்ய திரு.திருமதி கோபாலரத்தினம் தம்பதிகள் மங்களவிளக்கினை ஏற்ற வைத்தியர் இரனத்திவேலர் (பழைய வீதி, கோப்பாய் ) நிறைவாக தேங்காய் உடைக்கவும் திரு.வன்னித்தம்பி நடராசா அவர்கள் தேவாரம் இசைக்க மங்கல வாத்தியங்கள் முழங்க அந்தணர்களின் மந்திர உச்சாடனங்கள் ஒலிக்க அம்பாளைப் பிரதிஷ்டை செய்து குடமுழுக்காற்றப்பட்டு கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்ட வேளையில் மக்கள் பக்திப்பரவசத்துடன் அம்பாளை வேண்டி நின்றமை வரலாற்றுச் சிறப்பு நிகழ்வாகும்.

அம்பாளின் மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பத்து நாட்கள் மண்டலாபிஷேகத்தை நிறைவேற்றும் பொருட்டு திருவெம்பாவை உபயத்தின் ஒழுங்கின் பிரகாரம் முறையே ஒன்று தொடக்கம் பத்து நாட்களும் திரு.க.செல்வவிநாயகம், திருமதி.பூ.மகேஸ்வரி திரு.பொன்.பேரின்பநாதன், திரு.க.சி.இராசரத்தினம் திரு.இ.தருமலிங்கம். திரு.வே.தம்பிராசா, திரு.நா.வேலாயுதம், திருமதி.இ.ஆச்சிமுத்து, திருமதி.க.அன்னலட்சுமி. திரு.கு.செல்லையா ஆகிய குடும்பங்கள் மேற்கொண்டன. தொடர்ந்து பதினோராம் நாள் அம்பாளுக்கு 108 சங்குகளால் சங்காபிஷேகத்தை சிவஸ்ரீ விக்கினேஸ்வரக் குருக்கள் வெகுவிமர்சையாக நிறைவேற்றி வைத்தார் அதனைத் தொடர்ந்து குருக்கள் அவர்களின் ஆசியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றதுடன் அம்பிகை அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டு நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது. இக் கும்பாபிஷேகத்திற்கான மின்னொளியினை தயா லைற் உரிமையாளர் திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.மயில்வாகனம் அவர்களினால் வழங்கப்பட்டதுடன் அன்றுதொடக்கம் இன்று வரை இப் பணியினை ஆற்றி வருகின்றார்.

சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து மறு நாள் வைரவப்பெருமானுக்கு விசேட அபிஷேகமும் சிறப்பான பூசையும் மேற்கொள்ளப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் அபிஷேகம் பூசைகள் ஆகியவற்றின் நிறைவைக்குறிக்கும் முகமாக திரு.இ.கோபாலசிங்கம் அவர்களால் தேங்காய் உடைத்து நிறைவு செய்யும் புதிய வழிபாட்டு மரபு ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் அம்பிகை அடியார்களுக்கு குழையல் சாதம் வடை என்பன வழங்கப்பட்டது நிறைவான அம்சமாகும் இந்நடை முறை இன்றுவரை பின்பற்றப்பட்டு வருவது வரலாற்று அம்சமாகும்.

இவ்வாறு மஹாகும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம், வைரவர்சாந்தி என்பன சிறப்பாக நிறைவேற்றப்பட்டு பின்னர் தொடர்ந்து வந்த காலத்தில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மட்டும் மாலையில் சைவக்குருக்கள் சிவஸ்ரீ விக்கினேஸ்வரக்கருக்கள் (நல்லூர் நாயன்மார்க்கட்டு வெயிலுகந்த பிள்ளையார் ஆலய குரு) அவர்களினால் பூசை மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஏனைய நாட்கள் அம்பாளுக்கு விளக்கேற்றும் பொருட்டு எம்மவர்களான திருவாளர்கள் பொன்.பேரின்பநாதன் வே.தேவராசா சி.பத்மநாதன் ஆகியோரால் அவ்வப்போது பூசைக்கருமங்கள் மேற்கொள்ளப்பட்டுவந்தன இந்நிலை நீண்டகாலம் தொடராது குறுகிய காலப்பகுதிக்குள் பூசை ஒழுங்குக்கான கட்டமைப்பு மேற்கொள்ளப்பட்ட தென்பது குறிப்பிடத்தக்கது. திருப்பணிச்சபை கும்பாபிஷேகம், சங்காபிஷேகம் மற்றும் அது சார்ந்த கிரியைகளை சிறப்புடன் நிறைவேற்றிய நிலையில் அச்சபை அடுத்த கட்ட வளர்ச்சியான ஆலய பரிபாலன சபையாக 1990ம் ஆண்டு மாற்றம் கண்டது பரிபாலன சபையின் தலைவராக மீண்டும் திரு.க.செல்வவிநாயகம் அவர்களும் செயலாளராக திரு.இ.தருமலிங்கம் அவர்களும் பொருளாளராக திரு.வே.நாகேந்திரம் அவர்களும் பதவியேற்றனர். இவ்வாண்டு தவிர்க்கமுடியாத காரணங்களினால் வருடாந்த சங்காபிஷேகம் நிறைவேற்ற முடியாது போனமை மிகத்துரதிஷ்டவசமானதாகும். இந்நிலையினைக் கருத்திற்கொண்ட அம்பிகை அடியார்கள் 1991ம் ஆண்டுக்கான சங்காபிஷேகத்தை நிறைவேற்றி வைத்தனர். 1990ம் நடுக்காலப்பகுதியில் தலைவர் அவர்கள் தனது கடமையை சீராக நிறைவேற்ற முடியாத சூழ் நிலையில் புதிய தலைவர் ஒருவரை தெரிவு செய்யுமாறு சபையிடம் தெரிவித்ததற்கமைவாக சபை மீண்டும் பொதுக் கூட்டத்தை கூட்டி புதிய நிர்வாகத்தை தெரிவு செய்தது அதன் பிரகாரம் தலைவராக திரு.கு.செல்லையா அவர்களும், செயலாளராக திரு.வே.சேனாதிராசா அவர்களும் பொருளாளராக திரு.பொன் பேரின்பநாதன் அவர்களும் உட்பட புதிய நிர்வாகசபை தெரிவாகியது. இந்நிர்வாக சபையே தொடர்ச்சியாக 1991ம் ஆண்டு இறுதிக்காலம் வரை நிர்வாகப்பணியை மேற்கொண்டு வந்தது. இக்காலப்பகுதியில் முதலாவது திருவெம்பாவை, மண்டலாபிஷேக உபயகாரனான திரு.க.செல்வவிநாயகம் அவர்கள் தனது தனிமை, மற்றும் இயலாமை காரணமாக தனது குடும்பத்தின் பெயரில் மேற்கொண்டு வந்த உபயங்களை தொடர்ந்து மேற்கொள்ள முடியாது என்றும் அதனை சபை பொறுப்பேற்றுக்கொள்ளுமாறும் சபையிடம் தெரிவித்துக்கொண்டதற்கமைவாக சபை அவ்வெற்றிடத்தை சீர்செய்யும் பொருட்டு எட்டாவது உபயகாரரான திருமதி.இ.ஆச்சிமுத்து குடும்பத்திடம் முதலாவது திருவெம்பாவை, மண்டலாபிஷேக உபயங்களை ஒப்படைத்ததுடன் எட்டாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயத்தை திரு.சி. சிவகுரு (சுன்னாகம்) குடும்பத்திற்கு வழங்கியது.

மேலும் 1991ம் ஆண்டு ஆலய பரிபாலன சபையை ஓர் முழுமையான நிர்வாகக்கட்டமைப்புக் கொண்டதாக மாற்றும் பொருட்டு சபையை வரையறை செய்யக்கூடிய உபவிதிகளைக் கொண்ட யாப்பு ஒன்றை தயார் செய்ய வேண்டுமென்ற அங்கத்தவர்களின் எண்ணக்கருவுக்கு செயல்வடிவம் கொடுக்கும் முகமாக அயலிலுள்ள பல ஆலயங்களின் யாப்புக்களைப் பெற்று அதன் சரத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான சரத்துக்களை உள்வாங்கியதுடன் புதிய விடயங்களும் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு உபவிதி தயாரிக்கப்பட்டு சபையில் அங்கீகரிக்கப்பட்டது. இவ் உபவிதி தயாரிப்பதில் திரு.இ.கோபாலசிங்கம் திரு.பூ நாகராசா திரு. வே.தம்பியப்பா,திரு.வே. சேனாதிராசா. திரு.பூ. செல்வராசா திரு.வே. தேவராசா பூ.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் கணிசமான பங்காற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது இவ்வாறு உபவித்தயாரிப்பின் பயனாக முதற்கட்டமாக அங்கத்தவர் விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்பட்டு சபையின் அங்கத்தவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டனர்.

இவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்ட நிலையில் உபவிக்கமைவாக முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 1992ம் ஆண்டு ஜனவரி மாதம் நடாத்தப்பட்டு தலைவராக திரு.வே.தம்பிராசா அவர்களும் செயலாளராக திரு.சி. பத்மநாதன் அவர்களும் பொருளாளராக திரு.க. சிவகுமார் அவர்களும் புதிய நிர்வாகிகளாக தெரிவாகினர். இந்நிர்வாக மாற்றம் சபையின் புதிய அத்தியாயமாகும் இதுவரைகாலமும் செவ்வாய், வெள்ளிகிழமைகளில் மாலையில் மாத்திரம் அம்பாளுக்கு பூசைகள் மேற்கொண்டு வந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி தினமும் ஒரு வேளை பூசையை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் நல்லூர் கந்தசுவாமி கோவிலைச் சார்ந்த அந்தண குருவான பிரம்மஸ்ரீ சு.மகாதேவா குருக்கள் (மாணிக்கம் ஐயா) அவர்கள் திரு.பூ.நாகராசா அவர்களின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டதுடன் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டது. மகாதேவா குருக்கள் எமது ஆலயத்திற்கு முதன் முதலில் வருகை தந்து பூசையை ஆரம்பித்த நாள் தமிழ் மாதத்தின் முதல் நாளாகும் இக் குருக்களின் வருகையுடன் அம்பாளுக்கு தினமும் பூசை செய்யும் வழி பிறந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நித்திய பூசையை ஒழுங்குற மேற்கொள்வதற்கு ஒவ்வொரு நாட்களுக்கும் ஒவ்வொரு உபயகாரர்களை நியமித்து அவர்களின் பங்களிப்புடன் பூசையை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்நித்தியபூசை உபயகாரர் களுக்கான தினங்களை தீர்மானிப்பதற்கு மகாதேவா குருக்கள் அவர்கள் ஆலயத்திற்கு வந்து பூசையை ஆரம்பித்த தமிழ் மாதத்தின் முதல் நாளை அடிப்படையாகக் கொண்டு உபயகாரர்களுக்கு திகதிகள் நிர்ணயிக்கப்பட்டது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட செயன்முறையின் அடிப்படையிலேயே குருக்களுக்கான வேதனமும் தமிழ் மாதத்தின் முதலாம் நாளிலேயே வழங்கப்பட்டுவந்தது. ஆனால் தற்போது ஆங்கிலமாத அடிப்படையில் வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. மேலும் வருடாந்த சங்காபிஷேகத்திற்கான நிதிதிரட்டுவது தொடர்பில் உபயகாரர்கள் மற்றும் ஆலயத்துடன் தொடர்புடையவர்களுக்கு உண்டியல்கள் வழங்கப்படும் அவ்வுண்டியலைப் பெறுபவர்கள் அடுத்துவரும் சங்காபிஷேகம் வரை உண்டியலில் பணத்தை சேகரிப்பவர் பின்னர் அவ்வுண்டியல்களை சங்காபிஷேகத்திற்கு முன்னர் உண்டியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்களிடமிருந்து சபை அதனைப் பெற்று சேகரித்த பணத்தினை சபை திரட்டிக்கொள்ளும் வருடம் தோறும் இவ்வுண்டியல் சங்காபிஷேகத்தன்று உரியவர்களுக்கு வழங்கப்படும் இவ்வாறு இச்செயற்பாடு ஒரு சுற்றோட்டச் செயன்முறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இச் செயன்முறையின் அடிப்படையில் சேகரிக்கப்படும் பணத்துடன் வேறுவழிகளிலும் திரட்டப்படும் நிதியையும் சேர்த்து வருடாந்த சங்காபிஷேகம் மேற்கொள்ளப்படும் இத்திட்டமும் இவ்வாண்டிலிருந்தே நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதாகும்.

அடுத்து 1993ம் ஆண்டு நிர்வாகக் காலப்பகுதியின் தலைவராக திரு.க.கோபாலரத்தினம் அவர்களும் செயலாளராக திரு.பூ ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் பொருளாளராக திரு.வே. சேனாதிராசா அவர்களும் சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளராக செயற்பட்டனர். இக்காலப்பகுதியில் திரு.நா. பூலோகம் அவர்களால் ஏற்கனவே ஆலயத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணிக்கான உறுதியினை 1993.03.01ம் திகதியில் அவரது மனைவி பிள்ளைகளால் சபையின் தலைவர் க.கோபாலரத்தினம் செயலாளர் திரு.பூ ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரிடம் ஒப்படைத்து உறுதிமுடிக்கப்பட்டு தர்மசாசனம் எழுதப்பட்டது. மேலும் ஆலயத்தை இந்து கலாசார திணைக்களத்தில் பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டது இவ்விண்ணபத்திற்கமைவாக 1994.04.29ம் திகதி பதிவு மேற்கொள்ளப்பட்டது. அப்பதிவின் பிரகாரம் பதிவிலக்கம் HA.5.JA.653 என்பதாகும். இப்பதிவினை திரு.பூ.நாகராசா அவர்கள் தனது பிரத்தியேக முயற்சியினால் மேற்கொண்டிருந்தார். மேலும் இக்காலப்பகுதியிலேயே ஆலயத்துக்கான திருமஞ்சணக்கிணறும் அமைக்கப்பட்டதுடன் ஆலயத்தின் முன் மண்டபமும் மறு சீரமைக்கப்பட்டது.

மேலும் 1994ம் ஆண்டை நோக்குகையில் இக்காலப்பகுதியின் தலைவராக திரு.இ கோபாலசிங்கம் அவா்களும் பொருளாளராக திரு.நா.தணிகாசலம் அவா்களும் முக்கிய நிா்வாகிகளாக செயலாற்றினா். ஆலயத்தின் நித்திய நைமித்திய கிரியைகள் ஒழுங்காக நடாத்தப்பட்டுவந்துள்ளதுடன் வைரவபீடம் மறுசீரமைக்கப்பட்டு வைரவர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு அதற்கான கிரியைகளும் மேற்கொள்ளப்பட்டது. இப்பிரதிஷ்டையை அன்றைய ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சு.ஹரிகரசர்மா அவர்கள் நிறைவேற்றி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 1995 ஆண்டு நிா்வாகத்தின் தலைவராக திரு.வே.தம்பியப்பா அவா்களும் செயலாளராக திரு க.குமாரகுலசிங்கம் அவா்களும், பொருளாளராக திரு.த.அம்பிகைசுதன் அவா்களும் நம்பிக்கைப் பொறுப்பாளா்களாக தெரிவாகினா். இவ்வாண்டின் ஆரம்பகாலப்பகுதி சிறப்பாக நிா்வகிக்கப்பட்டிருந்தும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் மக்கள் எமது பிரதேசத்தை விட்டு வெளியேறவேண்டிய துரதிஷ்டவசமானநிலை ஏற்பட்டதனால் நிா்வாகப்பணிகளைத் தொடரமுடியாது போனது தவிா்க்கமுடியாததொன்றாகும். மேற்குறிப்பிட்ட தற்கமைவாக 1995ல் எமது பிரதேசத்தை விட்டு மக்கள் வெளியேறி மீண்டும் 1996ல் மீளக்குடியேறியபோது ஆலயத்தின் சுற்றுப்புறச் சூழல்கள் பாதிக்கப்பட்டிருந்ததுடன் ஆலயச் சொத்துக்கள் சபையின் ஆவணங்கள் சேதமாக்கப்பட்டிருந்ததுடன் காணாமலும் போயிருந்தது. இந்நிலையில் 1996.05.19ம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தலைவராக திரு.சி.பத்மநாதன் அவர்களும் செயலாளராக திரு.பூ.ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் பொருளாளராக திரு.க.சிவகுமார் அவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவாகினர் இக்காலப்பகுதி மீள்குடிறேற்றமாகையால் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஆலயப்பணிகள் முன்னெடுக்கப்பட்டது. அந்நிலையில் 1996.07.03ஆம் திகதி ஸ்நபன புண்ணியத்தான அபிஷேகத்தை பிரம்மஸ்ரீ சு.ஹரிவறசர்மா அவர்கள் நிறைவேற்றிவைத்து தடைப்பட்டிருந்த அம்பாளின் நித்திய நைமித்திய கிரியைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்காலப்பகுதி நெருக்கடிமிக்க பாதுகாப்பற்ற சூழலாக இருந்தும் ஆலய குரு பிரம்மஸ்ரீ ஹரிஹரசர்மா அவர்கள் தினமும் ஆலயப் பணியை செவ்வனே நிறைவேற்றி வைத்தார் என்பது காலத்தால் மறக்கமுடியாததொன்றாகும். மேலும் மண்டலாபிஷேக ஐந்தாவது உபயகாரனான திரு.இ. தருமலிங்கம் குடும்பத்தினர் இக்காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் வசிக்காத காரணத்தினால் குறித்த உபயத்தை திரு.வே.தேவராசா குடும்பத்தினர் இக்காலப்பகுதியிலிருந்து மேற்கொண்டு வருகின்றனர். அடுத்து 1997ம் ஆண்டில் தலைவராக திரு.வே. தேவராசா அவர்களும் செயலாளராக திரு.க.கிருபாகரன் அவர்களும் பொருளாளராக திரு.நா. தணிகாசலம் அவர்களும் செயலாற்றினர் இக்காலப்பகுதியில் மூன்றாவது மண்டலாபிஷேக உபயத்தை மேற்கொண்டு வந்த உபயகாரனான திரு.பொ. பேரின்ப நாதன் அவர்கள் உபயத்தை மேற்கொள்ள முடியாது போக அவ்உபயம் திரு.நா.கந்தசாமி குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டது. மேலும் 1998நிர்வாகப் பகுதியின் தலைவராக திரு.க.கோபாலரத்தினம் அவர்களும், செயவாளராக திரு.சிபத்மநாதன் அவர்களும், பொருளாளராக திரு.பூ.ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் செயலாற்றினர். இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படாத நிலையிலும் ஆலயத்தின் நித்திய நைமித்திய கிரியைகள் ஒழுங்காகவும் சிறப்பாகவும் மேற்கொள்ளப்பட்டது.

அடுத்து 1999ம் ஆண்டுக் காலப்பகுதியும் ஆலயவளர்ச்சியில் முக்கியமானதாகும் இக்காலப்பகுதியின் தலைவராக திரு.இ.கோபாலசிங்கம் அவர்களும் செயலாளராக திரு.வே. தேவராசா அவர்களும் பொருளாளராக திருமதி. கோ.யோகேஸ்வரி அவர்களும் செயலாற்றினர் இவர்களது நிர்வாகப்பகுதியில் பரிவார மூர்த்தியான பிள்ளையாருக்கு ஆலயம் அமைக்கப்பட்டு விநாயக் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் மேற்கொள்ளப்பட்டது. கும்பாபிஷேகத்தை இணுவில் பிரம்மஸ்ரீ மகாதேவா சோமசுந்தரக்குருக்கள் அவர்கள் நிறைவேற்றி வைத்தார்.

அடுத்து 2000 ஆண்டு நிர்வாகப் பகுதியானது ஆலயத்தின் செயற்பாடுகள் எளிமையாகவும் அடிப்படையில் செய்யப்பட்ட வேண்டிய பணிகள்மட்டும் வரையறை செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. அப்போது எமது பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண நிலைகாரணமாக பணிகள் மட்டுப்படுத்தப்பட்டது. இக்காலப்பகுதியின் தலைவராக திரு.சொ.சந்திரகுமார் அவர்களும் செயலாளராக திரு.க.கிருபாகன் அவர்களும் பொருளாளராக திருமதி.தே.இராசபூபதி அவர்களும் பொறுப்புடன் செயற்பட்டு ஆலய சொத்துக்களை பாதுகாத்தமை குறிப்பிடத்தக்கது இந்நிலையில் ஆலயத்தின் சூழலில்வசிக்கும் பிரம்மஸ்ரீ செம்பொற்சோதிசர்மா அவர்கள் காலமறிந்து ஆலயநலனில் அக்கறை கொண்டு அம்பாளின் கைங்கரியம் தடைப்படாது பூசை மேற்கொண்டமை மறக்க முடியாததொன்றாகும்.

2001ம் ஆண்டு ஆலய வளர்ச்சியில் முக்கிய காலப்பகுதியாகும் இக்காலப்பகுதியின் தலைவராக திரு.வே.தேவராசா அவர்களும் செயலாளராக திரு.பூ.ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் பொருளாளராக திரு.க.சிவகுமார் அவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைப்பொறுப்பாளராக செயலாற்றினர் இவ்வாண்டு முதலாவது புனராவர்த்தன கும்பாபிஷேகக் காலமாகையால் நிறையப் பணிகளை நிறைவேற்ற வேண்டிய நிலை இருந்தும் காலசூழ்நிலை பொருத்தப்பாடாக அமையாத நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட சில வேலைத்திட்டங்களை மட்டும் மேற்கொண்டு புனருத்தாரண கும்பாபிஷேகத்தை சபை மேற்கொண்டது. அந்தவகையில் ஆலயத்தில் தொடர்ச்சியாக இருந்து வந்த கும்பாபிஷேகத்தினமான கார்த்திகை மாத அத்த நட்சத்திரத்திற்கு பதிலாக வைகாசி மாதமூலநட்சத்திரத்திற்கு கும்பாபிஷேக நாள் மாற்றப்பட்டு இணுவில் பிரம்மஸ்ரீ மகாதேவா சோமசுந்தரக் குருக்களினால் 2001.06.07ம் திகதி வியாழக்கிழமை கும்பாபிஷேகம் நிறைவேற்றி வைக்கப்பட்டது. இவ்வாண்டின் அபிவிருத்திப்பணிகளாக ஆலய மண்டபம் சீர் செய்யப்பட்டதுடன் ஆலய வீதிநிலங்களும் செப்பனிடப்பட்டதுடன் ஆலயத்துக்கான மின்னிணைப்பும் மேற்கொள்ளப்பட்டது. இப்பணிக்காண நிதியுதவியை அன்பர்கள் சிலர் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

மேலும் 2002ம் ஆண்டின் தலைவராக திரு.க.கோபாலரத்தினம் அவர்களும். செயலாளராக திரு.க.கிருபாகரன் அவர்களும், பொருளாளராக திரு.நா.தணிகாசலம் அவர்களும் செயலாற்றினர். 2003ன் தலைவராக திரு.சி.பத்மநாதன் அவர்களும், பொருளாளராக திரு.க.சிவகுமார் அவர்களும் செயலாற்றினர் இக்காலப்பகுதியில் ஆலயத்திற்கு அன்றைய இந்துக்கலாசார அமைச்சரின் வருகைக்கான ஏற்பாட்டின் அம்சமாக ஆலயத்திற்குச் செல்லும் பாதையை விஸ்தரிக்கும் நோக்கில் ஆலயத்திற்கு வடக்குப்புறமாக காணி அன்பளிப்புச் செய்த குடும்பத்தினரால் பாதைக்கான காணியும் அன்பளிப்புச் செய்யப்பட்டு பாதை விஸ்தரிக்கப்பட்டது. 2004 தலைவராக திரு.வே.தேவராசா அவர்களும் செயலாளராக திரு.க.கிருபாகரன் அவர்களும் பொருளாளராக திரு.க.கோபாலரத்தினம் அவர்களும் 2005ல் தலைவராக திரு.சி.பத்மநாதன் அவர்களும் செயலாளராக திரு.பூ ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் பொருளாளராக திரு.நா.பாஸ்கரன் அவர்களும் 2006ல் தலைவராக திரு.க.சிவஞானராசா அவர்களும் செயலாளராக திரு.தே.இராகவன் அவர்களும் பொருளாளராக திருமதி.அம்பிகாவதி அவர்களும் 2007ல் தலைவராக திரு.வே.தேவராசா அவர்களும் செயலாளராக திரு.க.இராசகுலரத்தினம் அவர்களும் பொருளாளராக திரு.க.குமாரகுலசிங்கம் அவர்களும் செயலாற்றினர்.குறித்த 2002ம் ஆண்டு தொடக்கம் 2007ம் ஆண்டுவரையான காலப்பகுதியில் ஆலயத்தின் நித்திய, நைமித்திய கிரியைகளும் பரிபாலனசபையின் பணிகளும் முறையாகவும் சிறப்பாகவும் நிறைவேற்றப் பட்டுள்ளது. ஆலய வளர்ச்சியில் மேலும் புதிய வரலாற்று அத்தியாயமாகக் காணப்படும் காலமாக 2008ம் ஆண்டைக் குறிப்பிடலாம். இவ்வாடிண்டின் தலைவராக திரு.சி.பத்மநாதன் அவர்களும் செயலாளராக திரு.கோ.நிறைஞ்சன் அவர்களும் பொருளாளராக திரு.க.சிவகுமார் அவர்களும் செயலாற்றினர் இவர்களது உயரிய உழைப்பின் பயனாக வசந்த மண்டபம் அமைக்கப்பட்டு உற்சவ மூர்த்தியாகிய அம்மன் திருவுருவவிக்கிரகத்தை பிரம்மஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்கள் அவர்களால் தென்னிந்தியாவின் கும்பகோணத்திலிருந்து கொண்டு வரப்பட்டு 2008.04.25ம் திகதி காலை 5.00 மணிக்கு அம்பாள் பிரதிஷ்டை மேற்கொள்ளப்பட்டு கும்பாபிஷேகம் மேற்கொள்ளப்பட்டது. கும்பாபிஷேகத்தினத்தன்று மாலை அம்பாள் கிராம தரிசனத்திற்காக வீதியுலா கொண்டுவரப்பட்டது. அதைத்தொடர்ந்து ஒவ்வொருவருடமும் சங்காபிஷேகத்தினத்தன்று மாலை அம்பாள் கிராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனத்திற்காக கொண்டு செல்வது வழக்கமாகியது. இப்பணிக்கான நிதி வங்கி வைப்பிலிருந்தும் பணம் மீளெடுக்கப்பட்டதுடன் மக்களின் பங்களிப்புடனும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இவ்வாண்டில் ஆறாவது மண்டலாபிஷேக உபயமான திரு.வே.தம்பிராசா அவர்களது உபயம் அவரது குடும்பத்தினரால் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட அவ உபயம் திரு.சி.பத்மநாதன் குடும்பத்திற்கு மாற்றப்பட்டது.

மேலும் 2009ம் ஆண்டின் தலைவராக திரு.க.சிவஞானராசா அவர்களும் செயலாளராக திரு.க.இராசகுலரத்தினம் அவர்களும் பொருளாளராக திரு.தே.இராகவன் அவர்களும் பரிபாலன சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளராக இருந்து சிறப்பாகவும் ஒழுங்காகவும் ஆலயத்தினதும் சபையினதும் பணிகளை செவ்வனே செய்து வந்தனர். அப்போது தலைவர் அவர்களுக்கு ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்ய புதிய தலைவராக திரு.கி.சந்திரசேகரம் அவர்கள் பொறுப்பேற்று சபையை சிறப்பாக வழிநடத்தி வந்தார். அடுத்து 2010ம் ஆண்டின் தலைவராக திரு.வே. தேவராசா அவர்களும் செயலாளராக திரு.ச.பிரதீபன் அவர்களும் பொருளாளராக திரு.கோ. யோகநிருபன் அவர்களும் சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக பணியாற்றினர் இக்காலப்பகுதியில் ஆலயத்தினதும், சபையினதும் பணிகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டது. மேலும் எட்டாவது திருவெம்பாவை, மண்டலாபிஷேக உபயகாரரான திருமதி. செல்வராணி சிவகுரு அவர்களால் தங்களது உபயங்களை மேற்கொள்ள முடியாதென சபைக்கு தெரியப்படுத்த சபை அவ் உபயவெற்றிடத்தை ஆராய்ந்து எட்டாவது திருவெம்பாவை உபயத்தை திரு.பூ.யோகராசா குடும்பத்தினருக்கும் மண்டலாபிஷேக உபயத்தை திரு.நா.திலகரத்தினம் குடும்பத்தினருக்கும் சபை ஒழுங்கு முறையாக வழங்கியது.

அடுத்து 2011ம் ஆண்டின் ஆலய செயற்பாட்டை நோக்குமிடத்து அக்காலப்பகுதியின் தலைவராக திரு.பூ ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் செயலாளராக திரு.தே.இராகவன் அவர்களும் பொருளாளராக திரு.த.லலிதசங்கர் அவர்களும் பணியாற்றினர். இக்காலப்பகுதியில் ஆலயப்பணிகள் சீராகமேற்கொள்ளப் பட்டதுடன் ஆலய அபிவிருத்திக்கென அரச நிதியாக ரூபா ஒரு இலட்சம் (100,000) கிடைக்கப்பெற்றது. அந்நிதியைப் பயன்படுத்தி ஆலயத்தில் குழாய்கிணறு அமைக்கப்பட்டு நீர்த்தாங்கி பொருத்தப்பட்டு குழாய் நீர் வசதி செய்யப்பட்டது சிறப்பம்சமாகும்.

அடுத்த நிர்வாகக் காலப்பகுதியான 2012ம் ஆண்டை நோக்குகையில் தலைவராக திரு.வே.தேவராசா அவர்களும் செயலாளராக திரு.நா.திலகரத்தினம் அவர்களும் பொருளாளராக திரு.நா.பாஸ்கரன் அவர்களும் சிறப்பாகப் பணியாற்றி ஆலய கருமங்களை முறையாக மேற்கொண்டுவந்தனர் இக்காலப்பகுதியில் ஆலயத்தில் மேலுமொரு மணிக்கோபுரம் அமைக்கப்பட்டு மணி பொருத்தப்பட்டது முக்கிய அம்சமாகும். அத்துடன் ஆலயத்துடன் தொடர்புடைய மாணவர்களுக்கு அறநெறிப்பரீட்சை வைக்கப்பட்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து 2013ம் ஆண்டினை புனராவர்த்தன கும்பாபிஷேக காலமாகும் இந்நிர்வாகக் காலப்பகுதியின் தலைவராக திரு.க.கிருபாகரன் அவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-*

செயலாளராக திரு.ச.பிரதீபன் அவர்களும் பொருளாளராக திரு.கோ.யோகநிருபன் அவர்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக செயலாற்றுகின்றனர். இக்காலம் அமைதியான அபிவிருத்திப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படும் சீரான காலமாகையால் சபை இவ்வாண்டை "அபிவிருத்தி ஆண்டாக" பிரகடனப்படுத்தியது. அதன் பிரகாரம் ஆலய பிரதம குருக்களின் ஆலோசனைக்கமைவாக 2013.02.11ம் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. இவ் ஆரம்பப்பணியினைத் தொடர்ந்து சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், ஏனைய நிர்வாகிகள், அங்கத்தவர்கள், உபயகாரர்களென அனைவரும் இணைந்து ஆலய அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்தனர். உட்கட்டுமாண அபிவிருத்தியில் ஆலய கட்டட மறுசீராக்கம், வர்ணம் பூசுதல், மின்சுற்று, நீர்விநியோகம், திருமஞ்சனக்கிணறு புனரமைப்பு, ஆலயவீதி செப்பனிடல், புதிதாக மடப்பள்ளி அமைத்தல், போன்ற பௌதீக வளர்ச்சீராக்கங்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு உள்ளகப்பணிகள் நிறைவுற்ற நிலையில் 2013.05.27ம் திகதி திங்கட்கிழமை அதாவது 2013ம் ஆண்டு வைகாசித் திங்கள் 13ம் நாள் காலை 11.10 மணிக்கு மூல நட்சத்திர நந்நாளில் அம்மாள் பிரதிஷ்டை செய்யப்பட்டு குட முழக்காற்றி கும்பாபிஷேகத்தை பிரம்மஸ்ரீ சு.ரவீந்திரக்குருக்கள் தலைமையில் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சு.மகாதேவாகுருக்களின் நெறிப்படுத்தலுக்கு அமைவாக அந்தண சிவாச்சாரியார்கள் மிகப்பக்திபூர்வமாக நிறைவேற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து பத்து நாட்கள் குறித்த உபயகாரர்களினால் மண்டலாபிஷேகம் மேற்கொள்ளப்பட்டது. பதினோராம் நாள் அம்பாளுக்கு 108 சங்குகளால் சங்காபிஷேகம் நிறைவேற்றப்பட்டதுடன் மறு நாள் வைரவர் பெருமானுக்கு கிரியைகளுடன் கும்பாபிஷேக கிரியைகள் யாவும் சிறப்பாக நிறைவுற்றது.

இவ்வாறு ஆலயத்தின் வரலாறு பல்வேறு பரிமாணங்களாக வளர்ச்சி கண்டுள்ளது. வளர்ச்சியில் பங்குகொண்டு செயலாற்றிய, செலாற்றிக் கொண்டிருக்கும் அனைத்து அம்பிகை அடியார்களுக்கும் நன்றியைத் தெரிவித்து நிறைவு செய்து கொள்கிறோம்.

*பரிபாலன்சபை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆலயத்தின் நித்திய நைமித்திய கிரியைகள்

எமது ஆலயத்தின் கிரியைகளை நோக்குமிடத்து ஆலயத்தினை பரிபாலித்து வரும் பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் வருடம் தோறும் ஜனவரி மாதம் முதலாவது வாரத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும். அப் பொதுக் கூட்டத்தில் அவ்வாண்டுக்கான புதிய நர்வாகசபை தெரிவு செய்யப்படும். இவ்வாறு தெரிவாகும் புதிய நிர்வாகசபையின் ஆரம்ப நிகழ்வு தைப்பொங்கல் ஆகும். இத் தைப்பொங்கலானது புதிய தலைவரினால் புதிய வளர்ந்துப் பானை வைத்து சர்க்கரைச் சாதம் பொங்கல் பொங்கி அம்பாளுக்கு படையல் படைத்து விசேட பூசை நடைபெறும். பூசையை மேற்கொள்ளும் குருக்களுக்கு குரு தட்சனை வழங்கப்படும். அத்துடன் தைப்பூச நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெறும். சிலகாலங்களில் தைப்பூசத்திற்கு அன்னதானம் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தகது.

அடுத்ததாக மாசி மாதத்தில் வரும் மகா சிவராத்திரி பூசை மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்படும். சிவராத்திரி தினத்தன்று ஆலயத்தில் அம்பிகை அடியார்கள் சிவ சிந்தனையுடன் விழித்திருப்பார்கள். அவர்களது வழிபாட்டிற்கு உகந்த முறையில் ஆறுகாலப் பூசை நடைபெறுவதுடன் மறுநாள் காலை விசேட அபிஷேகமும் நடைபெறும். அத்துடன் பாறனை விரதம் அனுஷ்டித்தவர்களுக்கு விரதத்தைப் பூர்த்தி செய்யும் முகமாக அன்னதானம் வழங்கப்படும்.

அடுத்து பங்குனி மாதத்தில் வரும் பங்குனித் திங்கள் நிகழ்வும் விசேடமாக மேற்கொள்ளப்படும். அதாவது ஒவ்வொரு திங்களையும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கு உபயமாக வழங்கப்பட்டு அவர்கள் தமது உபயத்தை சிறப்பாக மேற்கொள்வர். அந்த வகையில் முதலாவது திங்கள் திரு.சி காந்தராசா குடும்பத்தினரும். இரண்டாவது திங்கள் திரு.வே. தேவராசா குடும்பத்தினரும். மூன்றாவது திங்கள் திரு.க. சிவகுமார குடும்பத்தினரும். நான்காவது திங்கள் திரு.க.சிவஞானராசா குடும்பத்தினரும் ஐந்தாவது திங்கள் திரு.வே.சேனாதிராசா குடும்பத்தினரும் மேற்கொள்வர். அன்றைய தினங்களில் விசேட பொங்கல், பாற்கஞ்சி போன்றன அம்பாளுக்கு படைத்து விசேட அபிஷேகமும் நடைபெறும். அத்துடன் அம்பாள் ஆலய வெளிவீதியுலா கொண்டுவரப்பட்டு விசேட பூசையுடன் நிறைவு பெறும்.

அடுத்து ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டிய நாளான சித்திரைமாத பௌர்ணமி தினத்தன்று பாற்கஞ்சி தயாரித்து அம்பாளுக்கு படைத்து விசேட பூசையும் நடைபெறும். அத்துடன் சித்திரைப் புத்தாண்டு அன்று அம்பாளுக்கு புதிய வஸ்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படுவதுடன் குருதட்சனையும் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

அடுத்து வைகாசி விசாகப் பொங்கல் மிக விமர்சையாக கொண்டாடப்படும். அதாவது அன்றைய தினம் இரவிரவாக அம்பிகையடியார்களால் பொங்கல் பொங்கி அதிகாலை விசேட பூசையுடன் நிறைவு பெறும். சில காலங்களில் இரவிரவாகக் கலை நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 2001ம் ஆண்டு வைகாசி மூல நட்சத்திரத்தில் புனராவர்த்தன கும்பாபிஷேகம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டிலிருந்து வைகாசி மாதத்தில் மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம், என்பன குறித்த பத்து உபயகாரர்களான. திருமதி. இ.ஆச்சிமுத்து, திருமதி.பூ.மகேஸ்வரி, திரு.நா.கந்தசாமி, திரு.க.சி.இராசரத்தினம், திரு.வே.தேவராசா, திரு.சி.பத்மநாதன், திரு.வே.தம்பியப்பா, திரு.நா.திலகரத்தினம், திருமதி.க.அன்னலட்சுமி, திரு.கு.செல்லையா ஆகிய குடும்பங்களினாலும் மேற்கொள்ளப்படும் சங்காபிஷேகம், மற்றும் மண்டலாபிஷேக நாட்களில் மங்கல வாத்தியங்கள் ஒலிக்க அம்பாள் வெள்வீதியுலா கொண்டுவரப்பட்டு விசேட பூசையுடன் நிறைவு பெறும் அந்நாட்களில் மகேஸ்வர பூசை நடைபெறுவது சிறப்பம்சமாகும். தொடர்ந்து மறு நாள் அம்பாளுக்கு 108 சங்குகளால் மிகக் கோலாகலமாக நடைபெறும். அத்தினத்தன்று அந்தணச் சிவாச்சாரியார்களின் மந்திர உச்சாடனங்கள் ஒலிக்க மங்கல வாத்தியங்கள் முழங்க அம்பாளுக்கு சங்காபிஷேகம் நடைபெற்று அம்பாள் வெளிவீதிஉலா கொண்டுவரப்பட்டு (2008ம் ஆண்டின் பின்) விசேட பூசையுடன் நிறைவு பெறும். அதனைத் தொடர்ந்து சங்காபிஷேகத்தை நிறைவேற்றி வைத்த சிவாச்சாரியார்களினால் ஆசியுரை வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து சமயம் சார்ந்த சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்று இறுதியாக மகேஸ்வர பூசையும் நடைபெறும். அன்றைய தினம் மாலை அம்பாளை ஆவாகணப்படுத்தி ஊ'ஞ்சலில் அலங்கரித்த சிங்க வாகனத்தில் கிராமதரிசனத்திற்காக வீதி உலா வருவது சிறப்பம்சமாகும்.

அடுத்து மறுநாள் வைரவர் சாந்திப் பெருவிழா நடைபெறும். இந்நிகழ்வானது சங்காபிஷேகத்திற்கு மறுநாள் மாலை வைரவர் பெருமானுக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று வடை மாலை அணிந்து குழையல் சாதம் படைத்து விசேட பூசை நடைபெறும் அத்துடன் அம்பிகை அடியார்களினால் தேங்காய் உடைத்தும் நிகழ்வு நிறைவு செய்யப்படும். இது ஆலய கிரியைகளில் விசேட அம்சமாகும்.

அடுத்து அம்பாளின் ருதுசோபன நாளான ஆடிப் பூரம் பரிபாலன சபையினால் மிக விமர்சையாக மேற்கொள்ளப்படும் கிரியையாகும். அதாவது அம்பாளின் ருது சோபன நிகழ்வுக்கு ஏற்ற வகையில் அம்பாளுக்கு புதிய வஸ்திரம் அணிவித்து ஆபரணங்கள் பூட்டி அம்பாளை அலங்கரித்து பல்வேறு நெய்வேத்திய பண்டங்களினால் நிறைவான பெண்கள் ஆலாத்தி எடுத்து அபிஷேகம் நடை பெறுவதுடன் மங்கல வாத்தியம் முழங்க அம்பாள் வீதி உலா எடுத்து வரப்பட்டு விசேட பூசையுடன் நிறைவு பெறும். அத்துடன் பரிபாலன சபையினால் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். அடுத்து ஆவணி சதுர்த்தி தினத்தில் விநாயகருக்கு அபிஷேகம் நடைபெறுவதுடன் புதிய வஸ்திரம் அணிவித்து அறுகம்புல் மாலை போட்டு விசேட பூசைகள் மேற்கொள்ளப்படும்.

அடுத்து புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி பூசை மிகவும் சிறப்பாக நடைபெறும் அதாவது நவராத்திரி ஆரம்பநாளில் விசேட கும்பம் வைக்கப்பட்டு நிகழ்வு ஆரம்பிக்கப்படும். நவராத்திரி பூசை நடைபெறும் ஒன்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களும் அத்தினங்களிலுள்ள நித்திய பூசை உபயகாரர்களினாலே பூசை மேற்கொள்ளப்படும். அந்த நாட்களில் நைவேத்தியப் பண்டங்கள் படைத்து சகலகலாவல்லி மாலைப் பாடல்கள் பாடப்பெற்று விசேட பூசைகள் மேற்கொள்ளப்படும். இறுதி நாளான விஜயதசமி அன்று பரிபாலன சபையின் ஏற்பாட்டில் விசேட அபிஷேகம் நடைபெறுவதுடன் வாழைவெட்டு மானம் பூ திருவிழா நிகழ்வும் நடைபெறும். இந்நவராத்திரி நாட்களில் விசேட பூசைகளின் முடிவில் பிரசாதங்கள் வழங்கப்படும். இந் நாட்களில் சிறுவர் மிக உற்சாகமாக ஆலய வழிபாட்டில் ஈடுவடுவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் நவராத்திரி பூசை நிறைவு பெற்ற பின்னர் கௌரி விரதத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு காப்பு அணிவித்து விரதம் தொடக்கி வைக்கப்படுவதுடன் தினமும் மாலையில் விரதமிருப்பவர்களுக்கு ஏற்றவகையில் விசேட பூசைகளும் நடைபெறும்.

அடுத்து ஐப்பசி மாதத்தில் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு ஏற்றவகையில் குறித்த ஆறு நாட்களும் விசேட பூசைகள் நடைபெறும். மேலும் கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகைத் தீபம் ஏற்றப்பட்டு சொக்கப்பானை எரித்தல் நடைபெறும். மேலும் ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேக தினமான கார்த்திகை மாதத்தில் வரும் அத்த நட்சத்திரத்தில் அம்பாளுக்கு அபிஷேகம் மேற்கொள்ளப்பட்டு விசேட பூசையும் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து மார்கழி மாதத்தில் வரும் திருவெம்பாவை மிகவும் சிறப்பாக மேற்கொள்ளப்படும். திருவெம்பாவையானது ஆலயம் அமைப்பதற்கு முன்பு இருந்தே பத்து உபயகாரர்களினால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அந்த வகையில் ஒன்று தொடக்கம் பத்து உபயகாரர்கள் முறையே திருமதி.இ.ஆச்சிமுத்து, திருமதி.பூ.மகேஸ்வரி, திரு.பொ.பேரின்பநாதன், திரு.க.சி.இராசரத்தினம், திரு.இ.தருமலிங்கம், திரு.வே.தம்பிராசா, திரு.வே.தம்பியப்பா, திரு.பூ.யோகராசா, திருமதி.க.அன்னலட்சுமி, திரு.செ.சந்திரகுமார் ஆகிய குடும்பங்களினால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்தினத்தின் அதிகாலையில் உபயகாரர்களினால் பொங்கல் செய்து அம்பாளுக்கு படையல் படைத்து விசேட பூசை மேற்கொள்ளப்படும் இறுதி நாளான பத்தாம் நாள் அம்பாளுக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று சிறப்புப் பூசைகளுடன் நிறைவு பெறும்.

இங்கு குறிப்பிட்ட விசேட கிரியைகளுடன் தினமும் ஒரு வேளை நித்திய பூசையும் நடைபெற்று வருகிறது. செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாலையிலும் ஏனைய நாட்களில் காலையிலும் பூசைகள் நடைபெறும். இவ்வாறு ஆலயத்தின் நித்திய, நைமித்திய கிரியைகள் சிறப்புற நடைபெற்றுவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## மனமின்னும் இரங்கவில்லையோ!

எடுப்பு

ஆதியிலே வந்துதித்தாய் பேச்சியம்மா! - இன்று
வேதியர்கள் சூழ்ந்திருக்கும்பர மேஸ்வரியம்மா -(ஆதியிலே......)

தொடுப்பு

நீதிநெறி ஓங்கிவரும் கோப்பாயிலே! என்றும்
தீதறியா அத்திதோட்ட பதிதனிலே! -(ஆதியிலே......)

முடிப்பு

மணியோசை நள்ளிரவு ஒலிக்கையிலே! தாளம்
அணி செய்தே விருட்சங்கள் ஆடுமம்மா!
வேலன்மகன் கந்தனாலே அமைந்தவளே! உயர்
வேதநெறி தழைத்திடவே அருள்பவளே! -(ஆதியிலே......)

நாமங்கள் பலசொல்லி அழைக்கையிலே! எங்கள்
நெஞ்சினிலே நீயிருக்க வேண்டுமம்மா!
சேய்களெங்கள் அழுகுரலும் கேட்கவில்லையோ!
செவிமடுக்க மனமின்னும் இரங்கவில்லையோ! -(ஆதியிலே......)

பரமனுக்கு அருகிருக்கும் பரமேஸ்வரி! உன்
கரமிரண்டால் எமையணைத்து காத்திடம்மா!
வரமொன்று கேட்கின்றோம்! வந்திடம்மா! மன
வன்மமெலாம் நீக்கிடவே பாருமம்மா! -(ஆதியிலே......)

அலங்காரம் அபிஷேகம் செய்கின்றோம்! கும்ப
அபிஷேகம் காணுமெங்கள் பரமேஸ்வரியே!
நலம்மேவும் பக்தர்களின் துணைநீயே! அம்மா
பலகோடி நன்மைகளும் தருவாயே! -(ஆதியிலே......)

கவிஞர் வதிரி கண எதிர்வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## காலம் தோறும் மெய்யடியார் சமய வாழ்வும் வழிபாடும்

சமயம் வாழ்விற்கு கலங்கரை விளக்கு போன்றது. மனித வாழ்வை நெறிப்படுத்தி ஆன்மாவை அது உடலோடு கூடியதன் பயனைப் பெற வைப்பது. "தன்னையறிந்து இன்பம் உற வெண்ணிலாவே- ஒரு தந்திரம் நீ கூற வேண்டும் வெண்ணிலாவே" என்றார் பாரதி. தன்னை யறிதல் சமய வாழ்வின் முதற் தேவை ஆகின்றது. நான் யார்? உலகம் யாது? அதை இயக்கும் சக்தி எது? இந்த வாழ்வின் பின் எனக்கு ஏற்படும் கதி யாது? மரணத்திற்குப் பின்னாலும் வாழ்வுண்டா? போன்றவை ஆன்ம விசாரணை. இந்த ஆன்ம விசாரத்தின் பின் மனிதனுக்கு ஏற்படும் தெளிவு சிறந்த சமய வாழ்வாகும். இவ்வுலக வாழ்விற்கு பொருளைத தேடும் மனிதன் மறு உலக வாழ்விற்கும் வேண்டிய ஆன்மீக ஞானத்தையும் அதனோடு கூடிய பக்தியையும் பற்றுக் கோடாக்கிக் கொள்கின்றான். அது பயனுறுதி மிக்க ஓர் பற்றுக் கோடாகின்றது.

காலம் தோறும் மெய்யடியார் சமய வாழ்வு எவ்வாறு அமைந்தது என்பதற்கு அவரவர் பாடிய பாடல்கள் தேவார திருவாசகங்கள், பக்திப் பாசுரங்கள் சான்றாகின்றது,

தமிழர்களின் தகைமை சார்ந்த தனிச்சிறப்புடைய காலமாம் சங்க காலத்தில் கடுவன் இளவெயினார் என்றும் புலவர் முருகனிடம்,

"இறைவா நின்னிடம் யாம் இரப்பவை
பொன்னும் பொருளும் போகமும் அல்ல
நின் பால் அன்பும் அருளும் அறனுமே"

என்கிறார். கணியன் பூங்குன்றனோ "வாழ்க்கை நிலையில்லாதது" நீர் வழிப்படும் புணை போல் ஆருயிர் முறை வழிப்படும் என்கிறார். எனவே இறைவனிடம் அன்பும், அருளும், அறனுமே விரும்பிக் கேட்டு வழிபட்டனர்.
சங்கம் மருவிய காலப்பகுதியில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்

சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்" என்று பாடுகின்றார். இவர் இல்வாழ்வுக் கடமையிலும் ஆன்மீக வாழ்விலும் தன் வாழ்வை செம்மையுற செலவிட்டவர். ஆரம்பத்தில் இறைவனை அகக் கண்ணால் தரிசித்து வாழ்ந்த அம்மையார். இறைவனது அடியார்க்கு அமுதூட்டி மகேஸ்வர பூசையால் மாண்பு பெற்றார். சிவனடியாரை சிவனாகவே தரிசித்த அருட் செல்வப் பெருமாட்டி இறையருளால் மாங்கனி பெற்றதால் கணவனான பரமதத்தனின் பார்வையில் தெய்வப் பெண்ணாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்வாழ்வுப் பந்தத்தில் தோற்றுப்போகிறார். இருந்த போதிலும் ஆன்மீக வாழ்வில் வெற்றி பெறுகின்றார். இறைவனைக் காண வேண்டி தன் தசை பொதிந்த உடலை வெறுத்து இறைவனின் அருட்கோலம் காணவேண்டி திருக்கையிலை செல்கின்றார். அச்சமயம் இறைவனே உமையம்மையிடம்

“வருமிவள் நம்மை பேணும் அம்மை காண் அம்மையே” என்றார்.

அம்மையாரும் இறைவனின் திருக்கோலத்தினைக் கண்ணாரக்கண்டு, ஆனந்தக் கண்ணீர் பெருக்கி வரம் கேட்கிறார். ஏவ்வாறெனில்

“இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் யான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க” என்றார்.

ஆம், இறைவனின் திருவுருவை கண்ணாரக் கண்டு கொள்ளுதலே வழிபாட்டின் பயனாக காரைக்காலம்மையார் கருதினார். இறைவனை கண்ணால் கண்டு அவனையே சகலதுமாகப் போற்றி கண்டு களிக்கும் ஓர் உன்னத ஆனந்த நிலை இவர்கட்கு வாய்த்திருந்தது.

அன்பே தகழியாய், ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியாக் கொண்டு
என்புருகு ஞானச் சுடர் ஏற்றியதால் பக்தி பிரகாசிக்கக் காணலாம்,

பல்லவர் காலத்தில் முதிர்ந்து கனிந்து பக்தி எனும் தேனாறு தமிழகம் முழுமையும் பாய்ந்து பரவசப்படுத்தும் நிலையை தேவார திருவாசகங்களில் காண முடிகின்றது.

சம்பந்தர் சிவனின் திருக்கோலச் சிறப்பும் திருவருட்செயலும், அவன் கோயில் கொண்டுள்ள தலங்களையும் வியந்து போற்றிப் பாடினார். திருப்பெயரை கேட்டாலே போதும் என்ற மனநிலையில் கிளியை விளித்து

“பிறையாளன் திருநாமம் எனக் கொருகாற் பேசாயோ” என ஆவல் மேலிடக் கேட்கின்றார்.

திருநாவுக்கரசரின் பக்தி ஆழமானது. அனுபவ முதிர்ச்சியை அங்கு கண்டு கொள்ள முடிகின்றது. துன்பக்கேணியாய் அவரது வாழ்வின் அனுபவங்கள் ஆழப்பதித்திருக்கும் நெஞ்சம் அவருக்கு உரியது, நாவுக்கரசரது சகோதரியின் கணவர் கலிப்பகையார் வீரமரணம், சகோதரியின் கைமை வாழ்வு, தாய் தந்தையர் அற்ற வாழ்வு, சூலை நோயின் கொடுமை, சமணர்களினால் பெற்ற தண்டனைகள் என்பன அவரது துன்பமான அனுபவ வடுக்கள், துன்பம் யாதென அறியாத பாலகனான சம்பந்தர் வழிபாட்டுக்கும் துன்பமே வாழ்வான அப்பரின் பக்திக்கும் இடையில் பக்தி உணர்வுக் கோலங்கள் வேறுபடுவதை அவதானிக்க முடிகின்றது, இறைவா உன் அருட்கோலம் காண்பதற்காக இன்றும் எத்தனை தரமேனும் மனிதப்பிறப்பெடுக்கலாம் என்கிறார்.

இறைவனின் அருட்பார்வை, திருக்கோலச் சிறப்பு என்பவற்றைக் கண்ணாரக் கண்டாலே போதும் என எண்ணும் அற்புதமான வழிபாட்டுணர்வு அது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"
என்பதே அப்பர் வேண்டுதல் ஆகும்

சுந்தரர் பக்தியில் தோழமை உணர்வோடு கூடியதோர் பக்தி உரிமையோடு இறைவனோடு வாதிடவும் செய்யும் நிலையைக் காண முடிகிறது. தன்மனைவி வறுமையால் வாடாதிருக்க குண்டையூரிலே நெல்லுப்பெற்றேன் என் வீட்டிற்கு கொண்டு வருவதற்கோ போக்குவரத்து வசதியில்லை. "வாளன கண்மடவாள் அவள் வாடிவருந்தாமே

அவை அட்டித் தரப்பணியே" ஆம் "அந்த நெல்லை இங்கு கொண்டு வந்து சேர்த்து விடும்" என்றார். இது மட்டுமன்றி இறைவனோடு உரிமையாக அடியவர் பொருட்டுப் போராடுகின்றார். "இறைவா, உமக்கே தம்மை அடியாராக்கி கொண்ட அடியவர்கள் தம் குறைகளை முறையாக உமக்கு சொல்லி குறை தீர்க்க வேண்டினால் யாதொன்றும் அவர்க்கு ஆறுதல் கூறாதிருப்பது முறையோ" என்றார். அப்படியெனின் "நீர் நல்லாயிருப்பீரோ?" என வையவும் செய்கிறார்.

மீளா அடிமை உமக்கே ஆளாய்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிக வாடி
ஆளாங்கிருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவாரூர்
வாழ்ந்து போதீரோ"

இப்பாடல். ஊடாக சுந்தரரின் வழிபாடு உரிமையோடு கூடிய உறவாகக் காணப்படுகின்றது. பாம்பு தீண்டிய பாலகனை உயிர்ப்பிக்க இறைவனிடம் வேண்டும் அப்பரிலும், பூம்பாவையை உயிர்ப்பித்த போதில் சம்பந்தரிலும் இவ்வுணர்வை காணமுடிகிறது.

மணிவாசகப் பெருமானின் வழிபாடு கேட்டார்ப் பிணிக்கும் தகைமை கொண்டது.

எம்மைச் சூழும் வினைகள் பல, பிறவி துன்பம் தருவது. பிறவித்துன்பம் நீக்கி எம்மை வாழ்விப்பது இறைவனின் பெருங்கருணை, அக்கருணையை நன்றியுணர்வு பிரவகிக்க பாராட்டுவார்.

இதற்கு யான் என்ன கைமாறு செய்வேன்? இறை அன்பில் தன்னை மறந்து பரிவாங்கக் பணிக்கப்பட்ட பணியையும் பணத்தையும் மறந்து பரவசமாகி நின்றவர், திருவெம்பாவையில் ஆன்மா இறைவனைப் பாடுவதும் பரவுவதுமாய் நிற்கும் பேரின்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு உய்த்து உணர வேண்டியது. ஏனைய ஆன்மாக்களைத் தட்டித் துயில் எழுப்பி இறைவனை பக்தி செய்யும் பண்பை வளர்த்தெடுக்கின்றது.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற அவர் பண்பு திருவெம்பாவையை உணர்ந்து ஓதினால் பெறலாம்.

இறைவன் அன்புக்கு ஆட்பட்டு விட்டால் ஞாயிறு கிழக்கே உதித்தால் என்ன? மேற்கே உதித்தால் என்ன? என்கிறார்.

இறைவனை வழிபடுதல் பற்றியசிந்தனை சாதாரணமாகப் பிறப்பது அன்று,

அவனருளாலே தான் அவனை வணங்கமுடியும் இதற்கு திருவாசக அடிகள் சான்றாகின்றன.

நாயிற் கடையாய் கிடந்த அடியெற்கு தாயிற் சிறந்த தயவான தத்துவன் என்றார், அதுமட்டுமின்றி,

"நாயேனையும் ஒரு பொருட்டாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய்" என அபிராமிப்பட்டரும், தெய்வ அனுக்கிரகத்தால் தான் இறைவனை எண்ண முடியும் என்றார். பிறவிப் பிணி தீர்க்கும் வைத்தீஸ்வரன் இறைவன், வழிபாட்டில் தன்னலம் நீங்கிப் பொதுநல உணர்வு மேலோங்கி நிற்பதையும் காண முடிகிறது,

வாழ்க அந்தணர் வானவர் ஆனிமை,
வீழ்க தண்புனல், வேந்தனும் ஓங்குக,
ஆழ்க தீய தெல்லாம் அரன் நாமமே
சூழ்க, வையகமும் துயர் தீர்கவே

உலகம் முழுமையும் துயர் நீங்கிவாழவும், குறைவற்ற மழை வளம் பெருகவும், நல்லாட்சி நிலைக்கவும் இறைவழிபாடு பெருகவும், தீயவை நீங்கவும், சைவம் நிலைத்து தழைத்து ஓங்கவும் வேண்டும் என பொது நல வேட்கை இவ்வழிபாடெங்கும் இழையோடக் காணலாம். இத் தூயான குணம் தாயுமான சுவாமிகளுக்கும் வாய்த்திருந்திருந்தது.

"எவ்வுயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறு ஒன்று அறியேன் பராபரமே"

மெய்யடியார் வாழிபாடு இத்தகையதே,

திருமதி. யோகராஜா தேவகௌரி
ஆசிரியை.
யாஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி புத்தூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-*



## இந்து சமயப் பெண்கள் நோற்கும் விரதமும் பக்தி வைராக்கியமும்

சைவக்கலாசாரம் பக்தியுணர்ச்சி சிவனை வழிபடும் சைவாசாரசீலம் என்பன இலக்கிய வரலாற்றின் படி காரைக்காலம்மையார் காலத்திலிருந்தே கூர்மையடைகிறது. சிவனுணர்ச்சியும் சிவக்குடும்ப வழிபாடும் இன்றும் உலகளாவிய ரீதியில் நிழ்வதை அவதாணிக்க முடிகிறது.இந்துப்பண்பாடானது தத்துவம் வழிபாடு சமயம் சமுதாயம், அநுபூதி, ஆகிய அணுகுமுறைகளினூடாக வளரச்சி கண்டிருக்கிறது எனலாம்.

இப்பண்பாட்டை வழிபாட்டு நோக்கில் ஆராயும் போது இந்துப் பெண்களின் வைராக்கிய பக்தியுணர்வும், விரதம் அனுட்டித்தலும் சிறப்பான தொன்றாகவே உள்ளது.

சமகால உலகில் பெண்களின் நடவடிக்கையானது அடிமைத் தனத்திலிருந்து விடுதலைக்கான போராட்டங்களும் ஆண் ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டங்குளும் நடைபெறும் இவ் அறிவியற் சூழலில் வழிபாட்டு மரபு பற்றிய எண்ணக்கரு இன்று படித்த கல்வியறிவு கொண்ட இளம் பெண்களிடத்தே தளம்பல் நிலையிலேயே உள்ளதாக இருப்பினும் அவர்கள் திருமணம், குடும்பம் என்ற பந்தத்தில் கட்டுண்ட பின்னர் அந்நிலைக்கு எதிரான முரணான செயற்பாட்டிலேயே தம்மை ஈடுபடுத்துகின்றனர். அதாவது இப்பெண்களின் இறை பக்தியுணர்வும் அதாவது இப்பெண்களின் இறை பக்தியுணர்வும் விரதம் அனுட்டிக்கும் முறையும் சிறப்படைவதாகவே உள்ளது.

உலகம் உய்ய அருளளிக்கும் இறைவனையும் இறைவியையும் எப்போதும் மனத்திலிருத்தித்துதித்து வழிபட்டு வாழும் மனத்தினராய் இருப்பவர்களே இந்துப்பெண்களாவர். ஒரு குடும்பத்தின் நல்வாழ்வுக்கு பெண்கள் ஆன்மீக நாட்டத்துடன். வழிபட வேண்டும் என்றும் நல்லசிந்தனை, மனவுளைச்சல் இந்திரியங்களை அடக்கக் கூடிய வல்லமை ஆகிய நற்பண்புகளை வளர்ப்பதற்கு விரதம் அனுட்டிக்க வேண்டும் என்றும் சைவ சிநத்தாந்தங்களும் புராணங்களும் கூறுகின்றன. இதன்படி வாழ்ந்து காட்டுபவர்கள் எம் இந்துப் பெண்களாவர் இவ்வகையில் இப்பெண்களின் வழிபாடுகள் பற்றி நாம் நோக்கின் எம் சமுதாயத்தில் இன்றைய காலத்தேவையில் இறைவழிபாட்டில் நாம்சங்கீர்த்தனம் அவசியம் உள்ளது இறை நாமத்தை சொல்லி உச்சரித்து மனமுருகி வழிபட வேண்டியது முக்கியமாகும் என்பதை இந்துப் பெண்கள் உணர்ந்துள்ளனர். இதனாலே தான் வழிபாட்டிலே தம்மை முழுமையாக ஈடுபடுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-*

ஆன்ம ஈடேற்றம் என்பது தான் ஆலய வழிபாட்டின் இலட்சியமாகும் ஆலயத்திலுள்ள விக்கிரகங்களும் கட்டடங்களும் பூசைகளும் அபிஷேகங்களும் மற்றும் உற்சவங்களும் கிரியைகளும் பாவனைகளும் எல்லாமே ஆன்ம லயிப்பை ஏற்படுத்த வல்லனவாக அமையவேண்டும் என்பதே சமயக் கருத்தாகும். வழிபாட்டிற்கென்றே விசேடமாக இயற்றப்பட்டனவே மந்திரங்கள், திருமுறைப்பாடல்கள், தோத்திரப்பாடல்கள், பக்திப்பாசுரங்கள் போன்றனவாகும். அன்பும் பக்தியும் அருளும் தருகின்ற சக்தி மந்திரங்களுக்கும் இறைநாமங்களுக்கும் உள்ளன. என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். எனவே தான் இப் பெண்கள் ஆன்ம ஈடேற்றத்துக்கான வழியாகிய வழிபாட்டில் தம் காலத்தை கழிக்கின்றனர்.

இவ்வகையில் வழிபாடாற்றும் இவர்கள் மனமானது பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு அனுட்டிக்கப்படவேண்டியது விரதமாகும் என்பதை தெரிந்து கொண்டு தம்மை அவ்வழியிலும் இட்டுச் செல்கின்றனர். தாம் நல் வாழ்வு வாழ்வதற்கு உறுதுணையாக அமைவது விரதம் என்பது இவர்களது அசைக்க முடியாத நம்பிக்கை ஆகும். விரதமிருக்கும் போது உடலின் வலிமை சிறிது குன்றும் நிலையிருப்பினும் மனவுறுதியானது ஏற்படும். அப்போது தான் மனம் இறை நினைப்பில் ஈடுபடும். இறை நினைப்பானது வாழ்வில் துன்பம் விலகி இன்பம் அடைய வழிவகுக்கின்றது.

ஆரம்ப காலங்களிலிருந்தே வளமான வாழ்வு. மனஒன்றிப்பு, இல்லறம் போன்ற அனைத்தையும் தரவல்லது விரதம் எனும் கொள்கை இன்று வரை நிலவிவருகின்றமையை அவதானிக்க முடிகிறது.

எப்பொழுதும் தூய மனத்துடனும் அசையாத நம்பிக்கையுடனும் நோற்கப்பட வேண்டியவை விரதங்களாகும். கந்தசஷ்டிவிரதம், கேதாரகௌரிவிரதம், நவராத்திரி விரதம், சிவராத்திரிவிரம், போன்றன அவற்றுட் சிலவாகும்.

ஆகவே இந்துப் பெண்கள் தமது குடும்ப நல்வாழ்வுக்காகவும் ஆன்ம ஈடேற்றத்துக்காகவும் இறைவழிபாட்டையும் விரதத்தையும் தம் வாழ்வின் ஒரு பங்காக மேற்கொண்டு வரும் சிறப்பான பழக்கம் உடையவர்கள் இப்பண்பாடு கொண்டவர்களின் வாழ்வில் அவர்களின் மன எண்ணம் ஈடேறும் என்பது திண்ணம்.

திருமதி. பு.சிவகுமாரன்
ஆசிரியர் கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## மனித வாழ்வை மேம்படுத்தும் விழுமியங்கள்.

எப்படியும் வாழலாம் என்றின்றி இப்படித்தான் வாழவேண்டும் எனக் குறிப்பிடுவதனையே விழுமியம் எனலாம். ஆகவே மனித வாழ்வை மேம்படுத்தும் பண்புகள் அனைத்தும் விழுமியங்கள் ஆகும். எல்லாப்பிறப்பினுள்ளும் மானிடப்பிறப்பொன்றே மாண்புமிக்கது. ஆறறிவும், நிறையப்பெற்றவர்கள் மானிடர்கள். இந்த ஆறாம் அறிவானது சிந்தித்து, துணிந்து செயலாற்றும் பகுத்தறிவு. நன்று தீது, நீதி அநீதி எனப் பகுத்தறியும் ஆற்றல் படைத்த இந்த மனிதன், மனிதனாக வாழ விழுமியங்கள் துணை நிற்கின்றன.

இந்து சமயத்தின்பால் நிறைவான பல விழுமியக்கருத்துக்கள் காலம் காலமாக பகிரப்பட்டு வந்துள்ளன. உண்மையில் மனிதப்பண்புகள், மனித விழுமியங்கள், மனித மேம்பாடுகள் என்பவற்றை அனுசரிக்கும் போது அங்கு ஆத்மீகம் மிளிர்கின்றது. பிற உயிர்கள் மீது அன்பு காட்டுதல், சேவை செய்தல், உண்மை பேசுதல், நேர்மையாக நடத்தல், பிறர் நலன் பேணல், இன்னாசெய்யாமை, நல்லொழுக்கம், சட்டங்களை மதித்தல், சூழலை மாசடையாது பேணல், நடுவு நிலைமை போன்ற இவை யாவும் மனித விழுமியங்கள். மனித வாழ்வை மேம்படுத்தும் இப்பண்புகள் அனைத்தும் கடைப்பிடிக்கவேண்டியவை.

இவ்வளவு காலமும் வாழ்ந்த மக்கள் சுருதி, யுக்தி, அனுபவம் எனும் முத்திறத்தாலும் சமய வாழ்வில் மனித விழுமியங்களை செம்மையாக கடைப்பிடித்து வந்தார்கள். ஆனால் இன்று நவீன உலகத்திற்கும் மதமாற்றத்திற்கும் இடையில் வாழ்ந்து வருகின்ற இளம் சமுதாயத்தினரை நல்ல விழுமியபண்புள்ளவனாக உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. இவ்வளவு காலமும் வாழ்ந்த மக்கள் கடைப்பிடித்து வந்த விழுமியங்களை மழுங்கவிடாது இளம் சமுதாயத்தினரிடம் ஒப்படைப்பது ஒவ்வொருவரது கடமையாகும்.

சத்தியம் எனும் விழுமியம் எல்லா விழுமியங்களுக்கும் அடிப்படையானதும், ஆதாரமானதுமாகும். அதனால் இது மிக உயர்ந்த விழுமியமாக போற்றப்படுகின்றது. சத்தியம் நித்தியமானது. மாறும் தன்மையற்றது. கால தேச வர்த்தமானங்களையெல்லாம் கடந்து நிற்பது. எவனொருவன் சத்தியத்தை உபாசித்து வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றானோ அவன் மனிதருள் மாணிக்கமாகி விடுகின்றான். பண்டைய காலத்து அரிச்சந்திரன் முதல் மகாத்மாகாந்தி வரை சத்தியத்தை ஓம்பியவர்கள் எனப் படித்திருக்கின்றோம். அவர்களின் வாழ்க்கையும், வரலாறும் எமக்கு கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளன. அத்தகைய ஒளிவிளக்குகளையும் வழிகாட்டல்களையும் பின்பற்றி எமது வாழ்க்கைப் படகுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டில் நின்று தத்தளிக்காது கரையேற்ற முயல்பவர்கள் எத்தனை பேர்? கேள்விக்குறிதான். இவ்வுலகில் சத்தியம் என்பதை அறியவும் உணரவும் சத்தியத்தை வாழ்க்கையில் பின்பற்றவும் இவ்வுலகில் மனிதனுக்கு மட்டும் தான் முடியும். உயிரற்ற படைப்புக்களுக்கு இவ்வாற்றல் இல்லை இதனை நாம் நன்கு உணரவேண்டும். சரி எது? பிழை எது? உண்ம்ம எது? பொய் எது? நல்லது எது? கெட்டது எது? என்று சிந்தனைகள், பேச்சுக்கள், செயல்கள் ஆகியவற்றை இனம் கண்டு தரம் பிரித்து ஒவ்வொரு கணமும் மனிதனுக்கு கூறிக்கொண்டு மனச்சாட்சி இருக்கின்றது. இத்தனை வாய்ப்புப் பெற்றிருந்தும் மனிதர்களுள் எத்தனைபேர் தத்தம் மனச்சாட்சிக்கு மதிப்பளித்து மனச்சாட்சி கூறுவதைக் கேட்டு ஒழுகுகின்றார்கள். மனச்சாட்சி ஒருபுறம், ஐந்து புலன்கள் மறுபுறம் இவற்றிற்கு இடையில் மனிதன். 'உள்ளங்களில் சுயநலம், உதடுகளில் நஞ்சுருவில் பேச்சு, செயல்களில் வஞ்சகத்தன்மை' இன்றைய மனிதனின் சாரம்சம் இதுதான். மனிதனைச் சிறுமைப்படுத்த மனிதனே கங்கணம் கட்டிவிட்ட பரிதாப நிலை இன்று காணப்படுகின்றது. இந்நிலை மாறவேண்டும். சத்தியத்தின் மூலம் மனித வாழ்வினை செம்மையும், சீரும், செழுமையும், இனிமையும் நிறைந்ததாக ஆக்கவேண்டியது ஒவ்வொரு மனிதனதும் கடமையாகும்.

மனித வாழ்வை மேம்படுத்தும் விழுமியங்களுள் அகிம்சை என்பதும் முக்கியமானதாகும். அகிம்சை என்றால் மற்றோருக்கு தீங்கு செய்யாது இருப்பது மட்டுமன்றி அவர்களுக்கு நன்மையும் செய்தலாகும். பிறருக்கு இன்னா செய்யாமை மாத்திரம் போதாது, பிறர் மனம் புண்படக்கூடியவாறு இன்னா பேச்சுக்களை பிரயோகித்தலையும் தடுத்தல் வேண்டும். குறிப்பாக, தகாத வார்த்தைகளை பயன்படுத்தல், பிறரை ஆத்திரமூட்டுதல், போகவிட்டு புறம் கூறுதல், பொய்யுரைத்தல், சூளுரைத்தல், தூற்றுதல், இகழ்தல், நிந்தித்தல் போன்றவை பேச்சினால் இழைக்கின்ற இன்னாமை ஆகும். தீயினால் ஏற்பட்ட புண்கள் காலப்போக்கில் ஆறிவிடும், ஆனால் நாவினால் சுட்ட புண் என்றுமே ஆறாது. பெரும்பாலான பிரச்சினைகள் சண்டைகள், சச்சரவுகள், நாவைக்காப்பதன் மூலம் தவிர்த்துக்கொள்ளலாம். இனிய அன்பும், ஆதரவும் நிறைந்த வார்த்தைகளையே பணிவுடனும், பண்புடனும், பேசுவது என்ற உறுதியை நாம் கொண்டிருந்தால் வேறு அறங்களே தேவையில்லை.

மன அடக்கம் என்னும் விழுமியமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மனிதன் தனது எண்ணங்களை தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம் அவற்றை சரிவர கண்காணித்து நிருவகிப்பதன் மூலம், நன்முறையில் நெறிப்படுத்துவதன் மூலம் செம்மையான எண்ணங்களை உருவாக்கலாம். கெட்ட எண்ணங்களை தவிர்த்துக் கொள்ளவும் முடியும். மனிதன் பலமுள்ளவனாக இருப்பதும், பலவீனமாகவிருப்பதும் பொதுவாக காணப்படும் நிலை தான். இந்நிலைகளுக்கு எல்லாம் மனிதன் தான் காரணம். அதிலும் மனிதனின் மனம் தான் முக்கிய காரணம் எனலாம். கண், வாய், மூக்கு, செவி, உடல் என்பனவும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பனவும் மனிதனின் கருவி - கரணங்கள் மாத்திரமே. அவை மனிதனுக்கு உதவும் சாதனங்களே தவிர மனிதனை ஆளுகின்ற எசமான்களாவது ஆகாது. அவற்றை அந்தந்த இடங்களில் வைத்து உரிய முறையில் கட்டுப்படுத்தி பரிபாலனம் செய்ய வேண்டியது மனிதனின் பொறுப்பு. மனக்கட்டுப்பாடு தரும் பெரும் விளைச்சல் தான் மனஅமைதி, மனச்சாந்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தூய்மை ஆகும். மனஅமைதி பெற்ற மனிதன் தானும் நல்லபடி வாழ்கிறான். எடுத்தக்கருமங்களில் வெற்றியடைகிறான். அவ்வாறே ஏனையோரையும் வாழவிடுகிறான். அதனால் வாழ்கிறான். எல்லோருடைய அன்பையும், ஆதரவையும், நம்பிக்கைகளையும், நல்லெண்ணத்தையும் பெற்றுக்கொள்ளுகிறான். இதனால் சமூகத்தில் உயர்ந்து நிற்கின்றான். இந்த மனக்கட்டுப்பாடு என்ற விழுமியம் இளம் சமுதாயத்தினருக்கு மிகவும் அவசியம். சக்தியும், ஆற்றலும் நிறைந்தது மனிதனின் இளமைப்பருவம். வேகமும், வேட்கையும் அலைமோதும் காலமும் அதுவே. மிக அவதானமாக இருக்க வேண்டிய காலப்பருவம். இளமைப்பருவம் கட்டுப்பாட்டுடன் கூடியிருந்து விட்டால் மனிதனின் முன்னேற்றம், உயர்வு, மகிழ்ச்சி என்பன உறுதியாகிவிடும். வாழ்வு முழுவதும் இன்பமயமாக இருக்கும். எனவே வாழ்வு சுவையுள்ளதாக இன்பம் நிறைந்தாக வாழ்நாள் முழுவதும் அமைவதற்கு இளமையிற் கட்டுப்பாடு தேவை என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். அதிலும் சுயகட்டுப்பாடு இளமையில் வளர்ந்து வருமானால் அதற்கு ஈடு இணையாக வேறெதுவும் இருக்கமாட்டாது. பயத்தினால், புற அழுத்தங்களினால் ஏற்படுத்தப்படும் கட்டுப்பாடு போலிக்கட்டுப்பாடாக அமைந்து விடுகின்றன. ஆசிரியர் பேற்றோரின் தண்டனைக்கு அஞ்சிய கட்டுப்பாடுகள் போலிக்கட்டுப்பாடுகளாக அமையும். அவர்களுக்கு முன் ஒழுங்காகவும், அவர்கள் இல்லாதவிடுத்து வேறுவிதமாகவும் நடந்துவிடுகின்றது. எனவேதான் சுயகட்டுப்பாடு வலியுறுத்தப்படுகின்றது. கொட்டிவிட்ட பால் எவ்வாறு திரும்பவும் பெற்றுக்கொள்ள முடியாதோ அப்படியே இழந்து விட்ட ஒழுக்கத்தையும் மீளபெற்றுக் கொள்ளமுடியாது என்பதை ஒவ்வொரு இளைஞனும், யுவதிகளும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

மனிதவாழ்வை மேம்படுத்தும் விழுமியங்களுள் நடுவு நிலைமையும் முக்கியமானது. சிந்தனை, பேச்சு, செயல் என்பவற்றில் நடுவுநிலைமையை பேணுதல் இன்றியமையாதது. நல்ல கல்வியை கற்பதினால் எய்தப்படுகின்ற பயன் நடுவு நிலைமை எனும் நற்பன்பினை பெறுதலும், அவ்வாறு ஒழுகுதலும் ஆகும். ஆனால் கல்வி கற்றும் நடுவுநிலையில் நிற்காதவர்கள் கல்லாதவர்களே. சமூகத்தில் வாழுகின்ற மக்களில் பெரும்பாலானோர் இன்று நடுவுநிலையிலிருந்து தவறிவிட்டார்கள். சமூகநீதியை கைவிட்டுவிட்டார்கள். தனக்கோர் நீதி, பிறருக்கொரு நியாயம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. எவரையும் நம்பமுடிவதில்லை. பக்கம்சாரும் இயல்பு அதிகரித்துவிட்டது. பொதுவாழ்விலும் சரி, குடும்ப வாழ்விலும் சரி ஊழல்களும், பாரபட்சங்களும் மலிந்து விட்டன. உலகம் சமநிலையை இழந்து தத்தளிக்கின்றது. இதனை இன்றைய ஊடகங்கள் வாயிலாக நாம் புரிந்துகொள்ளமுடிகின்றது. இதுவே எங்கும் பரவலாக காணப்படும் அமைதியின்மைக்கும், அத்துமீறிய அடாவடித்தனங்களுக்கும், சமூகசீர்கேடுகளுக்கும், துன்பங்கள், துயரங்களுக்கும் காரணங்கள் ஆகும். 'நடுவு நில்லாது இவ்வுலகம் சரிந்தது' என்று உலகின் குழப்பத்தின் காரணத்தை எப்போதோ திருமூலர் கூறிவிட்டார். உலகம் நிமிர்ந்து சமநிலையில் நிற்பதுக்கு தேவையானது நடுவுநிற்றலாகும். நடுநிலைமையை பேணவேண்டுமாயின் இன, மத, சாதி, பால், நட்பு, குடும்பம் என்ற சக்திகளால் ஈர்க்கப்படாது அவற்றின் செல்வாக்குக்கு உட்படமலும் இருத்தல் அவசியம். அத்துடன் எந்தவிதத்திலும் பிறருக்கு கடமைபடுதலை தவிர்க்கவேண்டும். இவ்வகையில் நடுவுநிலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

பண்பினை பேணிவாழுதல் மூலம் உலகினை வாழத்தகுந்த இடமாக மாற்றியமைக்கமுடியும்.

மனித விழுமியங்களில் கற்பொழுக்கமும் மிக புனிதமாக பேணப்படவேண்டிய ஒன்றாகும். இல்வாழ்க்கையில் தலைவனும், தலைவியும் ஒழுக்கமுடையவர்களாக இருக்கும் போதுதான் இல்வாழ்க்கை சிறந்து விளங்கும். கற்பு ஒழுக்கத்தை காத்துக் கொள்ளலும். அக்கற்பு ஒழுக்கத்தால் தெய்வநிலை அடைதலும் மகளீர் இனத்திற்குரிய மாண்புடைய பண்பாகும். குற்றமற்ற கற்புடைய மனையாளுக்கு கணவனாக அமைபவனும், விழுமியக் கற்பொழுக்கமுடையவனாக இருக்க வேண்டும். இதனைத்தான் பாரதியார் 'கற்பென்று சொல்ல வந்தால் அதனை இருபாலருக்கும் பொதுவில் வைப்போம்' என்கிறார். எனவே ஆண், பெண் இருபாலருக்குமே கற்புக் காத்தல் முக்கியமானது.

இன்றைய உலகில் மதிக்க வேண்டிய மனித விழுமியமாக சூழலை பாதுகாத்தல் காணப்படுகின்றது. ஒரு மனிதன் நல்லவனாகவோ, தீயவனாகவோ வாழ்வதில் முக்கிய இடம் வகிப்பது சூழலாகும். ஆனால் இன்றைய சூழல் சமநிலையற்றுப் போகும் நிலைக்குள்ளாகின்றது. மனித செயல்கள் மூலம் உருவாகும் மாசுகளால் சூழலின் ஆதாரங்களாகிய காற்று, நீர், மண் வளங்களும் அங்கு வாழும் உயிரினங்களும் பாதிப்புக்குள்ளாகி சூழல் சீரற்றுபோகின்றது. இதனால் உலகில் வாழம் உயிரினங்கள் பாதிப்படைகின்றன. குறிப்பாக, இனம்தெரியாத நோய்கள், இயற்கை சீற்றங்கள் போன்றவை சூழல் தாக்கத்தினால் ஏற்படுகின்றது. இன்று உலகைத் தாக்கும் அச்சுறுத்தலில் சூழல் மாசடைதல் முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது. எனவே இயற்கையை நண்பனாக மாற்றி அதற்கு ஏற்றவகையிலான செயற்பாடுகளை மனிதன் செய்யும் போதுதான் அடுத்த சந்ததிக்கு நல்லதொரு சூழலை கைமாற்றமுடியும். அந்தவகையில் சூழலை நாம் பாதுகாத்தால், சூழல் எம்மை பாதுகாக்கும்.

ஒரு மனிதனுக்கு உயர்வாழ்க்கைத்தரம் எப்பொழுது ஏற்படுகின்றது என நோக்கும் போது நல்ல விழுமியங்களை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவதால் மனித வாழ்க்கைத்தரம் சீரும் செம்மையும் பெறுகின்றது. ஆனால் இன்று பொருளாதார ரிதியிலோ, சமூக ரீதியிலோ மனிதர்களின் வாழ்க்கைத்தரம் கணிக்கப்படுகின்ற நிலைமையைத்தான் பொதுவாகக் காண்கின்றோம். 'உள்ளுவதெல்லாம் உயர்வல்ல'. என்று வள்ளுவர் கூறுவது உயர்வான எண்ணங்களே. உயர்வான எண்ணங்கள் எப்போதும் மனித விழுமியங்கள் சார்ந்தனவாகவும், அவற்றைத் தழுவியதாகவும் அமையும். மனித வாழ்க்கைத்தர உயர்வு என்பதில் நாம் மூன்று நிலைகளை எடுத்து நோக்கலாம். முதலாவது நிலை எத்துனை சிறிதொரு தீமையையும் எவர்க்கும் செய்யாது இருத்தல். நேரடியாக மட்டுமன்றி மறைமுகமாகவும் தீமையை செய்யாது இருத்தல். இரண்டாவது நிலை பிறருக்கு நன்மை நினைப்பது, இன்சொல் பேசுவது, நன்மை செய்வது. மூன்றாவது நிலை பிறர் நல்வாழ்வு வாழ்ந்து மகிழ்ச்சி எய்தும் போது அம்மகிழ்ச்சியில் பங்கு கொண்டு மகிழ்வெய்தும் உயர்நிலை. இவையே அம்மூன்று உயர்நிலையாகும். இன்றைய சமுதாயத்தில் பொதுவாக தன் நன்மைக்காக பிறருக்கு தீமை செய்யாது விடுகிறார்கள். பிறருக்கு பல வழிகளிலும் நன்மையும் செய்கிறார்கள். ஆனால் பிறரின் நல்வாழ்வைக்கண்டு பொறாமை கொள்ளாது சகித்துக்கொள்வதும், மகிழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதும் மிக அரிதான காரியமாக உள்ளது. ஆனால் யான் பெற்ற இன்பம் - அதிலும் கூடுதலான இன்பம் எல்லோருக்கும் கிட்ட வேண்டும் என எண்ணுவது, அவ்வாறான இன்பங்களை மற்றையோர் பெற்று அனுபவிக்கும் போது அக்காட்சிகளைக்கண்டு பூரிப்படைவது ஆகிய உயர்ந்த நிலையை அடைவோமானால் அதைவிட வாழ்க்கைத்தர உயர்வு வேறெதுவும் இருக்கமுடியாது.

இறுதியாக, பகவான் சத்தியசாயிபாபா கூறியுள்ள கருத்தும் சிந்திக்கத்தக்கது. “இன்று நாட்டில் அமைதியில்லை என்று கூறுகின்றோம் உண்மையில் மனிதனின் அகத்தில் தான் அமைதியில்லை. மனிதனிடம் மன அமைதி இல்லாத போது உலகம் முழுவதும் அமைதியில்லை என்று கூறுகின்றான்”. எனவே, பகவானின் கருத்தின் படி ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் அமைதி ஏற்படும் போதுதான் உலகிலும் நிரந்தர அமைதி ஏற்படும். ஆதலால் மனிதனானவன் மனித விழுமியங்களை தனது வாழ்வில் கடைப்பிடிக்கும் போது நிச்சயமாக மன அமைதியானது தானகவே உருவாகும். மனிதகுல மீட்சிக்கு மனிதர்கள் யாவரும் பாடுபட்டு ஒற்றுமையுடன் உழைக்க வேண்டும். இன்றைய சமுதாயம் இழந்துவரும் மனித விழுமியங்களை மனித வாழ்க்கையில் மறுபடியும் மலர்ச்சி பெறச்செய்வதன் மூலமே இது சாத்தியமாகும். ஆகவே நாம் அனைவரும் சேர்ந்து விழுமியங்களை பேணி நல்லதொரு சமூகத்தைக்கட்டியெழுப்புவோமாக.

திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன்,
முதுநிலை விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-*

## அன்னையின் அழகு

**பல்லவி**

அகிலமதை தாங்கிவரும் சக்தியம்மா!-மனம்
நெகிழ்ந்துருகி நினைக்கிறதே உன்னையம்மா!
-அகிலமதை

**அனுபல்லவி**

கோடிபலன் கிடைக்குமுந்தன் சந்நிதியில்- மகா
கும்பாபிஷேக திருக்காட்சி காண்கையிலே
ஆடிமாத பூரத்திலும் பெருவிழா!-உன்னை
அலங்கரித்து பார்க்கின்ற திருவிழா!
-அகிலமதை

**சரணங்கள்**

கோலவிழிப் பார்வையிலே கனிவிருக்கும் - தென்
கோப்பாய் பதிதனிலே உறைந்திருப்பாய்!
பரம்பொருளின் அருகினிலே பரமேஸ்வரி-நல்ல
பரம்பரைக்கே முதலுதித்த பேச்சியம்மா
-அகிலமதை

அழகொளிரும் வர்ணங்கள் மிளிர்ந்திடவே பெரும்
அந்தணர்கள் வேதங்களை ஓதிநிற்க
வனம்பலவும் வந்திடுமே உன்னாலே!- புது
வடிவுடனே எழுந்தருள்வாய் கண்முன்னாலே!
-அகிலமதை

கவிஞர்.சிவகணேசலிங்கம்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## ஆலயங்களில் விழுமியக்கல்வி

ஆன்மா லயப்படும் இடம் ஆலயம் ஆகும். சமயத்திற்கும் சூழலுக்கும் நிலைக்களனாக விளங்குபவை ஆலயங்களாகும். ஆலயம் ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில் அதன் சமூகத்தை நோக்கிய பணிகள் பல. மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய உன்னதமான பண்புகளான விழுமியங்களை ஆலயம் என்கின்ற சமூக நிறுவனத்திடம் இருந்தும் பெருமளவு பெற்றுக் கொள்கின்றான்.

மனித நடத்தையின் நன்மை தீமையை நிர்ணயிப்பது விழுமியமாகும். விழுமியங்கள் மனித வாழ்வை நெறிப்படுத்தி வாழ்வதற்குப் பொருள் கொடுக்கின்றன. அதே வேளை விழுமியங்கள் வாழ்விற்குப் பொருள் கொடுத்து அவற்றை நெறிப்படுத்துகின்றன. அதாவது உயிரினும் மேலான ஒழுக்கவாழ்வின் மூலம் பெறப்பட்ட பண்புகளையும் தலையான பெறுமானங்களையும் விழுமியங்கள் எனச் சொல்லலாம். "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை என்றும்" "ஒழுக்கம் இல்லான் கண் உயர்வு இல்லை" என்றும் சான்றோர் புகன்ற வாக்குகள் இதனை வலியுறுத்துகின்றன. நீடு வாழ்வை நிர்ணயிக்கும் விழுமியங்களால் மானிடன் உயர்வடைகின்றான் இதனையே "பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார்" என வள்ளுவப் பெருந்தகை சுட்டியிருக்கின்றமை நோக்கத் தக்கது.

ஒரு சமூகத்தினுடைய விழுமியங்களை நிர்ணயிப்பதும், நெறிப்படுத்துவதும், மாற்றியமைப்பதும், கல்வியினாலும், சமயத்தினாலும் செய்யப்படுகின்ற விடயங்களாகும் கல்வியும் சமயமும் ஒரு சமூகத்தின் விழுமியங்களையும் செல் நெறியையும் நிர்ணயிக்கும் காரணிகளாக அமைகின்றன.

தனிநபர், சமூக, ஆன்மீக, பொது விழுமியங்கள் என்று விழுமியங்களைப் பாகுபடுத்திப்பார்த்தாலும் இவை ஒன்றுடன் தொடர்புபட்டனவாகவே காணப்படுகின்றன. தனிநபர் விழுமியம் என்று கூறும் போது இது தனி நபர் வளர்ச்சி பெற உயர்ச்சி பெறத்துணை நிற்கின்றது. இவை உண்மை, நேர்மை, சுத்தம், அர்ப்பணம் ஆகிய குணப் பண்புகளைப் பற்றியதாக அமைகின்றன.

ஒரு சமூகத்தின் ஒருமைப்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும், விருத்திக்கும் வழிகாட்டியாகவும் நெறிப்படுத்துவதாகவும் அமைகின்றன விழுமியங்கள் சமூக விழுமியங்கள் எனப்படும். இவற்றுள் சமூக ஒற்றுமை, சமூக நலன் பற்றிய உணர்வு, நீதிக்கான செயற்பாடு, பொறுப்புணர்வுடன் செயலாற்றல் என்பன சமூக விழுமியங்களுள் சிலவாகும்.

இறை நம்பிக்கை, இறைபக்தி, தியானம், பஜனை, தியாக மனப்பாண்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளுக்கு இரங்குதல், பிறரில் நிறை காணுதல், பிறரை நேசித்தல், பிறரின் கஷ்டங்களுக்காகப் பிரார்த்தித்தல் போன்ற விழுமியங்கள் ஆன்மீக விழுமியங்களாகும். இவை இறைவனைத் தொட்டுநிற்கும் அதே வேளையில் அயலவர் மாட்டிலுள்ள கடமை பற்றியும் குறித்து நிற்கின்றன. பொது விழுமியங்களுள், மனித மாண்பு, மனித உயிர் நேசிக்கப்படல், அறநெறியில் நம்பிக்கை, மொழி, இன, நாட்டுப் பற்று, பொதுவிதிகள், பொது ஒழுங்குகளைக் கடைப்பிடித்தல் என்பன அடங்கும்.

ஒருவன் இவ்விழுமியக்கல்வியை குடும்பம், பாடசாலை ஆலயம் போன்ற பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் பெற்றுக்கொள்கின்றான் வருங்கால மக்களாகிய குழந்தைகள் தங்கள் வாழ்க்கையின் ஆரம்ப நாட்களைக் குடும்பத்திலே தான் பெருமளவு கழிக்கின்றனர். அந்நாளில் அவர்களது பிஞ்சு உள்ளம் பசுமரத்தாணி போல நற்பழக்கங்களை ஏற்றுக் கொள்ளும். எனவே குடும்பமே சமுதாயத்தின் செல்வங்களாகிய குழந்தைகளின் உடல் உள உயிர்ப்பண்புகளை உருவாக்கும் உலைக்களம் குழந்தைகளின் உடல் வளர்ச்சியிலும் மன வளர்ச்சியிலும் ஒழுங்கும் ஒழுக்கமும் நற்பண்புகளும் ஊறி நிற்றல் வேண்டும். அந்த ஒழுங்கும் ஒழுக்கமும் சிவநெறியின் அடிப்படையிலேயே கற்பிக்கப்படுதல் இன்றியமையாதது பண்பும் பயனும் செறிந்த பிற்கால வாழ்விற்கு பிள்ளைப்பருவம் ஓர் ஒத்திகை. எனவே அதில் அமையும் ஒழுங்கும், ஒழுக்கமும் உறுதியும் ஊக்கமுமே வாழ்விற்கு இன்பமும் ஒளியும் வழங்கும்.

சைவ நெறியானது ஒழுங்குபடுத்தப்பட்ட பண்படுத்தப்பட்ட, சீரிய ஒழுகலாறுகளை சமயம் சார்ந்த அற வாழ்க்கையாக நமக்குக் காட்டுகின்றது. ஒருவன் உயர்வான ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து வாழ்வானேயானால் அவனிடத்தில் ஆன்மீக ஒளி இலகுவில் பிரகாசிக்கும்.

ஆலயங்களிலிருந்து பல்வேறு விழுமியங்களைக் கற்றுக் கொள்ள முடிகின்றது. சமய ஒழுகலாறுகளின் வழிநின்று ஒவ்வொருவரும் உண்மையான சைவ சமயியாக வாழ வழிகிடைக்கின்றது நற்பண்புகளைக் கைக்கொண்டு நற்பிரசையாக வாழவும், ஏழை எளியவர்களுக்கு தானதர்மம் செய்யவும், தனக்கும் சமூகத்திற்கும் உதவியாக வாழவும், சமூக நோக்குடன் செயற்படவும் ஆலயங்கள் களம் அமைத்துக் கொடுக்கின்றன. அர்ப்பண சிந்தனையுடன் வழிகாட்டில் ஈடுபடவும் மகிழ்வான மனநிலையைச் சகலருக்கும் ஏற்படுத்தவும் சிவநெறிவழிப்படுத்துகின்றது.

ஆலயம் இளைஞர்களை மையமாகக் கொண்டு சமூகத்தில் ஒற்றுமையையும் நல்லொழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் வளர்க்கும் முயற்சிகளிலும் சமயத்தைச் சமுதாயத்தில் நிலை நிறுத்திக்காட்டும் செயற்பாடுகளிலும் ஈடுபட முன்வரவேண்டும். அவ்வகையில் சமய சமூகத்தொண்டுகளான பூசை,வழிபாடு , கூட்டுப்பிரார்த்தனை, ஆலயத்தொண்டுகளில் ஈடுபடுதல், சிரமதானப்பணி, சமூகசேவைகள், சமுதாயத்தை முன்னேற்றும் பணிகள் முதலான தன்னலமற்ற சேவைகளில் பங்கேற்றல் போன்ற செயற்பாடுகளை நிகழ்த்த வேண்டும். நாம் செய்யும் தொண்டுகள் சமூக சேவைகள் ஆண்டவனுக்குச் செய்யும் வழிபாடாகும். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற கூற்று இதனையே படம் போட்டுக்காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

கூட்டுப்பிரார்த்தனையின் போது சிறுவர்கள், இளைஞர்கள் அனைவரும் சேர்ந்து ஒற்றுமையாக ஈடுபட வாய்ப்புக்கிட்டும். ஆலயங்களில் திருவிழாக்கள் தொடங்கிவிட்டால் ஊர்முழுவதுமே புனிதமாகிவிடும் மக்கள் மனங்களிலும் சிவசிந்தனையே மேலோங்கி நிற்கும். மகோற்சவ காலங்களில் இடம் பெறும் சமயச் சொற்பொழிவுகள், சைவநெறிப்போட்டிகள் விழுமியப் பண்புகளை வளர்க்கத் துணைநிற்கின்றன. திருவிழாக்களின் போது சுவாமி காவுதல், அன்னதானம் நிகழ்த்துதல் போன்ற செயற்பாடுகளில் கூட்டாக ஈடுபடும் போது ஒற்றுமை, கூட்டுறவு மனப்பாங்கு, பொறுப்புணர்வு போன்ற பண்புகள் வளர்ச்சியடைய வழிகிடைக்கின்றது.

குழுமமாகிப் பணியாற்றும் போது பொது இலக்கு நோக்கிய பணியும், தன்னலமற்ற சேவையும் சமூகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். இவ்வாறாகப் பணியாற்றும் சந்தர்ப்பங்கள் குழுமத்தில் புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்தும் இங்கு இந்திய தத்துவஞானி இராதாக்கிருஷ்ணனின் கூற்று மிகப் பொருத்தமானதாகத் தோற்றுகின்றது. “அதாவது அறிவியல் சார்ந்த அடைவுகளிலும் பார்க்க அறிவியல் சார்ந்த பண்புகளே முதன்மை பெற வேண்டும்” என்பதாகும் ஆலயச் சூழலைச் சுத்தம் செய்வது முக்கியமான சிரமதானப் பணியாகும். அதன் மூலம் பொறுப்புணர்வு ஒற்றுமை என்பன விருத்தியடையும். நல்ல சைவ சமயி சூழலுக்கு இசைவான மனிதனாகவும் இருப்பான் என்பதை வெளிப்படுத்தக்கூடிய செயற்பாடுகளாக இவை அமைகின்றன. எமது சைவ மரபில் சமயப் பணியுடன் சமூகப்பணியும் இரண்டறக்கலந்து நிற்கின்றது. சமயப் பணியாற்றும் நிறுவனங்கள் தங்கள் பணிகளை சமூக நலப்பணியிலும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். சமய வாழ்வின் வெற்றி, ஆன்மீக விடுதலை எல்லாமே நாம் கடைப்பிடிக்கும் விழுமியங்களில் தான் தங்கியிருக்கின்றது என்றால் மிகையாகாது. நல்ல பண்பாடு, சீரிய ஒழுகலாறுகள், நற்பழக்கவழக்கங்கள், மனித நேயற்பண்புகள், தியாக சிந்தனை உடைய ஒருவன் நல்ல விழுமியங்கள் உடையவனாகப் போற்றப்படுவான் மனித விழுமியங்கள் எனப்போற்றப்படும் எவையும் உலகம் தழுவிய அன்பினை வளர்த்துக்கொள்ளும். “அன்பே சிவம்” என்பது சைவத்தின் அடிநாதம் ஒட்டுமொத்தமான இவ்விழுமியப்பண்புகளை வழங்கும் உயர்ந்த நிறுவனமாக ஆலயம் விளங்குகின்றது. என்றால் மிகையாகாது.

“ஆலயம் தொழுவது சாலவும் நன்று”

திருமதி. இராசலட்சுமி நகுலேஸ்வரன்
B.A(Hons)Dip.in.Edu.
யா/நடேஸ்வராக்கல்லூரி காங்கேசன்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

## ஆலய இசை வளர்ச்சியில் இசைக்கருவிகளின் பங்களிப்பு

உலகெங்கணும் நிறைந்து விளங்கும் இறைவன் ஆன்ம ஈடேற்றம் கருதிக் கருணை மேலீட்டினால் உருவங் கொண்டு எழுந்தருளி இருக்கும் இடமே கோவில். கோ-கடவுள், இல்-இருப்பிடம். கடவுளின் இருப்பிடமே கோவில். தேவகிருகம், தேவாகாரம்,தேவாயதனம்,தேவஸ்தானம்,ஷேத்திரம் போன்ற பல பெயர்களால் கோவில் அழைக்கப்படுகின்றது. கோவிலைக் குறிக்கும் இன்னொரு சொல் ஆலயம். ஆ- ஆன்மா, லயம்-சேருவதற்குரியது.கடவுள் திருவடியில் ஆன்மா சேருவதற்குரிய இடமே ஆலயம். ஆலயம் என்பதற்கு ஆணவமலம் அடங்குவதற்குரிய இடம் என்றும் கொள்ளப்படுகிறது.

நாதம் என்பது இனிய ஓசையைக் குறிக்கும். ஒழுங்குபடுத்தப்பட்ட இனிய ஓசையையே இசை என்கிறோம். இறைவன் நாதவடிவானவன்.(நாதம் என்ற சொல்லில் 'நா' என்பது உயிரையும் (பிராணம்) 'த' என்பது தீயையும் குறிக்கிறது. பிராணனும் அக்கினியும் சேர்ந்த சமயம் உண்டாகும் ஒலியே நாதம். இந்த நாதமே ஓம்காரம். ஓம்காரநாதமே ஏழு சுரங்களாகின்றன. ஏழு சுரங்கள் சங்கீதமாகின்றன.(ஜெயவித்யா.ந,பக்: 373,2006)

இசையின் இருப்பிடம் இறைவன். இறைவனின் இருப்பிடம் இசை.”இறையும் இசையும் ஒன்றெனக் கண்டவன் தமிழன். ஏழிசையும் இசைப்பயனுமாய் இருப்பவன் இறைவன். “பண்ணின் இசையாய் நின்றாய் போற்றி”, ”இசை ஏழுகந்தான்”, “பாட்டகத்து இசையாகி நின்றான்” என்பன போன்ற தெய்வப்பாடல்வரிகள் இறைக்கும்,இசைக்குமுள்ள தொடர்பினை உணர்த்துகின்றன. கோவிலின் ஒலி வடிவமே இசை. இசையின் வரிவடிவமே கோவில்” (சுந்தரம். பி.எம், பக்:01,1990)
இறைவனை வழிபாடு செய்வதற்குப் பல வழிகள் உண்டெனினும் இசையால் வழிபாடு செய்வதையே இறைவனும் விரும்புகிறான். இசையால் வழிபடும் முறையே சிறந்ததாகவும் முதன்மை பெற்றதாகவும் விளங்குகிறது. இறைவனின் புகழ்பாடும் திருமுறைப்பாடல்கள், பக்திப்பாடல்கள் போன்றவை யாவும் தெய்வபக்தியை வளர்த்து மனிதனை நல்வழிப்படுத்துகின்றன. மனிதர்கள் இறைவனை வழிபடுவதற்குப் பல வழிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர்.சிலர் ஓர் அமைதியான இடத்தை நாடிச்சென்று அங்கு பிரார்த்தனை புரிகின்றனர். சிலர் நோன்பு இருந்து உள்ளத்தை ஒருமுகப்படுத்தி தியானத்தில் ஈடுபடுகின்றனர். சிலர் வீட்டில் அறைக்கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளிருந்து இறைவனைப் பற்றிய தியானத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலமணிநேரத்தைச் செலவிடுகின்றனர். சிலர் வருடத்திற்கு இரண்டு மூன்று முறைகள் தியான ஆச்சிரமங்களுக்குச் சென்று சில நாட்கள் செபத்திலும் தியானத்திலும் ஈடுபடுகின்றனர். இவையெல்லாவற்றையும் விட இலேசான சிறந்த வழி ஒன்று உண்டு. இசையின் மூலம் இறைவனை வழிபடுவது தான் அது (தனபாண்டியன் து.ஆ, பக்:10,1985)

சங்கீதத்திற்கு “காந்தர்வவேதம்” என்ற பெயரும் உண்டு. கடவுளை வழிபட இசை முக்கிய சாதனமாகும். இசைவழிபாடில்லாத இறைவழிபாடு சீவனற்ற சடலமென்றே கருதிப்பாடல்,இன்னியம்,ஆடல் முதலியவற்றை யெல்லாம் இறைவழிபாட்டுக்கென்றே முறைமைப்படுத்தி வைத்தான் தமிழன். இக் கலைகள் ஆலயங்களில் கட்டாயமாக்கப்பட்டன. அவை வெறும் பொழுது போக்குச் சாதனங்களாக மட்டும் கருதப்படவில்லை. இறைவழிபாட்டுத் தலங்களான ஆலயங்கள் அதற்காக மட்டுமன்றிக் கல்விபயிற்றும் கல்விச்சாலைகளாகவும் திகழ்ந்திருக்கின்றன. ஆலயங்களில் தான் வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. இவை தவிர நாட்டியம் போன்ற கலைகளும் அங்கே தான் பரம்பரையாகப் பயிலப்பட்டும் போற்றிப்பாதுகாக்கப்பட்டும் வந்தன. (சுந்தரம். பி.எம், பக்:02,1990)

இசையானது வாய்ப்பாட்டினூடாக வாத்தியங்களினூடகவும் வெளிப் படுத்தப்படுகிறது. இசையைச் சிறப்பாக வெளிப்படுத்தவும் இனிமையைச் சேர்க்கவும் இசைக்கருவிகள் துணைக்கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. மனிதனுக்கு ஈசன் அருளியுள்ள குரல் பேசுவதற்கு மட்டும் அல்ல. பாடுவதற்கும் கூட என்பதை உணரவேண்டும். குரல் பாடுவதற்கும் விரல்கள் இசைக்கருவிகளைப் பயில்வதற்கும் அமைந்திருக்கின்றன. குரல் காற்று வாத்தியத்தின் அமைப்பை ஒத்தது. காது தோல் வாத்தியத்தின் அமைப்பை ஒத்தது. உள்காது தந்திவாத்தியத்தின் அமைப்பை ஒத்தது. (இராசலட்சுமி. இராகவன்,பக்:10,2000)
தெய்வங்கள் இசைக்கருவிகளோடு காட்சியளிப்பதிலிருந்து கருவியிசையின் மேன்மையை உணரக்கூடியதாயுள்ளது. “பழங்காலத்தில் இறைவன் முன்னர் இசைக்கருவிகளை இசைத்து வழிபாடு செய்யும் முறை இருந்தது. பக்தியை அதிகப்படுத்த இசைக்கருவிகளின் இசை தூண்டுகோலாக இருந்தது. சாதாரண மக்களைத் தன் வயப்படுத்தவும் இறையுணர்வைத் தூண்டுவிக்கவும் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இதனால் இசைக்கருவிகளையும் சுரம், தாளம் முதலான இசை வடிவங்களையும் கண்டறிந்தனர்.((முருகநாதன். சே,பக்:20,2004)

இசைஞானவளர்ச்சிக்கு இசைக்கருவிகள் மிகவும் உதவியாகக் காணப்படுகின்றன. நுட்பசுருதிகளை ஆராய்வதற்கும், கமகங்களின் நுண்மைகளை உணர்வதற்கும்,ஒலியின் தத்துவங்களை தெரிந்து கொள்வதற்கும் இசைக்கருவிகள் மிகவும் பயன்படுகின்றன. இயற்கையிலிருந்து பெறப்பட்ட இனிமையான ஒலிகளைக் கொண்டே இசைக்கருவிகள் உருவாக்கப்பட்டன. கருவி இசையின் மூலம் மக்கள் மனதிலே அமைதியையும் சாந்தத்தையும் உண்டாக்கலாம். மொழி தெரியாதவர்கள் கூட கருவிஇசையை உணர்ந்து அனுபவிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களே இசைக்கருவிகள் பற்றிய செய்திகளுக்கு மூலகாரணமாக விளங்குகின்றன. தோற்கருவிகள், நரம்புக்கருவிகள், காற்றுக்கருவிகள் போன்ற பல வகையான இசைக்கருவிகள் வேதங்களில் கூறப்பட்டுள்ளன. “வட மொழியில் வேதநூல்களும், சம்ஹிதைகளும், தமிழில் சங்கஇலக்கியங்களும் அக்காலத்தைய இசைக்கருவிகள் பற்றி பேசுகின்றன. மிகப்புராதன காலத்தில் அதாவது வேதகாலத்தில் மரத்தினாலான இசைக்கருவிகளே பெரிதும் பயன்பட்டன. வேதங்களை ஓதும் போது இந்த இசைக்கருவிகள் உபயோகப்படுத்தப்பட்டன. அது போலவே “வாய்ஒலி” முதன் முறையாக இசையாக மாறியது “ஸாமவேதம்” ஓதப்பட்ட போது தான் என்பதும் அறியத்தக்கது யாக்ஞவல்லியமுனிவர் தமது ஸ்மிருதியில் “வீணாவாத்தியத்தின் சகலநுட்பங்களையும் ரகசியத்தையும் அறிந்து கொண்டவன் மோட்சவழியை எளிதில் கண்டுபிடித்துக் கொள்கிறான் என்று குறிப்பிட்டுளார்.” (சைதன்யதேவ், பக் 5-6, 1993)

இந்து மதத்தின் சிறப்பு நூல்களான ஆகமசாஸ்திரங்கள் இசையின் பங்கு, இசைக்கருவிகள், நடனம் ஆகியவை கோயில் சடங்குகளில் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன. கோயிற்சிற்பங்கள், கல்வெட்டுக்கள், கோயில் சடங்குகள் என்பன கோயில் இசைபற்றித் தெரிந்து கொள்ள உதவுகின்றன. காலங்காலமாக இசையையும் நாட்டியத்தையும் பாரம்பரியமாகச் சுட்டிக்காட்டும் பொறுப்பினைக் கோயில்கள் பெற்றுள்ளன. கோயிற்கட்டடக்கலை, சிற்பக்கலை, விக்கிரகக்கலை, இசைக்கலை முதலாம் தொழில்நுட்பக்கலைகளும் அழகியற்கலைகளும் வளர்வதற்கு ஆகமங்களின் பங்களிப்புப் பெரிதும் உதவிற்றெனலாம். சிற்பசாஸ்திரம், ஆகமாந்திரம் ஆகமத்தின் விதிகளையே ஆதாரமாகக் கொண்டு தனது செயற்பாடுகளை வகுத்தமையையும் தெய்வப்பண்ணிசை ஒழுங்குபடுத்தப்பட்டமையும் ஆகமங்கள் வகுத்த நியமங்களுக்கு அமைவாகவே என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். (சொக்கலிங்கம்.க,60,2009)

பக்தியிலக்கியங்களான தேவாரங்களிலும் நாலாயிரத் திவ்வியப்பிர பந்தங்களிலும் பண்கள், இசைக்கருவிகள், தாளங்கள், பற்றிய செய்திகள் நிறைந்து காணப்படுகின்றன ஆலயங்களில் பல்வகையான இசைக்கருவிகள் வாசிக்கப்பட்டன என்பதை இவ்விலக்கியங்கள் வாயிலாக அறியக்கூடியதாயுள்ளது.

திருக்கோயில்களில் பூஜாவேளைகளில் வாசிக்கப்படும் பதினெட்டு வகையான இசைக்கருவிகள் அஷ்டதசவாத்தியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஜோடிநாகசுரம், ஒத்து, சுற்றுத்தவில், மந்தத்தவில், டங்கா, கிடிகிட்டி, சக்கரிவாத்தியம், பம்பை, மகாதமருகம், நகரா (முரசு) மகாபேரி, தவண்டை, மகாசங்கம் (சங்கு) சிகண்டி, சங்கீரணதாளம், நகராதாளம், பேரிதாளம், பாணி (கைத்தாளம்) என்பவையே அஷ்டதசவாத்தியங்கள்.

பொதுவாகத் திருக்கோயில் வழிபாட்டில் ஒத்துநாகசுரம், முகவீணை, திருச்சின்னம், எக்காளம், கொம்பு, துத்தரிசங்கு, புல்லாங்குழல், போன்ற காற்றுக்கருவிகளும் பலிமத்தளம், கவணமத்தளம், சுத்தமத்தளம், தவில், பேரிகை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரப்பிறை, சூரியப்பிறை, செண்டை, இடக்கை, டமாரம், டங்கி, தவண்டை, ஜக்கி, ஜயபேரிகை, தப்பு, கனகதப்பட்டை, மிருதங்கம், மத்தளம், (முட்டு) நகரா, பெரியஉடல், சின்னஉடல், சன்னஉடல், திமிலை, வீரகண்டி, தக்கை, இடிகிட்டி, போன்ற தோற்றக்கருவிகளும் தாளம், பிரம்மதாளம், குழித்தாளம், மணி, கைமணி, கொத்துமணி, கோயில்மணி, சேமக்கலம், போன்ற உலோகக்கருவிகளும் வீணை, கெத்து போன்ற நரம்புக்கருவிகளும் வாசிக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் தற்காலத்தில் பலவகை இசைக்கருவிகளும் அருகி ஒரு சில ஆலயங்களில் வாசிக்கப்பட்டு வருகின்றன.

"தௌர்யத்திரிகம் என்பது நிருத்தியம், கீதம், வாத்தியம் என்னும் மூன்றினையும் தொகுத்துச் சுட்டும், இம் மூன்றாலும் இறைவனை வழிபட வகுக்கப்பட்டமுறை இந்நுண்கலைகளைப் பேணத் திருக்கோவில் வழிபாடு வழிகோலியதைக் காட்டுகிறது. இவற்றுள் வாத்தியங்கள் அபிஷேகத்தின் பொழுதும், ஆராதனையின் பொழுதும் மீட்டப்படவேண்டியன. இவை மத்தளம், தாளம், படஹம், பேரி, டக்கா, காஹல், சல்லரி, கும்பவாத்தியம், நாடி, குழல், சங்கு, நிருத்தவாத்தியம் முதலியன. நாதஸ்வரம், மேளம் முதலியவற்றால் அமையும் மங்கல வாத்தியம் மட்டும் பெருவழக்கில் நிலவ, ஏனைய வாத்தியங்கள் சிறிது சிறிதாக வழக்கில் அருகிக்கொண்டே வருகின்றன. (கைலாசநாதக்குருக்கள். கா. பக் 203, 1992)

கோயில் கிரியைகள் பற்றிக் குறிப்பிடும் நூல்களிலும் இசைக்கருவிகள் பற்றிய குறிப்புக்களுள்ள உரியவேளைகளில் வாசிப்பதற்குரிய இசைக்கருவிகளும் கோவிலிலிடம் பெறும் பொருட்களே இவை பேணிப்பாதுகாக்கப்படும் இடம் கோவில். மத்தளம், படஹம், பேரிசை, சல்லரி, மல்லரி, சங்கு, காகளம், பூரி, ஏகதாளம், பேரிவாத்தியம், நாடீவாத்தியம், கும்பவாத்தியம், பஞ்சமுகவாத்தியம், வீணை, கின்னரவீணை, உருத்திரவீணை, முகவீணை, வாயுவீணை, தும்புருவீணை, நாரதவீணை, காந்தர்வவீணை, வேய்ங்குழல், மிருதங்கம், முதலியன கிரியைநூல்கள் குறிப்பிடும் இசைக்கருவிகளாகும். (கைலாசநாதக்குருக்கள், கா. பக் 76,76, 2009)

இவ்வாறாக பல்வேறுவகைப்பட்ட வாத்தியங்கள் தொன்றுதொட்டு வழங்கிவந்திருந்தாலும் தற்காலத்தில் மிகக்குறைந்தளவே வழக்கிலுள்ளன. ஆலயங்களில் நிகழும் பல்வேறு நிகழ்வுகளிலும் நாதஸ்வரமும், தவிலும், இணைந்தே பெரும்பங்களிப்பை வழங்கிவருகின்றன. "மற்ற எல்லா வாத்தியங் களிலுமுள்ள இசை நயத்தையும் ஒன்று சேர்த்துக் அமைக்கப்பட்டிருக்கும் இந்த இசைக்கருவி உலகத்திலேயே ஓர் அற்புதம் என்று சொல்லவேண்டும். ஆலயங் களிலும், கல்யாணங்களிலும் நாம் அடிக்கடி கேட்கும் இந்த நாதஸ்வரமே தென்னாட்டு சங்கீதத்தை யாவரும் அறிந்து கொள்ளும்படிச் செய்து வருகிறது. இதே நாதஸ்வரக்காரர்கள் அந்நியநாட்டு வாத்தியங்களாகிய க்ளாரிநெட் முதலியவை களை ஸ்வரப்படுத்தி நம் நாட்டு இராகங்களையும் இனிமையுடன் வாசிக்கும் திறமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். (வாசுதேவ சாஸ்திரி) கே.114, 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் இன்றும் கோவில்களின் இசைவழிபாட்டில் முன்னிலையில் இருப்பது நாதஸ்வர இசையாகும். "பொழுது புலருங்காலத்து வழிபாடு முதலாக இரவில் பள்ளியறைப்பூசை வழிபாடு ஈறாகக் கோயில்களில் நாதஸ்வரக் குழுவின் இசை முழங்கிக் கொண்டிருக்கும். அன்றாடப்பூசை வேளைகளில் இசைப்பதற்கென்றும், திருவிழாக்காலங்களில் இசைப்பதற்கென்றும் தனித்தனியாக மரபுகள் உருவாக்கப்பட்டு. மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. எந்தெந்த இசைக்கருவி, எவ்வெப்போது தனித்தோ, சேர்ந்தோ இயங்கவேண்டுமென்றொரு முறையும் இருந்திருக்கின்றது (சுந்தரம் பி.எம், பக்: 05, 1990)

மல்லாரி எனப்படும் இசைவகையானது நாதஸ்வரத்திற்கான சிறப்பான உருப்படிவகையாகும் தற்காலத்தில் வெவ்வேறு வாத்தியங்களிலும் இது வாசிக்கப்பட்டு வந்தாலும் நாதஸ்வரத்திற்காகவே இது உருவாக்கப்பட்டது. மல்லாரி என்பது பாடல்வரிகள் ஏதுமற்ற வெறும் தத்தாக்காரமாக அமைந்திருப்பதாகும். இதிலே பல வகைகளுண்டு. இறைவன் காளை வாகனத்தில் எழுந்தருளும்போது வாசிக்கப்படுவது பெரியமல்லாரி ஆகும். தீர்த்த மல்லாரி என்பது இறைவனுக்குத் திருமஞ்சனமாட்டவோ, கோவிலின் குடமுழுக்கின் பொருட்டோ நதிகளில் நீரெடுத்து வருகையில் வாசிக்கப்படுவது திருமடைப்பள்ளியிலிருந்து நிவேதன உணவுவகைகளையும் எடுத்து வருகையில் இசைக்கப்பெறுவது தளிகை மல்லாரி தேர்த்திருவிழாவில் ஸ்வாமி கோபுரவாயிலை விட்டு நகர்ந்து தேரடியை அடைந்ததும் அங்கே திரிபுடைதாள மல்லாரி வாசிக்கப்பெறும் மல்லாரி எதுவாயிருப்பினும் நட்டபாடைப் பண்ணாகிய கம்பீரநாட்டை என்னும் இராகத்தில் மட்டுமெ வாசிக்கப்படவேண்டுமென்பது நியதி மல்லாரியானது கலைஞர்களின் கற்பனைக்கேற்றவாறு பற்பல தாளங்களில் அமைந்திருக்கும்.

சுவாமி புறப்பாட்டில் மல்லாரியை அடுத்து இராக ஆலாபனையும் தொடர்ந்து "ரக்தி" எனப்பெறும் இலயச்சிறப்புக்கள் மிகுந்த இசைவகையும் நாதஸ்வரத்தில் இடம் பெறும். ரக்தி எந்த இராகத்திலும் வாசிக்கப்படலாம் இவ்விசைவகை கணிதநுட்பங்களைக் கொண்டது.

ரக்தியை அடுத்து சுவாமி தெற்குக்கோபுர வாயிலை அடைந்த பின்னர் பல்லவி வாசிக்கப்படும். பல்லவி எந்தத்தாளத்திலும் அமைந்திருக்கலாம். ஸ்வாமி கோபுர வாயிலை அடைந்ததும் பதங்கள், தேவாரப்பாடல்கள் இசைக்கப்படும்.

இரவுக்காலப்பூசை நிறைவுற்றது இறைவன் திருப்படிமத்தைப் பள்ளியறைக்கு எடுத்துச் செல்கையில் சின்னமல்லாசியும், மஞ்சத்தில் வைக்கப்பட்ட பின்பு பதம், லாலி, ஊஞ்சல், போன்ற பாடல்வகைகளும் இசைக்கப்பெறும்.

தென்னிந்தியாவில் சில குறிப்பிட்ட ஆலயங்களில் நாதஸ்வரத்தில் இன்னின்ன இசைவகைகள் வாசிக்கப்படல் வேண்டும் என்ற நியதியும் காணப்படுகின்றது. சிதம்பரம், திருவாரூர், போன்ற ஆலயங்களின் திருவிழாக்காலத்தில் வாசிக்கப்பட வேண்டிய இராகங்கள், மற்றும் இசைவகைகள் திட்டமாக விதிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தில் வீணைவாத்தியமானது மேடைக்கச்சேரிகளிலுலேயே அதிகளவில் வாசிக்கப்பட்டு வந்தாலும் ஆரம்பகாலம் முதல் ஆலயங்களில் வாசிக்கப்பட்டு வந்ததை நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது. திருவரங்கத்துத் திருக்கோவிலில் காலைப்பள்ளியெழுச்சி மற்றும் அர்த்தயாம வழிபாடுகளின் போது வீணை இசைக்கப்படுகிறது. மேலும் சித்திரைமாதத்தில் நடைபெறும் பூச்சாற்றுத் திருவிழாவின் போது திருமாலின் முன்பாக குலசேகரப் பெருமாளின் திருமொழிப்பாசுரங்கள் வீணையுடன் தான் இசைக்கப்படுகின்றன.

திருக்குற்றாலம் மற்றும் தென்காசிக்கோயில்களில் திருவாதிரைத் திருவிழாவில் "தாண்டவதீபாராதனை" என்றொரு விசேடமான வழிபாடு நடைபெறும். "ஆனந்த பைரவி" இராகத்தை முதலில் ஆதிதாளத்திலும், பின்பு மிஸ்ரசாபுதாளத்திலும் நாகசுரம் இசைக்கும் அருச்சகர் அடுக்குத்தீபாராதனைக்குரிய திருவிளக்கை எடுத்துக்கொண்டு ஆடிக்கொண்டே வருவார். ஆதிகாலத்தில் இதை தேவதாசிகள் நடத்திவந்தனர். சுமார் பதினைந்து நிமிடங்கள் நடைபெறும் இந்த ஆடலின் போது சங்கு, மிருதங்கம், தவில் ஒத்து, தாளம் ஆகியவையும் இணைந்து முழங்கும். இதையே "தாண்டவதீபாராதனை" என்று குறிப்பிடுகின்றனர். (சுந்தரம் பி.எம் பக்12. 1990)

"தென்னாற்காடு மாவட்டம் செய்யூர்க்கோவிலில் "சர்வாத்தியவழிபாடு" என்றவொன்று வருடாந்திரத் திருவிழாவில் முக்கிய இடம் பெறுகிறது. தேவாரம், திருவாசகம், திருப்பல்லாண்டு, திருப்புகழ், ஆகிய தோத்திரப்பாடல்களை முதலில் பாடிய பின் "புஷ்பாஞ்சலி, நடத்தப்பெறும் மிருதங்கம், பெரியவடிவிலின பிரம்மதாளம் இரண்டும் இணைந்து ஒலித்தபின் கீதம், வர்ணம், கீரத்தனை, பதம், சூர்ணிகை, வெண்பா, விருத்தம், அம்மானை, வர்ணம், உலா முதலியன பாடப்படும் பின்பு திருச்சின்னம், குழல், முகவீணை, டங்கா, சங்கு, நவுரி, புசங்கசுரம் முதலியன ஒலிக்க புஜங்கநிருத்தம் நடக்கும் இவ்வாறு எழுபத்திரண்டு அம்சங்களைக் கொண்டதாக, நான்குமணிநேரம் நடைபெறும் வழிபாட்டைச் "சர்வாத்தயி வழிபாடு" என்பர். (சுந்தரம். பி. எம், பக் 19, 1990)

சங்கு என்னும் இசைக்கருவியும் அன்று தொடக்கம் இன்றுவரை ஆலயங்களில் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் இசையை வழங்கிவருகிறது. இது இயற்கையாகவே உருவானகருவி. சங்கானது ஒரு மங்களகரமான கருவியாகக் கொள்ளப்படுகிறது. வலம்புரிச்சங்கு மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. கோயில்களில் வழிபாட்டு நேரத்தில் இறைவனின் கவனத்தைத் திருப்புவதற்காக சங்கூதப்படுவதாக நம்பிக்கையுண்டு.

பஞ்சமுகவாத்தியம் என்னும் ஐந்துமுகழவம் வடிவத்தில் மிகவும் பெரிய தோற்கருவியாகும். இதற்கு குடமுழா, குடபஞ்சமுகி என்று வேறும் பெயர்களுண்டு. தமிழ்நாட்டில் திருவாரூர், திருத்துறைப்பூண்டி போன்ற பெருங்கோயில்களில் மட்டும் இந்த இசைக்கருவி தற்போதும் இசைக்கப்படுகின்றது. இசைக்கருவியன் ஐந்து முகங்களையும் சதாசிவனின் ஐந்து முகங்களாகப் போற்றுவர். பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களில் நித்தியபூசை நடைபெறும் காலங்கள், சிறப்பு அபிசேக ஆராதனைகள், பண்டிகைகள், கோவில் விழாக்கள் போன்ற முக்கிய நிகழ்வுகள் இடம்பெறும்போது இவ்வாத்தியம் இசைக்கப்படுகிறது.

ஈழத்திலும் இந்துக்கோயில்கள் எல்லாவற்றிலும் பெரும்பாலும் நாதசுரம், தவில் போன்ற கருவிகளே தொடர்ந்தும் இசைக்கப்பட்டு வருகின்றன எனினும் சில கிராமிய தெய்வங்களின் வழிபாட்டில் பறை என்னும் இசைக்கருவியும் வாசிக்கப்பட்டு வருகிறது.

தற்காலத்தில் ஆலயங்களில் இசையை வளர்க்கும் கருவிகளாக நாதசுரமும் தவிலுமே விளங்கினாலும் அவற்றிலும் சினிமாப்பாடல்களின் தாக்கம் பெருமளவில் காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். எத்தனையோ இறைபக்திப்பாடல்கள், தோத்திரங்கள், அருளாளர்கள், பாடலங்கள் இருக்கும் போது சினிமாப்பாடல்களையே மக்கள் விரும்பிக் கேட்பதாலும் இசைக்கலைஞர்கள் வாசிப்பதாலும் ஆலயங்களில் நிலவவேண்டிய பக்திச்சூழல் மாறி கேளிக்கைக் களியாட்ட நிலைக்கு இசைக்கலை தள்ளப்படுவது மிகவும் கவலைக்குரிய நிலையாகும். இத்தகையநிலை மாறி மீண்டும் இசைக்கலை உன்னதநிலையை அடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரியவாராக.

உசாத்துணை நூல்கள்

01. இராசலட்சுமி இராகவன் இசைஇலக்கணம் அருணா கம்ப்யூட்டர்ஸ், மதுரை 2000
02.கைலாசநாதக்குருக்கள், கா, சைவத்திருக்கோயிற் கிரியை நெறி- ஸ்ரீமுத்துவிநாயகர் கோயில் நிதியம் - 1992 (முதற்பதிப்பு)
03.சுந்தரம் பி.எம் ஆலயவழிபாட்டில் இசை-இசைத்துறை தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர் அறக்கட்டளைச் சொற்பொழிவு - 1990
04.சைதன்யதேவ் பி. (ஆங்கிலமூலம்) பார்த்தசாரதி எஸ்.டி.(தமிழில்) இசைக்கருவிகள் நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா 1993
05.சொக்கலிங்கம் க. இந்துநாகரீகம் குமரன் புத்தக இல்லம் கொழும்பு சென்னை, 2009
06.தனபாண்டியன். து.ஆ.புதிய இராகங்கள், தமிழ்ப்பல்கலைக்கழகம் - 1985
07.முருகநாதன் செ, தமிழிசை ஆய்வுமாலை, 2004
08.வாசுவேதசாஸ்திரி கே. தமிழ்க்கோயில்கள் தமிழர்பண்பாடு (தொகுப்பு - கலைமணி தொ. மு. பாஸ்கரத் தொண்டமான் நிவேதிதா பதிப்பகம் -2005
09. ஜெயவித்யா - ந, தமிழிசை தொன்மையும் பெருமையும் தொகுதி 2 உலகத் தமிழிசை மாநாட்டு வெளியீடு 2006.

திருமதி ஜனனி நடேசமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர்
இசைத்துறை
யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## சமயவாழ்வும் இன்றைய தலைமுறையும்

இன்றைய எமது சமூக காட்சிகளைக் காணுகையில் கட்டுப்பாடும், வழிப்படுத்தலும் இழந்துவிட்ட ஒரு தலைமுறையின் போக்குகள் அதிர்ச்சி யளிப்பனவாகவும் கவலையளிப்பவனாகவும் உள்ளன. இதன் உச்சக்கட்டம் அண்மையில் தனது பெற்றோரையே காதலுக்காக கொல்லத்துணிகின்ற அளவுக்கு கொண்டு சென்று விட்டுள்ளது. ஒரு காலத்தில் இப்படியான ஒரு வாழ்வு முறையா எம்மிடம் இருந்தது. சுய ஒழுக்கமும், கட்டுப்பாடும், சமூக ஒழுக்கமும் நிறைந்திருந்த வாழ்வு இன்று வக்கிரமாக, வன்புணர்வாக மாறி நிற்பதை பார்க்கையில் நெஞ்சு பற்றி எரிகிறது.

ஒரு காலத்தில் எமது வாழ்வை நெறிப்படுத்தியதில், வடிவமைத்ததில் சமயத்திற்கு முக்கிய இடம் இருந்தது. அன்றைய சமய வாழ்வு என்பது வாழ்ந்து வழிகாட்டுவதாகவே இருந்தது. அக மலர்ச்சியை ஏற்படுத்துவதாகவே இருந்தது பயபக்தி கொண்டதாக இருந்தது. எங்கள் வாழ்வுடன் இரண்டறக் கலந்திருந்தது. ஆடம்பரமற்ற எளிமையான வாழ்வை அவாவிநிற்பதாக இருந்தது. இதனால் பிறர் சொல்லாமலே குறிப்பறிந்து நடக்கக் கூடிய, சமூக விழுமியங்களை பேணக் கூடிய ஒரு தலைமுறையாக அன்றைய தலைமுறையிடமும் பிரச்சினைகள் இல்லாமல் இல்லை ஆனால் இன்றைய தலைமுறையோடு ஒப்பிடுகின்ற போது அதன் தன்மை இப்படி அதிர்ச்சியளிக்கக் கூடிய தன்மை கொண்டதாக இருக்கவில்லை.

இன்றைய தலைமுறை சமய வாழ்வு என்பதையே தவறாக அர்த்தப்படுத்தி, அகவாழ்வு மலர்ச்சிக்கு பதிலாக சமயத்தின் புறரீதியான ஆடம்பர உடைஅணிதல்,போட்டிக்கு திருவிழாச் செய்தல், கோயில்களை புனரமைத்தல் என்பவற்றையே சமய வாழ்வென தவறாக எண்ணுகிறது. இதனால் பூசலாரின் மனக் கோயிலின் மகிமையை இன்றைய தலைமுறை மறந்து விடுகிறது. பணத்தை முதன்மைப் படுத்தும் போக்கும், நவீன உலகின் கருவிகள் மனப்பாங்குகளும், வேகமான வாழ்வும், எல்லாமே அரசியலாகிப் போன நிலையும், சரியான வழிகாட்டல் இன்மையும், வழிகாட்டல்களை பின்பற்றாத நிலையும், சமயத்தின் பழமரபுகளை மூடத்தனங்களாய் கருதும் நிலையும். சமயமும், இலக்கியமும் வழிநடத்திய சமூகத்தை இன்று தொலைக்காட்சியும், தொலைபேசியும் வழிநடத்தும் தொலைநோக்கற்ற நிலையும் இன்றைய தலைமுறையின் பிழையான சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விற்கு காரணங்களாகி விடுகின்றன.

இவ்வாறு வெறுமனே எதிர்மறையாக சிந்தித்து இன்றைய தலைமுறையிடம் முற்று முழுதாக சமய வாழ்வு இல்லை என்றும் கூற முடியாது. சில இளைஞர்களிடம் அவை சரியாக தொற்ற வைக்கப்பட்டும் உள்ளன. ஆற்றல் மிக்க அவ் இளைஞரால் சமயம் வளர்க்கப்படுகிறது என்பதையும் மறந்து விட முடியாது. ஆனால், ஒரு ஆறுமுகநாவலர். தங்கம்மா அப்பாக்குட்டி போன்றோரது பணிகளுடன் ஒப்பிடுகையில் இன்றைய காலச்சூழலில் இன்னும் நிறைய இதய சுத்தியுடனும் அர்ப்பணிப்புடனும் பணிசெய்ய வேண்டிய தேவை உள்ளது என்பதையே அண்மைய சமூகக் காட்சிகள் நிரூபிக்கின்றன.

சமூக வெளியை தூய்மையாக்க எமது மனவெளிகளை முதலில் நாம் தூய்மைப்படுத்த வேண்டும் இத்தகைய அகத்தூய்மை வலியுறுத்தியே நம்முன்னோர்

"உள்ளத்தனையது உயர்வு" என்றும்

உள்ளம் பெருகுங்கோயில்...." என்றும்

மகத்துக்குக் கண்மாசிலன் ஆதல்.." என்றும் கூறிச் சென்றுள்ளனர்.

சமய வாழ்வை வளம்படுத்துவதில் ஆண்களுக்கும் பங்கிருக்கிறது,. பெண்களுக்கும் பங்கிருக்கிறது. சக்தியின்றேல் சிவமில்லை,சிவமின்றேல் சக்தி இல்லை என்பதுதான் எமது சமய தத்துவம் இதனால் அர்த்தநாரீஸ்வரராய் சிவனே தன் இடப்பாகமதை உமைக்கு வழங்கினார். சங்கமருவிய காலம் பிற்பகுதியில் காரைக்கால் அம்மையார் என்றொரு பெண் தோன்றவில்லை என்றால் எங்கள் சைவம் அழிந்திருக்கும் அதே போல பாண்டிமாதேவியும், திலகவதியாரும் துணையாய் நின்று சமயம் வளர்த்தனர். எம் காலத்தில் எம் மண்ணில் காலம் தந்த கைவிளக்காகத் தோன்றி தங்கம்மாஅப்பாக்குட்டியவர்கள் ஒரு சமய வாழ்வை வாழ்ந்து காட்டினார். எமது சமய வாழ்வு பெண்மையின் ஆற்றலைப் போற்றுகிறது.

அம்மையே அப்பா என்கிறது.

முப்பெருந்தேவியராய் கல்வி, செல்வம், வீரத்தை நவராத்திரியாய் போற்றுகிறது. கௌரிக் காப்பு எனும் விரத மகிமை கொண்டு எம் வாழ்வை காக்கிறது. சுமங்கலிகளின் வாழ்வுக்கு மங்களம் சேர்க்கிறது சக்தியின் வழிபாடு சாமுண்டியாய், சண்டிகாபரமேஸ்வரியாய், மகிடாசுரவர்தனியாய், பத்திரகாளியாய், அரக்கத்தனங்களை அழித்து மக்களைக் காக்கும் ஆற்றலின் வடிவமாகவும் விளங்குகிறது. இவற்றிலிருந்தெல்லாம் இன்றைய காலப் பெண்கள் தமது சமயப் பண்பாட்டு ஒழுக்கமதால் சமய வாழ்வுக்கு ஆற்ற வேண்டிய பங்களிப்பை குடும்பமே ஒரு கோயிலாக விளங்க வாழ வேண்டிய வாழ்வு முறையை புரிந்து நடந்து கொள்ள வேண்டும்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தையே
மண்ணில் பிறக்கையிலே அவர்
நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வகையில் இன்னொரு தலைமுறையை நல்லவராய் வளர்த்தெடுக்க வேண்டிய பண்பாட்டு பொறுப்பும், கடமையும், ஆண்களை விடப் பெண்களுக்கே அதிகம் இருக்க வேண்டும் ஆனால் இன்று பெற்ற பிள்ளையையே கைவிட்டுச் செல்லவும், கொலைசெய்து புதைக்கவும், விற்கவும் துணிகின்ற எம் இனப் பெண்கள் சிலரை எண்ணுகையில் யாரொடு நோகோம் யார்க்கெடுத்துரைப்போம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இன்று புலம்பெயர் தேசங்களில் வசிக்கின்ற எம் உறவுகள் கூட அங்குள்ள அன்னிய மதப் பண்பாட்டுச் சூழலுக்குள்ளும் எமது சமயத்தை வளர்ப்பதற்காக எத்தனையோ அரும்பணிகளை ஆற்றி வருகின்றனர் இன்றிருக்கும் நெருக்கடிச் சூழலில் உளவியல் ரீதியாக எம்மை ஆற்றுப்படுத்தி எமது மனங்களை சாந்தப்படுத்த லயப்படுத்த சமயத்தினாலே முடியும் உண்மைச் சமய வாழ்வு மூலமே இது சாத்தியமாகும் அதே வேளை பிற சமயத்தவரின் நல்ல விடயங்களை குரோதங்களை மறந்து நாம் போற்றவும் கற்றுக் கொள்ளவேண்டும். மதமும், சமயமும் பகைமையையும் வளர்ப்பதற்காக தோன்றியவை அல்ல எல்லா நதிகளும் ஒரே கடலில் தான் கலக்கின்றன என்ற மனித அன்பை நேசிப்பை கட்டமைக்கையில் உருவாக்கப்பட்டவை என்பதையும் இன்றைய தலைமுறை புரிந்து கொள்ள வேண்டும்.

ஒருகாலத்தில் ஆலயங்களும் சமயவாதிகளும் நிறையச் சமூகப்பணிகளை செய்வவர்களாக தான் வாழும் சமூகத்தை ஒழுக்கத்தால், அறிவால் மேம்படுத்தும் நிலைக்களங்களாக விளங்கியிருந்த தன்மையை நாம் அறிவோம். இன்று அந் நிலை அருகே பூசை வழிபாடு அடங்குவதோடு குறுகிவிட்ட நிலையொன்றுள்ளது. பஞ்சாங்கங்களால் குழப்பப்படும் நிலையில் உள்ளது. எனவே இன்றைய தலைமுறை இதிலிருந்து விடுபட்டு சமூகத்தை மேம்படுத்தும் சமய வாழ்வுக்கு தன்னை தயார்படுத்தி கொள்வதுடன் சமயத்தின் மூடத்தனங்களையும் களைந்து அடுத்து இம் மண்ணில் வாழப்போகும் தலைமுறையாக மாற்றவேண்டிய கடமையும் பொறுப்பும் எம் எல்லோருக்கும் உண்டுடென்பதை உணர்ந்தும் செயற்பட வேண்டும். சுவாமி விவேகானந்தர் சொன்ன இளையவராய் நாம் எழுவோம் முதுமையிடமிருந்து அனுபவங்களை பெறுவோம். எங்கள் சமய அடையாளத்தை அழியாது காப்போம். எல்லாம் வல்ல கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பிகைத்தாயின் அருள் வேண்டி அமைகிறேன்.

புலோலியூர் வேல்நந்தகுமார்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## திருவாசகத்தின் மாண்பு

பக்தி இலக்கியங்கள் தோன்றிய காலம் பல்லவர் காலம் ஆகும். எனினும் சங்கமருவிய காலத்தின் பிற்பகுதியிலேயே காரைக் கால் அம்மையாராலும் முதல்மூவாழ்வார்களாலும் பக்தி நெறி வளர்த்துச் செல்லப்பட்டதை அறியமுடிகின்றது. பின் பல்லவர் காலத்திலேயே பக்தி நெறி பெருக்கெடுத்துச் சென்றது. எனின் மிகையாகாது. இதற்கு முக்கிய காரணம் இக்காலத்தில் செயற்பட்ட பக்தி இயக்கத்தின் பணியேயாகும். இப்பக்தியுணர்வை நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமது பாடல்கள், பிரபந்தங்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர்.

அந்த வகையில் தமிழ் மண்ணுக்கும் மொழிக்கும் பெருமை சேர்க்கும் வகையில் திருவாசகம் என்ற ஒப்பற்ற இலக்கியத்தை மணிவாசகர் இயற்றியுள்ளமை வியக்கத்தக்கது மட்டுமன்றி நயக்கத்தக்கதுமாகும். இவரை இறைவனே “மாணிக்க வாசக” என்றழைத்து ஞானகுருவாகி உபதேசமும் அருளியமை குறிப்பிடத்தக்கது.

தில்லைச் திருச்சிற்றம் பலத்தில் மணிவாசகர் எனும் நாயனார் கூற ஆண்டவனே ஏட்டில் எழுதிய பெருமை இந்நூலைச் சாரும்.

மனிதன் தெய்வத்திடம் கூறியது-திருவாசகம்
மனிதனுக்கு தெய்வம் கூறியது-கீதை
மனிதன் மனிதர்களுக்கு கூறியது- திருக்குறள்

இந்த வகையில் திலுவாசகம் திருமுறையமைப்பில் எட்டாவதாக அமைந்துள்ளது. இவ் இலக்கியம் தொடக்கத்திலே கலி, வெண்பாவாலும் தொடர்ந்து ஆசிரியப்பா, ஆசிரியவிருத்தம், கலித்தாழிசை, நேரிசை வெண்பா முதலியவைகளாலும் பாடப்பட்டுள்ளது.

திருவாசகம் 5 திருப்பதிகங்களையும் 656 பாடல்களையும் கொண்ட அரிய பொக்கிஷமாகும். மணிவாசகர் இறைவனுடைய பேசுகின்ற அன்புவாசகங்களைத் திருவாசகத்திலே காணலாம். அதாவது மணிவாசகரது சொல் ஓவியங்களை திருவாசகத்திலே காணக்கிடக்கின்றது. ஊனினை உருக்கி உள்ளொளியைப் பெருக்கவல்ல அற்புத இலக்கியம். சுடச்சுட ஆவின்பால் சுவை அதிகரிப்பது போல இந்நூலினைப் படிக்கும் போது அதன் இலக்கிய அழகோ சிந்தனையை உருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிற்கு தெய்வீக ஒளியாக மிளிர்கின்றது. சொல்லழகு பொருளழகு ஆகிய இரண்டு சேர்ந்து திருவாசகத்தை உச்சஸ்தானம் பெற வைத்துள்ளது.

பன்னிரு திருமுறைகளிலும் சிறப்புடையது திருமந்திரம் (10ம் திருமுறை) அதனை விடவும் சிறப்புடையதும் சிகரமானதும் திருவாசகமே என திருமுருக கிருபானந்த வாரியார் கூறியமை நோக்கற்பாலது.

வாரியார் திருவாசகத்தை சிகாமந்திரம் (தலைமை மந்திரம்) என்பர். இது உருகாத உள்ளத்தையும் உருக்கி உயிர்க்குப் பசுத்துவம் கெடுத்துப் பதித்துவம் அருளவல்லது. ஆதலால் இது செந்தமிழுக்கு அன்பு மறையாப் போற்றப்படுகின்றது. திருவாசகம் என்ற பெயர் திருவுடைய செயல்களால் ஆகிய அருள் நூல் எனப் பொருள்படும்.

திருவாசகத்தை தேன் என்று கூறுதல் மரபு. தேன் உடற்பிணிக்கு மருந்தாகும் தன்மையது போல் இந்நூல் உடற்பிணிக்கு மருந்தாகும். என்பதை "தொல்லையிரும் பிறவிச் சூழும் தளைநீக்கி அல்லல் அறுத்தானந்தம்........." என்று தொடங்கி "திருவாசகம் எனும் தேன்" என நிறைவடைவது இதனை தெளிவாகப் புடமிட்டுக் காட்டுகிறது.

இராமலிங்க சுவாமிகளும் "வான்கலந்த மாணிக்கவாசகனின் வாசகத்தை......."என்ற பாடலில் இதன் சிறப்பை வியந்துள்ளார்.

Dr. G.U. போப் என்பவர் இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமை திருவாசகத்தின் மாண்பையே எமக்கு காட்டுகின்றது.

இத்தகைய சிறப்புவாய்ந்த திருவாசகம் சமயத்துடன் தொடர்புடைய பல்வேறு தத்துவக்கருத்துக்களையும் கூறிநிற்கின்றது. இதன் மூலம் திருவாசகத்தில் பக்தியின் உணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுவாக எந்த ஒரு இலக்கியத்தின் தோற்றத்திற்கும் அக்கால சமூக பண்பாட்டம்சங்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு. அதாவது இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்பதும் இதனை வலிமைப்படுத்துகின்றது. இந்த வகையில் தான் மணிவாசகர் அருளிப்போந்த திருவாசகத்தின் தோற்றமும் அமைந்துள்ளது. வைதீக சமயத்தவரிடையே பக்தியுணர்வை ஏற்படுத்தும் சாதனமாக திருவாசகத்தை பக்திச் சுவை சொட்டச் செபட்டப் படைத்துள்ளார். இவ்வாறான பாடல்களை நாம் ஆலயங்களிலும் வீடுகளிலும் பக்தியுணர்வுடன் பாடிப் பயன் பெறுவோமாக.

திருமதி. சுதர்ஷினி-உஷாந்தன்
B.A (Hons)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



# இந்து மதத்தில் குருவின் மேன்மை

மனிதன் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் கல்வியின் மகத்துவத்தைப் பற்றிக் கூறிய வார்த்தைகளே இவை. ஒருவனது மதைப் பண்படுத்துவதற்கும் நல்வாழ்விற்கு ஏற்றவாறு சீரப்படுத்துவதற்கும் கல்வியே உதவி புரிகின்றது . நல்ல முறையில் கல்வி கற்றவனே சமூகத்திற்குப் பயன்படக்கூடியவன் மனிதனாகப் பிறந்த எம்மிடம் படைப்பாற்றல் பகுத்தறிவு செயற்திறன் சேவையுணர்வு சிந்திக்கும் திறன் என்பன பின்னிப் பிணைந்திருப்பது சிறப்பான ஒரு விடயம் ஆகும். சிந்தனையின் விளைவாகத் திறமையும் திறமையின் பயனாக செயலும் தோன்றி வாழ்க்கைக்கு வடிவம் தந்து சமுதாய இணைப்பை ஏற்படுத்துகின்றன. நம்முடைய திறமையின் காரணமாகக் கிடைக்கும் பெருமையே வாழ்வின் கலை அந்தக் கலையைக் கற்றுக் கொடுக்கும் கருவிதான் கல்வி இத்தகைய கல்வியை வரையாது வழங்கும் திறமை படைத்தவனே ஆசரிரியன்.

இந்து சமய மரபில் ஆசிரியத்துவத்தின் புனிதத்தைப் போற்றும் வகையில் அதனைத் தெய்வீக மரபுடன் தெர்புபடுத்தும் முறை காணப்படுகின்றது. "அறியாமை அக இருள் என்றும் அறிவானது ஞான ஒளி என்றும் உவமிக்கப்படுகின்றது. இருளில் இருந்து என்னை ஒளிக்க இட்டுச் செல்வாயாக" என்னும் உபநிடதம் கூறும் மறைபொருள் யாதெனில் அறியாமையிலிருந்து அறிவு நிலைக்கு இட்டுச் செல்லுதல் என்பதாகும் இந்துக்களள் இதனையே பெரும் ஆத்மீக செல்வமாகக் கருதி இறைவனிடம் வேண்டினார்கள். அந்த இறைவனே மனிதனுக்குச் சிந்திக்கும் ஆற்றலை வழங்கியுள்ளான்.

மாணவனது சிந்தனை வளர்ச்சிக்கு உரமூட்டும் கல்வி வளர்ச்சிக்குத் துணை நிற்பவனே நல்லாசிரியன் தோட்டம் ஒன்றிலே வளர்கின்ற செடிக்கும் அதனை வளர்கின்ற தோட்டக்காரனுக்கும் இடையில் என்ன தொடர்பு இருக்க முடியுமோ அதே போன்ற தொடர்பு இடையில் இருக்கின்றது. அதாவது செடியின் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் களைகளை விவசாயி அகற்றுகின்றான். அதற்குத் தேவையானவற்றை செடியோடு சேர்த்து வைக்கின்றான். அதே போல் மாணவரது நல்வளரச்சிக்கு நீக்கித்துணை புரிபவரே ஆசிரியர் ஆவார். ஆசிரியர் கல்வித்துறையில் மாணவர்களுக்குச் செய்யும் அரிய சேவை இதுவாகும்.

ஒழுக்கம், பெரியோரைக் கனம் பண்ணுதல் எனும் விழுமியங்களை மாணவர்களுக்குப் போதிப்பதே ஆசிரியர்களின் முதற் கடமையாகும். பிறருக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையை வழங்குபவன் தான் பெருமை அடைகின்றான். அக்காலத்தில் இருந்த குருகுலக் கல்வி முறையில் குழு சிஷ்யர்களுக்கு பெரியோர்களை மதித்து நடக்கும் பண்புகளை உபதேசித்து இருப்பதை தைத்திரிய உபநிடதச் சிந்தனைகள் குறித்து நிற்கின்ற. வேத காலத்தில் ரிஷிகள் சமய குருவாக விளங்கி ஆத்ம ஞானத்தைப் பரப்ப உதவினர். அதே போன்று சங்கரரும் சண்மத பிரதிஷ்தாபகராகவும் அத்வைத கோட்பாட்டை நிறுவிய ஞானியாகவும் பரம குருவாகவும் போற்றப்படுகின்றார். மற்றும் தென்னாட்டுச் சமய மரபில் நாயன்மார்கள் சமயாச்சாரியர்களாகவும் ஆழ்வார்கள் வைணவ ஆச்சாரிகளாகவும் விளங்கி பக்தி நெறியை வளப்படுத்தியமையால் சமய குருமார்கள் எனவும் அழைக்கப்படுகின்றார்கள்.

இந்து சமய மரபில் இறைவனே குருவாக எழுந்தருளி சீடனுக்கு உபதேசித்து அருளிய அற்புதம் எமது புராணங்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது சைவ பாரம்பரியத்தில் இறைவனே தட்ஷிணாமூர்த்தி குருத்துவத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாக இருக்கின்றன. மற்றும் கிருஷ்ணபரமாத்மா சீதையை உபதேசித்த பெருமையை பாரதம் சிறப்பித்துள்ளது. இத்தகைய தெய்வீக மரபுகள் குருவாகிய ஆசிரியன் உயர்ந்த தெய்வீக நிலையில் வைத்துப் போற்றப்பட்டிருப்பதை விளித்து நிற்கின்றது. எனவே குரு பாரம்பரியம், தெய்வீக பாரம்பரியம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆத்மீக நெறியை உலகிற்கு எடுத்துச் சொல்லும் குரு பாரம்பரியத்திற்கு நீண்ட காலமரபு ஒன்று உண்டு. மனிதனை நிறை மனிதனாக வாழ வைப்பதற்கு இவ் ஆன்மீகக்கல்வி பெருந்துணை புரிகின்றது. அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற ஆசிரியரை அடைவதே இறைவனின் அருளாகக் கணிக்கப்படுகின்றது. இதனையே திருவருட்பயனும்.

"அறியாமை உள்நின் (று) அளித்தே காணும் குறியாக நீங்காத கோ"

குருவின் சிறப்பை எடுத்துக் கூறியுள்ளது. அறியாமையில் சிக்குண்டு அல்லற்படும் ஆண்மாவிற்கு உரிய வழிகாட்டுவதற்கு இறைவனால் அனுப்பப்படுகின்றவரே குரு என்பது ெட்டத் தெளிவாகின்றது. மாணவர் தம் தன்மைக்கேற்ப சில குறைகளையும் நிறைகளையும் கொண்டிருப்பார். அவரவருக்கேற்ப பக்கவத்தில் குறைகளை நிவர்த்தி செய்பவரே குருவாகிய ஆசிரியருடைய முதற் பணியாக அமைகின்றது. மாணவரை ஒரு நோளியாகவும் குருவாகிய ஆசிரியனை நோய் தீர்க்கும் மருத்துவனாகவும் உவமித்து மாணவர்களின் தேவைகளை ஆசிரியரே அறிந்து கொள்ளவும் அதற்கு வேண்டியவை தெச்யும் வல்லர் எனக் கூறப்படுகின்றது. இதனையே

"அகத்துவ நோய்க்கு உள்ளனரே அன்றி அதனை சுகத்தவரும் காண்பரோ தான்"

எனத் திருவருட பயனும் தெளிவுபடுத்தியுள்ளது கீதை எனும் நூல் கருபக்தி மகிமையையும் தத்துவத்தையும் கூறுகின்றது. குருவிற்கு மேலான ஒரு பொருள் இல்லை என்கின்றது. அதாவது. "குரு பிரம்மா குரு விஸ்ணு

குரு தேவ மகேஸ்வர
குரு சாஸ்தா வரப் பிரம்மம்தஸ்மை ஸ்ரீ குருவே நமக"

என்பது குரு வணக்க சுலோபமாகும். குருவை விஸ்ணுவாகவும் குருவே பிரம்மாவாகவும் குருவே தேவர்களுக்கெல்லாம் பெரியவராகிய மகேஸ்வரர் எனவும் அந்தக் குருவிற்கு நமஸ்காரம் என்பது இதன் பொருளாகும். இறைவனின் கோபத்திற்கு ஆளானால் குருவின் உதவியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-*

காப்பாற்றப்படுவார் ஆனால் குருவின் கோபத்திற்குப் பாத்திரமானால் யாராலும் காப்பாற்ற முடியாது.குருவின் உதவியால் காப்பாற்றப்படுவார் ஆனால் குருவின் கோபத்திற்குப் பார்த்திரமானால் யாராலும் காப்பாற்ற முடியாது. குருவின் மேன்மை பற்றி திருமூலர் மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார்.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் வார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"

என வரும் அடிகள் குருவின் அருளால் தெளிவு உண்டாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். இந்துப் பண்பாட்டில் குருவிற்கு உன்னத இடம் வழங்கிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

மனித விழுமியங்களை மாணவர் மனதில் நிலைக்க விட்டு நல்வழிப்படுத்துவது ஆசிரியரின் பணியாகும். குருவிடம் தம்மை முழுமையாக ஒப்புவித்து கல்வி கற்றும் முறை குருகுலக்கல்வியாகும். இந்தக் காலத்திலே குரு ஒழுக்க நெறியில் நடந்து காட்டுவது அவரது சிறந்த பண்பாக விளங்கியது. சாஸ்திரப் பொருளை ஆராய்ந்து பிறருக்கு உரியபடி கற்பித்து அதன்படி ஒழுகச் செய்வது ஆசிரியரின் கடமையாகும்.

ஆசிரியர் மாணவர்களின் அறிவை வளர்ப்பதோடு அவர்களுக்கு ஒழுக்கத்தைப் புகட்டி நல்வாழ்விற்கு ஏற்றவாறு பயிற்றுவிக்கும் பொறுப்பு இவருக்கு இருந்தது மற்றுமோர் ஆசிரியர் விடாமுயற்சி, நல்லொழுக்கம், சமய உணர்வு கொண்டவராக இருத்தல் வேண்டும் என்பது விவேகாந்தரது கருத்ருத்தாகும். தான் வாழ்ந்து காட்டுவதன் மூலம் மாணவர்களை நெறிப்படுத்தல் என்பதை வற்புறுத்துகிறார். மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் உணர்வை வெளிக் கொணர்வதில் முக்கிய பணியாற்ற வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறாக சிறந்த ஆசிரியர் பரம்பரை இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கு காலங்காலமாக உதவி வந்துள்ளது. குரு தத்துவத்திற்கு உயர்ந்த இடம் இந்துப் பண்பாட்டில் வழங்கப்பட்டுள்ளது. சிறந்த மாணவர் பரம்பரையை உருவாக்குவதில் ஆசிரியர் சமூகத்திற்கு பெரும் பற்காற்றி உள்ளனர். அக்கால்த்திலிருந்து உருவாகிய இவ் ஆசரியர்கள் இக்கால மாணவ உலகிற்கு ஓர் வரப்பிரசாதமாக அமையும். தெய்வத்திற்குச் சமமாக விளங்கிய ஆசிரியன் இந்துப் பண்பாட்டில் உன்னத இடத்தில் வைத்துப் போற்றப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

செல்வி. ம. தயாநிதி
ஆசிரியர்
யா/செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை செம்பியன்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## ஆத்மாவை உணர முதற்படி ஆலயம்

சிவபூமி எனும் ஈழத்திருநாட்டின் நல்லூர்ப்பகுதியில் வாழ்ந்த தவத்திருயோகர் சுவாமிகள் தாம் எழுதிய கடிதத்தில் "நீ உடம்பன்று, மனமன்று, சித்தமன்று, நீ ஆத்மா ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம் இந்த உண்மை உனது உள்ளத்தில் பதியக் கடவுள் ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு அதாவது தரும நெறியிற் பிசகாதே எவ்வுயிலும் பெருமான் முன்னிலை என்று சாதனை செய் கடவுள் உள்ளும் புறமும் உள்ளார்" "இப்படிக்கு அவனே நானே" என்று எழுதியுள்ளார்.

இதிலிருந்து நாம் விளங்குவது எல்லோரிடமும் உள்ள தெய்வத்துவம் இங்கும் உள்ளது எமது உடலில் உறையும் ஆத்மா பிற உடல்களிலும் உள்ளது. ஆயினும் இந்த உண்மையை அறிந்து கொள்வதற்கு நமக்கு அடிப்படைத்தத்துவம் தேவைப்படுகிறது.

எண்ணெய் கொள்ளும் குழியும் அதில் எண்ணெயும், எண்ணெயில் தோய்ந்த திரியும் கொண்டு விளக்கு இருக்கிறது. நமக்கு ஒளி உடனே கிடைக்கிறதா? இல்லை யாராவது ஒருவர் அவ் விளக்கை ஏற்ற வேண்டும். எங்களிடம் தங்கம், வைரம், முத்து இவை இருக்கின்றன. இவற்றைக் கொண்டு நகைகள் தானாக வருமா? இவற்றை உருவாக்க ஒரு பொற்கொல்லன் வேண்டும். மலரும், ஊசியும், நூலும் உள்ளன. மாலை தானாக உருவாகுமா? மாலை உருவாக்க ஒருவர் வேண்டுமல்லவா? அதே போல ஆத்மா அனாத்மா (ஆத்மா இல்லாதது) திவ்யாத்மா, ஜீவாத்மா ஒன்று சேர்ந்தே இவையே பரமாத்மா என்று நிருபிக்க ஒருவர் நமக்கு தேவை அ.ஆ.என்ற எழுத்துக்கள் உள்ளன அவற்றை எவ்வாறு உச்சரிப்பது என்று தெரிந்து கொள்ள ஒரு ஆசிரியர் தேவை. அதே போல எல்லா உடல்களில் இருக்கும் ஆத்மா ஒன்றேயென்றாலும் அந்த உண்மையை வெளிப்படுத்திக் கூறுவதற்கு ஒரு வடிவம் தேவைப்படுகிறது. இந்தக் காரணத்துக்காகவே அவதாரங்கள் தோன்றி தெய்வத்துவத்தையும், புனிதத்துவத்தையும் ஏகான்ம தத்துவத்தையும் தனது வடிவத்தின் மூலம் எல்லோரும் காணச் செய்து விபரித்து நிருபித்துக் காண்பிக்கிறது.

இந்தப் பிரபஞ்சத் தோற்றத்தின் போது உருவான ஒலி "ஓம்" என்பதாகும். இந்த ஓம் "ஆ + உ + ம் " என்பதன் கூட்டாகும். இதில்
ஆ - விழிப்புநிலை - உடம்பு
உ - கனவு நிலை - மனம்
ம் - ஆழ்ந்த உறக்க நிலை - ஆத்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்பு நிலையில் அனைத்தையும் பார்க்கின்றோம் அனைத்தையும் அனுபவிக்கின்றோம். இது உடலுடன் தொடர்புபட்டது. கனவு நிலையில் பார்த்த காட்சிகளேயன்றி பார்க்காத காட்சிகளும் கூட வருகின்றன. இதனை அனுபவிக்கின்றோம். இது மனதுடன் தொடர்புபட்டது. மனது எப்படி இயங்குகிறதென்பதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாம் புலன்களையும் இயக்க வைக்கும் சக்தி கொண்டது மனது. நாம் தூங்கும் போது கனவில் எம் பெற்றோர், மற்ற நண்பர்களையும் காண்கிறோமென்று வைத்துக் கொள்ளுவோம் அவர்களைக் கண்டது எமது கண்களா? இல்லையே தூங்கும் போது கண்கள் குடியிருக்கின்றனவே மேலும் கனவில் பெற்றோருடனும் மற்றோருடனும் நாம் பேசிக்கொண்டிருப்பதாகவும் நேர்ந்திடலாம். ஆனால் நினைவில் உள்ளது போல எமது வாய் திறந்து பேசவில்லை கனவில் பிறர் பேசியதையும் நாம் கேட்கிறோம். ஆனால் எமது காதுகள் இயங்கவில்லை. கனவில் பார்ப்பது கேட்பது பேசுவதை எல்லாமே மனதின் செயலேயன்றி புலன்கள் உணரப்படுவதில்லை மற்றொரு சக்திக்கு கட்டுப்பட்டவையே என்பது தெளிவாகிறது.

கனவு நினைவில் இல்லாத ஆனந்தத்தை ஆழ்ந்த உறக்க நிலையில் அனுபவிக்கிறோம். இங்கு உடலின் சாதாரணத் தொழிற்பாடுகளைத் தவிர ஏனைய செயற்பாடுகள் அனைத்தும் நடைபெறுவதில்லை. இந்நிலையில் மனமும் கூடத் தொழிற்படுவதில்லை. இந்நிலையே மணிவாசகர் சிவபுராணத்தில் நள்ளிருளில் நட்டம் பயின்றாகும் நாதனே என்று குறிப்பிடுவதாக உணர முடிகிறது.

விழிப்பு நிலை, கனவு நிலை, உறக்க நிலை, இம்மூன்று நிலைகளும் வெவ்வேறானவைகளாக இருக்கின்றன. ஆனால் இந்த மூன்று காலங்களிலும் அனுமதிக்கும் "நான்" மட்டும் உண்மை. அதுவே ஆத்மா. சர்க்கரையைத் தண்ணீரில் போடுகின்றோம் அது கரைந்து தண்ணீரில் எல்லா இடங்களிலும் வியாபிக்கிறது. நாம் கண்களால் பார்த்து கையினால் பருகுவதில்லை. நாக்கின் மீது அத்தண்ணீரத் துளிகளை வைத்தால் இனிக்கிறது. எல்லா இடங்களிலும் வியாபித்த அந்த இனிப்பே சத்தியம் அதுவே ஆத்மா அது கண்களுக்கு குணங்களந்தது. நிறைவோடு கூடியது. இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருப்பதனால் அவர் "பிரபு" ஊகங்களுக்கும் சொற்களுக்கும் நேரடிச்சான்றுகளுக்கும் அகப்படாதவர் ஆனதினால் அவர் அறியப்படாதவர். இறைவனின் ஒவ்வொரு பெயரின் உட்பொருள்கள் ஒப்பற்றவைகளாகும். அனைத்துப் பெயர்களும் இறைவனுடையவைகளே ஒருமைப்பாட்டை நிருபிக்கக்கூடியனவையே தெய்வீகத்தை.

01. நீர்க்குணம் - குணங்களற்ற
02. நிரஞ்சனம் - மாசற்ற
03. சனாதனம் - நிரந்தரமான
04. நிகேதனம் - வடிவமற்ற
05. நிர்த்தியம் - என்றுமுள்ள
06. சுத்த - முக்குணங்களும் இணைந்து
07. புத்த - ஞானம் கொண்ட முக்தா
08. முக்தா - முக்தி அளிக்கும் வலிமைகொண்ட
09. நிர்மல - உருவமற்ற
10. ஸ்வருபனம் - பிரபஞ்ச வடிவான

என்று சொல்கிறார்கள். இறைவன் ஒருவனே அனைவரும் இறைவன் அம்சமே நான் என்னுடையது என்கிற அகம்கார மமகாரங்களை அகற்றித் தன்னைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே அறிந்து கொள்வதே இறைத்தன்மையை அறிந்து கொள்வதாகும். அகங்கார மமகாரங்களை அகற்றிக்கொள்ளும் பொழுது தான் நமக்கு அந்தத்தத்துவம் அர்த்தமாகிறது தேகத்துவத்தை, மானசீகத்தத்துவத்தை, பாவனைத்தத்துவத்தை, செயலாற்றும் பணியின் பயனை அர்ப்பணம் செய்ய வேண்டும் அப்பொழுது மிகுந்திருப்பது ஒன்று மட்டுமே தாயும் நீயே தந்தையும் நீயே, நண்பனும் நீயே, சுற்றமும் நீயே, தாய், தந்தை, நண்பர்கள், சுற்றத்தவர்கள், இவர்களனைவரும் என்றைக்காவது ஒருநாள் இவ்வுலகை விட்டுச் செல்லக் கூடியவர்களே ஆனால் அனைத்திலும் உள்ள அந்த "நான்" என்பதே சத்தியம் அந்த நாள் தத்துவத்தை குறிப்பறிந்து கொள்ள வேண்டும்.

நான் MA பரீட்சையில் தேர்ச்சியடைந்து விட்டேன். நான் PHD படித்துக்கொண்டு இருக்கிறேன். நான் பிராமணன் நான் எத்திரியன் நான் வைசியன் நான் இளைஞன், நான் வயோதிபன், இந்த விதமாகப் பாவிப்பது தத்துவம், நான் என்கிற நபர் இவைகளில் எதுவுமே அல்ல இளைஞன் அல்ல வயோதிபர் அல்ல பிராமணன் அல்ல எத்திரன் அல்ல அவனுக்கு வயது வேறுபாடும் இல்லை அந்த நான் என்பதை இலட்சியத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதுவே எங்கெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஏகத்துவத்தைக் (ஒரு பொருளாயிருக்கும் தன்மையை) குறிப்பறிந்து கொள்வதே உண்மையான ஆத்ம தத்துவம்.

அனேகத்துவத்தில் ஏகத்துவம் கண்டு அனுபவிக்க இயலாதவன் தான் அந்தகன் எனப்பட வேண்டும். தனதல்லாதரை தனதாகவே பாவித்து அனுபவிப்பவன் அந்தகன். தனது உண்மை நிலையை அறியாமல் இந்தத் தேகமே தான் தனது உண்மை ஸ்வருபமன்று கருதி வாழ்பவன் அந்தகன் அவன் வாழ்க்கையில் விருப்பு, வெறுப்பு, உணர்வுகளை வளர்த்துக் கொள்ளகிறானோ அவனே அந்தகன். மெய்ப்பொருள் ஒன்றே என்பதை உணராமல் எல்லாவற்றிலும் பேதங்களைக் காண்பதே இந்தக் குறிச்சித்தன்மைக்கு மூலகாரணம். கண்ணீரந்துப் அருமையான தெய்வீகத்தைக் காணாவிடில் அதனால் என்ன பயன்? செவிகள் இருந்தும் இனிமையான வீணாகானத்தைக் கேட்டு அனுபவிக்காவிடில் என்ன பயன்? கண்பார்வை சக்தி பெற்றிருந்தும் கூட எல்லாவற்றையும் பேதங்களுடனே பார்க்கிறான் கண்ணினால் காண்பது யாவும் அநித்யமான அழியக்கூடிய பெயர்களே அழியாதது நிலையானது என்றும் மாறாதது மெய்ப்பொருளான தெய்வம் ஒன்றே இந்தக் சத்தியத்தை உணர்ந்தால் எந்த விதமான சஞ்சலத்திற்கும் இடமில்லை. பார்க்கும் பொருள்யாவும் எனது உனது என்று பாகுபடுத்திக் கூற இடமேது. இது தவறுகள் கருத்தேயில்லை தனது மற்றவருடையது என்று வேறுபாங்குணர்வே எல்லா விதமான துக்கங்களுக்கும் மூலகாரணம். ஸ்வர ஸ்வபூதானாம் எல்லா இடங்களிலும் எல்லா உயிர்களிலும் என்று போதிக்கும் கீதையைப் படித்தபின் வேறு இடத்தில் ஈசுவரனை நாடிச் செல்வது ஏன்? உங்கள் இதயத்தையே பிருந்தாவனமாகவும் அதில் உறையும் ஆத்மாவே கிருஷ்ணனாகவும் உங்கள் எண்ணங்களே கோபிகைகளாகவும் கருதி வழிபடுவதே உண்மையான கீதையைப் பின் பற்றும் வழியாகும். ஒவ்வொருவர் இதயத்திலும் இறைவன் வீற்றிருக்கிறான் என்று பிறருக்கப் போதிப்பவள் தம்மைப்பாதிக்கும் ஷேமம் ஏதாவது வரும்போது மட்டும் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறன்நர் தனக்கொரு நீதி பிறருக்கொரு நீதி என்ற மனோபாவம் வேற்றுமையுணர்வை வளர்க்கிறது தான் வேறு தெய்வம் வேறு என்று கருதும் மனிதரிடத்தில் தான் இம்மாதிரி வேற்றுமை உணர்வு நிறைந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் என்பவை சத்திய சாட்சாத்காயத்தை அடைய உதவும் கருவிகள், ஆன்மிக நிலையங்கள், நெறிகளைக் கற்றுத் தரும் தொழிற்கூடம் சத்திய விஞ்ஞானக் கோத்திரங்கள், வாழ்வுக் சோதனைகளை நடத்தும் சோதனைச்சாலை பலரோகத்துக்கு மட்டுமன்றி மனரோகத்துக்குமான மருத்துவ நிலையம். மனிதனின் பலவீனங்களையும் அவநம்பிக்கையையும் அகங்காரத்தையும் ஒழித்துக்கட்டும் மற்றோர்கூட்டம் இதய அழகைப்பிரதிபலித்துக் காட்டும் பளிங்க மாளிகை.

வேகத்தையே தேவாலயமாக எண்ணவைத்து ஜீவனைத் தேவனாக மாற்றி, மனிதத்தன்மையிலிருந்து இளைத்தன்மையை வெளிக்கொணரத் தூண்டுவதே தேவாலயங்களின் முக்கிய கடமை, சடங்குகள், சம்பிரதாயங்கள், எல்லாம் பிரம்ம ஞானத்தை வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்க வேண்டும். என்பதையே நோக்கமாகக் கொண்டு ஆற்றாமையை மக்கள் கோயில்களை எழுப்பினார்கள் பிரம்மஞானத்தை வளர்ப்பதற்கு உதவியாக இருக்கும் தர்ம கர்மங்கள் (நெறிகளும், செயல்களும்) சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ளன. மனோபாவங்கள், சொல், செயல், உணர்வுகள் ஆகிய அனைத்தையும் இறைவனைப் பற்றியதாக மாற்றி மனிதனை சத்தியம் சாந்தி இவைகளின் உருவங்களாக ஆக்குவதற்கே கோயில்கள் நரனுக்கும் நாராயணனுக்குமுள்ள பழைமையான தொடர்பை மானிடனுக்கும் மாதவனுக்கும் உள்ள தொடர்பை பொருளும் அதன் நிழல் தோற்றத்துக்கும் உள்ள தொடர்புள்ள வளர்ந்து பலுப்படுத்துவதே ஆலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆலயங்களினால் ஏற்படும் பயன் அவர்கள் உரிமை செயல் ஆகிய அனைத்தும் கம்பீரமானவை ஆலயங்களின் நிலைமை ஆத்த நிலையை உறுதிப்படுத்தும் ஆலயத்துக்கும் ஆத்மாவுக்கும் நெருக்கமான தொடர்புண்டு உலகியல் நெறிகள், மதவிதிகள் ஆகியவைகளையும், பக்தி, ஞானம், வைராக்கியம், ஆகியவைகளையும் வளர்ப்பதற்கு முக்கியத்துவம் தருபவையாக ஆலயம் இருக்க வேண்டும். இறைவனைப் பற்றியும் கோயில்களைப் பற்றியும் உயர்வாக எண்ணுவதே சிறப்பு. அதுவே அவர்களுக்கு நன்மை பயக்கும் மனிதன் மாதவனை (இறைவனை) மானிட வடிவில் காண்பது ஒப்புக்கொள்ள வேண்டிய ஒன்று என்றாலும் மாதவன் சாதாரண மனிதன் தான் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. மானிடவடிவில் வந்த திவ்ய மங்கள ஸ்வரூபமாகப் பாவிப்பதே பக்தனின் தர்மம் கோயிலில் இறைவனைத் தரிசிக்கும் போது எம்முடைய இதய வீட்டில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் இறைவனையே அந்தக் கோயில் சிலையில் காண வேண்டும். இந்த விதமான நோக்கத்தை அபிவிருத்தி செய்து கொள்ளத்தான் ஆலய நியமங்கள் ஏற்பட்டன ஆலயங்களை சாதாரண உலகியல் நிலைக்கு இயக்கக்கூடாது பழைமையான, உயர்ந்த கலாசாரத்தை திரும்பப்பெற வேண்டும். எந்த உணர்வும்பக்தி நிரம்பியிருக்கும் போது தான் அழகு பெறுகிறது இன்றைய புதுமை உணர்வுகள் மூலமாக ஆலயங்கள் கேலிக்கூத்துக்கள் நடைபெறும் இடமாக மாற்றுகின்றன. இது பரிதாபத்திற்குரிய செய்தி. ஆலயங்களைப் பற்றிய ஆலய வழிபாடுகளை பற்றிய உண்மைக் கருத்தை உலகுக்கு தெளிவாக அறிவித்து ஆலய வழிபாட்டின் பெருமையை உயர்த்த வேண்டும். ஆலயங்கள் மனிதனின் நன்மைக்காகவும் முன்னேற்றத்திற்காகவுமே வழிவகுக்கின்றன என்ற உண்மையை மனிதர்கள் யாரும் மறக்கவும் கூடாது மறுக்கவும் முடியாது. ஆத்மாவின் மீட்சிக்கும் அகில உலக மீட்சிக்கும் உதவுவது அம்பாளின் நாமமும் அம்பாளின் ஆலயமுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-*

சக்தியின் நாமத்தைச் சொல்வதற்கு அம்பாளின் உருவம் அவசியம் கண்ணுக்கு நிறைவைத்தருவதும் தன்னினைவை மறக்கச் செய்யக் கூடியதாகவும் உள்ள இறைவனின் உருவச் சிலைகள் இருக்குமிடம் கோயில்களே இவைகள் எல்லாம் சாதாரண மனிதர்களின் பார்வைக்குத் தெரியாவிட்டாலும் ஆன்மீக ஒளியைத் தேடுபவர்கள் ஆலயங்கள் இன்றியமையாதவை என்பதை உணர்வார்கள் வீடு கட்டும் போது சாரம் அவசியம் ஆனால் வீடு கட்டி முடிந்து விட்டால் சாரத்தை தேடுபவர்கள் யாருமில்லை. அதுபோல் ஆரம்பத்தில் உருவ அவசியமில்லை இவ்வாறாக ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஆலய உருவ வழிபாட்டு முறைகள் முதற் படியாக அமைகிறது.

"சிவத்தினை வளர்க்கும் பாக்கியம் எமக்கு சித்தித்த தினிமேலே
தெய்வம் வேறே உண்டென எண்ணும் சித்தையுமீளந்ததுவே
அவத்தினில் செல்லும் மனத்தினை வெல்வோம் ஐம்பொறி வழிச்செல்வோம்
அழியா மெய்ப்பொருள் ஆகிய ஆன்மா
அறிவோம் நாம் நன்றாய்"

தவத்திருயோகர் சுவாமிகள்

ப.கௌரிமயூரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

## திருமந்திரமும் சைவசித்தாந்த தத்துவத்தின் மகிமையும்

சைவசித்தாந்த திருமுறைகளிலே பத்தாம் திருமுறையாக வைத்துப் போற்றப்படுவது திருமந்திரமாகும். இது தமிழ் ஆகமம் தமிழ் மூவாயிரம் மந்திரமாலை மூவாயிரந்தமிழ் என்ற பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறது திருமந்திரமானது திருமூலர் என்னும் சித்தரினால் இயற்றப்பட்டதாகும். திருமூலர் தனது பிறப்பின் இரகசியத்தை திருமந்திரத்திலே கூறும் போது என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்மை நன்றாகத் தமிழ் செய்யுமாறே என்று பாடியுள்ளார் மேலும் பான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று தான் பெற்ற மெய்மை ஞானத்தை எல்லோரும் பெற்று இன்பமடைய வேண்டும்.சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொண்ட சைவசித்தாந்த தத்துவமானது இந்து தத்துவங்களில் தெளிந்த முடிவாகவும் முடிந்த முடிவாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது தமிழர் தத்துவம் என்று போற்றப்படும் சைவசிந்தாந்த தத்துவத்தில் தமிழ் மூல நூல் என்ற சிறப்பு திருமந்திரத்துக்குரியதாகும். சிவ வழிபாடு தொன்மையுடைய தாயினும் சைவ சிந்தார்ந்தம்பிற்பட்ட காலங்களில் தான் முழுமை பெற்றது என்றாலும் சிவவழிபாடு சிறப்பிக்கப்படமைக்கு தமிழ் இலக்கிய வரலாற்றில் முதலாவது காலம் எனப் போற்றப்படும் சங்ககாலத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட்டிருந்ததற்கான ஆதாரங்கள் பலவுண்டுபல தெய்வங்கள் வழிபட்டபோதும் சிவனை ஒரு தெய்வமாக சிறப்பித்து வழிபட்டனர்.

சங்கமருவிய காலத்தை எடுத்து நோக்கின் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்திப் பாசுரங்களைப் பாடி சைவத்தினைவளர்த்து இருந்தனர். இக்காலத்தில் காரைக்கால் அம்மையார் சைவம் என்ற பெருநெறியில் தன் வாழ்க்கைக் கோலத்தை நடத்திக் சென்றுள்ளார் என்பதற்கு சேக்கிழாரின் பெரிய புராணம் உதாரணமாக அமைகின்றது. பல்லவர் காலத்தை நோக்கும் போது பல்லவ மன்னர்கள் ஆலயங்களை அமைத்தும் புனர்நிர்மானம் செய்தும் சைவசமயத்தை வளர்ப்பதில் பெரும் பங்காற்றி இருந்து வந்துள்ளனர் எனலாம் சைவமன்னர்களில் இராஜசிம்மன் ஸ்ரீசங்கர் ஆகமப்பிரியர் சிவசூடாமணி என்ற பெயர்களுடன் அழைக்கப்படமையானது சைவபக்திமன்னர்களால் பேணி வளர்க்கப்பட்டமையே காட்டுகின்றது கைலாயநாதர் கோயிலில் கண்டு எடுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் சைவசித்தாந்தத்தில் பேரறிவுடையவள் என்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மற்றும் தேவார முதலிகள் தேவாரப்பதிகங்களும் சைவத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன முதல் மூவர் தேவாரங்களிலும் சைவசித்தாந்தக் கருத்துக்களும் இழையோடி இருப்பதனைக் காணலாம். இச்சைவசித்தாந்தக் கருத்துக்கள் மாணிக்கவாசகர் திருவாசகத்திலே மேலும் விரிவு பெற்று விளங்குகின்றது. தமிழ் நூல்களிலே சைவசித்தாந்தம் என்ற சொற்பதம் முதன் முதலில் திருமந்திரத்திலேயே குறிப்பிடப்படுகிறது. கற்பன கற்று கலைமன்று மெய்யோகம் முற்பதஞானமுறை முன்நன்றியே சொற்பத மேவி துரிசந்து மேலான கற்பரம் கண்டுள்ளனர் சைவசிநத்தாந்தரே எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சைவசித்தாந்தத்தில் அடிப்படைக் கோட்பாடுகளில் முப்பொருள் கோட்பாடு முக்கியமானது பதி பசு பாசம் என்று கூறப்படும் இறைவன் உலகம் உயிர் ஆகிய முப் பொருட்களையும் உண்மை எனக்கூறி அதன் இயல்புகளையும் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரத்திலே விளக்கமாகக் கூறப்பட்டிருப்பதனைக் காணலாம். பதி, பசு, பாசம் எனப் பாக்கள் மூன்றில் பதியினைப்போல் பசு, பாசம் அநாதி என மூன்று பொருட்களும் உண்மையானவை என்றுரைக்கும் திருமந்திரம் அறிவு அனாதி என்கின்றஅறிவும் அனாதி அறிவிற்கறிவாம் பதியுமனாதி அறிவினைக் கட்டிய பாசும் அநாதி என்கின்ற முப்பொருள் இயல்பினைக் கூறியிருக்கிறார்.

முப்பொருள் கோட்பாட்டினைப் பற்றிக் கூறும் போது திருமந்திரம் இருதிணைக் கோட்பாடு பற்றியும் தெளிவுபடுத்தியிருப்பதனைக் காணலாம். இறைவனை பதியாகக் காட்டும் திருமந்திரம் அப்பதியாகிய சிவனை சிறப்பித்துக் கூறும் போது "சிவனோடொக்கும் தெய்வம் தேடிலுமில்லை அவனோடு ஒப்பாரிங்கு யாவருமில்லை என்று போற்றபடுகின்றது.

சைவசித்தாந்தத்திலே ஆன்மாக்கள் பற்றிக் கூறும் போது அவை பாசத்தால் பீடிக்கப்பட்டவை என்றும் அதனால் வரும் பிறப்பை அனுபவிப்பதற்கு வழி குருவழிகாட்டல் என்றும் குருவருள் இன்றேல் திருவருள் இல்லை என்ற சித்தாந்த தத்துவத்தின் அடிப்படைக்கொள்கையை திருமூலர் தனது திருமந்தரத்திலே விளக்கியிருப்பதனைக் காணலாம். குருவினால் தான் ஆன்மா ஆகிய அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞானத்தால் பெறமுடியும் என்றும் ஆன்மா விடுதலைக்கான வழிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்பாத நெறிகளோடும் குருலிங்கசங்கம வழிபாடும் இன்றியமையாதது என்று கூறப்படுகின்றது.

சைவசித்தாந்தம் கூறும் ஆன்மாக்கோட்பாடு ஆனது திருமந்திரத்திலும் இழையோடி இருப்பதனைக் காணலாம் அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார் அன்பே சிவமாம் என அன்பையும் சிவத்தையும் ஒன்று எனக் கூறி அன்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் சிறப்பினை திருமந்திரத்தில் காணலாம். மேலும் சமரசக்கோட்பாட்டினை வலியுறுத்தும் போது ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனக் கூறப்படுவது மனம் கொள்ளத்தக்கது.

திருமந்திரத்திலே யாக்கை இழகை செல்வம் நிலையாமை என நிலையாமைக் கருத்துக்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. நிலையற்ற பொருட்களில் பற்று வைக்காமல் நிலையான பொருட்களில் பற்றுவைக்க வேண்டும் அதுவே அந்தப் பரம் பொருள் என்று கூறப்படுகின்றது. சைவசித்தாந்தத்தின் இறுதிக் கோட்பாடும் ஆன்மா பாசத்திலிருந்து விடுபட்டு இறைவனுடன் இரண்டறக் கலக்கும் முத்தி நிலையையே திருமந்திரத்தில் கூறும் போது

"இருவினை நோப்பில் இன்னருள் நீக்கி
குருவென வந்து குணம்படு நீக்கி
தருமென ஞானத்தால் தன் செயலாற்றல்
திருமலர் தீர்த்து சிவனவனாமே"

இவ்வாறாக சைவசித்தாந்தக் கருத்துக்கள் திருமத்திரத்தில் ஆங்காங்கே இழையோடி இருப்பதைக் காணமுடிகிறது.

திருமதி. புனிதகௌரி
புவனேந்திரன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-*



## புந்தி எந்நாளும் பொருந்துகவே

அபிராமிப் பட்டர் அமாவாசையை அடுத்து வந்த பிரதமை நாளை பௌர்ணமி நாள் எனச் சரபோஜி மன்னனிடம் கூறிவிட்டார். தினமும் அம்பிகையை தியானத்தில் இருந்தபடி உபாசிக்கும் பழக்கமுடையவருக்கு அன்றைய இருள் சூழ்ந்த நாள்கூட ஒளிநிறைந்த நாளாகவே தெரிந்தது. ஆழ் மனத்தில் குண்டலினி யோகதரிசன நிலையில் பூரண சந்திரனுக்கு ஒப்பாக அம்பிகையைக் கண்டு தரிசித்துக் கொண்டிருந்தவர் “இன்று என்ன திதி?” எனக் கேட்ட மாத்திரத்தில் வேறு என்னதான் சொல்வார்?

தனது வாக்கை நிருபித்து வானத்தில் நிலவு வரும் என்று காட்ட வேண்டிய தேவை அவருக்கு எழுந்தது. இதனால் அரிகண்டம் பாடுகின்றார்.

நூறு கயிறுகளைக் கொண்டு உறியொன்று கட்டி, அதன் கீழே தீக்குழியொன்று அமைத்து அவ்வுறியின் மேலிருந்து தனது இஷ்ட தெய்வத்தைக் குறித்துப் பாடல்கள் பாடும் வழக்கம் பண்டை நாட்களில் இருந்தது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இஷ்ட தெய்வம் அருள் செய்யா விட்டால் ஒவ்வொரு கயிறாக அறுத்து விடுவார்கள். எல்லாக் கயிறுகளும் அறுபட்டும் கடவுள் அருள் கிட்டவில்லையெனின் தீக்குழியில் விழுந்து பொசுங்க வேண்டியதுதான். இதனை அரிகண்டம் பாடுதல் எனக் குறிப்பிடுவர். எப்படியாவது அம்பிகையின் அருளைப் பெற்று வானில் பூரண நிலவைக் கொண்டுவந்துவிடவேண்டும் என்ற உள்ளத் துடிப்பு அவரிடம் மிகுந்திருந்தது.

இவ்வுலகத்து மனிதர்கள் மாத்திரமல்ல மேலுலகத்துத் தேவர்கள், அழிவற்ற முனிவர்கள் என யாவரும் அம்பிகையைக் குனிந்து வீழ்ந்து வணங்குகின்றனர். திருக்கடவூரில் அம்பிகையை உபாசிப்பதற்காகவே பல அருளாளர்கள் வந்து வழுத்தியுள்ளனர்.

திருக்கடவூர் உய்ய வந்த தேவர், குங்கிலியக் கலயர், காரி நாயனார் எனப் பெரியபுராணம் பேசும் நாயன்மார்களால் வழிபடப் பெற்றவளையே திருக்கடவூர்த் தலத்தில் அபிராமிப் பட்டர் வணங்கிய வண்ணம் இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனைக் காலால் கடிந்த தலமாகவும் திருக்கடவூரே விளங்குகின்றது. எனவே மாயா முனிவனாகிய மார்க்கண்டேயனுக்கு அருள் சுரந்த தலம் என்ற சிறப்பையும் திருக்கடவூர் பெறுகின்றது.

அம்பிகையை வணங்கச் சென்ற இந்திரனும் பிரமனும் தங்களது கிரீடங்களைக் கழற்றிக் கீழே வைத்தனர். மதுகைடபனை வதைத்த திருமால் தனது வலிமை மிக்க முடியினைக் கழற்றிக் கீழே வைத்தார். அதைப் பார்த்துக் கூடவந்த தேவர்களும் தத்தம் முடியைக் கழற்றிக் கீழே வைத்தனர். அம்பிகையின் கொலு மண்டபம் எங்கணும் முடிகளே நிரம்பிக் காணப்பட்டன.

“வழியைப் பார்த்து உள்ளே வாருங்கள். முடிகளில் இடறாமல் உள்ளே வாருங்கள் தலையைக் குனிந்து பார்த்து வாருங்கள்” அன்னையின் பரிவாரங்கள் எச்சரிக்கின்றனர். சௌந்தர்யலஹரியில் பேசப்படுகின்ற அன்னையின் தர்பார் சிறப்பை மனத்துள் பதித்தவாறு சிந்தித்த பட்டர்

மனிதரும் தேவரும் மாயாமுனிவரும் வந்து சென்னி குனிதரும் சேவடிக் கோமளமே! எனப்பாடுகின்றார்.

நாயகன் இன்றி ஒரு நாயகிக் கோலமா?
எத்தேவரும் முடிகழற்றிப் பணிகின்ற முதல்வி அச்சபை மண்டபத்தில் சிவபெருமான் வருகை தருகின்ற போது மிகவும் பரபரப்புடன் இருக்கையில் இருந்து எழுந்து வணங்குகின்றாள். இச்செய்தியையும் சௌந்தர்யலஹரியே குறிப்பிடுகின்றது.

இறைவனுக்கு முதன்மை அளிக்கும் அம்பிகையின் திறத்தை நினைத்த அபிராமிப் பட்டரின் நெஞ்சம் இறைவனின் சிறப்புக்களை நினைத்துப் பார்க்கிறது. பாடலின் பின்னிரண்டு அடிகளையும் இறைவனுக்காகவே ஒதுக்கிவிடுகிறார் பட்டர்.

இறைவனது கொன்றைவார் சடையில் எத்தனைபேர் வீற்றிருக்கின்றனர்? நதி, மதி, அரவு எனப் பலர் அச்சடையில் தஞ்சமடைந்துள்ளனர். கொன்றை மலர் பிரணவத்தை ஞாபகமூட்டும் தோற்றமுள்ள மலர். ஓங்காரமாகத் தெரியும் அந்த மலரை இறைவன் விரும்பி அணிகின்றான்.

சிரசில் உள்ள கொன்றை, சடை, பிறை, நதி, பாம்பு என்பன ஐந்தொழில் விளக்கமாகவும் அமையக்கூடியன.
இந்த வகையில் பிரணவத்தில் இருந்தே அனைத்தும் தோற்றம் பெறுகின்றன. எனவே கொன்றை படைத்தலின் அடையாளம். கங்கை சடையில் இருந்து பெருக்கிறது. அது உலகூட்டிக் காக்கிறது. அந்நதியை இறைவன் சடையில் தாங்கியுள்ளார். சடை மறைத்தலின் அடையாளம். பாம்பு சம்ஹாரத்தின் அடையாளம். தாருகா வனத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர்கள் அழிவுக்காகப் பாம்பை ஏவிய ஒரு வரலாறு உண்டு. திங்கள் எனப்படுகின்ற சந்திரன் குளிர்ச்சியைத் தருவது. அருளலின் குறியீடாகக் கொள்ளத் தக்கது.

குற்றங்கள் புரிந்தாரேனும் இறைவனிடம் தஞ்சமுற்றால் அவர் மன்னிக்கப்பெறுவார். ஆணவத்துடன் உலகை அழிப்பேன் என மிரட்டிக் கொண்டு வந்த கங்கையை ஆதரித்து தனது சிரசில் ஏற்றி அபயமளித்தவர் சிவபெருமான். இதனுடன் தொடர்புடைய ஒரு புராணக் கதை இருக்கிறது.

பகீரதன் பல காலம் தவமிருந்தான். தன்னுடைய மூதாதையருக்குப் பிதிர்க்கடன் செய்ய வேண்டும். வானுலக கங்கை பூவுலகில் பாய்ந்து அதையும் தாண்டிப் பாதாளத்திற்கு வரவேண்டும். முனிவர் ஒருவரின் சாபத்தினால் என்பாகிக் கிடக்கும் தன் மூதாதையரது என்பு மீது பாய வேண்டும் என வேண்டினான். தேவ கங்கை ஆணவம் கொண்டாள். வானுலகில் பாயும் அவளுக்குப் பூவுலகைத் தாண்டிச் செல்வது அவமானமாகப்பட்டது.

தன்னை நோக்கித் தவம் செய்த பகீரதனிடம் "நான் அங்கே வரமுடியாது. ஏனெனில் என்னுடைய வேகத்தைத் தாங்கக் கூடிய ஒருவர் என்னைத் தாங்க வேண்டும். ஆதலால் என்னால் பூவுலகிற்குப் பாய முடியாது என்றாள்."

இதனைக் கேட்டுக் கவலையுற்ற பகீரதன் பரமசிவனைக் குறித்துத் தவம் செய்தான். இறைவன் பகீரதனின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தான். விண்ணிலிருந்து இறங்கும் கங்கையைத் தன் தலையில் தாங்கச் சம்மதித்தான். கங்கையின் ஆணவத்தை தன் சடையிலேயே அடக்கிவைத்தான். கங்கை ஆணவத்தை விட்டாள். பாதாளத்திற்குப் பாய்ந்து பகீரதனுடைய மூதாதையருக்கு முத்திப் பேறளித்தாள்.

இறைவியும் இறைவனும் மன்னிப்பு என்ற குணத்தை முதன்மையாகக் கொண்டவர்கள். இதனால் தான் செய்திருக்கக் கூடிய குற்றங்குறைகளைக் களைந்து இருவரும் தன்னை ஆட்கொள்ள வேண்டும் என்பது அபிராமிப் பட்டருடைய வேண்டுதலாக இருக்கிறது.

கொன்றைவார் சடைமேல் பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே

என்று பாடினார்.

சந்திரனின் கிரணங்கள் குளிர்ச்சியுடையவை. சந்திர மண்டலத்தின் இரவு நேரக் குளிர்நிலை பனிக்கட்டியின் உறைநிலைக்குக் கீழே செல்கிறது. எனவே பனிதரும் திங்கள் என்று குறித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலில் உள்ள ஆதாரங்களுள் அடிப்படையாக அமைவது மூலாதாரம். இங்குள்ள சக்தி பாம்பு போலச் சுருண்டிருக்கும். சுருண்டிருக்கின்ற பாம்பை எழுப்பி சக்தியை உச்சிக் கமலத்தை நோக்கி எழுப்புவதே யோகம். மூலாதாரத்தில் சுருண்டிருக்கும் பாம்புவடிவான சக்தியே நமது இனப்பெருக்க உறுப்புகளின் இயக்கத்திற்கும் காரணம். இதனை உணர்ந்தவர் பாம்பும் எனக் குறித்தார்.

பகீரதனின் வேண்டுகையால் கங்கை பூவுலகிற்கு வந்து பாதாளம் நோக்கிச் சென்ற புராணச் செய்தியை மேலே கண்டோம். பகீரதன் கடின தவம் செய்து கங்கையை அழைத்தான். இதுவே 'பகீரதப் பிரயர்த்தனம்'. பகீரதனுடைய வேண்டுகையை ஏற்றுக் கங்கை பூவுலகிற்கு வந்தவளாகையால் பகீரதி என்ற சிறப்புப் பெயர் கங்கைக்குச் சொந்தமாயிற்று. எனவே பகீரதியும் எனக் குறித்தார். இவற்றையெல்லாம் படைத்த புனிதனே இறைவன்.

அனைவரும் வந்து வணங்கும் சிறப்புடைய இறைவியும் ஐந்தொழில்களை இயற்றும் இறைவனும் எப்போதும் புந்தியில் பொருந்தியிருக்க வேண்டும் என்றார். புத்தி என்பது இங்கு விகாரமடைந்து புந்தி ஆயிற்று. தமிழ் இலக்கணப் பிரகாரம் இதனை மெலிதல் விகாரம் என்பர். அன்னையின் சேவடி கோமளமாக இருக்கிறது. கோமளம் என்றால் மேன்மை எனப் பொருள் உரைப்பர். மேன்மை தரக் கூடிய இறையருள் கைகூடி விட்டால் புத்தி புந்தியாக மென்மை பெற்றுவிடும் எனக் குறித்தார்.

பகீரதப் பிரயர்த்தனம் செய்யலாம். ஆனால் இறைவனும் இறைவியும் தாமாக விரும்பி வந்தால்தான் மனத்தை அடக்கி அதில் இறைவனைக் குடியேற்ற முடியும். இதனால்த்தான் தவமும் தவமுடையார்க்கே எனப் பாடினர். அபிராமிப் பட்டர் நம் முயற்சியினால் இது ஆகக் கூடியதல்ல என்பதை உணர்ந்தவர் எந்நாளும் பொருந்துகவே எனப் பணிந்தார்.

மனிதரும் தேவரும் மாயாமுனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே
(அபிராமி அந்தாதி : 04 ஆவது பாடல்)

மனம் ஒருமைப் பட்டால் இறையருள் கைகூடும் என்ற உண்மையை அபிராமிப் பட்டர் விளக்கினார். இந்த உண்மையை உணர்ந்து வழிபாடாற்றுவது நலம் தரும்.

ச.லலீசன்
**M.A. (தமிழ்), M.Ed., SLTES Class III**
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

# இந்து அறக்கோட்பாடும் தற்காலச் சமூகமும்

"இந்தச் சரீரம் நமக்கு கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்பது நாவலர் பெருமானின் வாக்காகும் இந்த உடல் ஒரு நூதன இயந்திரம் "மாயாயந்திதாது" என மெய்கண்ட தேவர் இதனைச் சிவஞான போதத்தில் குறிப்பிடுகின்றார். அரியபிறவியாகிய மானிடப்பிறவியை எடுத்து நாம் நாள்தோறும் இறைவனை வணங்க வேண்டும். நமதுகருவி கரணங்களால் நாம் செய்கின்ற செயல்கள் அனைத்தையும் இறைநினைவுடன் செய்தல் வேண்டும். இறையருளை மறந்து செய்யும் செயல்கள் யாவும் வீண் செயல்களாகவே ஆகிவிடும் என்பதே "அரன்தன் பாதம் மறந்து செய் அறங்களெல்லாம் வீண் செயல்" என்பது சிவஞான சித்தியாகும் குறிப்பிடுகிறது. திருவருளை முன்வைத்துச் செய்கின்ற காரியங்களே உண்மையான அறமாகும். திருவருளின் கருத்தறியாது செய்யும் செயல்கள் யாவும் வீண் ஆரவாரமாகிவிடும்.

தர்ம அடித்தளத்தில் எழுந்த கருமம் இதம் எனப்பட்டுப் பெருமை பயக்கும் தர்ம அடித்தளம் இல்லாத கர்மம் சிறுமை பயக்கும் பிற உயிரகளுக்குத் தீங்க விளையாத கர்மம் பிற உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் கன்மம் ஆகிய இரண்டுவகைக் கண்மங்களும் நன்மையைத் தருவனவாகும். இவை தர்மத்தை அடிப்படையாகக் கொண்டவை கருமத்தை செய்யும் போது பலனை நோக்காமல் பயனை விளைவிக்கும் கருமத்தின் அடித்தளமாகிய தருமத்தை நோக்க வேண்டும். காமிய கர்மங்களுக்குத் தர்மமே அறத்தளம் இதனையே "தர்மம் என்று ஒரு பொருள் உண்டு" எனக் கந்தபுராணம் விதந்து பாராட்டுகிறது உலக அன்னையாகிய தமிழ் மூதாட்டி ஔவையார் இதனை "அறஞ் செய விரும்பு" என அருளுகின்றார் இந்து அறிவியல் தத்துவமும் சமயம் சார்ந்த ஒழுக்கவியல் கோட்பாடுகளும் இணைந்தே காணப்படுகின்றன வடமொழியிலுள்ள வேதங்கள் உபநிடதங்கள் இதிகாச புராணங்கள் பகவத்கீதை, தர்ம சாஸ்திரங்ள் ஆகியவற்றில் அற ஒழுக்கங்கள் போதிக்கப்பட்டுள்ளன இவ்வாறு தமிழிலே உள்ள நீதி நூல்கள் பன்னிரு திருமுறைகள் மெய்கண்ட சாஸ்திரங்கள் என்பவற்றிலும் அறக்கருத்துக்கள் செறிந்து காணப்படுகின்றன. வள்ளுவர் தந்த தமிழ் மறையாகிய திருக்குறள் மிகச் சிறந்த அறநூலாகப் போற்றப்படுகின்றது. திருக்குறளின் அறத்துப்பால் தனிமனித நீதியையும் வலியுறுத்துகின்றது ஒரு குழந்தையினடைய மனதிலே அற விழுமியங்களைப் பேணி வாழ வேண்டும் என்ற கருத்து பெற்றோரால் பிள்ளைக்கு ஊட்டப்படுகின்றது தாயானவள் பாலும் சோறும் மாத்திரம் ஊட்டித்தன் குழந்தையை வளர்க்கவில்லை அறவாழ்வின் அவசியத்தையும் பிஞ்சு உள்ளங்களிலே பதித்து விடுகின்றாள். வீட்டுச் சூழல் அறத்தைப்பேணி வாழ்வதற்கு அத்திவாரமாக அமைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகின்றது. மாணவனை முழு மனிதனாக மாற்றிவிடும் நிறுவனங்கள் பாடசாலைகளேயாகும். பாடசாலைகளில் ஆசிரியர்கள் பாடநூல்களை கற்பிப்பதோடு அறக்கருத்துக்களையும் போதித்து வருகிறார்கள் ஆலயங்களில் அறநெறிப் பாடசாலைகள் இயங்கி மாணவர்கள் அறநெறி பிசகாது வாழ்வதற்கு வழிகாட்டுகின்றன ஆலயங்களில் நடைபெறும் சமயப் பிரசங்கள் புராண பாடல்களின் ஊடாக மக்கள் சமய உண்மைகளை அறிந்து கொள்கின்றார்கள். சமய நிறுவனங்கள் நடாத்துகின்ற பரீட்சைகள் பேச்சுப் போட்டிகள் காட்டுரைப் போட்டிகள் என்பவற்றின் ஊடாகவும் மாணவர்களிடையே ஆண்மீக விழுமியங்கள் பரப்பப்படுகின்றன. இவ்வாறு வீடு, பாடசாலை, ஆலயங்கள், சமய நிறுவனங்கள் என்பவற்றின் ஊடாக மாணவர்கள் ஆண்மீக நெறியில் வழிப்படுத்தப்பட்டு அறவிழுமியங்களைச் சிறுவயதிலேயே உணர்ந்து கொள்கிறார்கள்.

“ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்” என்ற பழமொழிகளுக்கு கேற்ப சிறார்களின் பிஞ்சு உள்ளங்களிளே நஞ்சு விதைகளை விதைக்காமல் நல்ல விதைகளை விதைத்து அவர்களை அறநெறி பிசகாது வாழ வைக்க வேண்டி பொறுப்பு சமுதாய நிறுவனங்களின் கடமையாகும்.

ஆனால் இன்று நமது சமூகத்தில் அறநெறியைப் பின்பற்றி வாழும் தன்மை அருகிக்கொண்டே போகிறது. நெறி தவறி வாழும் வாழ்க்கை முறைகள் எல்லாம் நியாயப்படுத்தப்படுகின்றன. பொறாமை, பேராசை, வஞ்சனை, ஆகிய தீய குணங்கள் யாவும் சிறார்களின் மனதிலே சிறிய வயதிலேயே இடம் பெற்று விடுகின்றன. தமது பிள்ளைகள் கல்விமான்களாகவும் செல்வந்தர்களாகவும் வாழ வேண்டும் என்று விரும்பும் பெற்றோர்கள் அவர்கள் நல்ல பண்புள்ளவர்களாகவும் வளரவேண்டும் என்பதில் அக்கறை செலுத்துவதில்லை.

“சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே” என்ற புறநானூற்று வாக்கிற்கு அமைய தான் பெற்ற பிள்ளைகளை நெறி தவறாதவர்களாக வளர்த்து விட வேண்டிய பொறுப்புத் தந்தையிடமே உள்ளது. நெறிதவறிய நடத்தைக்கு பிள்ளைகள் உருவாகாமல் இருப்பதற்று தாயின் வளர்ப்பு மூலதாரணமாகவுள்ளது பெற்றோர் தமது பிள்ளைகளின் பொறுப்பை உணர்ந்து வீட்டுச் சூழலைச் தெய்வீகச் சூழலாக மாற்றி அறநெறி பசிகாது பிள்ளைகள் வாழ்வதற்கு வழிகாட்ட வேண்டும்.

எமது பகள்பாட்டில் பாடசாலைகள் ஆலயங்களாகவே போற்றப்பட்டன பாடசாலைக்கு வித்தியாலயம் என்ற பெயரும் இதனால் தான் ஏற்பட்டது மாணவர்களினுடைய உருவாக்கத்தில் பாடசாலைகள் முக்கிய இடம் பெறுகின்றன. மாணவர்கள் அறிவு பிரகாசிப்பதற்கும் ஆளுமை விருத்தியடைவதற்கும் அறப்பண்புகள் உருவாததற்கும் பாடசாலைகளே வழிகாட்டுதல் வேண்டும். உயிருள்ள ஜீவன்களுடன் உறவாடுகின்றோம் என்ற எண்ணத்தினை மனதிலே நிறுத்தி ஆசிரியர்கள் தமது பணியினைப் புனிதபணியாகச் செய்தல் வேண்டும். ஆசிரியர்கள் முன்மாதிரியாக உதாரண புருஷர்களாகத் திகழ வேண்டும். வாக்கிற்கும் வாழ்விற்கும் இடையே ஒத்த தன்மை ஆசிரியர்களிடம் இருந்தால் தான் மாணவர்கள் இவர்களை தெய்வமாகவே போற்றுவார்கள் வழிநடாத்த வேண்டியவர்கள் வழி தவறிப் போனால் சமுதாயச் சீரழிவே ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-*

ஆலயங்கள், கிராமங்களின் பண்பாட்டு நிலையங்கள் கிராம மக்களை நெறி பிசகாது வாழ வழிகாட்டும் கேந்திர நிலையங்கள் ஆன்மாவைப் பண்படுத்தும் அறச்சாலைகள் தர்மம் தவறாது வாழ்வதற்கு வழிகாட்டும் திசை காட்டிகள் எமது பண்பாட்டுப் பாரம்பரியக் காலைகளை வளர்க்கும் நிறுவனங்கள் எனப் பலவழிகளில் பரிமாணிக்கும் இடங்களாகவே ஆலயங்கள் திகழ வேண்டும் ஆனால் இன்று நமது ஆலயங்கள் பல வியாபார நிலையங்களாக மாறி வருகின்றன. பதவி ஆசையும் அதிகார வெறியும் ஆணவச் செருக்கும் கொண்டவர்கள் சங்கமிக்கும் நிலையமாகவும் மாறிவருகின்றன. ஆலயங்களில் இடம் பெறும் அதிகாரப் போட்டிகள் நீதி மன்றம் வரை செல்கின்றன.

ஆனால் எங்கள் ஆலயம் ஆலமர நிழலின் கீழ் வீற்றிருந்து அருள் மழை பொழியும் ஆலயமாகும் மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக கூடி நின்று அம்பாளின் அருளைப் பெறுவார்கள். இக் காட்சியை என்றும் மறக்க முடியாது.

திருமதி திவாகிரி சசிதரன்
ஆசிரியர் (முல்லைத்தீவு பொன்னகர்)
முள்ளியவளை அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமஞ்சனம்

இந்துக்களால் இறைவனுக்கு ஆற்றப்படும் பதினாறுவகை உபசாரங்களில் முதன்மையானது திருமஞ்சனம், திருமஞ்சனம் என்பது அபிடேகம். தூய்மையான நீரை எடுத்து வந்து மந்திரம் சொல்லி வழிபாட்டிற்கான விக்கிரகத்தை நீராட்டுதல் திருமஞ்சனம் ஆகும். தினமும் ஆலயங்களில் அபிஷேகம் ஆராதனை நைவேத்தியம் என்பன நடைபெறும். தினமும் நடைபெறும் அபிசேகம், திருமஞ்சனம், விசேடமான தினங்களில் விசேட அபிசேகங்கள் நடைபெறும். திருவருள் ஞானத்தை நீராகப் பாவித்து அசுத்தத்தைச் சுத்தி செய்தலே அபிஷேகம் ஆலயத்தில் உள்ள புனித கிணற்றிலிருந்து அல்லது புனித தீர்த்தத்தில் இருந்து குடங்களில் நீர் எடுத்து இறைவன் திருவுருவிற்கு திருமஞ்சனம் செய்யப்படுகிறது. விசேட தினங்களில் இத்திருமஞ்சனம் பல்வேறு பட்ட திரவியங்களாற் செய்யப்படுகிறது.

விசேடமாக ஆற்றப்படும் திருமஞ்சனத்தில் பல்வேறு பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. அப்பொருட்களுக்கு ஏற்ப பயன்களும் கிடைக்கின்றன. நீர் அபிஷேகத்தால் சாந்தி உண்டாகும். திருமஞ்சன நீரில் வாசனைப் பொருட்களும் மலர்களும் இட்டு அபிஷேகம் செய்தால் மலநிவாரணம் உண்டாகும். வாசனைத் திரவிய அபிஷேகத்தால் ஆயுள் வலிமையும், சந்தன அபிஷெகத்தால் செல்வமும் உண்டாகும். பால் அபிஷேகத்தால் ஆயுள் விருத்தியும் தயிரினால் மக்கள் விருத்தியும் நெய்யினால் மோட்சமும் உண்டாகும். தேன் அபிஷேகத்தால் சங்கீத வன்மையும் கருபஞ்சாற்றினால் நித்தியசுகமும் சர்க்கரை அபிஷேகத்தால் பகை அழிதலும், வாழைப்பழத்தினால் பயிர்விருத்தி, பலாப்பழத்தினால் உலகவசியம், இரசபஞ்சாமிர்த அபிஷேகத்தால் செல்வமும் உண்டாகின்றன. பஞ்சகௌவியத்தினால் ஆன்மசுத்தியும் இளநீரால் சற்புத்திரப்பேறும் எலுமிச்சம் பழத்தினால் மருத்துவ நிவாரணமும் கிடைக்கின்றன.

இவற்றைவிட நல்லெண்ணை, மாம்பழம், மாதுளம்பழம், நாரத்தம்பழம், தேங்காய்த்துருவல், கோரோசனை, பச்சைக்கற்பூரம், கஸ்தூரி மஞ்சள், பன்னீர், சந்தனக்குழம்பு, அன்னம், மாக்காப்பு, நெல்லிக்காப்பு,மலர் முதலிய பல பொருட்களினால் அபிஷேகம் செய்யப்படுகின்றன. இப் பொருட்களினால் எந்ததெய்வத்திற்கு அபிஷேகம் செய்தாலும் பலன் ஒன்றே. எனினும் சிவனுக்கும் முருகனுக்கும் மட்டுமெ விபூதி அபிஷேகம் செய்தல் வேண்டும். என்றும் பூவும் நீருமே அபிஷேகத்திற்கு முதன்மையானவை.

இறைவனுக்கு பூவும் நீரும் கொண்டு திருமஞ்சனம் செய்வித்து முத்தியடைந்ததை புராணங்களும் இலக்கியங்களும் கூறுகின்றன. மார்க்கண்டேயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அழிக்க வந்த யமனிடம் இருந்து விடுபட சிவபூசை செய்தார். மகனின் இறப்பு நெருங்கி விட்டதை அறிந்த தாய்தந்தையர் அழுதபோது மார்க்கண்டேயர் தாய் தந்தையரை நோக்கி நீவிர் வருந்தற்க. வரம் தந்த வள்ளல் சிவபெருமான் இருக்கின்றார். அவரைத் திருமஞ்சனம் செய்ய நீர் இருக்கின்றது அர்ச்சனை செய்ய மலர் இருக்கின்றது எனக் கூறி சிவலிங்கமூர்த்தியை தினமும் நீராட்டி மலர் சூட்டி திருவைந்தெழுந்தை ஓதினார். இதனால் யமன் உதைபட என்றும் பதினாறு வயதினராக வாழ்ந்தார். இவர் பூவினாலும் நீரினாலும் செய்த திருமஞ்சனமே இவர் உயிரைக் காத்தது. திருமூலர் திருமந்திரத்தில் பின்வருமாறு கூறுவார்.

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிற ஈசனை
நண்ணறி யாமல் நழுவுகின்றாரே"

ஒரு குடத்தில் தண்ணீரை மொண்டு இலிங்கத் திருமேனி மேல் வார்த்து அன்புடன் பூ இட்டுப் பூசித்தவர் இப்பரந்த உலகை ஆண்டு சிவபதஞ் சேர்த்து பேரின்பம் உறுவர் என் கூறுகின்றார்.

"ஒரு குடங்கையிற் சலங்கொண்டு மறுகுவில்வ மொன்றினால் திருகுசிந்தையின்றிலிங்க பூசை செய்த சீலர்........"

என சிவலிங்க மூர்த்தியை நீரினாலும் அறுகு வில்வத்தினாலும் பூஜித்தவர் இன்மையில் இன்பத்தையும் மறுபிறப்பில்லா மறுமையையும் அடைவார்கள் என்கிறது சிவரகசியம். உமையம்மையார் கச்சியம்பதியில் தனி மாமரத்தின் கீழ் பூவும் நீரும் கொண்டு சிவனை வழிபட்டு இடப்பாகம் பெற்றார் பூவும் நீரும் கொண்டு சிவனை திருமஞ்சனம் செய்து திருமால் சக்கரமும், இராமர் சகல நலமும், கண்ணபிரான் சந்ததியும் பெற்றார்கள். இவ்வாறாக முனிவரும், தேவரும், சித்தரும், முத்தரும், பக்தரும் சிவனை பூவும் நீரும் கொண்டு வழிபட்டு சகல வரமும் பெற்றனர் என அறிய முடிகின்றது.

திருநாவுக்கரசரும் "போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்..." எனவும், "சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்" எனவும் பாடியுள்ளார். இவ்வாறாக இறைவனுக்கு முக்கியமான பூசைப் பொருள் நீர் என்பதை அறியமுடிகிறது. திருமஞ்சனம் நடைபெற்றே வேறு எந்தக் கிரியையும் இடம்பெறும். இதன் அடிப்படையில்தான் ஆலயங்களில் தீர்த்தங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இப்புனித தீர்தத்நீரினிலே வில்வம், துளசி, மூலிகைகள் கலந்து திருமஞ்சனம் ஆற்றப்படுகின்றன இவ்வாறு மூலிகைகள் கலந்து அபிஷேகம் செய்யப்படுகின்ற நீர் தீர்த்தமாக வழங்கப்படும் போது அது நோய் தீர்க்கும் மருந்தாக பயன்படுகின்றது சில ஆலயங்களில் விக்கிரகங்களே மூலிகைகளினால் செய்யப்பட்டிருக்கும். அதன் மீது திருமஞ்சனம் செய்யப்படும் நீர் மிகவும் மருத்துவ குணம் மிக்கதாக இருக்கும். இவ்வாறாக ஆலயங்களில் திருமஞ்சனம் முதன்மையானதும் முக்கியமானதுமாக விளங்குகின்றது.

சைவபுலவர் ஹேமலோஜினிகுமரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## கும்பாபிஷேக தத்துவம்

இறைவன் எழுந்தருளும் இடங்களைக் கும்பம், விம்பம், தம்பம் என மூவகையாகக் கூறுவர். ஆலயங்களைப் புதுப்பிப்பதற்கு அங்குள்ள பிம்பம் தம்பம் ஆகியவற்றில் விளங்கும் மூர்த்திகளைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து கோயிலைப் புதுப்பித்த பின் அங்குள்ள திருவுருவங்களில் அபிஷேகத்தின் மூலம் மீண்டும் அம்மூர்த்திகளைச் சேர்ப்பித்தலைக் "கும்பாவிஷேகம்" என கூறுவர்.

கும்பாபிஷேகம், குடமுழுக்கு, திருக்குடநன்னீராட்டு என்ற பெயர்களாலும் வழங்கப்பெறும் பிரதிஷ்டை எனவும் கூறப்பெறும்.

**பிரதிஷ்டைவகை:**

ஆலய பிரதிஷ்டை நான்கு வகைப்படும் அவையாவன
01. ஆவர்த்தம் 02. அநாவர்த்தம் 03. புனராவர்த்தம் 04. அத்தரிதம் என்பனவாம்.

**ஆவர்த்தம்:**

ஓர் ஆலயத்தைப் புதிதாக்கக் கட்டி முடித்து பாலாலய மூர்த்தியைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து பூசித்து மூலாயத்தில் (கருவறை) அம்மூர்த்தியை எழுந்தருளச் செய்து அதற்கு அபிஷேகம் செய்தல் ஆவர்த்தம் எனப்படும்.

**அநாவர்த்தம்:**

ஆற்றுப் பெருக்காலோ, பெருமழையாலோ, நில அதிர்வுகளாலோ, மணல் மூடியதாலோ பல ஆண்டுகள் பூசை இல்லாமல் இருந்த ஆலயத்தை கட்டிமுடித்து விக்கிரகங்கள் முதலியவற்றைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்தல் அநாவர்த்தம் எனப்படும்.

**புனராவர்த்தம்:**

கருப்பக்கிரகம், விமானம், பிரகாரம், கோபுரம், பலிபீடம், முதலியவைகளில் பழுது ஏற்பட்டாலும், அஷ்டபந்தனத்தில் பழுது உண்டானாலும், விமானவிக்கிரகங்களில் பழுது நிகழ்ந்தாலும், வர்ணம் அழிந்திருந்தாலும் சுவாமியை பாலாலயம் செய்து ஆலயத்தை புதுப்பித்து மூலத்தானத்தில் மீண்டும் சுவாமியைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தல் புனராவர்த்தம் எனப்படும். இது ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் எனவும் வழங்கப்பெறும்.

**அந்தரிதம்:**

ஆலயத்தில் திருட்டு நிகழ்ந்தாலோ சண்டாளன் நாய் முதலியன உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்தாலோ சுவாமியின் பிரத்தியங்கம், உபாங்கம், போன்றவைகளுள் பழுது ஏற்பட்டாலோ உடனே அவைகளைத் திருத்தி மகா கும்பாபிஷேகம் செய்தல் அந்தரிதம் எனப்பெறும் இதற்கு நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை செய்ய வேண்டுமென்பது ஆகமவிதி இவ்வாறு செய்யப்படும் மூர்த்திகளிலேயே தெய்வ சாருத்தியம் மிக்கிருக்கும்.

**அஷ்டபந்தனம்:**

எட்டு வகையான மருந்துகளை அந்தந்த அளவோ கூட்டி மூர்த்திகள் பீடத்திலிருந்து அசையாதவண்ணம் சாத்தப்பெறும் மருந்து அஷ்டபந்தனம் எனப்பெறும் சுக்கான் 03 பங்கு குங்கிலியம் 02 பங்கு, கொம்பரககு 01 பங்கு, தேன், மெழுகு, காவிக்கல், செம்பஞ்சு இவைவகைக்கு 3/4 பங்கு சாதிலிங்கம் 1/4 பங்கு இந்த அளவில் கூட்டி நன்றாக மர உரலில் இடித்துச் சேர்க்கப்பெறும் இம் மருந்தை மூர்த்திகளுக்கு சாத்துதல் வேண்டும். இது கும்பாபிஷேகத்தில் செய்யப்படும் முக்கிய கிரியையாகும். சிவசக்தியைச் சிவலிங்கத்தில் என்றும் இருக்குமாறு செய்ய இக்கிரியை உதவுகிறது.

**கிரியைகள்:**

கும்பாபிஷேகத்திற்கு அங்கமாகச் செய்யப்படும் கிரியைகள் அறுபத்து நான்காகும் சில ஆகமங்கள் ஐம்பத்தைந்து என்றும் கூறும் அவற்றுள் அனுக்ஞை, கணபதிபூஜை, வாஸ்துசாந்தி, மிருதசங்கிரணம் அங்குரார்ப்பணம், ரஷாபந்தனம், கும்பஸ்தாபனம், கலாதர்ஷணம், யாகசாலை, பிம்பசுத்தி, ஸ்பர்சாகுதி, முதலியன இன்றி யமையாதன.

**அனுக்ஞை:**

ஆசாரியனைத் தேர்ந்து எடுத்து அவரை இறைவன் அனுமதி பெற்றுக் கும்பாபிஷேகம் செய்வதற்கு நியமனம் செய்தலாம்.

**கணபதிபூஜை:**

காரியம் இடையூறின்றி நிகழ நிகழ்த்தும் வழிபாடு

வாஸ்து சாந்தி: பூமியைச் சுத்தம் செய்தல்
மிருத்சங்கிரணம் : மண் எடுத்தலாகும்
அங்குரார்ப்பணம்: முளையிடுதல்
ரஷபந்தனம்: காப்புக்கட்டுதல்
பிம்பசுத்தி: மூர்த்திகளை சுத்தம் தூய்மை செய்தல்
ஸ்பர்சாகுதி: மூர்த்திகளுக்குச் செய்யப்படும் யாகப் பயன்களை அந்தந்த மூர்த்திகளிடம் சேர்த்தல்

இவ்வாறே ஒவ்வொரு கிரியையும் யாகசாலையில் நிகழும்
கும்பம் : யாக சாலையில் எழுந்தருளவிக்கப் பெறும் கும்பங்கள் அந்தந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்திகளின் திருவுருவங்களாகும் கும்பத்திலமைந்த பொருட்கள் அனைத்தும் அம் மூர்த்திகளின் உடற் கூறுகளாகக் கருதப்படும்.

கும்பவஸ்திரம் :- தோல்
மேல் பூசியசெம்மண் :- இரத்தம்
நீர் :- மேதை
சுற்றிய நூல் :- 72 ஆயிரம் நாடிகள்
உள்ளிடுரத்திணம் :- சுக்கிலம்
கூர்ச்சம் :- எலும்பு
மாந்தளிர் :- மயிர்
தேங்காய் :- சிரம்
கீழே பரவும்நெல்முதலியன :- ஆசனம்
மந்திரம் :- பிராணன் இவ்வாறாக கும்பம் சிவசொரூபமாகப் பாவிக்கப் பெறும் கோயில் திருவுருவங்களில் உள்ள தெய்வீக சக்தியைக் கும்பத்தில் ஆவாகணம் செய்து யாகசாலைக்கு எழுந்தருளி செய்து உபசரித்து மகிழ்வித்தல் வேண்டும்.

**கலாதர்ஷணம் :** கலைகள் பதினாறு அவை அகாரம, உகாரம், மகரம், விந்து, பிறைமதி, நிரோதினி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாபினி, லியோமருபை, அநந்தை, அநாதை, அநாகிருகை, சமனை, உன்மனை, என்பனவாகும்.

மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியை எழுப்பி சமனை வரை கொண்டு சென்று பாசங்களை நீக்கி உன்மனையில் சுத்தமானதாகப் பாவித்து அதன் மேல் இருக்கும் சிவத்தினிடம் சேர்த்துப் பிரசாத மந்திரத்துடன் கலந்த சிவத்தை ரேசகம் என்னும் பிராணயாம் வகையால் கையில் இருக்கும் பூவில் எழுந்தருளாச் செய்து கும்பத்தில் இருக்கச் செய்யும் கிரியை கலாதர்ஷணம் எனப்படும்.

**யாகசாலை:**

யாகசாலை 36தத்துவ சொரூபமாகவும் சிவபெருமானது அட்ட மூர்த்த வடிவமாகவும், ஆறு அத்துவாக்களின் வடிவாகவும் கூறப்படும் யாக மண்டபம் சாந்திய கீதகலை, பிந்தல் காலீகள், பதம் மண்டபநடு, வர்ணம், கும்பம், மந்திரம், ஓமப்பொருள், தத்துவம், யாசாலை, அமைந்துள்ள இடம் புவனம், நான்கு, வாயில்கள், நிவர்த்தி, பிரகுஷ்டை, வித்தை, சாருதி, என்ற கலை, வேதிகை ஆதார சக்தியுடன் கூடியதாக அனந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம், என்ற ஐந்து ஆசனங்களை உடையது.

**கும்பாபிஷேகம்:**

யாக சாலையில் ஒன்பது குண்டங்களில் அக்னி வளர்க்கப்படும், அவை நாள் கோணம் முக்கோணம், அர்த்த சந்திரம் முதலிய வடிவங்களில் காணப்படும். குண்டங்களைச் சுற்றிப் பசுந்தர்ப்பைகளை பரப்பி ஆல், அரசு முதலிய சமிர்த்துகளை குண்டத்தில் இட்டு கடைந்ததெடுக்கப்பட்ட சுத்தமான அக்னி கொண்டு அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி அத் தெய்வங்களை மனத்தில் தியானித்து சுருக்கு சிருவம் என்றும் கருவிகளைக் கொண்டு நெய் சொரிந்து அவிவளர்க்கப்படும் மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றாலும் வழிபாடு நிகழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமகுண்டத்தில் எழும்பும் புகையும், வேதம் சிவாகமம், திருமறை ஒலிகளும் அன்பர்களின் நல்லெண்ணங்களும் எங்கும் வியாபித்திருக்கின்ற இறைவனது அருட்சக்தியைத் தூண்டிக் கும்பத்தில் பிரகாசிக்கச் செய்யும். அப்போது கும்பம் முழுமையான தெய்வீக சக்தியோடு திகழும் இவ்வாறு யாக சாலையில் நடைபெறும் கிரியைகள் முற்றுப் பெற்றவுடன் அது சக்தி ஆலயத்திலுள்ள மூர்த்திகளுக்கு தருப்பைக்கயிறு, பொன், வெள்ளிக்கம்பிகளால் சேர்ப்பிக்கப்படும் அதன்பின் கும்பத்திலுள்ள நீர் கோபுரம், பிம்பங்களுக்கும் அபிஷேகம் செய்யப்பெறும், விமானகலசம் மூல மூர்த்தியின் சக்தியை உலகெங்கும் பரவச் செய்து நன்மைகளை உலகிற்கு உண்டு பண்ணும்.

**மகாபிஷேகம்:**

கும்பாபிஷேகம் செய்தபின் இறைவன் எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்கு முறைப்படி விசேட அபிஷேக ஆராதனைகள் செய்வித்தற்கு மகாபிஷேகம் என்று பெயர்.

**மண்டலாபிஷேகம்:**

கும்பாபிஷேகம் செய்த நாளிலிருந்து 45 நாட்களுக்கு மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகம் செய்வித்துப்பூர்த்தி செய்வதை மண்டலாபிஷேகம் என்று கூறுவர்.

**கும்பாபிஷேகபலன்:**

கும்பாபிஷேகம் பெருஞ்சாந்தி எனப்பெறும் திருஞானசம்மந்தர் சிறந்த ஆலய விழாக்களைக் குறித்து அருளச் செய்த பூம்பாவைத்திருப்பதிகத்தில் பெருந் சாகுதி விழாவைக் கண்டு களிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார் கும்பாபிஷேகம் செய்தல் செய்வித்தல் துணைபுரிதல் கண்டு களித்தல் ஆகியன மிக்க சிவபுண்ணியதாக நமக்கு ஈட்டித்தரும் சிறப்புடையன.

செஞ்சொல் ஞான வாரிதி,
செந்தமிழ் சொல் அருவி,
செந்தமிழ்கலைஞானி
மகாகவி சாகரம்,
கவிமாமணி,
வர்ணனைக்கலாநிதி,
மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்
பணிப்பாளர், சைசத்தமிழ் பண்பாட்டுக்கழகம்
அகில இலங்கை சமாதான நீவான்
வானொலி தொலைக்காட்சி நேர்முகவர்ணனையார்
ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகத் தத்துவம்

கும்பாபிஷேகம் என்பது கும்பத்தினால் அபிஷேகம் செய்தல் என்று பொருள்படும். ஸர்வ தேவதா ஸ்வரூபம் என ஆகமங்கள் கும்பத்தினை வர்ணிக்கின்றன. அதாவது எந்த ஒரு இறைவனையும் நாம் கும்பத்தில் எழுந்தருளச் செய்யலாம். கும்பத்திலே இறைவனை எழுந்தருளச் செய்து ஆலயத்திலே கருவறையிலிருக்கும் விக்கிரகத்திற்கு அபிஷேகம் செய்வதன் மூலம் இறைவனை நிலையாகக்குடியிருக்கச் செய்கின்றோம். பிரதிஷ்டை என்பது நன்கு நிலை நிறுத்துதல் என்று பொருள்படும் கும்பாபிஷேகத்தை பிரதிஷ்டை என்றும் சொல்கின்றோம் பிரபஞ்சத்திற்கு, அகிலாண்ட கோடி பிரம்மாண்டத்திற்கு அடிப்படையாக விளங்குகின்ற பேரருட்சக்தியை பிரபஞ்ச சக்தியை நமக்கு வேண்டிய வடிவத்தில் நமக்குரிய இடத்தில் சுரக்கச் செய்து பெற்றுக்கொள்வதற்காகவே கும்பாபிஷேகக் கிரியைகள் நடாத்தப்படுகின்றன.

விக்கிரகம் செய்யப்பயன் படும் கல்லிற்கு உயிர் இருக்கின்றது. அதனைத்தான் மாணிக்க வாசக சுவாமிகளும் கல்லாய் மனிதராய்ப்பேயாய்........ என்று திருவாசகத்திலே சிவபுராணத்திலே குறிப்பிடுகின்றன. ஆண்கல், பெண்கல், அலிக்கல் எனும் பேதங்களும் காணப்படுகின்றன சிற்பாசாரி உரிய ஆசாரங்களை, கட்டுப்பாடுகளை முறைப்படி கடைப்பிடித்து சிலை செய்யப்படும் திருவுருவை மனதில் தியானித்து அதன் தியான சுலோகத்தை உச்சரித்தவராக அத்திருவுருவில் லயித்த மனதுடையவராக அதை உருவாக்க வேண்டும். ஆகமங்களின் வழி நூல்களான சிற்ப சாஸ்திரங்கள் அளவுப்பிரமானங்களையும் அமைப்பு விதிகளையும் விரித்துக் கூறுகின்றன.

கருவறை மூன்று புறமும் மூடப்பட்டு முன்புறம் மட்டும் திறந்ததாக அமைக்கப்படும். மேலே விமானம் (துல்லியமான அளவு எனப்பொருள்படும்) அமைகிறது. ஆகாசத்திலே இருக்கின்ற பிரபஞ்ச சக்தியை ஸ்தூபியிலே இருக்கின்ற கலசங்கள் (அன்ரெனா, டிஸ்க் அன்ரெனா, ஏரியல்) கவர்ந்து இழுத்து மூல விக்கிரகத்திற்கு வழங்குகின்றன. இச்சக்தி அபிடேகங்கள் பூசைகள், பக்தர்களின் பக்தி மூலமாக மேலும் வலுவூட்டப்பட்டு நாம் வழிபடும் போது எங்களுக்குக் கிடைக்கின்றது. மனம் சக்தி பெற்று அமைதி அடைகிறது. இச்சக்தியின் காரணமாகவே மூல விக்கிரகத்தைப் புகைப்படம் வீடியோ எடுக்கக்கூடாது ஏனெனில் மேலர்கதிர்கள் சக்தியமைப்பை மாற்றி விடும் இதனால் தான் ஆலயத்திற்குள் கையடக்கத் தொலைபேசிகளையும் பயன்படுத்தக்கூடாது. அவற்றின் செய்மதி அலைகள் சக்தியமைப்பை மாற்றிவிடும் புராதன காலத்திலும் ஏன் இன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறையில் மின்குமிழ்களைப் பயன்படுத்துவது கிடையாது இறைவனுடைய விம்பமாகிய கருவறை விக்கிரகம் இவ்வாறு சக்தியின் அருளின் இருப்பிடமாக இருக்கிறது.

பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் சக்தி ஆகாசத்திலே தோன்றி வாயுவுக்கும் வாயுவிலிருந்து அக்னிக்கும் அக்னியிலிருந்து நீருக்கும் நீரிலிருந்து நிலத்திற்கும் படிப்படியாக இறங்கி வருகிறது. பிரதிஷ்டையில் அக்னி கும்பம் (நீர்) விக்கிரகம் (நிலம்) ஆகிய மூன்று இடங்களிலும் திருவருட்சக்தி பொலிவுற்று விளங்குகிறது. இறுதியில் அக்னியிலுள்ள சக்தி (யாகம்) கும்பநீரில் சேர்க்கப்பட்டு (ஒரு நூல் யாககுண்ட சிவாக்னியையும் கும்பத்தையும் இணைப்பதைப் பார்த்திருப்பார்கள்) அது அபிஷேகத்தின் மூலம் விக்கிரகத்திலே சேர்க்கப்படுகிறது யாகசாலையில் ஒன்றிலிருந்து 33 வரை ஓமகுண்டங்கள் அமைக்கப்படலாம். நவகுண்டம் அல்லது பஞ்ச குண்டம் சாதாரணமாகப்பயன் படுத்தப்படுகிறது யாகசாலையின் நடுவே வேதிகை எனும் மேடையில் பிரதான கும்பம் அமைத்து அதில் மூலமூர்த்தி ஆவாஹனம் செய்யப்பட்டுத்தினமும் மந்திர உச்சாடனம் மூலம் உருவேற்றப்படுவார் பிரதான குண்டத்தில் இருக்கின்ற சிவாக்னியில் தான் மூலமூர்த்தியின் பிரதான அம்சம் ஆவாஹனம் செய்யப்படும்.

மந்திரம், பாவனை, கிரியை, ஆகிய மூன்று சரியாக சிறப்பாக இருந்தால் தான் இச்சக்தியேற்றுதல் நிகழ்வு சிறப்பாக அமையும். கும்பாபிஷேகக்கிரியைகளின் போது யாகதரிசனம் செய்தலும் ஓமப்புகையைச்சுவாசித்தலும் மந்திர ஒலிகளைக் கேட்டலும், கும்பாபிஷேகத்தீர்தத்தைப் பருகுதலும் விக்கிரகத்தைத் தொட்டு எண்ணை சாத்துதலும் உடல் நலத்தையும் புண்ணியத்தையும் ஒருங்கே தருவன. இவ்வாறு எல்லாம் வல்ல இறைவனை எழுந்தருளச் செய்து அருள்பெறுகின்றஅ ற்புத நிகழ்வாகக் கும்பாபிஷேகம் திகழ்கிறது. 12 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுதல் அதி அற்புதமான பலன்களைத்தரும் என்பது அனைத்து நூல்களினதும் ஞானிகள் மகான்களினதும் முடிவாகும். அப்பேற்றில் நாமும் திளைப்போமாக இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

பிரம்மச்சாரி யாகரத் சைத்தனியசுவாமிகள்
சின்மயாமிசன்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## ஆலய கிரியை முறைகளுள் நவசந்திப்பண்கள்

ஆலய கிரியைகளில் இசை தெய்வீகக் கலைகள் அனைத்தும் சிறப்பாக இசைகளையும் நடனத்தையும் போற்றி வளர்ந்தனர். அவற்றிற்கு உறைவிடமாக அக் காலத்தே விளங்கியவை கலைகள், இவை திருக்கோயில்களை ஒட்டியே வளர்ந்தன. ஆலயங்களில் தினந்தோறும் நடைபெறும் கிரியைகளிலிருந்து இசை தொடர்பான சான்றுகள் வலியுறுத்தப்படுகின்றன.

சங்கீதம், நிருத்தியம், வாத்தியம், ஆகிய மூன்றும் கோயில்களில் கிரியைகளின் போது இசைக்கப்பெற்ற இசைச் செல்வங்களாகும். காமிக ஆகமத்தில் இவை பற்றிய உண்மைகளைக் காணலாம். நாதஸ்வரம் வாத்தியம் எமக்கு கோயில் மூலமே கிடைத்த வாத்தியமாகும். பழமையும் சிறப்பும் வாய்ந்த மங்கள வாத்தியமாகும் திருக்கோயில்களில் நாதஸ்வர வாத்தியத்தில் கீர்த்தனைகள், தேவாரங்கள், திருப்புகழ் ஒவ்வொரு இராகத்தின் ஆலாபனை, வர்ணம், போன்ற பல உருப்படிகள் நாதஸ்வரத்தில் வாசிக்கப்படுகின்றன. கூடுதலாக திருவிழாக்களின் போதும் இசை வெளிப்படுத்தப்படுகிறது. திருக்கோயிலிருந்து கிடைக்கப்பெற்ற மற்றோர் வாத்தியம் பஞ்சமுக வாத்தியம் இவ்வாத்தியம் இறைவனின் ஐந்து முகங்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன. மத்தியிலுள்ள முகம் மஸத்யோக ஜாதகம் எனவும், மற்ற நான்கும் முறையே ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், என அழைக்கப்படும். இவ் வாத்தியம் இன்றும் திருவாரூர் கோயில் கிரியைகளின் போது வாசிக்கப்படுவதைக் காணலாம். இவ் வாத்தியம் குடமுழா என்றும் பண்டைத் தமிழிசைக் கருவியிலிருந்து அபிவிருத்தி அடைந்து வந்ததாகும். அருணகிரிநாதர் தமது பூத வேதாள வகுப்பில் குட பஞ்சமுகி என இவ் வாத்தியத்தைக் குறிப்பிடுகிறார் சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயிலில் பஞ்சமுக வாத்தியம் வைத்து வாசிக்கப்படுகிறது. அடுத்து சர்வ வாத்தியம் என்பது திருவிழாக் காலங்களில் காமிகா ஆகம முறைப்படி அத்தருணத்திற் கேற்ப இராகம் தாளம் ஆகிய பண்களில் வாத்தியங்களை வாசிப்பார்கள் இன்றும் இம் முறை திருக்கோயில்களில் மின்பற்றப்படுகிறது கும்பகோணத்திற்கு அருகிலுள்ள தாராசுரம் கோயிலின் பலிபீடம் இசைச் சுரங்களால் செதுக்கப்பட்டிருக்கிறது மதுரை திருக்கோயிலிள்ள ஒரு இசைத் தூணில் சப்த ஸ்வரங்களை இன்றும் எழுப்பலாம். இதிலிருந்து ஆலயங்களில் இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சண்பகராம நல்லூராய் உள்ள கோயிலில் கருங்கல்லால் செய்யப்பட்ட இசைக் குழாய் ஒன்று காணப்படுகிறது அக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழாயினை ஒரு முனையை ஊதினால் எக்காளம் என்று காற்று வாத்தியம் போலும் மறு முனையை ஊதினால் சங்கு வாத்தியம் போலும் நாதம் வெளிவரும் இரு ஒரு சிறந்த சாதனையாகும். இரண்டு பேர் இருமுனையிலும் நின்று மாறி மாறி ஊதியால் ஏற்படும் நாதம் மிகவும் இனிமையாக இருக்கும் திருவிழாக்காலங்களில் வாசிக்கப்படும் எனவே இசைத்தூண்கள், சிற்பங்கள் இசைக்கருவிகள் பண்டைய இசைக்கும் கோயிலுக்கும் பெருமையைத் தேடி தருகின்றன.

ஆலயக்கிரியை முறைகளில் வாத்திய இசையைப் போன்று ஆலயங்களில் நடைபெறும் நித்திய, நைமதித்திய கிரியைகளின் போது அவ்வப் இடங்களுக்கு ஏற்ப ஓத வேண்டிய திருமுறைகளை ஆசார சீலராய் பண்ணோடு பாடுவதே சிவ புண்ணியமாகும்.

ஆலய மகோற்சவ காலங்களில் அவ்வவ்இடங்களுக்கு ஓத வேண்டிய திருமுறைகளே பண்ணோடு பாடப்படுகின்றன. மகோற்சவ காலங்களில் கொடியேற்றும் பொழுது கொடிக்கவி பாடப்படுகிறது பின்பு சமஸ்த்த தேவதாறூஹனம் படித்து பின்பு அந்தந்த தெய்வங்களுக்குரிய தாளம் உதாணரம் கணபதி தாளம் படித்து பின்பு அவருக்குரிய வேதம் பண், தாளம், வாத்தியம், நிருத்தம்படித்து பின்பு உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய கொடிக்கவி பாடல்கள் பாடி சகலமங்களவாத்யம் முழங்க கொடியேற்றப்படும். நவசந்திப் பண்களும் பாடப்படுகின்ற பண்புகள்காணப்பட்டன. நாதஸ்வரம், பெரிய மேளம் எனப்படும் தவில் கி.பி. 17ம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பரதசங்கரிகம என்னும் நூலில் ஒரு வெண்பாவில் நாதஸ்வரம் பற்றிய விளக்கம் காணப்படுகிறது. நாதஸ்வரக் கருவிகளில் பாரி திமிரி வகைகள் இன்று வழக்கில் இருப்பது பாரி ஆகும்.

ஆலயக்கிரியைகளில் நவசந்திகளில் விதிக்கப்பெற்ற பண் வகைகளே பாடப்படுகின்றன அவையாவன.

01. பிரமசந்தி - மேகராகம்
02. இந்திரசந்தி - காந்தாரம்
03. அக்கினி சந்தி - கொல்லி
04. யமசந்தி - கௌசிகம்
05. நிருதி சந்தி - நட்டபாடை
06. வருண சந்தி - கீதாமரம்
07. வாயு சந்தி - தக்கேசி
08. குமேர சந்தி - தக்கராகம்
09. ஈசான சந்தி - சாளபாணி

கோயில் நித்திய பூசைகளில் திருவனந்தல் பூஜையிலிருந்து இரண்டாம் காலப் பூஜை வரை முறையே பூபாளம், வசந்தம், சத்ரசாவேரி,ஆரவி,சுருட்டி,ஹிமணிராங்கு,பிலஹரி, தனியாசி , அசாவேரி, முகாரி, மந்தாரி, பூர்வீக கல்யாணி கல்யாணி ஆகிய இராகங்கள் நாதஸ்வரத்தில் இசைக்கப்படும். அர்த்த ஜாமப் பூஜையின் போது கம்பீரமான சிங்காரமான ராகங்கள் வாசிக்கப்படும் பிரமோற்சவ காலங்களில் குழுக்களாக நாதஸ்வரங்கள் மேள தாளங்களுடன் இசைக்கப்பெறும். ஒவ்வொரு கொடியேற்றத் திருவிழா நடை பெறும் ஆலயங்களில் கொடித்தம்பத்தடியில் கணபதி தாளம், மூஷீகதாளம், விருதிபதாளம், சிம்மதாளம், மயூரதாளம் என்ற வரிசையில் மகோற்சவ கிரியை நியதிகளின் படி ஒவ்வொரு தாளத்திற்கும் நவசந்திகளில் ஓத வேண்டிய பண்களும் சைவ சமயமம் மூவரினால் அருளிச் செய்யப்பட்ட தேவாரங்களை தெரிந்து உரிய இராகத்தில் தாளத்துடன் தொகுக்கப்பட்டுள்ளன. கொடிறேற்ற முன் கொடிக்கவி சேந்தனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளிய திருப்பல்லாண்டு சேர்க்கப்பட்டு உற்சவ கால கிரியைகளின் போது சண்டேஸ்வரர் அனுக்கிரக உற்சத்தில் மஹாகும்பாபிஷேக தினத்திலும் திருக்கதவு திறக்க திருநாவுக்கரசு நாயனார் பாடிய திருப்பதிகம் சேர்க்கப்பட்டு இறுதியாக தீர்த்தோற்சவத்தில் சூர்ணம் இடிப்பதற்கு ஓதப்படும் மணி வாசகர் அருளிய திருப்பொற் சுண்ணமும் சேர்த்து பாடப்படுகிறது. இங்கும் இசை முன்னரிமை வகிப்பது குறிப்பிடத்தக்கது. நாதஸ்வர வித்துவான்களின் இசை வித்துவான்களை வெளிப்படுத்துவதற்குரிய ஒரு இடமாகவும் ஆலய கிரியைகள் விளங்ககின்றன. ஒவ்வொரு ஆலயத்தின் மீதும் ஊஞ்சல் பாடல்கள் ஓதப்படும். எனவே அக்காலத்தில் இசைப்பயிற்சிக்காக ஆயிரங்கால் மண்டபம் அமைக்கப்பட்டமை. அதுமட்டுமல்லாது அக்காலந் தொட்டு கலைகளும் திருக்கோயில் கிரியைகளின் பழைய புனிதத்தன்மையின் சிறப்பையும் அடையும் என்பது உறுதி. ஆலய கிரியை முறைகளில் நவசந்திப்பண்கள்

ஆலய கிரியை முறைகளில் பன்னெடுங்காலமாக நவசந்திப் பண்களும், நவசந்திக்கவுத்துவங்களும் இசைக்கப்பட்டு வருகின்றன. இதல் நவ என்பது ஒன்பதைக் குறிக்கும் சந்தி ஒவ்வொரு திக்கையும் குறித்து நிற்பது அந்த ஒன்பது திக்குகளிலும் தெய்வங்களுக்குரிய பண்புகளையும் ஒப்பிடுதல் மகோற்சவ காலமாகிய கொடியேற்றத்திருவிழா நடைபெறும் முதல் கொடியேற்றத்தன்று கொடிக்கவி பாடல்கள் பாடப்படும் பின்னர் சகல மங்கள வாத்தியங்கள் முழங்க கொடியேற்றப்படும்.

பின்னர் கொடித்தம்பத் தடியில் ஓத வேண்டிய திருமுறைகள் ஓதப்படும். பின்னர் கணபதி தாளம், மூஷீக தாளம், சிம்மதாளம், மயூரதாளம் போட்டு திருமுறைகள் உரிய இராகத்தில் பண்களுக்கேற்றவாறு இசைக்கப்படும். பின்பு நவசந்திகளில் ஓத வேண்டிய தேவாரப்பண்கள் இசைக்கப்படும் பிரம்மசந்தி, இந்திரசந்தி, அக்கினிசந்தி, குபேரசந்தி, இயமசந்தி, நிருத்திய சந்தி, வருணசந்தி, வாயுசந்தி, ஈசான சந்தி போன்ற ஒன்பது சந்திக்குரிய பண்கள் உரிய இராகங்களில் ஓதப்படுவது நாமறிந்ததே.

**ஆலய மகோற்சவத்தின் போது தம்பத்தடியில் ஓத வேண்டிய திருமுறைகள்**

| **தாளங்கள்** | **திருமுறைபாடல்** | **இராகம்** | **பண்** | **தாளம்** | **பாடியவர்** |
|---|---|---|---|---|---|
| கணபதிதாளம் | மடையில் வளைய | காம்போதி | ராகம் | ரூபகம் | சம்மந்தர் |
| | மாந்தர்தம் பானறு.. | காம்போதி | தக்கராகம் | ஆதி | சம்மந்தர் |
| | மத்தம் மதயானை.. | காம்போதி | தக்கராகம் | ஆதி | சுந்தரர் |
| மூஷீக தாளம் | இடரினுந் தளிரினு | கேதாதகௌிகை | காற்தாரபஞ்சம | ஆதி | சம்மந்தர் |
| சிம்மதாளம் | மையாடிய கண்டன் | கம்பீரநாட்டை | நட்டபாடை | ரூபகம் | சம்மந்தர் |
| மயூரதாளம் | விண்ணிலான | மாயா மாவைகௌளை | இந்தளம் | ரூபகம் | சம்மந்தர் |

நவசந்திகளில் ஓதவேண்டிய தேவாரம் வேவாரப் பண்கள்

| சந்தி | தேவாரம் | இராகம் | பண் | தாளம் |
|---|---|---|---|---|
| பிரம்மசந்தி | அன்னாமலி பொழிப்புடை | நீலாம்பரி | மேகராகக் குறிஞ்சி | கண்டசாபு |
| இந்திரசந்தி | பூசஇனியது நீறு | நவரோய் | காந்தாரம் | ரூபகம் |
| அக்கினிசந்தி | கந்தமார் அகிலொடு | நவரோய் | கொல்லி | மிஸ்ரசாபு |
| இயமசந்தி | வாழ்க அந்தணர்" | பைரவி | | ஆதி |
| நிருதிசந்தி | அங்கமும் வேதமும் | கம்பீரநாட்டை | நட்டபாடை | ஆதி |
| வருணசந்தி | மட்டிட்ட புன்னகையில் | நாதநாமக்கிரியை | சீகாமரம் | திரிபுடை |
| வாயுசந்தி | வேதம் ஓதிவெண்று | | தக்கேசி | |
| குபேரசந்தி | கொடியுடைமார்பினர் | காம்போதி | தக்கராகம் | ஆதி |
| ஈசானசந்தி | பாடன்மறை சூடன்மதி | பந்துவராளி | பாளாபாணி | கண்டசாபு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமுறை கண்ட புராணப்படி நவசந்திப்பண்களும் தாளங்களும்**

மேகராகக் குறிஞ்சி காந்தோம் கொல்லி கௌசிகம், நட்டபாடை, சீகாமரம், தக்கேசி தக்கராகம் காந்தாரபஞ்சமம் ஆகியன நவசந்தி பண்கள் பிரம்மச அர்த்தவரண பிருங்கிணி மல்ல, நவ, பலி, கோட்டாய மூஷிக தாளங்கள் நவசந்தித் தாளங்களாகும்

இவையாவும் ஆதினங்களாலும் ஓதுவார் மூர்த்திகளாலும் பண்ணிசை ஆய்வு ஸ்தானபனங்களாலும் இக் காலத்தில் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் ஆடும் கொழுது அவருடைய காற்சிலிம்புகழன்று மேலே சென்று பின் சத்தத்துடன் விழுந்தது தாளம் ஆயிற்று நவசந்தி தாளங்கள் (10ம் நூற்றாண்டு முதல்)

தா என்றால் சிவன் "ள" என்றால் சக்தி (சிவ சக்தியின் கூட்டுறவே தாளம் ஆலயங்களிலும் தாளங்கள் உண்டாக்கப்பட்டன. இவற்றுள் மிகவும் சிறப்பாக போற்றப்படுவது நவசந்தித்தாளங்களாகும் இராச இராச சோழனின் ஆட்சிக் காலத்தில் கி.பி. (1985 - 1017) இந்த நவசந்தித் தாளங்கள் வழக்கத்தில் வந்திருக்கின்றன. என்று பீ.சாம்பமூர்த்தி கூறுகின்றார். இந்த நவசந்தி தாளச்சடங்கு முறைகள் ஆயிரம் ஆண்டுகளாக கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. தற்காலத்தில் இந்த நவசந்தித் தாளங்கள் அனேகமாக மறைந்து விட்டன. என்றே கூறலாம் நவ சந்திகள் ஒன்பது திக்குகளிலும் ஒன்பது தாளங்கள் உள்ளன. பிரமோற்சவத்தின் போது ஒவ்வொரு சந்திக்குமென்று தனித்தனியாக தாளம், இராகம், பண், நாட்டியம், இசைக்கருவி, சுலோகம் ஆகியவை மரபாக அமைந்துள்ளன.

பிரம்மசந்திக்கு (மத்தியபாகம்) பிரமதானம், மேகராகக்குறிஞ்சி, பஞ்சமப்பண், கமலாநிருத்திய நடனம் நிகழ்த்தப்படும்.

| சந்திகள் | தாளம் | இராகம் | பண் | திருத்தியம் |
|---|---|---|---|---|
| பிரமசந்தி | பிரமதாளம் | மேகராகக்குறிஞ்சி | பஞ்சமம் | சமபாதம் |
| இந்திர | இந்திரதாளம் | காமேசம் | காந்தாரம் | பூஜாங்க |
| அக்கினி | மத்தாபனதாளம |  | கொல்லி | மத்தள |
| இயம | பிரிங்கி தாளம் |  | கௌசிகம் | தெண்டபாதம் |
| நிருதி | நைரதிதாளம் |  | நட்டபாடைப்பண் | பூஜாங்காத்ராகம் |
| வருண | நவதாளம் |  | சீகாமரம் | குஞ்சிதம் |
| வாயுசந்தி | பலிதாளம் | தக்கேசி |  | பூஜாங்கலிதம் |
| குபேரசந்தி |  |  |  | அருண்கிதபாத |
| ஈசான | டக்கரிதாளம் | சாளாபாணி |  | பிரம்பாரிகம் |

இவற்றில் ஒரு சந்திக்கு மறு சந்தியில் மாற்றியிசைத்தல் கூடாது என்பது மரபுவழி வந்த வழக்கமாகும்.

**நவசந்தி கௌவுத்துவம் (ஆலய வழிபாடுகளில் நாட்டியம்)**

கோயில்களைப்பற்றி வழிமுறைகளை வகுக்கும் ஆலயசாஸ்திரங்களை இறை வழிபாட்டில் நாட்டியம் ஒரு அங்கமாக குறிப்பிடப்பட்டுகள்ளது பன்னெடுங்காலமாக கலைகள் சமயத்துடன் இணைந்து வளர்ந்துள்ளன. இவ் வகையில் ஆலயங்களில் மங்கையர் நடனம் புரிந்தனர். இவர்களை தேவதாசிகள் தேவர் அஷயார்கள் எனக் குறிப்பிட்டனர். ஆடல் பாடல்களில் திறமை பெற்று நாராயணன் கோயில்களின் முன் ஆடவது அவர்களது குலத் தொழில் என்று வரலாறு கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் வழிபாட்டு முறைகளுக்கேற்ற வாறு தேர்ச்சி பெற்று தெய்வ சந்தியில் முத்திரை பெற்று நகர்த்தகி ஆக முடியும் திருவிழாக்களின் போது சுாமி புறப்பாட்டிற்கு முன்பும் கும்பலாத்தி எடுத்தல், சாமரம், வீசுதல், நாள் தோறும் பூசை முடிவில் பரமன் திருவீகளில் வலம் வரும் போதும் சந்நிதி முன் நடனம் புரிதல் இவர்களது நடனங்களில் வீரம், வேகம், கம்பீரம் இருக்கும் வைணவ கோயில் நடனங்களில் நளினமும் பெண்மையும் இருக்கும் வடமொழியில் இருக்கும் பதங்கள், வர்ணங்கள் ஜந்தினி மொழிகளில் இருக்கும் .இவற்றின் பொருள் நாம் அறிந்தவர்கள் தான் தகுந்தபடி நாட்டியம் செய்ய இயலும் சமயந்திற்கம் கலைகளுக்கும் பிரிக்க முடியாத தொடர்பு காணப்படுகிறது எனவே நித்திய நைமித்திய கிரியைகளில் ஆடலும் பாடலும் நன்கு இடம் பெறும் நவசந்திக் கிரியைகள் குறிப்பிடலாம். ஆலயக்கிரியைகளில் நவசந்திப்பண்களும் நவசந்திக் கௌவுத்துவங்களும் பற்றியும் எனும் தலைப்பின் கீழ் ஆலயக்கிரியைகளுடாக இசை முக்கியம் வகிக்கின்றமையும் ஆலயமும் இசையும் பன்னிப்பிணைந்து காணப்படுவதும் குறிப்பிடத்தக்வையாகும். மகோற்சவ காலங்களில் எண் திக்கு பாலிர்களையும் வரவழைத்து அவர்களுக்கு ஏற்ற அனுட்டானங்களை அளித்து (எண்திக்பாலகர்களை) மகிழ்ச்சியில் தாளம், பண், வேதம், நிருத்தியம் போன்ற நவசந்திப்பண்கள் நவசந்திக் கவுத்தளங்கள் ஆடப்பட்டும் இசைக்கப்படுவதும் காணக்கூடியதாகவுள்ளது.

தெய்வங்களை மகிழ்ச்சிப் படுத்தும் போது எமக்கு உரிய பலன்கள் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. மகோற்சவ காலங்களில் இசைக்கப்படும் நவசந்திப்பண்கள் உரிய ராகத்தில் பாடப்படுவதும் நாதஸ்வரத்தில் வாசிக்கப்படுவதற்கும் ஙநட்டிய நர்த்தகிகளுக்கும் பயிற்சி அளிக்கவும் உதவிகளை செய்யவும் வேண்டும். தற்காலத்தில் மருவிக்கொண்டு செல்லும் நிலை காணப்படுகிறது எனவே இவற்றைப்பேணி இன்றைய கால கட்டத்தில் அவதாணிக்க முடிகிறது மகோற்சவ கிரியைகளின் போது நவசந்திப்பண்கள் உதாரணமாக யாழ் கண்டி வீதி ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயம் சுன்னாகம் கதிகைமலைச் சிவன் கோயில் போன்ற ஆலயங்களில் நடைமுறையில் காணப்படுகிறது. இக்காலத்தில் இவற்றைப் பேணிக் காத்திடவும் அழியாது பாதுகாக்கவும், அரசும் உயர்கல்விப் பீடங்களும் கமயஸ்தானங்களும் அனைத்தும் ஒருங்கே செயற்பட்டு பண்ணிசைக்கிரியை நாட்டில் சிறப்பாக பர்பிட முன்வரவேண்டும். ஒவ்வொரு கல்லூரியிலும் பண்ணிசை உருவாக்கப்படல் வேண்டும் இப் பெரும் பணியை அறிந்து சைவ உலகம் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டும். என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். இப்பணியானது இந்திய மடாலயங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் சிறப்பாக உள்ளது என்பதை வெளிப்படையாகக் கூற முடியும்.

இவ்வாறாக நவசந்திப்பண்கள் இனிவரும் இளம் சந்ததியினருக்கும் நவசந்திப் பண்களின் மகத்துவம் பற்றி அறிந்து கொள்வதனூடாக இதனை எதிர் காலத்திலும் மருவாது பேணிப்பாதுகாத்துக் கொள்வதோடு எதிர் காலத்தில் இவ் இசையினூடாக சிறந்த சூழலைக்கட்டி எழுப்புவதற்கு இவ் நவசந்திப் பண் தொடர்பான அறிவு இன்றியமையாததாக காணப்படுகிறது.

செல்வி தியாகராஸா கமலலோஜினி
கிழக்குப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

## இந்து மத நடைமுறையில் அறிவியலும் உளவியலும்

அறிவியல் என்பது பகுத்தறிவினாலும் சோதனையினாலும் உண்மைகளை கண்டறிவது என பொருள்படுகிறது. உண்மைகளைக் கண்டறிவதே அறிவியல் எனப்பட்டது. சமய நம்பிக்கை உடையோன் அறிவியல் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என ஒதுங்கி விடுவது வழக்கம் ஆனால் சமயத்தில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் அறிவியலும் சமயமும் எதிரிகள் அல்ல. நெருங்கிய நண்பர்கள் என்று கருதுகின்றனர். சென்ற நூற்றாண்டின் மிகப்பெரிய அறிவியலாளரான ஐன்ஸ் ரெயின் சமயம் இல்லாத அறிவியல் முடமானது. அறிவியல் இல்லாத சமயம் குருடானது என்று கூறியுள்ளார். பௌதீகவியல் நோபல் பரிசு பெற்ற மில்லிகென் மனித நலனையும் மனித முன்னேற்றத்தையும் இரண்டு தூண்கள் தாங்கியுள்ளன ஒன்று சமய நொக்கு மற்றையது விஞ்ஞான நோக்கு எனக் கூறுவர். சமயமும் விஞ்ஞானமும் வெவ்வேறு வழிகளே மனிதனுக்கு சேவை செய்வதாக அமைந்துள்ளன. எனவே பொதுவான அடிப்படையில் இவற்றினிடையே எவ்வித வேறு பாடுகளும் ஏற்படத் தேவையில்லை பொதுவாக அறிவியல் மனிதனுடைய பௌதீக தேவைகளைக் கவனிக்கின்றன. சமயமும் மிக உயர்ந்த தேவைகளான சத்தியம்,சிவம், சுந்தரம், தர்மம், ஆகியவற்றைக் கவனிக்கிறது. விஞ்ஞானி பிரபஞ்சத்தைப் பற்றியே ஆய்வு செய்கின்றான். சமயமும் பிரபஞ்சத்தையே ஆய்வு செய்கின்றது அறிவியல் அதிகாரம் ஆன்மீகம் என்ற நூலை ஞானி தொகுத்து வெளியிட்டுள்ளார் அதில் ஆன்மீகத்தையும் அறிவியலையும் இணைப்பது போலித்தனமானது எனக் காட்ட முற்பட்டுள்ளான். ஆனால் மேலைத்தேய ஆய்வாளர்கள் ஆங்கில மொழியில் சமயத்திற்கும் அறிவியலுக்கும் நெருங்கிய உறவு உள்ளதாகவும் காட்டமுனைகின்றனர் எனவே இந்து மதத்திற்கும் அறிவியலுக்கும் தொடர்பு உண்டு. என்பது தெளிவாகிறது.

இந்து மத நடைமுறையில் காணப்படும் சைவ சித்தார்ந்த கோட்பாடு அறிவியல் ரீதியாகவே பேசப்படுகிறது. பிரபஞ்சம், ஆன்மா, பதி, பற்றிய ஆய்வாகவே அமைகிறது. இந்து மதத்தவர்கள் சோதிடம் வானிலை பற்றிய கொள்கைகள் கோட்பாடுகளைப் பெரிதும் பின்பற்றுபவர்களான உள்ளானவர் இந்து மதங்கள் திருமண நடைமுறைகளைச் சோதிட சாஸ்தி பஞ்சாங்க முறைப்படியே பின்பற்றுகின்றனர்.

வீடு, வள்வு பொருத்தம் பார்த்து மனையினை அமைக்கின்றனர். பஞ்சாங்க முறை என்பது கணித்தல் முறையினை உடையதே. பஞ்சாங்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்துக்களின் நடைமுறை ஆகும். இந்து மதத்தவர்கள் அஸ்மா, நீரிழிவு, இரத்த் அழுத்தம் ஆகியவற்றை நீக்கும் யோகாசனப் பயிற்சிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையில் பயிற்றுவித்தும் பயனுறும் வருவார்கள் ஆவர் யோகாசனப் பயிற்சி என்பது அறிவியலுடன் தொடர்புபட்டதே இந்து மதத்தவர் விரதம், நோன்பு, இருப்பதை நடைமுறைப்படுத்துவர் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு விரதம் அதிமுக்கியமான தொன்று விரதம் இருப்பதால் மனம் சுத்தி அடையும் நோயற்ற வாழ்வை வாழமுடியும் கோயில்களின் விக்கிர அமைப்பு கோயில்களின் கட்டடக்கலை என்பனவும் ஆகம சாஸ்திர விதிப்படியே அமைகின்றன.

இன்றைய கல்விய முறையில் எந்தக் கற்கை நெறியிலும் அறிவியல் இருப்பதைக் காணலாம். அறிவியல் நோக்கில் தான் கற்கை நெறிகள் புகட்டப்படுகின்றன இந்து மதத்திற்கும் அறிவியலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை இன்றைய கல்வி முறை மூலம் காண முடிகிறது.

இந்து மக நேர்த்திக்கடன்கள் பல வேதகால வேள்வியை அடிப்படையாகக் கொண்டு தோன்றி வளர்ந்த நிலை பெற்று இருப்பவை. வேள்வியில் நாம் கொடுப்பது முனைராகவும் ஏதோ ஒன்றை அவாவி நிற்பதும் கேட்டதும் பின்னராகவும் இருந்தது. நேர்த்தியில் நாம் கேட்டுப் பெற்றுக் கொள்வது முதலாவதும் கொடுப்பது பிறகாகவும் இருக்கிறது. மனிதர்கள் எதை இறைவனுக்கு கொடுக்க விரும்புகிறார்கள் என்பது அவர்களது ஆளுமையின் தரத்தைப் பொறுத்தது.

ஆயினும் இறைவனுக்கு ஏதோ ஒன்றைக் கொடுப்பதாக நேரிடும் போது மனத்தின் மறை எண்ணங்கள் நீங்கி நம்பிக்கை வருகிறது. இது அறிக்கை சிகிச்சையுடன் ஒப்பு நோக்கத்தக்கது ஆண்மீக நம்பிக்கை இன்னொரு வகையில் அர்த்தம் காணும் சிகிச்சையாவும் ஆகிறது. உடல் நோய்கள் பலவற்றோடு உள்ளம் நிறையவே சம்மந்தப்படுவதால் நோய்கள் தீருவதில் நேர்த்தி பெரும் பங்கு வகிக்கிறது.

நேர்த்திகள் சிலவற்றில் (அங்கப் பிரதிஷ்டை) தோல்வளச் சிகிச்சையும் யோகாசன சாயலும் உள்ளடக்கியது உள ஆரோக்கியத்தை இவை மேம்படுத்துவன என்பது உளவியலாளர்களின் கருத்து.

வேறு சில நேர்த்திக்கடன்கள் பாடலும் ஆடலும் சம்மந்தப்பட்டது. இவை முறையே (usictherapy Dance therapy) என்ற பெயரில் உலகம் முழுவதும் வியாபித்திருக்கும் சிகிச்சை முறைகளோடு ஒப்பிடத்தக்கது.

நேர்த்திக் கடன்களுக்காக நாடகம் செய்தல் ஒரு வழக்கு மேற்குலகில் நாடகம் மிக பிற்காலத்தில் தான் ஒரு சிகிச்சையாக அறிமுகமாகிறது சில நேர்த்திகளில் காணப்படும். சிறிய வேலையும் ஒரு சிகிச்சையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது பாடல், ஆடல், நாடகம், சிற்பம் போன்ற கலை வழி சிகிச்சை அனைத்தும் சேர்ந்து வெளிப்பாட்டு முறைச்சிகிச்சை எனப்படுகிறது. நேர்த்திகள் பலவற்றிலும் ஊடு கலந்து காணப்படுகிற உச்சாடனம், தியானம், சுவாசப்பயிற்சி ஆகியன சிறந்த சார்ந்த வழிமுறைச் சிகிச்சைகள் ஆகும். நேர்த்திகள் பலவற்றிலும் ஊரு கலந்து காணப்படுகிற உச்சாடனம் தியானம், சுவாசப்பயிற்சி ஆகியன சிறந்த சார்ந்த வழிச்சார்ந்த வழிமுறைச் சிகிச்சைகள் ஆகும்.

நேர்த்திகள் சிலவற்றிலும் தமது உடலை வேதனை தெரியாத நிலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

ஆக்குகின்ற தன்மை காணப்படும் இது தலங்களின் அடியாக தோன்றியிருக்கலாம் இது ஒருவரது சுய கணிப்பை உயர்த்துகிறது சிலர் குற்ற உணர்வில் இருந்து விடுபடவும் உதவலாம்.

பொதுவாக நேர்த்தி என்பது ஒரு விலை கொடுத்தல் ஆகிறது சிலர் சமூகத்தில் மீண்டும் இணைவதற்கான வழியையும் அவை தோற்று விக்கின்றன. நெருக்கீட்டுக்குப் பிறபட்ட மனவடு தோன்றாமல் தடுப்பதில் நேர்த்தி முக்கிய பங்கு வகிக்கிறது எல்லா நேர்த்திகளும் மக்கள் தமது கஸ்ட காலத்தின் பயணம் செய்ய உறுதுணையாகின்றது.


நேர்த்திக் கடன்கள் பயனுள்ளவை என்று உளவியல் அறிவு அழுத்திக் கூறினாலும் ஆன்மீக நோக்கில் நிஷ்காமிய வழிபாடே சிறந்தது ஆரோக்கியம் குறைந்தவர் காமியபூஜை செய்ய ஆரோக்கியம் நிறைந்தவர் எல்லாவற்றையும் சிவர்துபணம் செய்வர்.

கோபாலசிங்கம் யோகநிருபன்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி
உள்ளகப்பயிற்சி ஆசிரியர்
கோப்பாய் மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## சமுதாய நெறிப்படுத்தலுக்கு சமயத்தின் முக்கியத்துவம்

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது .........எனும் கூற்றின் உட்பொருளினை எம்முள் ஏற்று அரிதான மானிடப்பிறப்பு எடுத்துள்ள நாம் எல்லோரும் பயனுள்ள வாழ்வாக எமது வாழ்க்கைக் காலத்தை அர்த்தமுள்ளதாக அமைத்துக் கொள்ளுதல் ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும். ஆதியும் அந்தமும் இல்லாத எமது மதம் மக்களை நெறி பிறழாதவர்களாக சமூகத்திற்கு பயனுள்ளவர்களாக வாழ்ந்திட வேண்டும் என்பதற்கென பல வழிமுறைகளை ஏற்படுத்தி உள்ளன. அதாவது மனிதனின் தனிப்பட்ட வாழ்வு தொடக்கம் பொது நிலை வாழ்வு வரையுமான சகல படிநிலைகளிலும் அவனது எண்ணமும் செயலும் சிறப்பாக இயங்கிட சமய மார்க்கங்கள் உறுதுணை புரிகின்றன. எம் முன்னோர் சமயத்தினூடாக இறைவனை சாட்சியப்படுத்தி கூறிடும் எக்கருத்தையும் எவரும் மறுபரிசீலனை செய்வதுமில்லை மறுப்பதுமில்லை அதனால் அவர்கள் பெரியோருக்கு கட்டுப்பட்டவர்களாகவும் சமூகத்துக்கு பயனுள்ளவர்களாகவும் இருந்தனர். ஆனால் அந்நிலை எம்மிடையே தற்போது குறைவடைந்து செல்வது அழிவு நிலை நோக்கிய பயணிப்பாகும்.

எமது மதம் நான்கு யுகங்களை வகைப்படுத்தி மனிதன் அதன்வழி ஒழுகி முத்தி இன்பத்தை பெற்றிட வழியமைத்துள்ளன. அவையாவன கிருத யுகம், திரேதாயுகம், துவாரபரயுகம், கலியுகம் என்பன ஆகும். இந் நான்கு யுகங்களுக்கும் முறையே தவம், தானம், யாகம், பக்தி, ஆகிய நான்கு மார்க்கங்களையும் குறிப்பிடுகிறது. எமது மூதாதையர் காலத்தில் இந்த நான்கு வகையான மார்க்க முறைகள் வலுவான கட்டுக்கோப்புக்குள் சகல தரத்தினாலும் பேணப்பட்டு வந்துள்ளமையை எமது பண்டைய வரலாற்று ஆவணங்கள் மூலமாக அறிந்திடலாம். ஆனால் அந்நிலை தற்போது மருவி வந்துள்ளமையை கண்டிடலாம். இத்தகைய நிலைமாற்றத்திற்கு காரணங்களாக ஆன்றோர் கருத்துக்களை கவனத்தில் கொள்ளாதமை நானே முதன்மையானவன் எனும் தலைக்கனப் போக்கு சுயாலத் தன்மை பொருளாதாரப் பெருக்கம் முறையற்ற கல்வி நிலை, மேலைத்தேய கலாச்சார தழுவல், விட்டுக்கொடுப்பற்ற தன்மை பகை உணர்வு, போட்டி பொறாமை....... எனும் காரணங்களினால் அரிதான மனிதப் பிறப்பு எடுத்துள்ளவர் தடம் புரளவும் தப்பிலியாகவும் வாழ்ந்திட தலைப்பட்டமையால் மகிமையான மனித வாழ்வுக்கு களங்கம் ஏற்படலாயிற்று ஆனால் எமது மூதாதையர்களை ஒழுக்க நெறியாளர்களாக திகழ்ந்திட வைத்தமைக்கான பிரதான மார்க்கமாக சமய விழுமியங்களும் பழக்க வழக்கங்களுமே மூலகாரணமாக அமைந்துள்ளமை மறுப்பதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தசாப்தங்களுக்கு முன்னர் எம்மிடையே சலுகைகள் வசதிகளுக்காக சமூகத்திலுள்ளவர்களின் மனங்கள் மற்றப்பட்டநிலையில் எம்மிடையே முற்போக்கு சிந்தனை கொண்டவர்களினால் மனமாற்றத்திற்கு உட்பட்டவர்களிடம் சமய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களிடையே தளம்பல்நிலையை யோக்கி சமய நிலையை பேணிக்காத்துக் கொண்டனர். தொடர்பாடல் வசதிகள் இல்லாத பல தசாப்தங்களுக்கு முன்னரே கிராமம் கிராமமாகச் சமய முன்னோடிகள் சென்று தமது சமயத்தின் முக்கியத்துவம் மகிமை, சிறப்பு, என்பவைகளை பிரச்சாரம் செய்து மக்களின் உள்ளத்தில் சமய உணர்வினை ஏற்படுத்தி சமயத்தின் மீது தீராத பற்றுக் கொள்ள வழியமைத்தனர்.

தற்போது ஆண்களும் சரி பெண்களும் சரி எமக்குரிய முக்கியத்துவமான ஒழுக்க நெறியிலிருந்து தவறிக் கொள்வதனையும், இறைவனுக்க கணக்கு கொடுக்க வேண்டும் என்ற நிலைமாறி எப்படியும் வாழலாம் எனும் நிலைக்குச் சென்றுள்ளனர் ஆனால் முன்னோர் சமயத்தின் மூலமாக சமுதாயத்தை செப்பனிட்டுக் கொண்டனர். அதிலும் ஆண்களின் ஒழுக்கத்தை காட்டிலும் பெண்களின் ஒழுக்கமே முக்கியமானதாக காலங்காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. எந்தவொரு குடும்பத்திலும் பெண்களின் திறனிலேயே அக்குடும்பத்தின் பெயரும் புகழும் துலங்குகிறது என்பதனால் பெண்களின் பங்கும் பணியும் மிக மிக முக்கியமானதாக கொள்ளப்படுவதனால் ஒரு ஆண் பெரும் தவறு விடும் நிலையில் அதனை எம் சமூகம் பெரிதாக கொள்வதில்லை அதே வேளை பெண் சிறிது தவறு இழைக்க நேரிடும் போது அதனை பெரிதாக்கி அதனையே தொடர்கதையாக சமூகக் கட்டமைப்பிற்குள் உள்வாங்கப்பட்டதனால் பெண்களை வளர்த்தெடுப்பதில் பெற்றோர் படும்பாடு சொல்லில் அடங்காது என்பதனாலும் பெண்களை சிறுபராயங்களிலிருந்தே அறநெறி தவறாகு வளர்த்திடல் வேண்டும். என ஒவ்வொரு பெற்றோரும் முனைப்புடன் செயற்படுகின்றனர். அந்த வகையில் பெண்களை ஒழுக்க நெறியாளர்களாக திகழ்ந்திட பெண் தெய்வ வழிபாட்டு முறைமை மூலாதாரமாக்கப்பட்டது. அதாவது பெண்களிடையே பெண் தெய்வங்களின் மகிமையையும் அற்புதங்களையும் சிறப்புக்களையும் சிறுபராயத்திலே கதையோடு கதையாக அவர்களின் அடிமனதில் பசுமரத்தாணிபோல பதிவுக்குள்ளாக்கி வைத்துள்ளனர். இந்நிலை பெருமளவில் கிராமப் புறங்களில் முதன்மை பெற்றுள்ளமையை இன்றும் கண்டிடலாம். அதாவது பெண்கள் கண்டபடி வெளியில் திரிந்தால் அம்மாளாச்சி கண்டிப்பா பக்கத்திலுள்ள வேப்ப மரத்தில் அம்மாளாச்சி இருந்து கொண்டு செய்கின்றவைகளை கவனத்திற் கொண்டிருக்கின்றா அதனாலே நாம் வேண்டப்படாத செயல்களை எண்ணவும் கூடாது செய்யவும் கூடாது. நல்ல பிள்ளைகளாக நடக்க

வேணும் எனவும் கண்ணகியின் கற்பு நெறியின் மேன்மைத் தன்மையினால் நீதி தவறிய மன்னனின் செய்கைக்காக மதுரையை எரித்த கதையையும் கற்பு நெறியை கடைப்பிடிப்பதனால் நாம் மனதில் நினைப்பவை நடக்கும் எனக் கூறும் கருத்திலான கற்புடையாள் மெய்யெனக் கூறின் பெய்திடும் மழை எனும்கருத்தாழ் மிக்க கதைகளை கூறி தம் பெண் பிள்ளைகளை நெறியானவர்களாக வளர்த்து வந்துள்ளனர்

பெற்றோர் தம்பிப்பிள்ளைகளுடன் கிரமமாக ஆலய தரிசனம் செய்வதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பெல்லாம் வழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். ஆனால் இன்றுள்ள பெற்றோரும் சரி பிள்ளைகளும் சரி வேடிக்கைக்காக ஆலயம் செல்வதனையும் ஏனைய பொழுதை தொலைக்காட்சி தொடர்நாடகத்திலும் இணையத்திலும் தம் பொழுதை போக்குவதனையும் அநேகர் வழக்கப்படுத்தியுள்ளனர். சமயத்தின் தம்மை ஈடுபடுத்தி கொண்டவர் கூட சமய விழுமியத்தை விட்டு விலகிச் செல்வோரை பல தசாப்தங்களுக்கு முன்னுள்ளோர் செய்தது போல விழிப்புணர்வு ஏற்படுத்தி இழுத்திடும் நிலையில் இல்லை அவர்களும் ஏன் வீண்சோலிக்குள் சென்று இடரினை அனுபவிப்பான் எனும் விலகல் தன்மை எம்மவரிடையே காணப்படுகின்றது. இந்நிலை மென்மேலும் தொடருமானால் வீதிகளிலும் விடுதிகளிலும் நிலவும் வீண் போன செய்கைகள் அதிகரித்துக் கொண்டே செல்லும் இதனைத் தடுத்து நிறுத்தி ஆரோக்கியமான நல்ல சமூக கட்டமைப்பை மீண்டும் நிலைபெறச் செய்ய சமய விழிப்புணர்வினை சமுதாய மட்டத்தில் ஒவ்வொரு வரும் எடுத்துச் செல்ல வேண்டியது இன்றைய கால கட்டத்திற்கு மிக மிக அவசியமான ஒன்றாகும்.

கண.கிருஷ்ணராஜன்
"ஷத்யகி"
ஆவரங்கால் கிழக்கு
புத்தூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-*

## திருநீற்றின் மகிமை

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவம் எனப்படும். விபூதியும், உருத்திராக்கமும் முக்கிய சைவசமயச் சின்னங்களாகும். இவை எமது அஞ்ஞானத்தைப் போக்கி தீமைகளினின்றும் எம்மைப் பாதுகாத்து இறைவனையும் அவனது பெருங்கருணையையும் நினைவூட்டும் சாதனங்கள் பிரதானமாக நீராடியவுடனும், பூசை வழிபாடு செய்யும் நேரங்களிலும் இவற்றை நாள் தோறும் பக்தி சிரத்தையுடன் தரித்தல் வேண்டும்.

சைவசமய ஒழுக்கங்களில் இன்றியமையாதது சிவ சின்னங்களில் ஒன்றாகிய திருநீறு அணிதலாகும். திருநீற்றுக்கு விபூதி பசிதம், பசுமம், இரட்சை, ஷாரம் என்ற பெயர்களும் உண்டு. தன்னைத் தரித்தவர்களுக்கு மேலான செல்வத்தைக் கொடுத்தலினால் விபூதி எனவும் ஒலியைக் கொடுப்பதினால் பசிதம் எனவும் பாவங்களை எரித்து நீறாக்குவதனால் பசுமம் எனவும் தன்னைத் தரித்த ஆன்மாக்கள் எல்லாவற்றையும் இரட்சிப்பதனால் காப்பதனால் இரட்சை எனவும் உயிர்களது மலத்தை நீக்குவதனால் ஷாரம் எனவும் பெயர் பெறுகின்றது.

குற்றமற்ற பசுவின் சாணத்தை நெருப்பினால் சுடுவதனால் உண்டாகும் நீறே தூய திருநீறாகும் திருநீறு வெண்மை நிறமானது வெள்ளைத் திருநீறு அணியத்தக்கதாகும். வெண்மை நிறம் தூய்மைக்கு அடையாளம் வெள்ளை நிறத்திருநீற்றை அணிவதால் எமது அகமும் புறத்தூய்மை அடைகின்றது இங்கே நீறாக எடுத்துக் கொள்ளும் சாணம் ஆன்மாவையும் சாணத்தில் உள்ள அழுக்குகள் ஆன்மாவோடு உள்ள மலங்களையும், நெருப்பு திருவருளையும் எரிதல் திருவருள் பதிதலையும் எரிந்த பின் வந்த வெண்ணீறு மலங்கள் நீங்கத் தூய்மையடையும் ஆன்மாவையும் குறிக்கும் என்பர் பெரியோர்.

திருநீறு இருவகையாகத் தரிக்கப்படும் ஒன்று உத்தூளனம் பரவிப் பூசுதலையே இப்பெயர் கொண்டு அழைப்பர் இரண்டாவது வகை திரிபுண்டரம் எனப்படும் திருநீற்றை நீரிற் குழைத்து மூன்று குறியாகத் தரிப்பதனையே திரிபுண்டரம் என்பர் சமதீட்சை பெற்றோர் மாத்திரமே இவ்வாறு தரிக்கத் தகுதியுடையவர்கள் இவ்வாறு தரிக்கும் போது கீழ்வரும் விதிகள் கவனிக்கப்பட வேண்டியனவாகும் குறிகள் வளையாதும், இடையறாதும், ஒன்றையொன்று தீண்டாதும் அகலாதும், ஒவ்வோர் அங்குல இடைவெளியிருத்தல் போன்றவையே அந்நியதி விதிகளாகும். திரிபுண்டரமாக அணிதற்குரிய உறுப்புக்கள் உச்சி, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள், இரண்டு புயங்கள், இரண்டு முழங்கைகள், இரண்டு மணிக்கட்டுக்கள் இரண்டு விலாப்புறங்கள் முதுகு, கழுத்து, எனும் பதினாறுமாகும் திருநீறு அணியும் போது உத்தம திக்குகளான / கிழக்கு முகமாகவே இருந்து தரித்தல் வேண்டும். அவ்வாறு தரிக்கும் போது சிவபெருமானைத் தியானித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாணுவளவாயினும் நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லிக்கொண்டு தரித்தல் வேண்டும் வலக்கையின் நடு விரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும் தரையிலே சிந்தப்பெற்றால் சிந்திய திருநீற்றை எடுத்து விட்டு அவ்விடத்தை சுத்தி செய்தல் வேண்டும்.

திருநீற்றுக்கு மேலே சந்தனம், குங்குமம் அணிதல் ஆகாது திருநீற்றுக்குக் கீழே புருவ நடுவில் அவற்றைத் தரிக்கலாம். திருநீறு அணியாதவர் முகம் சுடுகாட்டுக்குச் சமமாகும் நீறில்லா நெற்றி பாழ் என்பதும் இதனை ஒட்டியதே என்பதைத் தெரிந்து கொள்ளவும்.

திருநீற்றின் மகிமை ஆளுடைய பிள்ளையார் அருளிய திருநீற்றுப் பதிகத்தில் விரிவாகவும், மற்றையோர் பாடல்களில் பரவலாகவும் கூறப்பட்டுள்ளன ஞானக்கினியினாலே சுடப்பட்ட பசுமல நீக்கத்தால் விளக்குஞ் சிவ தத்துவப் பேற்றின் அறிகுறியே திருநீறாகும். திருநீறணிவதனால் முத்தியும் சிவ ஞானமும் கைகூடுமென அருள் நூல்கள் கூறுகின்றன. "முத்தி தருவரு நீறு" "போதந்தருவது நீறு" "சித்தி தருவது நீறு" "சுந்தரமாவது நீறு" "தேசம் புகழ்வது நீறு" என்னுஞ்சம்மந்தர் திருவாக்குகளால் இதனை யாம் உணரலாம் ஒருவன் திருநீறு அணியும் பொழுது அத்திருநீறு படிகின்ற இடமெல்லாம் சிவலிங்க மாகின்றதெனச் சைவ நூல்கள் கூறுகின்றன.

சிவ பெருமானும் வானுலகத் தேவர்களும் திருநீறு அணிந்திருக்கிறார்கள் என்னும் உண்மையினை இறைவனைக் கண்டவர்கள் தங்கள் அருள் வாக்குகளிலே கூறியிருக்கிறார்கள். சம்மந்தர் "வானவர் மேலது நீறு" என்றும் மேலுறைத் தேவர்கள் தங்கள் "மெய்யது வெண்பொடி நீறு" என்றும் பாடி தேவர்கள் திருநீறு அணிந்திருத்தலைக் கூறினார் "தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக் காடுடைய சடலை பொடி பூசுயென் உள்ளம்கவர் கள்வன்" என்று பாடி சிவபெருமான் திருநீறு அணிந்திருத்தலைக் கூறினார். "காடுடைய சுடலைப் பொடி பூசி" என்பது சாணியினால் உண்டாக்கப்பட்ட எருக்கட்டிகள் சுடுகாட்டில் அடுக்கப்பெற்று அவை எரிந்த சாம்பலேயாகும். திருநாவுக்கரசர் "பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு" என்று பாடி சிவபெருமான் திருநீறு அணிந்திருந்ததை உணர்த்தினார் மாணிக்க வாசகப் பெருமான் "வெண்ணீற்றான்" என்று சிவனைக் குறிப்பிடுகிறார். சிவனும் தேவர்களும் தங்கள் உடம்பில் எப்போதும் வெண்ணீறு பூசியவர்களாய் விளங்குகிறார்கள் இறைவனை வணங்கி அன்பர்களும் அவ்வாறே திருநீறு அணிந்து கொள்வது முறையாகும்.

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வதே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே" -திருமூலர்

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர்வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே" -திருஞானசம்மந்தர்

சைவர்களாகிய நாங்கள் விபூதி தரித்து இறைவனை மெய்யன்போது வழிபடுவோமாக

"இந்துவாக வாழ்வோம் இந்துதர்மம் காப்போம்"

பா.மயூரதன்
விஞ்ஞானத்துறை (2ம் வருடம்)
மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## அன்பு- ஒரு மகாசக்தி

அன்பும் சிவமு மிரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிகிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே
-திருமந்திரம்.

திருக்கைலாயத்தில் சிவபெருமானும் பார்வதியம்மையும் வீற்றிருக்கின்றனர். அப்பன் அருகில் கணபதியும், அம்மை அருகில் முருகனும் அமர்ந்திருக்கின்றனர். ஈஸ்வரன் அருகே காளை படுத்திருக்கின்றது. அம்பிகை அருகில் சிங்கம் நிற்கின்றது. மூத்தவன் முன்பு மூஷிகம் விளையாடுகின்றது. இளையவன் மருங்கில் மயில் குலாவுகின்றது. சிவனது மேனியில் அரவம் அசைந்து அசைந்து ஊர்கின்றது. இடையிடையே அது படமெடுத்தாடுகின்றது.

இந்த காட்சியை மீண்டும் மீண்டும் மனக் கண்ணில் கொண்டுவருவோம். என்ன விநோதம். காளையும் அதனைக் கொன்று தின்னும் சிங்கமும் தோழர்களாய் நெருங்கியிருக்கின்றன. எலியின் மீது பாயும் பாம்பும் பாம்பைக் கொத்திக் கொல்லும் மயிலும் மகிழ்ந்து விளையாடுகின்றன. எலியின் மீது பாம்பு பாயவுமில்லை. பாம்பைக் கொத்த மயில் பறக்கவுமில்லை. கணபதியின் காதை முருகன் கிள்ளவுமில்லை. தம்பியின் தலையில் அண்ணன் குட்டவும் இல்லை. இந்த ஒற்றுமையான நிலையை இரசித்த வண்ணம் புன்முறுவல் பூத்தவர்களாய் அப்பனும் அம்மையும் ஆனந்தமாய் இருக்கிறார்கள். இங்கே நாம் காணும் சந்தோஷமான அமைதியான காட்சியின் இரகசியம் என்ன தெரியுமா? அன்பு அங்கு ஆட்சிபுரிகிறது சிவபெருமான் அன்பே உருவாய் அமர்ந்திருக்கிறார். அவ்வுயிர்களிடமுள்ள தீய இயல்புகள், அவைகளிடையே நிலவும் வேற்றுமைகள் அன்பினால் அழிக்கப்பட்டுவிட்டன. அன்பு எல்லா உயிர்களையும் அணைக்கிறது ஆனந்த மூட்டுகிறது.

அன்பு என்றால் என்ன?

அன்பிலார் எல்லாந் தமக்குரியர், அன்புடையார்
என்றும் உரியர் பிறர்க்கு,
அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று
-திருக்குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

அன்பிலே கவிதை எழும் அகந்தை மாயும்
அடுத்துவரும் துன்பமெலாம் அஞ்சியோடும்
மன்பதைகளுய்வு கொளும் மகிழ்வு சேரும்
மகிதலத்தி லன்பினுக்கோ விலையுமில்லை
இன்பமென விண்ணவர்கள் துய்த்து வாழும்
இன்னமுதும் அன்பினுக்கோ ஈடாமில்லை

-யாழ்ப்பாணம்

குணச்சிறப்புகளில் அதி உயர்ந்தது அன்பு
நல்லொழுக்கத்திற்கு ஆதாரம் அன்பாகும்
அன்பே கடவுளாம், அன்பேயருஞ்சமயம்
அன்பே அறிவிற்கணி

-யோகசித்தி

கடவுள் மனிதருக்கு மட்டுப் கொடுத்துள்ள ஒரே
அரும் பொருள் அன்பு. அது நெஞ்சுடன் நெஞ்சை,
உயிருடன் உயிரைப் பிணைக்கும் ஒரு வெள்ளித்தளை.

-வால்டர் ஸ்கொட்.

அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்

-ட்ரைடன்.

அன்பு கடவுளின் வடிவம்

-லூதர்.

அணுக்குண்டுகளுக்கு முன்பு ஒரு வேளை மனிதன்
அசையாது நிற்கவும் கூடும். ஆனால் அன்பு கனிந்த
சொற்களின் முன் அவன் பின்னடையத்தான் வேண்டியிருக்கும்

-கான்டேகர்.

வாழ்வின் மிகச்சிறந்த இன்பம் நாம் அன்பு கூரப்
படுகிறோம் என்பது தான்.

-விக்டர்கியூகோ.

அன்பு செய்தால் அல்லல் தீரும். அல்லல் தீர்ந்தால்
அமைதி பெருகும் அமைதி பெருகினால் அதுவே சுவர்க்கம்

-பெ.தூரன்

அன்பு நீடிய சாந்தமும், பொறுமையுமுள்ளது. அதற்குப்
பொறாமை இல்லை

-விவிலியநூல்.

அன்பு சர்வலோக சஞ்சீவி

-இராசாகி

அன்பாகிய அக்கினியிலே எவ்வளவு கடினமான இருதயமும்
இளகியே தீரும்

-காந்தியடிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பைப்பற்றிக் கூறாத சமயங்கள் இல்லை. இறைவனை அடைவதற்கான வழி அன்பு தான். விஞ்ஞானம் அன்பு என்பது எம்முடைய ஓர் உணர்வு என்று முன்னர் கூறியது. ஆனால் இன்று பல்வகைப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பயனாய் அன்பு ஓர் உணர்வு மட்டுமல்ல. அதைவிட மேலான பலம்வாய்ந்த ஓர் சக்தி என்று கண்டுள்ளது. இச்சக்தியை ஒவ்வொருவரும் தொடர்ந்து வெளியிட்டும் பெற்றுக் கொண்டும் இருக்கிறார்கள். எவர் ஒருவர் மீது இச்சக்தி பிரயோகிக்கப்படுகின்றதோ அவரில் இது ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எங்களுக்கு இது எவ்வாறு தெரிகிறது? ஞானிகளும் சன்னியாசிகளும் பெற்றுள்ள ஒளிவட்டத்தை கிரிலியான் புகைப்படம் என்கின்ற ஒரு புகைப்பட நுட்பத்தின் உதவியோடு பதிய வைத்ததன் மூலம் இதன் தன்மை அறியப்படுகின்றது. விஞ்ஞானிகள் இதனை வெளிப்படுத்துகின்றது. இப்பொறிமுறை உயிருள்ளனவற்றிற்கும், உயிரற்றனவற்றிற்கும் இடையிலான வேறுபாடுகளைக் காட்டுகிறது. உயிருள்ளனவற்றைச் சுற்றியுள்ள சக்தி அளவிலும், நிறத்திலும் வேறுபடுகின்றது. அத்தோடு தனிப்பட்ட ஒருவரின் உணர்வு வேறுபாடுகளையும் பதித்துக் காட்டவல்லது.

ஒருவர் அன்பைப் பரப்புகின்ற பொழுது ஒளிவட்டம் நீல நிறமாகக் காணப்படுகின்றது. ஒருவர் வெறுப்பையும் விரக்தியையும் காட்டும்போது ஒளிவட்டம் சிவப்பு நிறமாக மாறுகின்றது. ஒருவர் சுயநலமற்ற அன்பை முழுமையாகப் பரப்பும் போதும் ஒளிவட்டம் மெல்லிய செந்நிறமாக (Pink) காணப்படுகின்றது. இவற்றை விட மிகவும் அதிசயமானது யாதெனில் ஒருவரிடமிருந்து வேறொருவருக்கு மாற்றப்படும் சக்தியையும் இந்த கிரிலியான் புகைப்படக்கருவி காட்டக்கூடியது. இப்பதிவுகள் மிருகங்கள், தாவரங்கள் ஆகியவற்றின் இடையேயும் காணக்கூடியதாக இருக்கின்றது.

உலகம் முழுவதும் காணப்படும் எல்லா ஜீவராசிகளுள்ளும் அன்பு என்னும் சக்தி காணப்படுகின்றது. ஆனால் அளவுகளில் வேறுபடுகின்றன. ஒரு சாதுவில் அன்பை வெளிப்படையாகக் காணமுடிகிறது. ஆனால் கொலைகாரனில் அன்பு குறைவாக மறைந்து காணப்படுகின்றது. அன்பு எனும் சக்தியை மூன்று மட்டங்களில் அடையாளம் காணமுடிகிறது.

1. சுயநல அன்பு (Get and forget)

அன்பின் கீழ்நிலையில் உள்ள செயற்பாடுகளை இது உணர்த்தும். ஒருவர் தன்னைப்பற்றியும், தனது உடமைகள் பற்றியும் சுயமான சிந்தனையுடன் செயல்படும் நிலையை இது குறிக்கும் பிறரைப்பற்றிய சிந்தனை தோன்றாது. அவ்வாறான சிந்தனையில் அவர்தன் சுயநன்மைக்காக பிறரிடமிருந்து செயற்பாடுகளை எதிர்பார்ப்பார்கள். இதன்படி அன்பு என்னும் சக்தி பலவீனமடைந்து சுயநலசக்திகள் ஆக்கிரமிக்கப்பட்டுச் செயல்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. நானே உலகின் மையம்
ii. சுயநலங்களை நாடுகிறேன்
iii. பிறரிடமிருந்து பெறும் பொழுது நான் சந்தோசமடைகிறேன்
iv. எனக்குத் தேவையானவற்றைப் பெறுவதற்கே மற்றவர்கள் இருக்கிறார்கள் என நினைத்துக் கொள்வர்

2. பரஸ்பர அன்பு (Give and take)

இது அன்பின் ஓர் உயர்படியாகும். ஒருவர் தன்னைப்பற்றியும், தன்னோடு தொடர்பான தன் உறவினர்கள் பற்றியும் சிந்தித்து செயல்படுவர், இவ்வன்பு எனும் சக்தி முன்னர் கூறப்பட்ட சுயநல அன்பு உடையவரிலும் பார்க்க விரிவடைந்துள்ளதைக் காணமுடிகின்றது. கொடுத்து வாங்குமியல்பு ஓரளவு விரிவடைந்திருக்கும். ஆனால் அவரிடத்திலுள்ள அன்பு-சக்தி உலகளாவிய நிலையில் பரிமளிக்கமாட்டாது.

I. நான் நேசிப்பவர்களே எனக்குப் பிரதானம்
II. எனது குடும்பம்/சிநேகிதர்கள் ஆகியோருக்காவே நான் வேலை செய்கிறேன்
III. நான் நேசிப்பவர்கள் சந்தோஷமடையும் போது நான் சந்தோஷமடைகிறேன்.
IV. எனது இலக்குகளை ஆதரிப்போரை நல்லவர்களாகக் கருதுவேன் எனக் சிந்திப்பர்.

3. சுயநலமற்ற அன்பு(Give and forgive)

இதுவே அன்பின் அதிஉயர்ந்த படியாகும் தூய அன்பானது "நான்" என்ற நிலையிலிருந்து "நாம்" என்ற நிலைக்கு எடுத்துச் செல்கின்றது. இவ்வன்பைக் காட்டுபவர்கள பிறருக்கு கொடுப்பார்கள், பிறரை மன்னிப்பார்கள். பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கமாட்டார்கள். இந்நிலையான அன்பில் ஒருவர் தன்னை மற்றவர் நிலையிலிருந்து நோக்குவர் பிறரின் தேவைகள் தனது தேவைகளுக்கும் சமமானது எனக் கருதுவர் பிறர்நலன்களில் அக்கறை காட்டுவர். இவ்வாறான நிலையில் அவர்கள் உலகளாவிய அன்பான சக்தியைப் பெற்றுத் திடகாத்திரத்துடன் செயற்படுவர். இச்சக்திக்கு ஓர் வரம்பெல்லை கிடையாது. அன்பை பிறருடன் பகிர்வதன் மூலம் விருத்தியடையகிறது.

I. நாம் எல்லோரும் ஒருவரே
II. மற்றவர்களுக்குச் சரியெனப்படுபவை எனக்கும் சரியாகும்
III. மற்றவர் சந்தோசத்தில் நான் சந்தோசமடைகிறேன்.
IV. பிறர் துன்பப்படும் பொழுது அத்துன்பம் எனக்கு ஏற்பட்டதென உணர்கிறேன். என்பதைப் புரிந்துக்கொள்வர்

இவ்வுலகளாவிய சக்தியே எல்லாப் படைப்புகளுக்கும் அடித்தளமாக அமைகின்றது. மனிதன் இயற்கையாகவே தெய்வீகத் தன்மைக்கு ஆதாரமாக இருப்பது அன்பு. அன்பின் வர்ணிப்பே மனச்சாட்சி இவ்வன்பில் உருவாகும் சிந்தனைகள் செயவாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அவை நற்செயல்களாகின்றன. இதுவே தர்மம் உணர்ச்சிகள் யாவும் அன்புமயமாகும் போது அவை எமது மனதில் அமைதியை உருவாக்குகின்றன. இதுவே சாந்தி. மனதில் ஏற்படும் அமைதியின் உயர்வினால் எவ்வுயிருக்கும் தீங்கிழைக்காத தன்மை எமது நடத்தையில் ஏற்படுகிறது. இதுவே அகிம்சை ஆகையால் மனிதனின் எல்லா நற்பண்புகளுக்கும் உயிரோட்டமாக இருப்பது அன்பு. இது ஒரு மகா சக்தி. இது மனிதனின் வாழ்க்கைக்கு மூலாதாரமானது. இவ்வுயர்நிலை அன்பை நாம் பெருக்கப் பெருக்க மனித நற்பண்புகள் அனைத்தும் எம்மை வந்துசேரும்.

தூய அன்பை அதாவது சுயநலமற்ற அன்பை எம்மால் விருத்தி செய்ய முடியவில்லையே என்பது தான் இப்பொழுது பலருக்கும் கவலைதரும் விடயமாக உள்ளது. கவலையை விடுங்கள் இதற்கும் வழியுண்டு வழியைச் சொல்லவா? தினமும் காலை, மாலை வீட்டில் திருமுறைப்பாடல்களைப்பாடி இறைவழிபாடு செய்யுங்கள் வெள்ளிக்கிழமைகளில் குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து உங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் இறைவனைப் பிரார்த்தியுங்கள் கிழமையில் ஒருநாளாவது ஆலயவழிபாடு செய்யுங்கள் சுத்தமான சைவஉணவை உண்ணுங்கள் உங்களால் இயலுமான சேவையை தேவைப்படுவோருக்கு செய்யுங்கள். உங்களில் சுயநலமற்ற அன்பு பரிணமிப்பதை நீங்களே உணர்வீர்கள்.

"Love is God Live In Love"

திருமதி.பா.பாலசிங்கம். M.A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## கோயிலும் இசைக்கலையும்

இசை என்னும் சொல்லுக்கு இசைவிப்பது தன்வயப்படுத்துவது என்பது பொருளாகும். மரம், செடி, கொடி, எனும் ஓரறிவு உயிர்முதல் மக்கள் எனும் ஆறறிவு உயிர்கள் ஈறாக எல்லா உயிர்களையும் இசை தன்வயப்படுத்துகின்றது. இவ்விசைக் கலையானது கோயிலை மையமாகக் கொண்டு வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே கோயிலும் இசையும் பற்றி நோக்குவோம்.

இசையை உலகுக்குத் தந்தவர்களாகக் கடவுளரே கருதப்படுகின்றனர். அன்னை கலைவாணியே கல்வித் தெய்வமாகவும், கலைத்தெய்வமாகவும் கொள்ளப்படுகின்றாள் வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப்பணிபூண்டு வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் இத்தெய்வம் முன்னிரு கைகளாலும் வீணையைத் தாங்கியவளாகக் காணப்படுகின்றாள்.

நாரதமுனிவர் தேவலோகத்து இசையைப் பூலோகத்துக்கு எடுத்து வந்து போதித்தார். மற்றும் கலைகள் சமயத் தொடர்புடையனவாகவும், ஒன்றுடனொன்று இணைந்துள்ளமையையும் காணமுடிகின்றது. ஆதியில் சமயத் தொடர்புடைய கிரியைகளின் போது ஆடியும் பாடியும் வந்த கலைகள் காலப்போக்கிலே கோயிற்கலைகளாகி வளர்ச்சி பெறலாயின.

கலை வடிவினனாய், கலைப்பிரியனாய், கலை ஆதரவாளனாய் இயங்கும் இறைவனை வழிபாடு செய்யும் முறைகளிலே கலைகளும் குறிப்பிடத்தக்கன. மலரினாலும் இலையினாலும் மனத்தினாலும் வழிபடுதல் போன்று இசையினாலும் நடனத்தினாலும் இறைவனை வழிபடும் முறை நன்கு போற்றப்பட்டது. ஒலியின் அடிப்படையில் தோன்றி விளங்கும் இசையானது ஒலி வடிவாய் எங்கணும் வியாபித்து ஒலித்துக்கொண்டிருக்கும் இறைவனோடு இணையும் தன்மையுடையது கோயிலிலே குடி கொண்டிருக்கும் பரம் பொருளான இறைவன் கலைஞருக்கும் பக்தருக்கும் ஒப்புயர்வற்ற தனிப்பெரும் கலை வடிவமாகவும் கலைப்புரவலனாகவும், கலை ஞானியாகவும், கலையின் இருப்பிடமாகவும். காட்சியளிக்கின்றான். மேலும் இராவணன் இசைத்த சாமகானம் நாத வடிவாகிய சிலோக நாதனை மகிழ்வித்தது. எனவே இறைவனுடைய அருளைப் பெற இசை சிறந்ததோர் சாதனமாகின்றது. இசையின் பயன் இறைவனை வழிபடலும் அதே சமயம் ஆத்மானுபவம் பெறுதலுமேயாகும்.

கோயில்களிலே தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் என்பன பண்ணோடு ஓதப்படுகின்றன. அதே வேளையில் நாதஸ்வரம், யாழ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணை, தவில், தாளம், முதலிய இசைக்கருவிகளும் இணைந்து கொண்டால் அங்கு தோன்றுவது பேரின்ப ஒலியாகும். இசைக் கருவிகளும் கோயில்களில் இசைக்கலைகளைப் பெரிதும் வளர்த்துள்ளன. இவை பேணிப் பாதுகாக்கப்படும் இடம் கோயிலாகும். அதாவது திருவிழாக்காலத்தில் ஆலயத்திலிருந்து சுவாமி புறப்படும் போது பின்னர் திரும்பவும் ஆலயத்துக்குள் புகும் போதும் நாதஸ்வரம் வாசிக்கப்படும்.

தமிழகத்தை எடுத்துக் கொண்டால் பரிபாடல் முதலிய சங்க நூல்களில் கடவுளரை ஏத்திப் போற்றும் பழந்தமிழ் இசைப்பாடல்கள் பல காணப்படுகின்றன. சங்கமருவிய காலத்தில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டில் நடராஜப் பெருமான் ஆடிய திருநடனத்தைக் கண்டு இன்புற்று பாடிய பாடலில் அக்கால இசைபற்றியும் இசைக்கருவிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து இசை வரலாற்றில் பல்லவர் காலம் தெய்வீக இசை தோற்றம் பெற்ற காலமாகத் திகழ்கிறது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் தத்தம் சமயங்களைப் பரப்புவதற்கும் கோயில் தோறும் சென்று வழிபடுவதற்கும் பாடல்கள் பல இயற்றினா் இதனால் இசைக்கலை பக்தி இயக்கத்தோடு இயைந்து வளரத் தொடங்கியது.

"சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"

என அப்பர் துதி செய்துள்ளார்.

மேலும் இறைவனைச் சிக்கெனப் பிடிப்பதற்கு இசையே உதவுகின்றது. இதனை சுந்தரத்தைத் தடுத்தாட் கொண்ட சிவபிரான் அசரீரியாக ஆணையிட்டதன் மூலம் உணரலாம். இவ் ஆணையை ஏற்று சுந்தரர் வாழ் நாள் முழுவதும் இறைவனை இசைத்தமிழாகிய தேவாரம் பாடி மகிழ்வித்தார். மாணிக்கவாசகர் இசை வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி திருவெம்பாவை அம்மானை போன்ற பாடல்களைப் பாடியுள்ளனர். பல்லவ மன்னர்களில் மகேந்திர வர்மன் இசைக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்தான். முதலாம் இராஜராஜசோழன் தேவாரத் திருப்பதிகங்களைத் தொகுப்பித்தான். சோழர்கள் பல கோயில்களிலும் தேவார திருப்பதிகங்களைப் பாடுவதற்கு ஏற்பாடுகள் செய்தனர். இதனை கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றனது.

மேலும் தஞ்சைப்பெருங்கோவிலில் பாணர்கள் இசைக்கலையை வளர்த்தனர் என்றும் சமயச்சார்பான நாடகங்கள் நடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அடுத்து இராஜேந்திர சோழன் தான் கட்டிய கங்கை கொண்ட சோழேச்சரத்தில் நாள்தோறும் தேவாரம் ஓதப்பட்டு அமைக்கப்பட்ட மண்டபம் "தேவாரமண்டபம்" எனவும் கூறப்பட்டுள்ளது என்பதனூடு சோழர்காலத்தில் கோயிலை ஆதாரமாக வைத்து இசைக்கலை வளர்ந்துள்ளமையை அறியலாம்.

நாயக்க மன்னர் காலத்தில் "கீர்த்தனை" எனும் இசைப்பா வடிவம் தமிழகத்தில் வந்து நுழைந்தது கீர்த்தனை என்பது இறைவனுடைய கீர்த்திகளைப் பாட எழுந்த இசைப்பா வடிவமாகும். இவ்வாறாக இசைக்கலையானது கோயிலை மையமாக வைத்து வளர்ந்துள்ளமையை அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையை எடுத்துக் கொண்டால் இங்கும் கோயில்களில் இசைக்கலையானது பேணப்பட்டு வருகின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது அதாவது பண் வழுவாது தேவாரங்கள் பாடப்பட்டு வருகின்றன. இவற்றைப் பாடுவதற்கென பண்ணிசை தெரிந்தோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது சில ஆலயங்களில் இசையை வளர்ப்பதற்காகவும் தமிழ் வேதத்தின் சிறப்பை மக்களுக்கு உணர்த்தும் வகையிலும் இவைப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. இன்றும் கதாப்பிரசங்கம் என்ற நிகழ்ச்சியும் கோயில்களில் இடம் பெற்று வருகின்றது இதன் மூலமாக அடியார் வரலாறுகளும், இராமாயண பாரத இதிகாசச் சிறப்பு போன்றனவும் மக்களுக்கு எடுத்துக் கூறப்படுகின்றன.

கோயில்களோடு ஒட்டிய அம்சங்களிலே இலங்கைக்கே தனிச்சிறப்பாகக் குறிப்பிடக்கூடிய இன்னொரு அம்சம் புராணபடனமாகும். இங்கு நடைபெற்று வரும் புராணபடனமரபு இந்திய மக்களாலும் பாராட்டப்படுகின்றது. இதன் மூலமாக சமய அறிவு மட்டுமன்றி எழுத வாசிக்கத் தெரியாத மக்கள் கூட இலக்கண இலக்கிய சமய அறிவைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் எனவே இவற்றின் மூலமாக இசைக்கலையானது காலங்காலமாகக் கோயிலை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்துள்ளமையைக் காணக் கூடியதாகவுள்ளது.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

மயூரிகா பாஸ்கரன்
2ம் வருடம் பொருளியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## சமூக மய மாக்கலில் ஆலயங்களின் பங்கு

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழிக்கேற்ப யாழ் குடா நாட்டிலே சைவ ஆலயங்களின் எண்ணிக்கை அதிகமாகவே உள்ளன ஒரு சைவ ஆலயம் தன்னும் இல்லாத ஒரு கிராமத்தை இன்று காண முடியாது மக்கள் கடவுள் மீது வைத்துள்ள அதீத நம்பிக்கையின் வெளிப்பாடுதான் இவ்வாலயங்கள் தோன்றக்காரணமாக இருந்தது வந்துள்ள ஆரம்பத்தில் சிறிய சிறிய ஆலயங்களாக இருந்தவை எல்லாம் இப்பொழுது சிற்ப வேலைப்பாடுகளோடு கூடிய அழகிய ஆலயங்களாகக் காட்சி தருகின்றன மக்கள் தாம் நல்லபடி வாழ வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் இந்தப் பணிகளைச் செய்வதிலும் தவறு இல்லை ஆயினும் இவ்வாலயங்களை நிர்வகித்துவரும் பரிபாலன சபையினர் தர்மகர்த்தாக்கள் ஆலய பிரதம குருமார் ஆகிய அனைத்து தரப்பினரும் முன் எடுத்துவரும் இந்த பணிகளின் மூலம் சமுதாய மட்டத்திலே சமூகமயமாக்கல் ஏற்பட்டுள்ளதா? என அலசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதலில் "சமூகமயமாக்கல்" என்பது யாது? முதன் முதல் வீட்டிலிருந்து வெளியுலகிற்குக் காலடி எடுத்து வைக்கும் குழந்தை சமுதாய மட்டத்திலுள்ள பல தரப்பட்டவர்களுடன் சமூகமாக உரையாடி அந்தச் சமூகத்திலே இணைந்து வாழக்கூடிய அனைத்துப்பண்புகளையும் பெற்றுக் கொள்ளல் சமூக மயமாக்கல் எனக்கூறலாம் பாடசாலைகள் ஆலயங்கள் சனசமூக நிலையங்கள் மாதர்சங்கங்கள் போன்ற ஏனைய நிறுவனங்களும் குழந்தைகளைச் சமூகமயமாக்கும் பணியைச் செய்யவே தோற்றம் பெற்றிருக்கின்றன எனவே ஆலயமும் ஒரு சமூக நிறுவனம் என்பதால் சமூக மயமாக்கும் பணியைச் செய்வதில் ஆலயங்களுக்கு அதிக பங்குண்டு என்பதை எவரும் மறுதலிக்க மாட்டார்கள் ஏனைய நிறுவனங்களை விட ஆலயங்கள் தெய்வீகத்தன்மை வாய்ந்தவை என்ன காரணத்திற்காக மக்கள் பெற்றாக வேண்டும் வையத்துள் வாழ்வாங்கு வாழ ஏற்ற சமூக இயை பாக்கங்களைக் கொண்ட சமூகமாக மக்கள் குறிப்பாக இளஞர் சமூகம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் இதற்கேற்ற முறையில் ஆலய நிர்வாகிகள் தர்மகர்த்தாக்கள் ஆலய பூசகர்கள் தொழிற்பட்டாக வேண்டும். இன்று ஆலயங்கள் பொது வைபவங்கள் விளையாட்டு நிகழ்வுகள் போன்றவற்றில் பங்கு கொள்ளும் இளஞ்சந்ததினர் அங்கே வெளிக்காட்டும் நடத்தைக் கோலங்களைப்பார்த்துப் பொது மக்கள் வெட்கித்தலை குனிய வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர் என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை எமது இளஞ்சிறார்கள் எமது கலை கலாசாரங்களை மறந்து மேலைத்தேயக்கலாசாரங்களைப் பின்பற்றிவருவதைப் பார்க்கக்கூடியதாக உள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

எமது இனத்திற்கெனத்தனித்துவமான பண்பாடுகள் கலாசாரங்கள் இருந்தும் இவர்கள் மேலைத்தேய நாகரீக போகத்தில் ஈடுபட்டு வருவதையும் இவற்றை எல்லாம் புத்தி ஜீவிகள் கல்வி மான்கள்பத்திரிகைகளில் விமர்சனம் செய்து வருவதையும் அவதாணிக்கக் கூடியதாகவுள்ளது எனவே இன்றைய இளைஞர்கள் நாளைய எதிர்காலப்பிரஜைகள் என்பதால் அவர்கள் சமுதாயத்தோடு இயைந்து வாழக்கூடிய பெரும் பணியை ஆலயங்கள் முன்னெடுக்க வேண்டும்.

சகல ஆலயங்களிலும் நித்திய நைமித்திய காமிக பூசைகள் இடம் பெற்று வருகின்றன இப்பூசைகள் நடை பெறும் போது அங்கே வருகின்ற அடியார் கூட்டத்திற்குக் குறிப்பாக இளஞ் சமுதாயத்தினருக்கு ஆலயப்பிரதமகுரு ஒரு சிறு நேரமாவது சமய ஒழுக்கங்களைப்பற்றி உபந்நியாசம் செய்வது நல்லது கொடி ஏற்றித்திருவிழா இடம் பெறும் ஆலயங்களில் தற்சமயம் பிரதம குருவானவர் விசேட உரையாற்றி மக்களை நல்வழிப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுவருவததையும் நாம் மறுப்பதற்கில்லை.

இதே நேரம் இன்னொரு விடயத்தையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதாவது கொடியேற்றித்திருவிழாச் செய்யும் சில ஆலயங்களில் நிர்வாகிகள் ஆலயங்களை ஒரு விற்பனைக்களமாகச் சித்தரிக்குப் பொருள் சேர்க்கும் பணியில் ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கின்றார்கள் திருவிழாத் தொடங்கி முடியும் காலப்பகுதி வரை ஒலி பெருக்கிகளின் சத்தத்தில் சுற்றாடலிலுள்ள மக்கள் எவ்வாறான உணர்வுடன் வாழ்கின்றார்கள் என்பதை இவர்கள் ஒரு போது தமது கவனத்திலெடுப்பதில்லை குளிக்கப்போய்ச் சேறு பூசுவது போல இருக்கிறது இவர்களுடைய செய்றாபடு

ஆலய வழிபாட்டை ஒரு பாடலடி மூலம் எடுத்துக் சுறலாம் ஆடை
அணிகலன் ஆடம் பரங்கள்
ஆண்டவன் விரும்புவதில்லை
அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும்
ஆலய வழிபாடில்லை....

என்ற பாடல் கடவுளின் தன்மையையும் அவனை வழி படும் அடியவர்களின் மனம் ஒரு நிலைப்பகுதலையும் காட்டி நிற்கின்றது.

ஆலயம் - ஆலயம் இங்கு "ஆ" என்பது ஆன்மா, லயம் என்பது ஒடுங்குதல் எனப் பொருள் கொண்டால் ஆன்மாக்கள் கூடுகின்ற இடமாக ஆலயங்கள் அமைகின்றன ஆலயமானது அப்போதும் ஒரு கேலிக்குரியதான இடமாக அமையக்கூடாது இன்று ஆலயங்கள் இளம் வயதினர் தீய செயல்களிலே ஈடுபடக்கூடிய இடமாகத்திகழ்கின்றது இருப்பினும் ஒரு சில ஆலயங்கள் சமூக நலத்துறைப்பணியில் பெரும் தொண்டாற்றி வருவதை நினைக்கும் போது உள்ளம் ஒரு வாறு தேறுதல் அடைகின்ற ஒரு சமூகத்தில் சிறந்த ஒற்றுமையை ஏற்படுத்தி மக்கள் அற விழுமியப்பண்புகளைப் பெற்று வாழ்வில் சிப்பிடம் பெற்று விளங்க இன்றைய ஆலயங்கள் சமூக மயமாக்கலில் மிகவும் உன்னத இடம் வகிக்கின்றது என்பதில் ஐயமில்லை எனவே இன்றைய காலகட்டத்தில் ஆலயம் சமூகத்திற்கு மாபெரும் பணியாற்றி வருகின்றது.

கோ.நிறைஞ்சன்
கோப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

## இன்பமே என்றும் துன்பம் இல்லை

"வீட்டிற்கு வீடு வாசற்படி" என்பவர்கள் இவ் வாக்கியத்தில் அடங்கியுள்ள பொருள் தான் என்ன? துன்பம் என்பது எல்லோருக்கும் உண்டு துயரம் சஞ்சலம் இல்லாத வீடுகளைப் பார்க்கவே முடியாது துயரத்தின்அ விளிம்பிலே நிற்கும் நாம் ஒருவருக்கொருவர் நமக்குள்ளே நம்மைச் சமாதானப்படுத்துவதற்காக கூறும் வாக்கியம் தான் இது.

சாதாரணமாக எல்லோர் மட்டிலும் வந்து போகும் துன்பம், உறவுகளாலும், கொடுக்கல் வாங்கல்களாலும், சொத்துக்களாலும், பொருளாதார, ஆதிக்கங்களாலும், வறுமையாலும், தீயபழக்கவழக்கங்களாலும் நோய்களாலும் தீராத பெரும் பீடைகளாலும் வருவது இயல்பே இவ்வாறு வருந்துன்பத்தை நாமே எமக்கு ஏற்படுத்தி கொள்வதும் அதனால் சீரழிவதும் நடைமுறையில் காண்கின்ற இயல்பே நம்மால் ஏற்படும் துன்பம் நம்மால் சீர்பட்டுவிடும் பிறரால் திட்டமிட்டு நம்மட்டில் வருவிக்கும் துன்பத்தை இடும்பை என்று தான் கூற வேண்டும். துன்பத்தின் மிகக் கொடுமையான உச்சத்தின் வடிவந்தான் இடும்பை ஆகும். உடலில் வலு இல்லாத போது ஏற்படும் நோய் நொடி துன்பங்களையோ, நம்மால் ஏற்படும் பிற துன்பங்களையோ மருந்தாகி சீரிய வாழ்வாலும் உணர்வாலும் ஈடு செய்து மாற்றலாம் அதன் வலுவை குறைக்கலாம். ஆனால் நம்மட்டில் திட்டமிட்டு ஏறியப்படும் கொடூரமான இடும்பையில் இருந்து நம்மை காப்பது எப்படி? சமணமுனிவரால் திட்டமிட்டு மகேந்திர வர்மபல்லவனால் ஏவப்பட்ட சுமந்தப்பட்ட சுண்ணாம்புக்கால்வாய் காழ்வாய் தண்டனையிலும், நஞ்சுண்ட சோற்றையும் கொடுத்த வஞ்சகத்திலும், கல்வோடு கட்டி கடலில் வீழ்த்திய மனித நேயமற்ற அரக்கத்தனத்திலும் இருந்து திருநாவுக்கரசர் தம்மைக் காத்து எதனால்? மகேந்திரவர்மனின் மிகக் கொடூரமான தண்டனைகளில் இருந்து மீட்சி பெற்றது எதனால்? திருவாவுக்கரசர் கொண்ட இறை உணர்வின் வலுவான ஆற்றல் ஒன்றே இதற்குப் பதிலாக அமைந்தது. இறை உணர்வின் வலுவான ஆற்றல் பிறலால் ஏற்படுவதில்லை. திடமான நம்பிக்கையோடு நாமே நமக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் மிக அற்புதமான ஆத்ம ஞானமாகும். ஆற்றலாகும், ஒளியாகும். முனதை ஒருவழிப்படுத்தி சமநிலையில் வேண்டுதல் வேண்டாமை இல்லாத தன்மையினால் தம் நெஞ்சை நிலை நிறுத்திக் காண்கின்ற ஆத்ம ஞானத்தின் பேராற்றல் ஒன்றே திருநாவுக்கரசரை அவருக்கு ஏற்பட்ட இடும்மையில் இருந்து காத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனித சிவியத்தின் நடைமுறையான இயல்புகள், ஒன்றை விரும்பியும், இன்னொன்றை விரும்பாமலும் வாழும் வாழ்க்கை என்பர். இது உலக நடை முறையில் நாம் காணும் சுழற்சிகள்தாம். இதனால் தான் நம்மில் நாம் குற்றப்படுகின்றோம் பிறருக்கும் குற்றம் இழைக்கின்றோம்

சமநிலையில் பேணும் வாழ்க்கையை நாம் அனுசரிக்காதவிடத்து குடும்ப வாழ்க்கை சமூக வாழ்க்கை எல்லாமே பாழ்பட்டுவிடும் நாட்டைக் காக்கின்ற வேந்தனை அக்கால மக்கள் கண்கண்ட தெய்வமாகப் பேற்றி வணங்கினர். கடவுளுக்கு இறைவன் என்ற சொல்லைக் குறித்து கூறிய நாவால் வேந்தனையும் இறைவன் என்பர். அவன் குடிமக்கள் இடத்தில் ஓர்ந்து கண் ஓடாது யார் மாட்டும் விருப்பு வெறுப்புக் கொள்ளாது சமநிலைப்பேணி நல்லாட்சி புரியவேண்டும். நாட்டுடைத் தலைவனுக்குத்தான் இப்பண்பு உரியதன்று. குடும்பத்தலைவனுக்கும், ஒரு குழுத்தலைவனுக்கும், அறநிலையான உலக நிலையான ஸ்தாபனங்களை நடத்தும் தலைவனுக்கும் இச்சமநிலை- வேண்டுதல் வேண்டாமை இல்லாத தனிப் பெரும் பண்பு நிலை இருக்கவேண்டியது அவசியமானது.

ஓர்ந்து கண் ஓடாது இறைபுரிந்து யார் மாட்டும்
தேர்ந்து செய்வ.·.தே முறை
(குறல்-541)

மகேந்திர வர்மன் நாட்டைப் பரிபாலிக்கும் வேந்தனாக இருந்து திருநாவுக்கரசர் மட்டில் சமநிலையைப் பேணவில்லை. விருப்பு வெறுப்புக்கு ஆட்பட்டு சமண முனிவரின் வஞ்சகத்தனத்துக்கு எல்லாம் ஆட்டம் போட்டான். முடிவு என்ன ஆயிற்று?

திருநாவுக்கரசரின் சமநிலை பேணும் ஆத்மஞானம் இறைஉணர்வு- அவரைகாத்து வாழ்வித்தது. மன்னனின் கண்களையும் தறக்க வைத்தது.

வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேந்தார்க்கு
யாண்டும் இரும்பை இல (குறல்-4)

விருப்பு வெறுப்பு இல்லாதவன் தான் இறைவன்!

அவனது அடியைச் சேர்ந்தவர்க்கு எக்காலத்தும் பெருந்துன்மாகிய இடும்பை வருவதில்லை. விருப்பு வெறுப்பு இல்லாதவன் அடியை சேர்கின்ற நாம் நம் உள்ளத்தையும் பரிபக்குவ நிலையோடு சமநிலையில் வைத்துப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்விதம் பழக்கப்படுத்திக்கொள்ளும் போது எம் ஒவ்வொருவர்மட்டிலும் இருக்கும் ஆத்ம ஞானம்- அதனால் வலுப்பெறும். இறை உணர்வின் இறுக்கம்- எக்காலத்தும் துன்பம் என்னும் இடும்பையில் இருந்து நம்மைக் காக்கும். அவ்விதம் காக்கப்படும் போது தான் “இன்பமே என்றும் துன்பம் இல்லை” என்னும் திருநாவுக்கரசரின் இறைஞான உரையும் உணர்வும் எங்கும் எதிலும் எவர்மட்டிலும் உயிர் பெற்று நிற்கும்.

நன்றி.

தேவராஜா காயத்திரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சைவ சமயப் பண்பாட்டுக் கருமங்கள்

தோரணம் கட்டுதல், கோலம் போடுதல், நிறைகுடம் வைத்தல், பூமாலை கட்டுதல், தீபம் ஏற்றுதல் என்பன சைவசமயப் பண்பாட்டுக் கருமங்களாகும்.

**தோரணம் கட்டுதல்:**

தோரணம் தென்னங்குருத்தோலையினால் செய்து கட்டுவர். தோரணத்துடன் மாவிலையையும் தொங்கவிடுவர். சமய விழாக்களின் போது மங்களதோரணம் கட்டுவர்.

**கோலம் போடுதல்:**

கோலம் என்பது அழகு, ஒழுங்கு எனப்படும். கோலம் போடுவதால் வீட்டில் அழகு ஏற்படும் மற்றும் மகிழ்ச்சி உண்டாகும். விசேட தினங்களில் வீட்டில் கோலம் போடுவோம்.

**நிறைகுடம் வைத்தல்:**

நிறைகுடம் வைப்பதால் வீடு மங்களகரமாகக் காட்சி தரும். விசேட தினங்களில் வீட்டில் நிறைகுடம் வைப்போம்.

**பூ மாலை கட்டுதல்:**

பூக்களைக் கோவையாகக் கட்டுவது பூமாலை எனப்படும். பூமாலை அழகு நிறைந்தது. பூமாலையை வாழை நார் கொண்டு கட்டுவர். இறைவனை மாலை சாத்தி வழிபடுவோம்.

**தீபம் ஏற்றுதல்:**

தீபம் ஏற்றுவதால் வீட்டில் ஒளி பிறக்கும். ஒளி இறைவனைக் குறிக்கும். தெளிவைத்தரும் காலையும் மாலையும் சுவாமி அறையில் தீபம் ஏற்றுவோம்.

"தூய்மை மேன்மை தரும்"

கி.ரஸ்மிகா
தரம் 03
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## சக்தி துணை

இவ்வுலக இயக்கத்திற்கு தேவையான மூலமே சக்தியாகும் சக்தியின்றி இப்பிரபஞ்சத்தில் எதுவுமில்லை எமது சமயத்தின் முழ முதற் கடவுளாகிய சிவமும் சக்திக்குள் அடங்கும் அச்சக்தி தான் நாம் அன்னையாய் வணங்கும் பொருளாகும். அது அனைத்துயிரையும் அணைத்து அன்பு செலுத்தும் பேரருட்சக்தியாகவும் விளங்குகிறது பார்க்குமிடமெங்கும் அவளுடைய கருணை நீக்கமற நிறைந்திருக்கிறது. அவள் ஒருத்தி தான் பலவடிவங்களிலும் பல பெயர்களிலும் எமக்கு அருள் தருகிறாள். எங்கள் அறிவுக்கும் சிந்தனைக்கும் எட்டாதவள் அன்பே வடிவானவள் எமக்கு இன்பத்தையும் பலத்தையும் செல்வத்தையும் அறிவையும் தந்து நல்வாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டுகிறாள்.

எம் அன்னை பராசக்திதான் நான்முகனின் சக்தி சரஸ்வதியாகவும், நாராயணனின் சக்தி மகாஇலக்குமியாகவும் சிவனின் சக்தி துர்க்கையாகவம் எம்முள் நின்று ஒளிர்கின்றனர்.

எமது அன்னை பராசக்தி குழந்தைகளாகிய நாம் எப்போது அழைத்தாலும் ஓடிவந்து அருளளிப்பார் எமது உள்ளத்தில் வஞ்சகமற்ற சிந்தனையுடன் அன்னையையே நினைக்க வேண்டும் அப்போது அன்னை சக்தி மனமகிழ்ந்து அருள்தருவாள் அன்னை பராசக்தியை நாம் தினமும் பாடிப்பணிய வேண்டும். அன்னை எழுந்தருளும் ஆலயத்தில் சரீரத்தொண்டுகள் செய்ய வேண்டும். நாமங்களை அன்போடு உச்சரிக்க வேண்டும். அப்போது எமக்குக் கல்வி வரம் தருவாள் அன்னையின் வரத்தினாலே நாம் பூமியில் வாழ்வாங்கு வாழலாம் என்பது உறுதி

செல்வன் சிவகுமாரன், செல்வவித்தியன்
தரம் 06
கோண்டாவில் இந்துமகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

## சக்தியின் அருள்

முழுமுதற் கடவுளின் சக்தியானவர் உலகமாதா அவள் பூவுலகில் வாழும் எம்மை எல்லாம் காத்து வருகிறாள். உலகமாதாவான சக்தியைப் பல நாமங்கள் கொண்டு அழைக்கின்றோம். ஒவ்வொரு நாமத்திற்கும் ஒவ்வொரு அர்த்தம் கொண்டு விளங்குகின்றாள். தீயவற்றை அளித்து வீரத்தைத் தரும் துர்க்கை ஆகவும், கல்வி வழங்கும் சரஸ்வதியாகவும், செல்வத்தை அளிக்கும் இலக்சுமி ஆகவும், வாழ்க்கை வாழ்வதற்கான செல்வங்களை அளிக்கும் அஷ்டலக்சுமி ஆகவும் நமக்க பல நாமங்கள் கொண்டு அருள் புரிகின்றாள். உலகில் வாழும் மாந்தர்கள் தாயானவளை பல வழிகளில் விரதங்களை அனுஷ்டித்து இஷ்டசித்திகளைப் பெறுகின்றனர். அவையானவன. பங்குனித்திங்கள், ஆடிச் செவ்வாய், நவராத்திரி, கேதாரகெளரி விரதம் என்பவை ஆகும். எமது நோய்கள் தீர இராகு காலத்தில் நெய்தீபம் ஏற்றி தாயானவளை வழிபட்டு வந்தால் எமது பாவங்கள் தீரும்.

அத்துடன் சித்திரை மாத பௌர்ணமி தினத்தன்று அம்மனுக்கு பிரதானமாக கஞ்சியை நைவேத்தியமாகப் படைப்பார்கள். இத்தினத்தன்று அம்மன் ஆலயங்களில் சிறப்பான வழிபாடு இடம் பெறும். அதே போன்று வைகாசி விசாகத்தில் அன்றும் சிறப்பான வழிபாடு இடம்பெறும் ஆடிப்பூரம் அம்மனுக்கு விசேடமான ஒரு திருநாளாகும் இத்தினத்தன்றே தாயானவள் பருவடைந்ததாகக் கொண்டு சிறப்பான வழிபாடு இடம் பெறும். இத்திருநாளை அம்மன் முழுக்கு என்றும் அழைப்பார்கள். அம்மனுக்கு பிடித்த நைவேத்தியங்கள் கூழ், வெண் பொங்கல், சர்க்கரை அமுது, கஞ்சி என்பவாகும் இவ் நைவேத்தியங்களை நாமும் எம் பரமேஸ்வரித் தாய்க்கு படைத்து அறத்தாயின் பாதம் பணிந்து நமக்கு வேண்டிய செல்வங்களை பெறுவோமாக.

பு. வித்யாபாரதி
தரம் 2
கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-*



## அருளின் அருமையும் பொருளின் அவசியமும்

வான்புகழ் கொண்ட வள்ளுவர் அருளுடைமை எனும் அதிகாரத்தில் அருளின் அருமையை அழகுபட எடுத்துரைக்கிறார். அருட்செல்வத்தை ஓர் தராசுத்தட்டிலும் பொருட்செல்வத்தை எதிர்த்தராசுத்தட்டிலும் நிறுத்துப் பார்க்கும் போது அருட்செல்வம் சிறப்புடையது பொருட் செல்வம் சிறப்பில்லாதது என்பது வள்ளுவனார் வாக்குரை.

திருக்குறளில் அருளுடைமை அதிகாரத்தில் பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை அது போலவே உயிர்கள் மேல் அருள் இல்லார்க்கு வீட்டுலகத்து இன்பமில்லை என்று உவமித்துக் கூறப்படுகிறது இதனையே வள்ளுவர்.

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்ச்
இவ்வுலக மில்லா கியாங்கு"

எனும் குறட்பாமூலம் குறிப்பிடுகிறார். செல்வங்களுள் அருட் செல்வத்துக்கு முன்னுரிமை வழங்கினாலும் பொருட் செல்வத்தை பின்னுரிமை கொடுத்து தள்ளிவிட முடியாது. மேலும் துறவற நிலையில் நின்று ஒழுகுபவர்களுக்கு அருட் செல்வம் சிறந்தது. அதுபோல் இல்லறநிலையில் நின்று ஒழுகுபவர்க்கு பொருட் செல்வம் சரியாக பேணவேண்டியது அவசியமாகும். காசிப முனிவர் தமது தனயர்களுக்கு ஓர் உபதேசம் செய்தார். சூரபன்மன், சிங்கமுகாசுரன், தாரகாசூரன், எனும் 03 பிள்ளைகளைப் பார்த்து சொல்லத் தொடங்கினார். "பிள்ளைகள்! தருமத்தைத் தழுவினால் அன்பு உதயமாகும் அதன் வழி அருள் எனும் குழந்தை வெளிப்படும். தவமகிமை அடைவீர்கள் தவமாட்சி அடையப் பெற்றால் மனத்தெளிவு பிறக்கும். மயக்கம் மாறிய அவ்வுயிர் சிவபெருமான் திருவடியை அடையும்" இதனை "தருமமே போற்றிமின் அன்பு சார்ந்திடும்......" என்ற பாடலூடாக அறியலாம்.

கல்வி, செல்வம் என இரு பொருள் இவ்வுலகிலுண்டு குறைவில்லாமல் அவற்றை நாம் எட்டிக் கொள்ள வேண்டும். செல்வம் கல்வியைத் தரும் அல்லாமல் மேன்மையை தரும். தருமம் காட்டும் புகழ் தரும் வெற்றி தரும் ஏனைய நல்லனவற்றைச் சேர்த்து வைப்பதால் செல்வத்தை விடச் சிறந்தது எதுவுமில்லை.

அருள் எவ்வளவு இருப்பினும் ஒருவரிடத்தில் பொருளில்லையேல் பகைவரிடத்தில் சென்று கையேந்த நேரிடும். இவ்வாறு செய்வதால் உலகம் இகழும்.

இல்லற வாழ்க்கை பொருட் செல்வத்தோடு பொருந்தியது. இல்லறத்தின் படி அருட் செல்வம் மிக மிக வேண்டியது ஆனால் இவ் வாழ்வோடு இணைத்துப் பார்க்கும் போது பொருட் செல்வத்திற்கு இளமையாகும். அருட் செல்வம் ஆனால் வையத்துள் வாழ்வாங்கு வாடி பொருட் செல்வத்தோடு அருட் செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-*

இணைந்திருக்கும்மேயானால் அதற்கு நிகரேது.

மானிட வாழ்க்கையில் இம்மை மறுமைப் பயன்களுக்கு அருட் செல்வம் பொருட் செல்வம் ஆகியன இரு கண்களைப் போல் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டியவை. அயரா முயற்சியாலும் ஊக்கத்தினாலும் சேகரிக்கப்பட வேண்டியவை என்பது முழு உண்மையாகும். இல்லறத் தீபத்துக்கு எண்ணெய் பொருள் என்றால் துறவறத் தீபத்துக்கு அருள் உயிர் நாடி. ஆனால் இல்லற விளக்கிற்கு எண்ணெய் பொருளாகவும் திரி அருளாகவும் பிரகாசிக்குமானால் வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்வு பயனுடையதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மயூரங்கா . பா
**A/L (2014)**
**JHLC**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## விரதங்கள்

விரதங்கள் மக்களுக்கு தெய்வ நம்பிக்கையை ஏற்படுத்தியும் மன வலிமையை கொடுத்தும் அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியை உண்டாக்கின்றன. விரதங்களை அனுஷ்டிப்பதால் ஒருவரது வாழ்வில் தன்னம்பிக்கை, பணிவு, பக்தி, துணிவு, அன்பு கருணை என்பன ஏற்படுவதுடனும் ஒழுக்கம், நேர்மை, போன்ற குணங்களும் விருத்தியடைகின்றன.

விரதம் என்பது மனம், பொறி, வழி போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடுதல் ஆகும். இந்த ஒவ்வொரு விரதங்களை பிடிப்பவர்கள் அதிகாலையில் துயிலெழுதல் நீராடி, தோய்த்துலர்ந்த ஆடையோ, புதிதாக, வாங்கிய ஆடையோ அணிதல் வேண்டும். காலை மாலை இறைவனை வழிபாடு செய்து தோத்திரப் பாடல்களை ஓதி உணவை ஒருவேளை மாத்திரம் உண்ணுதல் சிறந்ததாகும்.

விரதங்களில் பல உண்டு. அவற்றில் ஆவணி ஞாயிறு ஆவணி சதுர்த்தி, புரட்டாதிச் சனி, விநாயகர் சஷ்டி, கிருஷ்ணஜெயந்தி, பிரதோசவிரதம், என்ப முக்கியமானவையாகும. அவற்றில் விநாயகர் சஷ்டி விரதத்தை பாப்போம்

### விநாயகர் சஷ்டிவிரதம்

விநாயகருக்கு உரிய விரதங்களில் இதுவும் ஒன்றாகும். இவ் விரதம் கார்த்திகை மாதம் தேய்பிறை தொடக்கம் மார்கழி மாதம் வளர் பிறை மட்டும் சஷ்டி விரதம் 21 நாட்கள் அனுஷ்டிக்கப்படும். மகாவிஷ்ணு, தாம் பொய்ச்சாட்சி சொன்னதால் ஏற்பட்ட சாபத்தை விநாயரைவிழிபட்டு நீக்கிக் கொண்ட நாளே விநாயர் சஷ்டி ஆகும். இந்த விரதத்தை "பெருங்கதை" விரதம் எனக் கூறுவார்.

விநாயகருக்கு முதல் இருபது நாட்களும் மதியம் ஒரும் பொழுது மட்டும் உணவு உண்டு இரவு வேளைகளில் பழம், பால், அருந்துவார்கள். இறுதி நாள் உபவாசம் இருந்து மறு நாள் பாரனை செய்து விரதத்தை நிறைவு செய்தல் வேண்டும். இருபத்தொரு இழையாலான காப்பை ஆண்கள் வலது கரத்திலும் பெண்கள் இடது கரத்திலும் அணிந்தே விரதத்தை அனுட்டிக்க ஆரம்பிப்பது முறையாகும். பாறனையன்று காப்பை அவிழ்த்து விரதத்தை நிறைவு செய்தல் வேண்டும்.

விரத காலமான 21 நாட்களும் விநாயகருக்கு இளநீர், மோதகம், அவல், எள்ளுருண்டை, போன்றவற்றை நிவேதித்து விநாயகரின் சரிதத்தைக் கூறும் பெருங்கதை, விநாயகர் புராணம் முதலிய நூல்களைப் படித்துக் கேட்டும் வழிபாடு செய்தல் வேண்டும். விநாயகர் சஷ்டி விதத்தைத் தொடர்ச்சியாக 21 வருடங்கள் ஒருவர் அனுஷ்டித்தால் சிறந்த பலனைப் பெறுவர் என்பது சைவர்கள் நம்பிக்கை ஆகும். இயலாதவர்கள் ஏழு வருடங்களாவது அனுட்டிப்பது நன்று "கடவுளை நம்பினர் கைவிடப்படார்"

த. விதுரகா தரம் 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

## உன் பாதம் சரணம் அம்மா

அகிலத்தைப் புரிந்திடும்
அன்னையவள் அருள்
சுரந்திடும் ஆலடியில்
நிதம் காலடி வைத்திட
யாவும் நம் காலடியில்
மேவும் கலைகள் மிக்கொளிரும்
கல்வி நற் செல்வம் தந்து
செம்மை வாழ்வளித்திடுவாய்
நல் ஆளுமை தற்துணிவு
நல் லொழுக்கம் தலைமைத்துவம்
தந்து தரணியில் உயர்ந்திட
அம்பிகை பரமேஸ்வரியே
உன் பாதம் சரணம் அம்மா

செல்வி. ந. கிருசிகா
தரம் 4
யா.சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சைவம் காத்த நாவலர்

01. நாவலர் பெருமான் 1822ம் ஆண்டு மார்கழி திங்கள் மதி நிறைந்த நன்நாளாம் 18ம் திகதியில் பிறந்தார்.
02. இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகம் என்பதாகும் இவரது தாயார் பெயர் சிவகாமி, தந்தையார் பெயர் கந்தப்பிள்ளை ஆகும்.
03. இவரது நாவன்மையைப் போற்றி இவருக்கு திருவாவடுதுறை அதீனம் நாவலர் பட்டம் கொடுத்தது.
04. இவர் ஆங்கிலம், சமஸ்கிருதம், லத்தீன், மொழிகளைக் கற்றதோடு ஆரோக்கியமான இளமைக்கல்விக்கு மெருகூட்டும் ஆசான்களை உருவாக்கினார்.
05. இவரது காலத்திலே போர்த்துக்கீசரினதும் ஒல்லாந்தரினதும் கெடுபிடிகளால் சைவம் தாழ்வுற்றது. இந்து ஆலயங்கள் இடித்து நொருக்கப்பட்டன.
06. ஆங்கிலக் கல்வியுடன் கிறிஸ்தவமதப்பிரச்சாரங்கள் சைவ மக்களை பாதை மாறிய ஆட்டிக்குட்டிகளாக்கியது எனவே சைவர்களை மீளவும் பூரண சைவர்களாக்கும் அரும்பணியை ஏற்றுக் கொண்டார்.
07. கதிர்காமக் கந்தன் மீது வைத்திருந்த பற்றினால் கீர்த்தனைகள் பாடினார். பிரசங்கங்கள் வாயிலாக சைவர்களைக் கவரத் தொடங்கினார்.
08. ஆலயங்களைப் புனரமைத்து பஞ்சமா பாதங்களைத் தவிர்த்து உண்மைச் சைவர்களாக வாழ வழி சமைத்தார். அத்துடன் சைவ சமய மாணவர் சமுதாயத்தைக் கட்டி எழுப்பினர்.
09. கிறீஸ்தவ மதத்திற்கு எதிராகக் கோசங்கள் எழுப்பி வெற்றி கண்டதோடு அதற்கு எதிரான வாசகங்களைத்துண்டுப் பிரசுரமாகவும் வெளியிட்டார்.
10. எனவே இவர் சைவ சமயத்தின் வளரச்சிக்காகப் பல தொண்டுகள் செய்ததோடு 1879ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவர் செய்த சைவத் தொண்டு என்று நிலைத்து நிற்கும்.

தி. திலக்ஷன்
தரம் 5
நாவலர் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எங்கள் தாயவள்

அ. அத்தித் தோட்டத்தில் அமர்ந்த தாயவள்
ஆ. ஆலவிருட்சம் கீழமர்ந்து அருளைப் பொழிவாள்
இ. இன்பமாக எமை வாழ வைப்பாள்
ஈ. ஈஸ்வரி என்னும் நாமம் கொண்டவள்.
உ. உயிர்கள் அனைத்தையும் காக்கும் தாயவள்.
ஊ. ஊர்களில் எல்லாம் கோயில் கொண்டவள்.
எ. எங்கும் எதிலும் நீக்கமற வாழ்பவள்.
ஏ. ஏணி போல் எமை ஏற்றி வைப்பவள்.
ஐ. ஐஸ்வரியங்கள் எல்லாம் எமக்கு தருபவள்
ஒ. ஒற்றுமையாக எமை வாழ வைப்பவள்.
ஓ. ஓங்கார நாதமாய் ஒலித்து நிற்பவள்.
ஔ. ஔவையார் வணங்கிய அன்புத் தாயவள்.

மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்

பா. மயூரம்மியா
தரம் - 03.
கோ.நாவலர் வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரார்த்தனை செய்வோம்

பிரார்த்தனை சக்திவாய்ந்தது மனதை பொறிவழியில் செல்லவிடாது ஒரு நிலைப்படுத்தி ஒன்றையே வேண்டிச் செய்யும் பிராத்தனையினால் பலன் உண்டு.

பிரார்த்தனை செய்பவரின் மனம் அன்பு மயமானதாகவும் தூய்மையானதாகவும் இருக்க வேண்டும். இறைவன் குடி கொள்வதற்கு ஏற்றதாக மனதை வைத்துக் கொண்டு வழிபாடு செய்ய வேண்டும். தூய உள்ளத்திலே தான் இறைவன் குடிகொள்வான் மனமொன்றி மனமுருகி இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.

இன்று துன்பங்களும் துயரங்களும் நம்மைச் சூழ்ந்து கிடக்கின்றன. இத்துன்பங்களிலிருந்து எம்மைக் காப்பதற்கு இறைவன் தான் வர வேண்டும் என நினைக்கின்றோம். இந்நிலையில் எமக்கு வேண்டியது இறையருள் தான். அவ் இறையருளைப் பெறவே தான் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

திருமுறைப் பாடல்களைப் பாடியோர் இறையருளைப் பெற்றவர்களேயாவர். இவர்கள் இத்திருமுறைப்பாடல்களைப் பாடிய போது பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. என்பதை நோக்கும் போது அத்திருமுறைகளின் அற்புத சக்தியை விளங்கிக் கொள்ளலாம். இவ்வாறு அற்புதசக்தி கொண்ட திருமுறைப் பாடல்களை நாமும் பாடிப் பிராத்தனை செய்தால் எமக்கு இறையருள் கிட்டுவது நிச்சயம்.

கோளறுபதிகம், திருநீற்றுப்பதிகம் போன்ற பதிகப்பாடல்களைப் பாடும் போது எமது துன்பங்கள் காற்றாய்ப் பறந்திடும்.

எனவே நாம் பிரார்த்தனை செய்து இறையருள் பெற்று இன்பமாய் வாழ்வோம்.

சி.செல்வகஜன்
தரம் 5
யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்த்மிசன் வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நவராத்திரி

நவராத்திரி விழா புரட்டாதி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. முதல் மூன்று நாட்களும் வீரத்தை வேண்டித் துர்க்கையை வழிபடுவர். அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டித் திருமகளை வழிபடுவர். இறுதி மூன்று நாட்களும் கல்வியை வேண்டி கலைமகளை வழிபடுவர். பத்தாவது நாளன்று விஜயதசமி விழா இடம் பெறும். அன்று வாழை வெட்டுதல் ஏடு தொடக்குதல் போன்ற நிகழ்வுகள் இடம் பெறும். நவராத்திரி பூசை நடைபெறும் மண்டபத்தைச் சுத்தம் செய்து. கோலம் போடுவதுடன் மாலை, தோரணம், போன்றவற்றாலும் அலங்கரிப்பர். துர்க்கை, திருமகள், கலைமகள் ஆகிய மூன்று சக்திகளின் தெய்வப் படங்களையும் வைப்பர் இப்படங்களுக்கு அலங்காரம் செய்வர். தெய்வங்களுக்கு நிவேதனப் பொருட்களையும், பழ வகைகளையும் படைப்பார்கள் பின் நவராத்திரி தோத்திரப் பாடலைப் பாடி பூசை செய்து பூசை நிறைவுற்றதும் நிவேதனப் பொருட்களைப் பிரசாதமாக அடியார்கள் அனைவருக்கும் வழங்குவார்கள்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல் வாளென் உள்ளத்தின் உள்ளே
இருப்பள்ளி இங்கு வாராதிடர்

- சரஸ்வதி அந்தாதி

லோ. ரிலக்சன்
தரம் 3
கோப்பாய் நாவலர் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எமது பாடசாலையும் சமயக்கல்வியும்

"யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம்" எனப் போற்றப்படுமளவிற்கு எமது மக்களின் வாழ்வோடு சைவநெறி ஒன்றிணைந்திருக்கின்றது. பாடசாலைக் கல்வியைப் பெற்றிரா விடினும் புராண இதிகாசக்கதைகள். சமயச்சடங்குகள், கிரியைகளின் முக்கியத்துவம் என்பவற்றை மரபுவழி அறிவினூடாகப் பெற்றிருந்தார். அதுமட்டுமல்லாது அதனைக் கடைப்பிடித்தும் வாழ்ந்து வந்தனர். அந்நியராட்சியின் போது அவர்களது மதம், மொழி, கலாசாரம், என்பன எம்மிடையே புகுத்தப்பட்டன. கல்விக்காகவும் அரச உத்தியோகத்திற்காகவும் எமது மக்கள் மதம் மாறவும் தொடங்கினார். இந்நிலை கண்டு வேதனையுற்ற ஆறுமுகநாவலர் சேர்.பொன். இராமநாதன் போன்றவர்களின் முயற்சியால் இந்து சமயத்தையும் தமிழ்ப்பண்பாட்டையும் ஏற்றுக்கொண்டு கற்பதற்குரிய பல பாடசாலைகள் யாழ்ப்பாணத்திலும் பிற மாவட்டங்களிலும் தோற்றுவிக்கப்பட்டன.

சமுதாயத்தின் கண்களாகப் போற்றப்படுபவர்கள் பெண்களே கல்வியறிவுடைய பெண்களே சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்புபவர்கள். எமது கல்லூரி ஏட்டுக்கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது சிறந்த ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதிலும் சிறப்பிடம் பெறுகின்றது. சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல என்பதற்கிணங்க சமயக்குரவர் குருபூசைத் தினங்கள், சிவராத்திரி, நவராத்திரி என்பன எமது பாடசாலையில் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. இவற்றினூடாக மாணவர்களுக்கு சமய அறிவு மட்டுமல்லாது ஒழுக்க விழுமியங்கள் விருத்தியடைவதுடன் அழகியல் சார்ந்த திறமைகள், தலைமைத்துவ ஆற்றல் போன்றன விருத்தி செய்வதற்கு சந்தர்ப்பம் வங்கப்படுகின்றது. மேலும் இலவச வகுப்புகளும் நடாத்தப்பட்டு வருகின்றன இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி பயன்பெற வேண்டும். எதிர்கால வாழ்க்கையில் சமயச்சடங்குகள், பண்டிகைகள், ஆலயவழிபாடு போன்றவற்றில் ஈடுபடுவதற்கு அவற்றைப் பற்றிய விளக்கங்களையும் பெற்றிருப்பது அவசியம் பாடசாலைக் காலத்திலேயே கற்றுணர்வதும் கற்றாங்கு ஒழுகப் பழகுவதும் வாழ்வின் இறுதிக்காலம் வரை பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

நெருக்கீடுகள் நிறைந்த இன்றைய காலத்தில் எமது வழிபாட்டு முறையின் தேவையை உணர்ந்து அவற்றை உரிய முறையில் கடைப்பிடிப்போம் இந்தும் பண்பாட்டினைப் பேணி இந்துக்களாக வாழ்வோம்

"நாம் நம் நன்றியை இறைவனுக்கு எப்படி சமர்ப்பிப்பது? நம்மைச் சுற்றியிருக்கும் மக்களிடம் அன்பு செலுத்தி, உதவ வேண்டியவர்களுக்கு உதவி செய்து சமுதாயத்திற்குச் சேவை செய்வதன் மூலம் நம்மைப் பாதுகாத்து வரும் இறைவனுக்கு நாம் நன்றியைச் செலுத்த முடியும்"

துவாரகன் ச. தரம் (11)
யா.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குளிர்விக்க வா தாயே

பரமேஸ்வரி அம்மாவே
பாசமுடன் வணங்குகின்றேன்
பல்லுயிர்களுக்கும் - உன்
அபயகரம் நீட்டிடம்மா

கோப்பாய் வாழ் மானிடர்கள்
கரம் கூப்பி வணங்கி நிற்க
குடியிருந்த தெய்வமே
குறைதீர்க்க வாருமம்மா

பரம்பரை குடிகளின்
பட்டினியை தீர்த்திடம்மா
பாவப்பட்ட மானிடர்க்கு
பதிலொன்று தாருமம்மா

பண்பாளரைப் பெற்றெடுத்த
பரமேஸ்வரி அம்மாவே
பாசக்கரம் நீட்டி எங்கள்
பாவவினை போக்குமம்மா

மந்திரங்கள் முரசொலிக்க
கும்பங்களும் குளிர்விக்க மரத்தடி நிழல மலர்ந்து - எமை
குளிர்விக்க வாதாயே - அம்மா
குளிர்விக்க வா தாயே

கு. மதுசாஜிகா
தரம் 3
யா. சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்னையை தொழுதிட்டால் நல்வாழ்வு வாழ்ந்திடலாம்

அத்தித் தோட்டத்து அன்னையை நம்பி தொழுதிட்டால்
எக்குறையும் நம்மை எப்போதும் அணுகாது நல்வாழ்வு நம்மை வந்தே சேரந்திடும்!

ஆலடி தாயவளை
அன்புடன் தொழுதிட்டால்
அடியவர்கள் நாம் என்றும்
ஆனந்தமாய் வாழ்ந்திடலாம்.

அன்னை பரமேஸ்வரியை
பக்தியுடன் தொழுதிட்டால்
பாரினிலே எமக்கு குறை யேதும் இல்லாமல்
நல்ல பண்புடனே வாழ்ந்திடலாம்

பரம் பொருளின் நாயகியைப்
பரிபூரணமாய் நம்பிவிடு
நானிலத்தில் எப்போதும்
நல்வாழ்வே தந்திடுவாள்

நன்றி

சிவகுமார் - சங்கீர்த்தன்
ஆண்டு 07
யா.கொக்குவில் இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வரமருள்வாய் அம்மா நீ

தென் கோவை பதிதனிலே தேவி நீயும் வீற்றிருந்து
இன்னருளைப் பொழிபவளே ஈஸ்வரியே எம் தாயே
மண்ணவரும் விண்ணவரும் வந்து நின் முன் இறைஞ்சி
பேணுவதற்கு உரிய எங்கள் அரிய பெருமாட்டியே
அதிசயமான வடிவுடைய எம் அபிராம வல்லியே
பதிசிவனின் அருகிருந்து ஒளிவீசும் பேரொளியே
சக்தியும் நீ புத்தியும் நீ சித்தியும் நீ எப்பொதும்
சித்தவியே நிர்மலியே வரமருள்வாய் அம்மா நீ

பல நூறு துன்பங்கள் வரும்போது உடனிருந்து
பலமாகித் துணைவருவாய் பார்வதியே பாமகளே
ஆயிரம் கண்கொண்ட தாயேநின் கடைக்கண்ணால்
ஒரு பார்வை பார்த்திட்டால் அது வொன்றே போதுமம்மா
முன்னே பணிந்தெழுந்து சேவிக்கும் அடியாரை நீ
பின்னே திரிந்து அவரைப் பேணியே காத்திடம்மா
அன்பெனும் பொருள் கொண்ட ஆதிபரமேஸ்வரியே
அனுதினமும் நாள் பணிந்தோம் வரமருள்வாய் அம்மா நீ

குறித்தேன் மனத்தில் நின்கோலங்கள் எல்லாமே
ஜெபித்தேன் நாவினிலே நின் நாமங்கள் எல்லாமே
ஆயிரம் சூரியனின் ஒளி கொண்ட செல்வம் நீ
ஆருயிர் நீ எங்களுக்கு பாரினிலே ஒளி காட்டு
தொழுமடியார் தீவினையை நீக்கியென்றும் காத்திடவே
துணையாகவே நின்று திருவளை பொழிந்திட
எண்ணியதை முடித்து வைக்கும் ஏந்திழையே சுடர்க் கொடியே
கண்ணிலுமை பதித்திட்டோம் வரமருள்வாய் அம்மா நீ

உந்தனது மலர்ப்பாதம் உள்ளத்திலே உறைந்திருக்க
உன் நாமம் உச்சரித்தோம் ஓடி நீ வருவாயே
கந்தனது அன்னையே சொந்தமம்மா நீ எனக்கு
கணப் பொழுதும் மறவாது கைதொழுது நின்றோமே
சிந்தனையிலெந்நாளும் சிங்காரத் திருவுருவம்
சிறப்புடனே நிறைந்திருக்க குறையேதுமில்லையிங்கு
வநதனையே செய்து வாழ்த்தி நிதம் துதிக்கின்றோம்
வளமான வாழ்வெனக்கு அருள்வாயே அம்மா நீ

சி. ஜெயபிரஷாந்
தரம் 9, யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## சேர். பொன். இராமநாதன்

சைவத்தின் வளர்ச்சிக்குப் பணியாற்றிய சைவத்தமிழறிஞர் வரிசையில் சேர்.பொன்.இராமநாதனுக்கும் ஒரு சிறப்பிடம் உண்டு. அவர் பலதரப்பட்ட அறிவியல்களிலே புலமையும் புகழும் பெற்றவர். சமகால அரசியல் சட்டம் முதலியவற்றில் பிரபல்யம் பெற்றவர். அவர் சிறந்த தேசியவாதி. அதேவேளையில் சமயத் துறையிலும் சிறந்து விளங்கியவர். சைவ சமயத்துக்கும் பண்பாட்டிற்கும் தொண்டாற்றியவர். சைவசமய மரபுக்கேற்ப, சமய நெறியின்றிப் பரந்த நோக்குடைய சமரச ஞானியாகவும் விளங்கினார். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெருஞ் செல்வந்தராகவும் சைவசமயத்தின் மீது பற்றும், பக்தியும் கொண்டவராகவும் பொன்னம்பலம் முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் மகனாக 1851ம் ஆண்டு சித்திரை மாதம் 16ம் திகதி பிறந்தார். இவர் தமது இளமைக்கல்வியை கொழும்பு இராசதானிக் (றோயல்) கல்லூரியிலும் உயர் கல்வியைச் சென்னை இராணிக் கல்லூரியிலும் பயின்றார். பின் சட்டப்பயிற்சி பெற்றுச் சட்டத்தரணியானார். நீதி பரிபாலன நாயகமாகவும், தற்காலிகசட்டமா அதிபராகவும் கடமையாற்றியவர். பிரித்தானிய அரசாங்கத்தால் வழங்கப்படும் “நைட்” பட்டத்தையும் பெற்றவராவார். 1892ம் ஆண்டு இலங்கை அரசியலிலே சட்ட நிருபணசபையின் முதல் தமிழ்ப்பிரதி நிதியாகப் பிரவேசித்துப் பல ஆண்டுகள் அரசியற்பணி புரிந்தார். 1892இல் சைவ பரிபாலனசபை நிறுவப்படுவதற்குத் தூண்டுகோலாக இருந்தார்.

சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் தமது கௌரவத்தையும் செல்வ வளத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி, சைவத்தமிழ் மக்களது சமயம், கல்வி, ஆன்மீகம் போன்றதுறைகளின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டார். இளமைக்காலத்தில் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களது தொடர்பாலும், ஆறுமுகநாவலர் அவர்களது பெரும் நாட்டம் கொள்ளலானார் சைவப் பெண்களின் கல்வி வளர்ச்சியானது சைவத்தமிழ்ச் சமூகத்தின் மேம்பாட்டுக்கு அடிப்படையாய் அமையுமென்பதைக் கருத்திற் கொண்டு. 1913இல் யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் பெருந்தொகையான பொருட் செலவில் கட்டப்பெற்ற இராமநாதன் மகளிர் கல்லூரியைத் திறந்து வைத்தார். இதே அடிப்படையில் சைவப்பாரம்பரியத்தைப் பேணுமுகமாக 1921இல் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பரமேஸ்வரா ஆண்கள் கல்லூரியையும் திறந்து வைத்துக்கல்விப்பணி புரிந்தார்.

கல்லூரிகளிலே தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளோடு சங்கீதமும் கற்பிக்கப்பட்டது. “கற்றலின் பயன் கடவுளை வணங்குதல்” என்ற அடிப்படையில் பரமேஸ்வராக் கல்லூரியில் பரமேஸ்வரன் கோயில் ஒன்றையும் கட்டுவித்தார். பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட வல்லுனராகவும் அரசியல் அறிஞராகவும் விளங்கிய சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் உள்ளத்தில் ஆன்மீக உணர்வே பெரிதும் குடிகொண்டிருந்தது. தஞ்சாவூர் அருட்பரானந்த சுவாமி என்னும் ஆண்மீகப் பெரியாரின் தொடர்பினால் சமயம், தத்துவம் யோகநெறி என்பவற்றைத் தெளிவாகக் கற்றுணர்ந்தார். அதனால் இராமநாதன் அவர்களின் வாழ்வின் போக்கும் நோக்கும் மாறுபட்டமைந்தன. அமெரிக்கா ஐரோப்பா அவுஸ்ரேலியா முதலான நாடுகளுக்குச் சென்று தமது ஆன்மீகப் போதனைகளை வெளிப்படுத்திச் சைவ சமயத்தை பரவச்செய்தார். இந்தியாவில் நடைபெற்ற சைவசித்தாந்த மாநாடுகளுக்குத் தலைமை தாங்கிய பெருமையும் இவருக்குண்டு. கொழும்பு மாநகரில் சைவத்தின் பெருமையினை உணர்த்தும் கலைக்கூடமான பொன்னம்பலவாணேச்சரத்தைக் கற்றளியாகக் கட்டிய பெருமை சேர்.பொன்.இராமநாதன் அவர்களையே சாரும் பண்டைய சைவமரபினைப் பேணிக்கலை அழகோடு மிளிரும் இவ்வாலயம் இன்றும் தலைநகரில் தனிப்பெருஞ்சிறப்போடு அவரது சைவப் பெரும்பணிக்குச் சான்றாய் விளங்குகிறது.

சேர்.பொன் இராமநாதன் அவர்கள் கல்வி, சட்டத்துறை சார்ந்த நூல்களை மட்டுமன்றி ஆன்மீகம் தொடர்பான நூல்களையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். அவற்றுள் திருக்குறட்பாயிரம், இராமநாத பாஷ்யம், ஔவை நாயகியின் ஆத்திசூடி, திருமந்திர உரைவிளக்கம், பகவத்கீதை தமிழ் மொழி பெயர்ப்பும் விருத்தியுரையும் போன்றவை குறிப்பிடத்தக்கன.

இலங்கை அரசியல் வரலாற்றில் தேசபிதாவாகப் போற்றப்படும் சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் அறம், பணிவு, ஆத்மிகஞானம், முதலான குணங்களோடு இந்து தர்மம் போதிக்கும் சமயப்பொறை உடையவராகவும் பிற சமயங்களை மதிக்கும் மேலான பண்புடையவராகவும் விளங்கினார். பௌத்த ஆலயங்களின் சொத்துரிமைச் சட்டம், முஸ்லீம்களின் திருமணஉரிமை சட்டம் முதலான சட்டங்களைப் பிரித்தானிய அரசு ஏற்றுக்கொள்ளுமாறு நிறைவேற்றி உதவினார், சைவத்தமிழ்மகனான இராமநாதன் அவர்கள் தமது சமயத்தின் பெருமைகளை மதித்ததோடு ஏனைய சமயங்களின் சிறப்புக்கும் உதவி புரிந்தமை அவரை ஒரு உண்மையான ஆன்மீக வாதியாக உணர்த்தியது.

செல்வரத்தினம் ஜெயசெந்தூரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஐந்தொழில்கள்

01. உலகைப் படைத்தவர் சிவபெருமான். எம்மைக்காப்பவரும் அவரே. சிவ பெருமான் மூவகைத்திரு மேனிகளை உடையவர் அருவம், உருவம், அருவுருவம் என்பன அத்திருமேனிகள் ஆகும். எல்லா உயிர்கள் மீதம் சிவபெருமான் கருணை உள்ளவர். அதனால் அவர் ஐந்தொழிலைப் புரிகிறார் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவையே ஐந்தொழில்களாகும். அவையாவன படைத்தலை பிரம்மாவும், காத்தலை விஸணுவும், அழித்தலை உருத்திரனும், மறைத்தலை மகேஸ்வரனும், அருளலை சதாசிவனும், புரிகின்றனர்.

02. இந்த உலகம் இயங்குவதற்கும் மனிதர்களின் நலனுக்கும் இறைவன் இவ்வாறான தொழில்களைப் புரிகின்றார் ஐந்தொழில்களை நிகழ்த்தும் வடிவம் நடராஜ வடிவம் ஆகும். சிதம்பரத்தில் இந்த நடராஜ வடிவமானவர் எமக்கு அருள்பாலிக்கின்றார் எனவே நாமும் நடராஜப்பெருமானை வழிபட்டு நாமும் நலமாக வாழ்வோம்.

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்குமின்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்றால் மனித்தபிறவியும்
வேண்டுவதே இந்த மானிலத்தே

திருச்சிற்றம்பலம்

சிவனே எமதுமுழுமுதற்கடவுள் அவனின்றி ஓரணுவும் அசையாது
நன்றி

த. ஜதுர்ஷன்
தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

## சைவப் பழக்கங்கள்

01. அதிகாலையில் "சிவ சிவ" என்று சொல்லித்துயில் எழுதல் வேண்டும்.
02. தினமும் நீராடி கிழக்கு அல்லது வடக்கு நோக்கி அண்ணாந்து சிவ சிவ என்று சொல்லித் திருநீறு அணிதல் வேண்டும்.
03. சுவாமி அறையில் உள்ள சுவாமிக்கு விளக்கேற்றி மலர்கள் வைத்து வழிபடுதல் வேண்டும்.
04. உணவு உண்ண முன்னர் இறைவனுக்கு நன்றி செலுத்துதல் வேண்டும்
05. பிற உயிர்கள் மீது ஜீவகாருண்யம் காட்ட வேண்டும்.
06. அனைவரிடமும் இன் சொல் பேச வேண்டும்
07. தினமும் பெற்றோரை வணங்கி ஆசி பெற வேண்டும்.
08. தினமும் ஆலயத்திற்குச் சென்று இறைவனை வணங்குதல் வேண்டும்.
09. பசுமுதலான பிராணிகளுக்கு உணவளித்தல், அவற்றைத் தெய்வங்களாகக் கருதல் வேண்டும்.
10. பெரியோருக்கு ஆசிரியருக்கு மதிப்பளித்தல் வேண்டும்.
11. நம்வீடு தேடிவரும் துறவியருக்கும் வறியவருக்கும் இன் முகத்தோடு உணவளித்தல் வேண்டும்.
12. நித்திரைக்குச் செல்லு முன் இறைவனைத்துதித்தல் வேண்டும்.

நகுலேஸ்வரன் பிருதுவிகா
தரம் 3
யா./சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அத்தித் தோட்டத்து அன்னையே

அத்தித்தோட்டத்தில் உறைந்தவளே - நீ
எத்திக்கும் அருளாட்சி புரிபவளே அம்மா
(அத்தி.....)

காத்திருக்கும் பக்தர்களை காட்பவளே - நீ
சித்தர்களை சிவமாக்கிச் சிறந்தவளே
பரமேஸ்வரியாகி பாமரரைக்காத்தவளே - நீ
பாருலகம் போற்ற இங்கு வாழ்பவளே அம்மா
(அத்தி........)

அன்று வந்தாய் என்று கேட்டு வணங்கி நின்றோம் - நீ
என்று வந்தாய் என்று யாரும் சொன்ன தில்லையே
ஆலமர நிழலமர்ந்து வரம் பல தருபவளே
கால மெல்லாம் உன்கோவில் சிறந்திடவே அம்மா
(அத்தி.........)

கோப்பாயில் கோவில் கொண்டு அமர்ந்தவளே -நீ
கோடி மக்கள் புடைசூழும் பத்தினியே
பூமாலை சூடி வாழும் பூ மகளே - உன்
புதுமுகம் காணவந்தோம் பாரம்மா - அம்மா
(அத்தி......)

கா.கோபிகா
தரம் 6
யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆலய வழிபாடுகள்

01. இறைவன் எழுந்தருளி அருள் பாலிக்கும் இடம் ஆலயமாகும். சைவ சமயிகளுக்கு ஆலய தரிசனம் மிகவும் இன்றியமையாதது. அதனால்தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்கக் கூடாது என்பர். நாம் ஆயலத்திற்குச் சென்று முதலில் சதாப்ஷலிங்கத்தை வணங்க வேண்டும். அதாவது கோபுரத்தை வணங்க வேண்டும்.

02. ஆலயத்திற்கு செல்லும் போது தூய்மையாகச் செல்ல வேண்டும். நீராடி தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து செல்ல வேண்டும். ஆலயத்திற்கு செல்லும் போது வெறுங்கைகளோடு செல்லக்கூடாது. பூக்கள், மாலை, பழம், பாக்கு, வெற்றிலை, ஊதுபத்தி, கற்பூரம் முதலியவற்றை கொண்டு செல்ல வேண்டும்.

03.ஆலயத்தில் அமைதி பேண வேண்டும். ஆலயத்தில் விளையாடக்கூடாது. குளப்படி செய்யக் கூடாது நாம் ஒரு வரையும் தொந்தரவு செய்யக்கூடாது. ஆலயத்தில் குப்பைகளைப் போடக் கூடாது. ஆலயத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். நாம் இறைவனை வழிபடும் போது மனதை ஒரு நிலைப்பாடாக வைத்து வணங்க வேண்டும்.

04. ஆலயத்தின் உள்ளே பலிபீடத்துக்கு கொடிமரத்துக்கு முன்னால் இப்பால் வீழ்ந்துவணங்க வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்வார். ஆண்களது அட்டாங்க நமஸ்காரம் என்பது ஆண்களுக்கு எட்டு உறுப்புக்கள் நிலத்தில் முட்டுதலும், பெண்களது நமஸ்காரம் என்பது பெண்களுக்கு ஐந்து உறுப்புக்கள் நிலத்தில் முட்டுதலும் ஆகும். வழிபாட்டின் இறுதியில் சண்டேசுவரப் பெருமானை வணங்கி தரிசனப்பலனைத் தருமாறு வேண்டுதல் முறையாகும்.

05. நாம் இறைவனை நம்ப வேண்டும். நம்பியதால் தான் நமிநந்தியடிகள் ஏளனப்பேச்சுக்கு உள்ளாகி இறைவனின் அசரீரியால் அவர் தண்ணீரை ஊற்றி விளக்கேற்றினார். அவர் தண்ணீரை ஊற்றி விளக்கேற்றிய கதை நாடெங்கும் பரவியது. அதே போல் நாமும் இறைவனை நம்பித் தொண்டுகளைச் செய்வோமாக.

கடவுளை நம்பினோர் கைவிடமாட்டார்
நன்றி

த. சுவஸ்திகா
தரம் 4
யா/ இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## ஆலய வழிபாடு

01. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முது மொழியாகும்
02. இறைவனை வழிபடுவதற்குரிய சிறப்பான இடம் ஆலயம் ஆகும்
03. இறைவனின் திருவருளைப் பெற ஒவ்வொருநாளும் நாம் ஆலயம் சென்று வழிபட வேண்டும்.
04. ஆலயத்திற்கு செல்லும் போது நீராடி தோய்த்து உலர்ந்த ஆடை அணிய வேண்டும்.
05. வீபூதி தரித்து அகத்தூய்மையுடன் ஆலயத்திற்கு செல்ல வேண்டும்.
06. தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், பூக்கள், பால், கற்பூரம் போன்ற பூசைப்பொருட்களை எடுத்துச் செல்லல் நன்று.
07. ஆலயத்தினுள் செல்ல முன் நீர் நிலையில் கை, கால், முகம் சுத்தம் செய்ய வேண்டும்.
08. முதலிலே கோபுரத்தை வணங்கிச் சிவ நாமத்தை உச்சரித்துக் கொண்டு ஆலயத்தினுள் செல்ல வேண்டும்.
09. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று கூறுவார்கள்.
10. ஆலங்களில் தெய்வ அருள் நிறைந்திருக்கும் அதனைப் பணிவுடன் பெற மனதை அடக்க வேண்டும்.
11. நாம் இறைபக்தியுடன் அருட்பாக்களை ஓதி வணங்குதல் வேண்டும்.
12. ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது கொன்றை வேந்தனாகும்.

தி.திலக்ஷிகா
தரம் 3
யா/நாவலர் வித்தியாசாலை கோப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## ஆன்மீகத்தில் விஞ்ஞானம்

ஆன்மீகத்திலிருந்தே ஆராயும் ஆர்வம் உடைய விஞ்ஞானம் தோன்றியது எனக் கூறமுடியும். ஆன்மீகத்தின் எந்தவொரு செயற்பாட்டை ஆராய்ந்தாலும் அது அறிவியல் பூர்வமான ஏதாவது ஒரு கருத்தைத் தெரிவிப்பதாக உள்ளது.

ஆன்மீகத்தின் படி நம் மூதையர் கூறிய பல்வேறு விடயங்களில் ஒன்றான புளியமரத்தின் அடியில் இரவில் சென்றால் முனி அடிக்கும் என்ற செயற்பாடு விஞ்ஞானரீதியாக ஆராயும் போது பொதுவாக தாவரங்கள் இரவில் காபனீரொட்சைட்டை வெளிவிடுகின்றது. அதிலும் புளியமரம் அதிளவான இலைகளைக் கொண்டிருப்பதால் இலை வாய்கள் அதிகம் காணப்படுவதால் அதிகளவு காபனீரொட்சைட் வெளியேறுகின்றது இதனால் மயக்கம் ஏற்படுகின்றது. எனக் கூறப்படுகின்றது.

மேலும் சமைத்த உணவினை இரவில் கொண்டு செல்லும் போது கரியினை வைத்துக் கொண்டு செல்லாவிட்டால் பேய் பிடிக்கும் என்கிறது ஆன்மீகம் அதனையே விஞ்ஞானம் காபன் நச்சு வாயுக்களை உறிஞ்சும் தன்மையுடையது ஆகவே இரவில் உணவு நஞ்சாகாமல் பாதுகாக்கவே கரி வைத்தல் வேண்டும் என்கிறது.

மற்றும் பிள்ளையார் முன்னிலையில் தோப்புக்கரணம் இடுவது ஆன்மீகத்தில் பக்திக்காகவே அதுவே விஞ்ஞானத்தில் காதுச்சோனை நரம்புகள் தூண்டப்பட நம் உடலின் இயக்கம் சீராக்கப்படுகின்றது. இதனைப்போலவே பஞ்சாங்க அட்டாங்க நமஸ்காரம் கோயிலைச்சுற்றி வணங்குதல் போன்ற செயற்பாடுகளுடன் வலமிருந்து இடமாகச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் என்பவையும் விஞ்ஞானத்திலும் ஆன்மீகத்திலும் ஒரே கருத்தினையே வலியுறுத்துகின்றன.

வடக்குத் தெற்காகத் தலை வைத்து உறங்குவது பாவகாரியம் என்பதுடன் உடல் வலிகள் ஏற்படும் என்கிறது ஆன்மீகம் இதனையே விஞ்ஞானம் புவியின் காந்தப்புலம் வடக்குத் தெற்காகச் செயற்படுவதனாலேயே உடலில் வலி ஏற்படுகின்றது என்கிறது.

ஆன்மீகத்தில் அதிகாலையில் எழுந்து நீராடித் தோய்த்துலர்ந்த ஆடையணிந்து பின்னர் இறைவனை தியானம் செய்வதால் இறைவனை அகக் கண்ணால் கண்டு கொள்ள முடியும் என்கிறது. இதனையே விஞ்ஞானத்தில் தியானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது உடல் ஆரோக்கியத்தையும் மன ஆரோக்கியத்தையும் தருகின்றது எனக் கூறுகின்றது. ஆன்மீகத்தில் விரதம் இருந்து வழிபடுவது சிறந்த வாழ்வையும் ஐஸ்வர்யத்தையும் தரும் எனக் கூறப்படுகிறது ஆனால் விஞ்ஞானத்தில் விரதம் இருப்பது மனக்கட்டுப்பாடும் உடல் இயைவாக்கமும் சக்திச் சேமிப்பும் ஏற்படும் என்கிறது.

ஆன்மீகத்தில் விபூதிஅணிதல் சந்தனம்பூசுதல் ஆகியன இலட்சணங்களாக உள்ளன. இதனையே விஞ்ஞானத்தில் சந்தனம் மருத்துவ குணமுடையது உடலில் பூசுவதால் அழகு பெறுவதுடன் பித்தம் போன்ற நோய் தீரக்கப்படல் நோய்கிருமி அகற்றப்படல் தோல் வியாதி, குறைக்கப்படல், உடலில் குளிர்ச்சி ஏற்படும், இதயநலம் ஏற்படல் போன்றவையாகும். அதுபோலவே பசுமையான சாணகத்தையும் கற்பூரத்தையும் சேர்த்து எரித்து உருவாக்கும் விபூதியை பூசுவதன் மூலம் உடலாரோக்கியத்துக்கு வழிவகுக்கும்.

சந்திரகிரணகம், சூரியகிரகணம், போன்ற நிகழ்வுகளின் போது ஆன்மீகத்தில் சந்திரனை சூரியனை பாம்பு விழுங்குகிறது எனவே உணவுப் பதார்த்தத்தில் நஞ்சு ஏற்படும் எனவே சூரிய சந்திர கிரகணங்களுக்கு முன் உணவை உண்ண வேண்டும் என்கின்றனர். இதனையே விஞ்ஞானம் சூரிய சந்திர கிரகணங்களின் போது சூரியன் சந்திரன் தோன்றாமையால் பற்றீரியா, பங்கசு, வைரஸ் போன்ற நுண்ணங்கி தொழிற்படுவதனால் உணவு நஞ்சாகின்றது என்கிறது. மேலும் ஆன்மீகத்தில் திருஞான சம்மந்தர் "வேயுறு தோளி பங்கன்..." எனும் தேவாரத்தில் நவ கோள்கள் உள்ளதென்பதை கூறினார். இதனையே விஞ்ஞானம் ஆராய்ந்து ஒன்பது கோள்கள் உள்ளதென தெரிவித்துள்ளது.

இவ்வாறு ஆன்மீகத்தையும் விஞ்ஞானத்தையும் ஆராய்ந்து பார்க்கும் போது ஆன்மீகமும் விஞ்ஞானமும் ஒன்று ஒரே கருத்தையே அவை பல விதங்களில் தெரிவிக்கின்றன. எனவே இவ்விரண்டும் எமது வாழ்வில் பின்னிப் பிணைந்து ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதுள்ளது.

பா.மயூராதா
தரம் 08
யாழ் இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## கோப்பாய் பரமேஸ்வரி அம்மன் துதி பாடல்

அணுவிற்குள் அணுவும் நீ அண்டங்கள் அனைத்தும் நீ
ஆள்கின்ற அரசியும் நீ
கணுவிற்குள் கணுவும் நீ கரும்புக்குள் சுவையும் நீ
கருணைக்கு எல்லையும் நீ
விண்ணும் நீ மண்ணும் நீ விகசிக்கும் ஒளியும் நீ
வேதத்தின் மூலமும் நீ
பண்ணும் நீ பனுவல் நீ புலவர்க்கு பொருளும் நீ
பாருக்கு அன்னையும் நீ
அகிலம் எல்லாம் போற்றும் பரமேஸ்வரி அம்மையே நீ
அன்புவடி வான உமையே நீ
அன்னையே கோப்பாய் பரமேஸ்வரி அம்மையே எனை ஈன்ற
ஆதிசிவ சக்தி தாயே!

கன்றுக்கு பசுவாக குன்றுக்கு ஒளியாக
என்றைக்கு நீ வருவாய்?
மன்றாடும் பிள்ளைக்கு குன்றாத அன்பதனை
என்றைக்கு நீ தருவாய்?
கண்ணுக்குள் ஒளியாக நெஞ்சுக்குள் சுடராக
என்றைக்கு நீ ஒளிர்வாய்?
இருளுக்குள் அகப்பட்டு பலவாறு வதைபட்டு
ஓடி உன்னைத் தேடி வந்தேன்
அன்னையே கோப்பாய் பரமேஸ்வரி அம்மையே எனை ஈன்ற
ஆதிசிவ சக்தி தாயே!

விழியுண்டு ஒளியில்லை இருளுண்டு விளக்கில்லை
வழிகாட்ட நீ வருவாய்
விதியுண்டு கதியில்லை மருளுண்டு தெளிவில்லை
மருள்நீக்க நீ வருவாய்
நதியுண்டு நீரில்லை நிலமுண்டு பயிரில்லை
வளம் சேர்க்க நீ வருவாய்
சதிசெய்யும் மதியுண்டு மதிசெய்யும் வலியுண்டு
வலிதீர்க்க நீ வருவாய்
கதியென்று யாருண்டு உனையன்றி எவருண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-

காப்பாற்ற நீ வருவாய்
அன்னையே கோப்பாய் பரமேஸ்வரி அம்மையே எனை ஈன்ற
ஆதிசிவ சக்தி தாயே!

வேரற்ற மரமாகி வீழ்ந்து விட்டேன் அம்மா
வேராக நீ வருவாய்
நோயுற்ற உயிராகி நொந்து விட்டேன் அம்மா
மருந்தாக நீ வருவாய்
பாதையற்ற வழியில் பயணிக்கின்றேனம்மா
நாதியற்றிவ்வுலகில் நலிந்து விட்டேனம்மா
நலம் செய்ய நீ வருவாய்
பேதையென் குரல் கேட்டும் பேசாமலிருப்பதுவும்
தாயுனக் கழகுதானோ?
அன்னையே கோப்பாய் பரமேஸ்வரி அம்மையே எனை ஈன்ற
ஆதிசிவ சக்தி தாயே!

ஏதொன்றும் அறியாமல் நான் செய்த பிழையாவும்
பொறுத்தருள வேண்டுமம்மா
தீதென்று அறியாமல் தீவினையில் வீழ்ந்த என்னை
காத்தருள வேண்டுமம்மா அகிலங்கள் அனைத்துக்கும் அன்னையே
உன்னையே
சரணென்று பணிந்து விட்டேன் ஆகாய கங்கையென பொங்கிவரும்
உன்கருணை
மழைநனைய வந்து விட்டேன்
நொடியு மகலாத அன்பை யுந்தன்திரு வடிகளிலே
தந்தெனக்கு அருளிடு வாய்
அன்னையே கோப்பாய் பரமேஸ்வரி அம்மையே எனை ஈன்ற
ஆதிசிவ சக்தி தாயே!

இ.சுகிராஜ்
அச்செழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரமேஸ்வரி அம்பாள், கோப்பாய்-



## சக்தியின் அருள்

அன்னை பராசக்தி அன்பு வடிவானவள். ஆற்றலின் உறைவிடம் அகில உலக நாயகி "வா" என்று அழைத்த குரலுக்கு விரைந்தோடிவருவாள் "தா" என்று கேட்டால் ஒழிக்காது தரும் தயாபரி ஈசனின் இடப்பாகத்தில் இடங்கொண்ட இன்பத்தாய் அவளின் கடைக்கண் பார்வை ஒன்று நம்மீது பட்டில் போதும் தனம்தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா மனம் தரும் தெய்வ வடிவும் தரும் செஞ்சில் வஞ்சமில்லா இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே அபிராமி அந்தாதிப் பாடலான மேற்கண்டபாடலின் பொருள் ஆழமானதாகும்.

அன்னை அபிராமியின் கடைக்கண் பார்வைக்கு நாம் இலக்காகி விட்டால் வாழ பொருள் வளம் தருவாள் இவ்வுலகில் புகழ் பெற நல்ல கல்வி தருவாள் எந்நாளும் மனச்சுறுசுறுப்போடு உற்சாகமாக வாழ உதவுவாள் நல்ல செயல்களை நாம் செய்து வாழ வழி தந்து தெய்வவடிவை நாம் பெற நமக்குத் உதவுவாள் நல்லன என்று சொல்லப்படும் அனைத்தையும் தந்து அருள் பாலிப்பாள். அவ்வருளைப் பெறுவதற்காக நாம் யாது செய்தல் வேண்டும். அனுதினமும் அவளை பக்தியோடு ஆராதனை செய்தல் வேண்டும். அன்னை பராசக்தியின் நாமம் சொல்லுவோம் அவளின் அருளுக்குப் பாத்திரமாவோம். ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி என்று சொன்னால் துன்பமில்லை, அன்னையை அணுகாதவர்க்குத் தான் நோயும் துன்பமும் உண்டாகும். "வல்லமை தந்திடுவாள் பராச்தி வாழி என்றே துதிப்போம்" என்கிறார் பாரதியார் அன்னையின் அன்பில் ஈடுபட்ட மெய்யடியார்கள் இராமகிருஷ்ண பரமகம்சர், அபிராமிபட்டர், காளிதாசர், மகாகவி பாரதியார் போன்றோர் அன்னையின் பூரண அருளைப் பெற்றனர்.

தாய் பராசக்தி காஞ்சியில் காமாட்சியாகவும் மதுரையில் மீனாட்சியாகவும் காசியில் விசாலாட்சியாகவும் திருக்கடவூரில் அபிராமியாகவும் சிதம்பரத்தில் சிவகாமியாகவும் மாத்தளையில் ஸ்ரீமுத்துமாரியாகவும் தெல்லிப்பழையில் துர்க்கை அம்மனாகவும் நயினையில் நாக பூசணியாகவும் வற்றாப்பளையில் கண்ணகி அம்மனாகவும் யாகவும் கோப்பாய் அத்தித்தோட்டத்தில் பரமேஸ்வரியாகவும் அருள் பாலிக்கின்றாள்.

எந்தன் உள்ள வெளியில் ஞானத்திரவியேறவேண்டும்
வாழ்க தாய் பதம் போற்றி

செல்வன் யோகராஜா விஷ்ணு
தரம் 7
யா.இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல் உள்ளங்களுக்கு எமது நன்றிகள்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்றமகற்கு"

என்ற வள்ளுவர் பெருந்தகையின் வாக்கிற் அமைய நல் உள்ளங்களுக்கு நன்றி கூறகடமைப்பட்டுள்ளேன்

கும்பாபிஷேக மலரிற்கு ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள், ஆக்கங்கள் பலவற்றை வழங்கிய குருக்கள்மார், விரிவுரையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரிற்கும் நன்றி அறிதலை தெரிவிப்பதில் நாம் பெருமகிழ் வடைகின்றோம்

பல ஆக்கங்களை தொகுத்து சிறந்த முறையில் நூலாக வெளியிடுவதில் பங்காற்றிய நூலாசிரியரும் எமது பரிபாலனசபை உறுப்பினரும் ஆகிய பூ.ஸ்ரீஸ்கந்தராசா (ஆசிரியர்)அவர்களிற்கு எமது நன்றிகள்

கும்பாபிஷேக நிகழ்வை சிறப்பாக நடாத்திய கும்பாபிஷேக பிரதமகுரு பிரம்மஸ்ரீ கு.ரவீந்திரக்குருக்கள் அவர்களிற்கும், ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சு.மகோதேவாக் குருக்கள்மற்றும்ஏனையகுருமார்களுக்கும்எமது நன்றிகள்.

ஆலய கும்பாபிஷேக புனருத்தாபனத்திற்கு நிதிஉதவி, பொருளுதவி, சரீரஉதவி செய்த அனைவருக்கும் எமது நன்றிகள். கும்பாபிஷேக நிகழ்வு, மலர்வெளியீட்டு நிகழ்வு போன்றவற்றிற்கு ஒளி, ஒலி அமைப்பு உரிமையாளர்களுக்கும் மங்கள இசை வழங்கியவர்களுக்கும் எமது நன்றிகள்.

புனரமைப்பு வேலைகளை உரிய காலத்தில் பூர்த்தியாக்கிய கட்டிட கலைஞர்கள், மின் இணைப்பாளர்கள், ஆசாரி வேலையாட்கள், வர்ணம் தீட்டியவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

மலர் சிறப்புற வடிவமைத்த கக்ஸ்றொன் பிறின்ரேர்ஸ் நிறுவனத்திற்கும் நூலிற்கான விளம்பர அனுசரனை வழங்கியவர்களுக்கும் நன்றிகள். எல்லா வழிகளிலும் உதவிபுரிந்த நிர்வாகிகள், பரிபாலனசபை உறுப்பினர்கள் ஏனைய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

நன்றி கூற தவறியிருப்பின் அவர்களுக்கும் எமது நன்றிகள்

ச.பிரதீபன்
செயலாளர்
ஆலயபரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ

## හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
## இந்து சமய இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்
## DEPARTMENT OF HINDU RELIGIOUS AND CULTURAL AFFAIRS

—★—

### ලියා පදිංචි කිරීමේ සහතික පත්‍රය
### பதிவுச் சான்றிதழ்
### CERTIFICATE OF REGISTRATION

කෝපායි තෙන්කු අත්තිතොට්ටම් අරුල්මිගු පරමේශ්වරි අම්මාල් ආලයම් - තැපැල් කාර්යාලය අසල කෝපායි දකුණ, කෝපායි.

கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயம் - தபால் கந்தோர் அருகாமை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

Kopay South - Aththithoddam Arulmihu Parameswari Ambal Alayam - Near the Post Office, Kopay South, Kopay.

ඉහත සඳහන් ආයතනය හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුවේ ලියා පදිංචි කර ඇති බැව් මෙයින් සහතික කරමි.

மேற்படி அமைப்பு இந்து சமய, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது என்பதனை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

This is to certify that above Institution has been registered in the Department of the Hindu Religious and Cultural Affairs.

ලියා පදිංචි අංකය<br>
பதிவு இலக்கம்<br>
Registration Number } HA/5/JA/653.

දිනය / திகதி / Date 29.04.94.

V. WICKRAMARAJAH<br>
අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director<br>
Asst. Director,<br>
Dept. of Hindu Religious and Cultural Affairs.

9වන මහල, / 9ம் மாடி, / 9th Floor,<br>
රක්ෂණමන්දිරය / இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் / Sri Lanka Insurance Corporation<br>
21, වොක්ෂෝල් පාර, / 21, வொக்ஷோல் வீதி, / 21, Vauxhall Street,<br>
කොළඹ-2. / கொழும்பு 2. / Colombo-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவீன் பியூரோ

**மனிதகுல முன்னேற்றத்திற்கான சேவைகள்**

1.நோய்பிணிகள், கஷ்டங்கள், கல்யாணத்தடை, குழந்தையில்லாப் பிரச்சினைகள், தொழில்மந்தம், விபத்து-அகாலமரணம், கல்வியில் ஊக்கமின்மை முதலிய பிரச்சினைகள் அறவே நீங்கி வாழ்வில் பூரண நிம்மதி பெற எம்மை நாடுங்கள் 45 நாட்களிலேயே வாழ்வின் வெற்றிப் பாதையில் நடைபோடலாம்.

2.எத்தகைய தரத்தினரையும் வெற்றியும், மகிழ்ச்சியும் பெறச் செய்யும் எண் கணித சோதிட சேவை. அதிர்ஷ்டப் பெயர் அமைத்தல்

3.நடுத்தரவயது, முதியவர்களுக்கான கடைசிவரை சுகமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழவைக்கும் புனர்வாழ்வுப்பரிகாரம்

4.சகலதரத்தினர்க்குமான 72 வகுப்புக்கள் கொண்ட 6 மாதங்களுக்குப் பிந்தாத ஆங்கில வகுப்புக்கள்- குழுநிலை வகுப்புக்கள் உச்சரிப்பு முதல் உவகை பொங்கிப் பேசிப் பழகும் வரையிலான பயிற்சி நெறி.


**வாருங்கள் வளமாய் வாழலாம்**

**ஆசிரியர்-ரவீந்திரன் யு. சின்னத்துரை**

*RAVEEN BUREAU IRUPALAI Raveethiran. A. chinnathurai*


இருபாலை சந்தி தொ.பேசி: 0770761976

# ஹொணி



வெல்டிங் அன் ரிங்கரிங்

வேக் சொப்



உரிமையாளர்கள்:

இ.முருகதாஸ் - 077-4115397

ம. ஹொணி -077-1235362

பருத்தித்துறை வீதி,

கோப்பாய் தெற்கு. கோப்பாய்.

பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vijay Photo & Video

உரிமையாளர்: விஜய்




கோண்டாவில் றோட்,
இருபாலை.

தொ.பே: 0777 283609



உமது பிறிண்டிங் தேவைகள் எம்முடன்

# Caxton Printers

Datch Road
kaddaipirai
T.P: 077 9672585

# கஜமுகன் ஹாட்வெயர்

கட்டிடப் பொருட்கள், கம்பி வகைகள்,
சீமெந்து,Macson Mesh. PVC பைப் வகைகள்,
பெயின்ற் வகைகள்.Pepsi Soba & Accessories.
அனைத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம்



# KAJAMUGAN HARDWARE

TEL:021-2222833 / 021 2229733
FAX: 021 222 2368
E-mail : kajamuganhw@hotmail.com

147,149 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம்சக்தி ஸ்ரோர்ஸ் & மோட்டோர்ஸ்

**Hardware, Paint, Battery, & Motoor Cycle Parts**



பருத்தித்துறை வீதி,
இருபாலை, கோப்பாய்.

தொ.பே.இல: 077 790 4584


என்றென்றும் நன்றிக்கடனுடன்
பரிபாலனசபை

2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயலக்ஸ்மி ரெக்ஸ்ரைல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜோதி ரெக்ஸ்ரைல்ஸ்

ஆண்கள், பெண்கள்
சிறுவர்கள் அனைவருக்குமான
ஆடைகளை ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள சிறந்த இடம்



மத்திய சந்தை உட்புறம்
சுன்னாகம்

உரிமையாளர்:
இ.இராசா

## கவஸ்தி

கட்டிட ஒப்பந்தங்கள்
வாஸ்து பார்த்து வீடமைத்தல்
கட்டடப்பொருள் விநியோகஸ்தர்கள்



K.காண்டீபன் J.P
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
தொ.பே: 077 5302211, 021 2230416

# கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## எமது சங்கத்தின் திட்டங்கள்

- எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்களின் எதிர்கால நலனுக்கான கூட்டுறவுக் கிராமிய வங்கிச் சேவை
- எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கான ஓய்வூதிய நலத்திட்டங்கள்
- கூட்டுறவு கிராமிய வங்கியில்
  அங்கத்தவர்கள் சேமம்
  அங்கத்தவர்களின் அல்லா சேமம்
  நிலையான வைப்புக்கள்
- பிளாஸ்ரிக் கதிரை வாடகைகள்

பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தொ.பே: 021 223 0395


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org